வெளியீடு: 1-9-2008 Issued: 1-9-2008

1564
25-3-09

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 23, 2008—தொகுதி 49—எண் 2

Wednesday the 23rd April, 2008 —Volume 49—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

... Assembly Secretariat, Chennai - 600 009

D
V211, 31'P08
P08.49.2
228380.

[Price Rs. 3.00

23–4–2008

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள்–விடைகள்—	
(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	223-261
(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 6)	262-326
2. தகவல் கோரல்—	
(அ) மதுரை கோரிப்பாளையத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு இழைக்கப்பட்ட அவமரியாதை	327-330, 352-373
*திரு. சி. துரைராஜ்	352-353
*திரு. பி. மூர்த்தி	353-354
திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்	354
*திரு. என். நன்மாறன்	356,358
திரு. ஜி.கே. மணி	358-359
திரு. தி. இராமசாமி	359-360
*திரு. வீர. இளவரசன்	361-363
*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி	364-366 368, 370-373
(ஆ) இலங்கைத் தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்து இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுதல்	330-347
திரு. ஜி.கே. மணி	331-335 337,338-339
*திரு. மு. கண்ணப்பன்	339-342,346
திரு. டி. சுதர்சனம்	336-337, 342-345,346
*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி	338

	பக்கங்கள்
3. அரசினர் தனித் தீர்மானம்—	
இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசை வலியுறுத்துதல்	347-352
*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி	347-350
திரு. டி. சுதர்சனம்	351
*திரு. மு. கண்ணப்பன்	351
திரு. ஜி.கே. மணி	351
4. கவன ஈர்ப்பு—	
திருவண்ணாமலை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படாதது	373-378
*திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி	373,374-375 376,377
மாண்புமிகு திரு. உ. மதிவாணன்	374,375-378
5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்	
கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	378-438
மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்	378,400, 402-403
திரு. கே.எஸ். விஜயகுமார்	401-407
திரு. இ.ஏ.பி. சிவாஜி	407-414
டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி	415-421 423-426
திரு. வே. மாரிமுத்து	421-422, 426-429

	பக்கங்கள்
5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	
திரு. சு. குணசேகரன்	431-435
டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	435-438
6. அறிவிப்பு—	
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கை விவாதம் 24-4-2008 அன்றும் தொடர்தல்	438
7. அரசினர் தீர்மானம்—	
விதி 32-ஐத் தளர்த்துதல்	438-439
8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	439-440

11-87—1a

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 11

2008 ஏப்ரல் 23, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். (உடல் நோய்க்கு மட்டுமன்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்.)

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

141—

வாக்குச் சாவடி

***37333—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்த வாக்காளர்கள் இருந்தாலும் இரண்டு கிலோ மீட்டர் இடைவெளிக்கு ஒரு வாக்குச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 ஏப்ரல் 23

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி வாக்காளர்களின் எண்ணிக்கை, வாக்களிப்பதற்காகச் செல்லவேண்டியுள்ள தூரம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், வாக்குச் சாவடி அமைக்க உகந்த அரசுக் கட்டடங்கள் கிடைப்பதைப் பொறுத்தும் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன. வாக்குச் சாவடிகள் அமைக்க ஏதுவான அரசு/பள்ளிக் கட்டடங்கள் கிடைப்பதைப் பொறுத்து, பொதுவாக ஒரு வாக்காளர் வாக்களிப்பதற்காக இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் செல்லவேண்டியிராதவாறு வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன. ஆதலால், வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட தூரம் மற்றும் வாக்காளர் எண்ணிக்கை ஆகியவற்றை மட்டுமே எப்போதும் அளவுகோல்களாகக் கொள்ள இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வாக்குச் சாவடியை நிர்ணயிக்கக்கூடிய அளவுகோலைப்பற்றி மாண்புமிகு பேராசிரியப் பெருந்தகை, நிதி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்த இரண்டு கிலோ மீட்டர் தூரம், வாக்காளர் எண்ணிக்கை என்ற அடிப்படையில் பிரிக்கிற நேரத்தில், சில பகுதிகளில் போக்குவரத்து வசதி இல்லாத இடங்கள் இருக்கின்றன. மேடு பள்ளங்கள் நிறைந்த பகுதியாக அல்லது காடுகள், மலைகள் நிறைந்த பகுதியாக இருக்கிற நேரத்தில், இரண்டு கிலோ மீட்டர் நடந்தே செல்லக்கூடிய நிலை உள்ளது. அப்படி நடந்து செல்லாமல் வாகனங்களில் சென்றால், வாகனங்களைத் தேர்தல் ஆணையம் பறிமுதல் செய்யக்கூடிய நிலை எல்லாம் இருந்துவருகிறது. ஆகவே, தேர்தல் ஆணையத்தின் வரன்முறைக்குட்பட்டதாக இருந்தாலும்கூட, நம்முடைய மாநில அரசு இப்படிப்பட்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, சில வாக்குச் சாவடிகளுக்கு நெறிமுறைகளைத் தளர்த்தி, இரண்டு கிலோ மீட்டருக்குக் குறைவாக இருந்தாலும்கூட, வாக்குச் சாவடி அமைப்பதற்கு ஆவன செய்ய தேர்தல் ஆணையத்தை மாநில அரசு

228 380
சென்னை-600 008

2008 ஏப்ரல் 23]

வற்புறுத்துமா; அதேநேரத்தில் வாக்காளர் எண்ணிக்கையும், 1,000, 1,200 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச் சாவடி என்பதை இன்னும் குறைவாக இருந்தாலும்கூட, அதன் எல்லையையும், வாக்காளர் எண்ணிக்கையையும் குறைத்து வாக்குச் சாவடி அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையம் இந்த அடிப்படையான ஒரு விதிமுறையை இந்தியா முழுவதும் உள்ள எல்லா மாநிலங்களும் மேற்கொள்வதற்கு வகுத்துத் தந்திருக்கிறது. இந்த இலக்கணத்திற்கு உட்பட்டு, இதற்கு விதிவிலக்குகள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரால் அந்தந்த இடத்தில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்ப, கட்டாயமான தேவைக்கேற்ப, வாக்காளருடைய வசதிக்கேற்ப தீர்மானிக்கப்படும். ஆனால், ஒவ்வொருவருடைய வசதிக்காகவும் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தீர்மானிக்கக்கூடிய நிலைமைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் இடம் கொடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கிலோ மீட்டருக்கு ஒரு வாக்குச் சாவடி என்ற கேள்வி எழுப்பப்பட்டிருந்தாலும், ஏற்கெனவே நடைமுறையிலே ஓர் ஊராட்சி என்றால், ஆறு அல்லது ஏழு கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சிகள் ஏராளமாக இருக்கின்றன. அந்த ஊராட்சிகளிலே இரண்டு வாக்குச் சாவடிகள் அல்லது மூன்று வாக்குச் சாவடிகள் தேர்தல் காலத்திலே அமைக்கப்படுகின்றன. ஆனால், அந்த மூன்று வாக்குச் சாவடிகளும் ஒரே பள்ளியிலே, ஒரே இடத்திலே அமைக்கப்பட்டுவிடுகின்றன. ஆண்களுக்கு என்று தனியாகவும் பெண்களுக்கு என்று தனியாகவும் அல்லது ஆண்களும், பெண்களும் இணைந்த முறையிலே வாக்களிப்பதற்கான வாய்ப்போடும் அப்படி அமைக்கப்பட்டுவிடுகின்றன. அப்படி மூன்று வாக்குச் சாவடிகள் பிரித்து வழங்கப்படுகிறபோதும், 3,000, 4,000 வாக்காளர்கள் அதிலே இருக்கிறார்கள். அதை மாற்றுவதற்கான முயற்சியாக நான் ஒரு ஆலோசனையாகக் கூற விரும்புவது, அந்த ஆறு கிராமங்களாக இருக்கிற பகுதிகளை இரண்டு பகுதிகளாகப் பிரித்து—உள்ளாட்சி

[2008 ஏப்ரல் 23

அமைப்புகளுக்கான தேர்தல் ஓர் ஊராட்சியிலே இரண்டு தனித் தனி இடங்களிலே நடைபெறுகிறது. அதையே வாக்குச் சாவடிகளாக மாற்றி, பொதுத் தேர்தல் காலங்களிலும் அப்படி வாக்களிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு நமது அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல்கள்தான் என்று சொன்னாலுங்கூட, உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப் பட்டியலே வேறு, சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பட்டியலே வேறு. அதேபோல, இந்தத் தேர்தலுக்கான தேர்தல் விதிமுறைகள், நடைமுறைகள் சற்று வேறுபடுகின்றன. உள்ளாட்சித் தேர்தலுக்காக எடுக்கப்படுகிற, தீர்மானிக்கப்படுகிற அந்த மையங்கள், வாக்குச் சாவடிகள் இந்தப் பொதுத் தேர்தலிலே ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இந்தப் பொதுத் தேர்தலில், ஏற்கெனவே இருந்த இடங்களை இப்பொழுது மாற்றுவதாக இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் தகுந்த ஆலோசனைக்குப் பின்னர் வாக்காளர்களுடைய வசதியைக் கருத்திலேகொண்டு மாற்றி அமைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.*

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கட்டடங்களோ அல்லது பள்ளிக் கட்டடங்களோ இல்லாத கிராமங்களில் வாக்குச் சாவடி அமைக்க முடியாது என்று அரசு அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில், வெகு தூரத்திலேயிருந்து வந்து வாக்களிக்க முடியாத மலைவாழ் பகுதிகளில் எல்லாம், இப்போது நேபாள நாட்டின் தேர்தலிலே temporary shed அமைத்து வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டதைப்போல, வருங்காலங்களிலே அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறையின்படி இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகப்படாமல் வாக்குச் சாவடி அமைக்கவேண்டும். வாக்காளர்கள் எந்த இடத்திலே இருந்தாலும், அவர்கள் தங்களுடைய இடத்திலேயிருந்து வாக்குச் சாவடிக்குச் செல்ல இரண்டு கிலோ மீட்டருக்கு மேல் அதிகம் இருக்குமானால், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே விண்ணப்பித்தால் அவர்கள் நிச்சயமாக அதைப் பரிசீலனை செய்வார்கள். மலைப் பகுதிகளாக இருக்குமானால், அந்தப் பகுதிகளிலே இந்த இரண்டு கிலோ மீட்டர் என்பது நடைமுறையில் முழுவதும் சாத்தியப்படாது. வாக்காளர்களை எப்படி வாக்களிக்கச் செய்யலாம் என்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்தான் தகுந்த பரிகாரத்தை அந்தந்த வட்டாரத்திலே காணவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.*

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியின் எல்லையாக, காட்பாடி தொகுதியும் இணைகின்ற ஐதர்புரம் என்ற கிராமம், காட்பாடி தொகுதிக்கு அருகில் அந்தப் பகுதியில் வாக்குச் சாவடி வைத்து ஓட்டு போடப்படுகிறது. ஆனால், ஐதர்புரத்தில் நான்கு தெருக்கள், ஏறத்தாழ 832 வாக்காளர்கள், 8 கிலோ மீட்டர் சுற்றி வந்து (மணியடிக்கப்பெற்றது) மேலாளத்தூர் பஞ்சாயத்திற்கு உட்பட்ட இடத்திலே ஓட்டுப்போடவேண்டிய அவசியம் இருக்கிறது. அரசு விதிமுறையின்படி, இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருந்தால் போதும் என்று இருக்கிறது. ஆனால், குடியாத்தம் தொகுதியில் வாக்களிப்பதற்கு ஏறத்தாழ 8 கிலோ மீட்டர் சுற்றி வந்து ஓட்டுப் போடுகின்ற ஒரு நிலைமை இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு, அந்தப் பகுதியிலேயே வாக்குச் சாவடிகளை அமைக்க அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தேர்தல் அறிவிக்கப்படுகிறபோதுதான் வாக்குச் சாவடிகள் எந்த இடத்திலே அமைப்பது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதி செய்வார். தேர்தல் அறிவிப்பு வருகிறபோது சட்டமன்ற உறுப்பினர் வாக்காளர்களுடைய கஷ்டங்களை மாவட்ட

ஆட்சித் தலைவருக்கு தேர்வீப்பாரேயானால் அந்தந்த வட்டாரத்தைப் பொறுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் தகுந்த ஏற்பாடு செய்ய விதிமுறைகளிலே இடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

142—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***33669—திரு. ஆர்.எம். பழனிசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மேலும் ஒரு கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்ட விற்பனைக் குழுவின்கீழ் இயங்கும் விற்பனைக் கூடங்களின் கட்டுமானப் பணிக்காக அரசாணை (நிலை) எண் 546, நாள் 28-12-2007-ன்படி ஒரு கோடியே, 77 இலட்சத்து, இரண்டாயிரத்து இருநூற்று ஆறு ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக 23 இலட்சத்து 97 ஆயிரத்து 500 ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் நிதியாண்டில் இப்பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி, மொடக்குறிச்சிக்கு உட்பட்ட கொடுமுடி ஒன்றியத்திலே, கொடுமுடியிலே இயங்கிக் கொண்டிருக்கிற

கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்பது கிட்டத்தட்ட பொருள் ஈட்டுக் கடனுக்காக இரண்டு கிடங்குகள், அதேபோல, ஏலத்திற்கென்று இரண்டு கிடங்குகள் என உள்கட்டமைப்பு இருந்தாலுங்கூட அங்கே வருகிற பொருட்களின் அளவை வைத்து அந்தப் பகுதிக்கு மேலும் ஒரு குடோன் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதற்கு கிட்டத்தட்ட 23 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதாகச் சொன்ன அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-40

அதேநேரத்தில், இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்பது—எங்கள் பகுதி விவசாயிகள் முழுமையாக நிரம்பியிருக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தாலே, திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை கிட்டத்தட்ட நிலக்கடலை மூட்டைகள் 1,500, அதேபோல தேங்காய், பருப்பு, எள், சூரியகாந்தி 5 ஆயிரம் மூட்டைகள், இப்படி இரண்டு நாட்களுக்கு 10 ஆயிரம் மூட்டைகள் வந்துகொண்டிருக்கின்ற காரணத்தாலே—அந்தப் பகுதியிலே நிச்சயமாக மேலும் ஒரு கிட்டங்கி வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

அதேபோல, கிட்டத்தட்ட இரண்டு யூனிட் நெல் கொள்முதல் நிலையங்கள் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இரண்டு உலர் களங்கள் இருக்கின்றன. மேலும் இரண்டு உலர் களங்கள் வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் இங்கே வைத்து, நம்முடைய அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமாக 8.99 ஏக்கர் நிலம் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இதில் இரண்டு ஏலக் கொட்டகைகள், இரண்டு ஊரகக் கிட்டங்கிகள், ஓர் அலுவலகக் கட்டடம், ஒரு விவசாயிகள் ஓய்வு அறை, இரண்டு உலர் களங்கள், ஒரு சிற்றுண்டி சாலை ஆகிய கட்டமைப்பு வசதிகள் உள்ளன. இப்போது புதிதாக 23 இலட்சம் ரூபாய் செலவிற்குமேல் கட்டப்பட்டுவரும் அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கிட்டங்கி தவிர,

மேலும் புதிதாக இரண்டு கூடுதல் கிட்டங்கிகள் 52 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. புதிதாக ஒரு பரிவர்த்தனைக் கூடம் ரூபாய் 41 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கவும் அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் இரண்டு கிட்டங்கிகள் கொடுத்ததற்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதேநேரத்தில், கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 500-லிருந்து 1,500 விவசாயிகள் அங்கே வந்து செல்கிறார்கள். அங்கே குறிப்பாக மகளிரும் வருகின்ற காரணத்தாலே—அந்தப் பகுதியிலே கழிவறைக் கூடங்கள் ஒன்றிரண்டுதான் இருக்கின்றன—நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஒதுக்கிய நிதியோடு சேர்த்து அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 10-லிருந்து 20 கழிப்பறைகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டித்தர வேண்டும். மேலும், பல்வேறு வசதிகள், குறிப்பாக கிழே கான்கிரீட் தளம் அமைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்கள் எழுப்பிய அந்தக் கேள்வியை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

143—

தூர் வாருதல்

***11260—திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறையில் பழங்காவிரி வாய்க்காலைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம். க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழங்காவிரி என்பது முழுமையாக மயிலாடுதுறை நகர எல்லைப் பகுதிக்குள் வந்து, காவிரியிலே தலைப்பு துவங்கி எலுமிச்சம்பட்டி, கோடங்குடி, குளிச்சாறு, செரிதியூர், மண்ணம்பந்தல், பட்டமங்கலம், அக்கலூர் போன்ற ஊராட்சிகள் பயன்பெறக்கூடிய வாய்க்கால் ஆகும். இந்த ஊராட்சிகளில் இருக்கக்கூடிய உள் வாய்க்கால்கள் எல்லாம் வேளாண்மைத் துறைமூலமும், 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலமும் சரிசெய்யப்பட்டுவிடுகின்றன. ஆனால், நகராட்சி எல்லைக்குள் இருக்கக்கூடிய இந்த வாய்க்கால் தூர் வாரப்படாமல் இருப்பதால் விவசாயிகள் பாசனத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அரசாங்கம் கொடுக்கிற திட்டத்தைக்கூட பயன்படுத்த முடியாமல் விவசாயிகள் திண்டாடக்கூடிய ஒரு சூழ்நிலையில், நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தப் பழங்காவிரியில் முழுமையாக ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர் வார ஆவன செய்வார்களா என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.

அதேபோல, என்னுடைய குத்தாலம் தொகுதியில் தென்கோரையாறு, வடகோரையாறு, சிறுநண்டலாறு, கடலாடி ஆகிய 4 ஆறுகளையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் நேரிலே பார்வையிட்டிருக்கிறார்கள். கடைமடைப் பகுதியில் இருக்கக்கூடிய நாங்கள் தண்ணீர் வரக்கூடிய காலகட்டத்திலும் பாதிக்கப்படுகிறோம், அதிகமாக மழை பெய்யக்கூடிய அந்தக் காலகட்டத்தில் அனைத்துப் பகுதி தண்ணீரும் எங்கள் பகுதியிலே வடியக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறபோது அதுவும் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆகவே, நம்முடைய முதல்வர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் சிறப்பினமாகக் கருதி காவிரி modernisation-க்கு முன்னால் இந்தக் கால்வாயை உடனடியாகத் தூர் வாரி அப்பகுதி

[2008 ஏப்ரல் 23

விவசாயிகளுடைய பிரச்சினையை முழுமையாகத் தீர்ப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆறு மயிலாடுதுறை நகரத்திற்குள் ஓடி வெளியே வருகிறபோது, ஒரு தலைப்பிலிருந்து ஒரு கால்வாய் பிரிகிறது, பழங்காவிரி வாய்க்கால் என்று அதற்குப் பெயர். அதிலிருந்து சித்தக்காடு, மண்ணம்பந்தல், நல்லக்குடி, ஆறுபாதி, முளைப்பாக்கம் ஆகிய கிராமப் பகுதிகளில் 2,841 ஏக்கருக்கு பாசனம் அளிக்கிறது. ஆறு, நகரத்திற்குள் ஓடிவந்து வெளியே போகிறபோது, நகரத்தில் இருக்கிறவர்கள் குப்பைகளை அதிலே கொட்டிவிடுகிறார்கள், அசுத்தம் செய்துவிடுகிறார்கள். தூர்ந்துபோய்விடுகிறது. எனவே, மாசுபட்ட தண்ணீர் விவசாயத்திற்கு உகந்தது அல்ல என்று கீழே இருக்கிற பாசனதாரர்கள் அதுபற்றிப் புகார் செய்தார்கள். ஆகையினால் அவர்களுக்குத் தண்ணீர் போவதற்காக மயிலாடுதுறை நகரத்திற்கு வெளியிலேயே ஒரு மதகு அமைத்து, மயிலாடுதுறை நகரைச் சுற்றி ஒரு bye-pass channel வெட்டி, மறுபடியும் அதைக்கொண்டுபோய் அந்த பழங்காவிரி வாய்க்காலிலே விட்டு, இப்பொழுது அவர்களுக்குத் தண்ணீர் பாய்கிறது. எனவே, இப்பொழுது நகரத்திற்குள் இருக்கிற அந்த காவிரி ஆறு பாசனத்திற்குப் பயன்படாத ஒரு பகுதியாக இருக்கிறது. எங்களுக்கு அதிலே தண்ணீர் வரவேண்டிய அவசியம் இல்லை. எனவே அப்பகுதியை உள்ளாட்சித் துறை எடுத்துக்கொள்ளலாம்; காரணம் நகரத்திற்குள் இருக்கிறது என்று அவர்களுக்கு நாங்கள் சிபாரிசு செய்திருக்கிறோம். ஆனால் தமிழக சர்க்கார் பயன்படாத ஒரு வாய்க்காலைத் தூர்வாருவதைவிட, NGPY என்ற திட்டத்தின்கீழ் தூர் வாருவதற்கு ஐந்து கோடி ரூபாய் ஆகும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நாங்களும் பரிந்துரை செய்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் திருவிதாங்கூர் சேனலில் கடைவரம்பு நிலங்களுக்குத் தண்ணீர்

2008 ஏப்ரல் 23]

போகின்ற கட்டியேந்தி குளக்கரை சானலைத் தூர்வார அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிதாங்கூர் சேனலிலே தண்ணீரே வருவதில்லை. நெய்யாற்றில் இருந்து தண்ணீர் விட்டால்தான் வரும். ஆகையினால் அதற்குத்தான் நாங்களே சண்டைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். பலமுறை கடிதம் எழுதியாயிற்று. இதுவரையில் அவர்கள் பணம் கொடுத்தால்தான் கொடுப்பேன் என்கிறார்கள். இந்தியாவிலேயே விவசாயத்திற்குப் பணம் வாங்கிக் கொண்டு தண்ணீர் கொடுப்பேன் என்று சொன்ன ஒரே ஒரு சர்க்கார் கேரள அரசுதான். ஆனால், அதை ஏற்றுக்கொள்ள முடியாது, எங்களுக்கு உரிமை இருக்கிறது, எங்களுக்கு வேண்டுமென்று நாங்கள் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த.அ. மேகநாதன்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், எனது காவிரிப்பட்டினம் தொகுதி, விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். கிருஷ்ணகிரி அணையிலிருந்து வாய்க்கால்மூலம் தண்ணீர் எடுத்து விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி இடதுபுற, வலதுபுற கால்வாய்கள் அனைத்தும் தூர் வாரப்படாமல் இருந்து வருவதால், கால்வாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டுவிடுகிறது. இதனால் விவசாயத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்வது அடிக்கடி பாதிக்கப்படுகிறது. எனவே, மேற்படிக் கால்வாயையும், அதேபோல எனது தொகுதியில் உள்ள ஏரிகளையும் தூர் வார அரசு முன்வருமா, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு ஒரு தனிக் கேள்வி போட்டால், இதுபற்றி முழு விவரம் தெரிவிக்கப்படும்.

[2008 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ஆத்தூருக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றம் வழங்குவதாக அறிவித்திருக்கின்றார்கள். அதற்காக என் தொகுதி மக்கள் சார்பாகவும், வழக்கறிஞர்கள் சார்பாகவும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டியார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், ஆத்தூரிலே கல்லாறு அணை 1971 ஆம் ஆண்டு கட்டுவதாகத் திட்டம் அறிவிக்கப்பட்டு அலுவல் காரணமாகவும், அரசு மாற்றத்தின் காரணமாகவும் நின்றுவிட்டது. இப்போது நமது தமிழக முதல்வர் அவர்கள் இந்தக் கல்லாறு அணைத் திட்டத்தை ஆராய்ந்து, கல்லாறு அணை என்பதைக் கட்டினால் ஆத்தூர் தொகுதி மக்களும், தலைவாசல் தொகுதி மக்களும் பயனடையக்கூடிய வகையிலே அது அமையும் என்பதைத் தெரிவித்து, தங்கள்வாயிலாகக் அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, சில திட்டங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று ஆய்வு செய்வோம். ஆனால், சில திட்டங்கள் feasible ஆக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பது அடுத்த முறை கேள்வி நேரத்திலோ அல்லது அவர் தனிக் கேள்வி போட்டாலோ தெரிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

முற்பகல் 9-50

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் ஓடும் வெள்ளப்பள்ளம்-உப்பனாறு

2008 ஏப்ரல் 23]

என்ற ஆறு, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி "எல்" வடிவிலே திரும்பிப் பாய்ந்து, காரைமேடு ஊராட்சிக்கும், புதுத்துறை ஊராட்சிக்கும் நடுவிலே செல்கிறது. அந்த இடத்தில், கடந்த மழைக்காலத்தில், மிகப்பெரிய அளவிலே, 250 மீட்டர் நீளத்திற்கு கீழ்க்கரையில் உடைப்பு ஏற்பட்டு, சரிசெய்யப்படாமல் உள்ளது. இந்த ஆண்டில் அதை உடனடியாகச் சரிசெய்தால்தான், வருகின்ற மழைக்காலங்களில் விவசாய நிலங்களைக் காப்பாற்ற முடியும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்துகொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுக்கட்டும். அதிகாரிகளோடு கலந்துபேசி, முடியுமென்றால் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

144—

தொழிற்பேட்டை

***5966—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தற்போது புதிதாக சிறு அல்லது குறுந்தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2008 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். எங்களுடைய திருப்பத்தூரிலே, 1980 ஆம் ஆண்டிலே நக்சலைட்டுகள் உருவாகி, அப்போது குண்டுவெடிப்பு சம்பவம் ஏற்பட்டு, காவலர்களெல்லாம் இறந்தார்கள். அப்போதைய முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், சிப்காட்டைக் கொண்டுவருவேன் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு வந்த முதல்வர்களெல்லாம் தொழிற்பேட்டைகளை உருவாக்கி, வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால், 28 ஆண்டுகாலமாகியும், எந்தத் தொழிற்சாலையும் வரவில்லை. 50 பேர் தொழில் செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலைகூட அந்தப் பகுதியில் வரவில்லை. முழுக்க முழுக்க பீடித் தொழிலாளர்களும், ஊதுவத்தி தயாரிக்கின்ற தொழிலாளர்களும், விவசாயக் கூலிகளும்தான் வாழ்ந்து வருகிறார்கள். வளர்ந்த பகுதிகள் வளர்ந்துகொண்டேயிருக்கின்றன. பின்தங்கிய பகுதியான எங்கள் பகுதி, பின்தங்கிக் கொண்டேயிருக்கிறது. எனவே, ஓர் ஒன்றியத்திற்கு ஒரு தொழிற்சாலையை உருவாக்கி, வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான நிதியாதாரங்களுடனும், தொழிற் திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் கணிசமான அளவில் முன்வந்தால், புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து தொழிற்பேட்டை அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

2008 ஏப்ரல் 23]

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற தொழிற்சாலைகளை மூடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் எப்பொழுது பார்த்தாலும், தொழில் தொடங்க முன்வந்தால் தருவோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், டிட்கோமூலமாக இடங்களைப் பார்க்கச் சொன்னார்கள். நாங்களும், 10 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலத்தைத் தேர்வுசெய்து, டிட்கோ மேனேஜரிடத்திலே தெரிவித்திருக்கிறோம். அவர்களும் கயிறுத் தொழிற்சாலை அமைத்துக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், இப்போழுது அமைச்சர் அவர்கள் சொல்வதற்கும், மேனேஜர் அவர்கள் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. எனவே, தட்டிக்கழிக்காமல், பின்தங்கிய எங்களுடைய பகுதியிலே தொழிற்சாலை ஒன்றினைக் கட்டாயம் உருவாக்கித்தர வேண்டும். ஏனென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இன்றைக்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இங்கே தொழிற்சாலைகளைக் கொண்டுவந்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் 28 ஆண்டுகளுக்கு முன்பே பாதிக்கப்பட்டவர்கள்; எனவே, எங்கள் பகுதியிலே இந்த ஆலையை இந்த ஆண்டே அவசியம் உருவாக்கி, வேலைவாய்ப்பை உருவாக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு தட்டிக்கழிக்க விரும்பவில்லை. திருப்பத்தூரிலுள்ள எங்களுடைய சிட்கோ அதிகாரிகள், திருப்பத்தூர் வட்டாட்சியர் அவர்களுடன் தொடர்பு கொண்டபோது, சுமார் 45 ஏக்கர் நிலம், சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில், திருப்பத்தூரையடுத்த நாட்றாம்பள்ளி அருகில், பந்தரப்பள்ளி கிராமம், சர்வே எண் 287, 291-300, 306-லிருந்து 309 வரை, கலைமகள் சபாவிற்குச் சொந்தமான நிலம் இருப்பதை அறிந்துள்ளார்கள். அந்த இடம் பொது ஏலத்தில் வருவதாகத் தெரிவித்துள்ளார்கள். பொது ஏலத்தில் கலந்துகொள்ளலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், திருப்பத்தூர் துணை ஆட்சியர் அவர்கள், திருப்பத்தூரையடுத்த சின்னமோட்டூர் கிராமத்தில் சர்வே எண் 139/3-ல் 34 ஏக்கர், 11 சென்ட்

மற்றும் சர்வே எண் 105/1-ல் 47 ஏக்கர் 50 சென்ட் மேய்ச்சல் நிலம் உள்ளதையும் எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, ஆய்வுப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. எனவே, உங்களுடைய கோரிக்கை அடுத்த ஆண்டில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் நிறைய கிரானைட் கற்குவாரிகள் தனியார்வசமுள்ளன. அந்த கிரானைட் கற்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பாலிஷ் செய்கிறார்கள். படித்த இளைஞர்கள் அதிகமாக இருந்தும், எந்தவிதமானதொரு அரசு தொழிற்சாலையும் எனது தொகுதியில் இல்லை. தொழிற்சாலை அமைப்பதற்குத் தேவையான 166 ஏக்கர் நிலம் காவேரி நகரில் உள்ளது. எனவே, தரம் வாய்ந்த அந்த கிரானைட் கற்களை பாலிஷ் செய்வதற்கு ஒரு தொழிற்சாலை அமைத்துக் கொடுத்தால், எனது பின்தங்கிய தொகுதி மக்களுக்கு வாய்ப்பாக அமையும். எனவே, விரைவில், இந்த ஆண்டே அந்தத் தொழிற்சாலையை அமைத்துக்கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த நிதியாண்டில் சிறிய தொழில்களுக்கான தொழிற்கொள்கையையும், பெரிய தொழில்களுக்கான தொழிற்கொள்கையையும் அறிவித்திருக்கிறார்கள். அதிலே பல்வேறு உதவிகளை மத்திய, மாநில அரசுகள்மூலம் செய்து கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். தனியார் தொழிற்பேட்டைகள் அமைத்தாலும்கூட, அதற்கும் அரசு பல்வேறு உதவிகளைச் செய்து தருவதற்குத் தயாராக இருக்கிறது.

முற்பகல் 9-55

சிட்கோமூலம் தொழிற்பேட்டைகள் உருவாக்க முன்வருபவர்களுக்கு, தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்குவதை ஊக்குவிக்கும்முகமாக, சென்னை நகரின் மையப் பகுதியிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் 50 ஏக்கர் மற்றும் அதற்கு

அதிகமான அளவில் அமையும் தனியார் தொழிற்பேட்டைகளின் அடிப்படை கட்டுமான செலவில் 20 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக ஒரு கோடி ரூபாய் வரை அடிப்படைக் கட்டமைப்பு மானியம் வழங்கப்படும் என, கடந்த 22-2-2008 அன்று வெளியிட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையிலே நமது முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதுபோன்ற பல வசதிகளைப் பயன்படுத்தி, தனியார்கள் முன்வந்தால், அரசு அதற்கு எல்லா உதவிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ராஜா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நம்முடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளிநாடுகளின் பெரும் முதலீட்டுடன் புதிய, புதிய ஒப்பந்தங்கள் செய்து புதிய, புதிய தொழிற்சாலைகளைக் கொண்டுவந்து சாதனை செய்துகொண்டிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகின்றோம்.

அதே வேளையில், இவையெல்லாம் பெருநகரங்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டுமானால் உகந்தவையாக இருக்கலாம். ஆனால், கிராமப்புற மக்களுடைய பொருளாதாரத்தை உயர்த்த வேண்டுமானால், கிராமப்புறங்களிலே சிறிய, சிறிய தொழிற்சாலைகளைக் கொண்டுவரவேண்டியது அவசியமாகிறது. எனவே, பிற மாநிலங்களுக்கு பல்வேறு விஷயங்களில், திட்டங்களில் எடுத்துக்காட்டாக விளங்கும் நமது முதல்வர், நமது மாநிலத்திலுள்ள கிராமப்புற மக்களுடைய பொருளாதாரத்தை வளர்க்கும்பொருட்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. கோ. எதிரொலி மணியன்: தொகுதிக்கு ஒரு தொழிற்சாலையை—தொழிற்பேட்டைகூடத் தேவையில்லை—தொகுதிக்கு ஒரு தொழிற்சாலையாவது கொண்டுவர வேண்டும். இதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970-லே முதல்வர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சிட்கோமூலம், இதுவரை 78 தொழிற்பேட்டைகள் தமிழகத்திலே இயங்கி வருகின்றன. கடந்த ஆண்டு மேலும் 22 தொழிற்பேட்டைகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதை 100 ஆக்க வேண்டுமென்று கட்டளையிட்டு அதற்கான பணிகளை நாங்கள் செய்து வருகின்றோம். மேற்கொண்டு தேவைப்படும் இடங்களில் தொழிற்பேட்டைகள் தொடங்க, நிலம் கிடைக்கும்பட்சத்தில் தனியார் தொழில் தொடங்க முன்வரும்பட்சத்தில், அரசு செய்யத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில், குறிப்பாக, இராணிப்பேட்டையில் மட்டும்தான் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு, அதிலும்கூட கிட்டத்தட்ட 60 சதவிகிதத் தொழிற்சாலைகள் மட்டும்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய 40 சதவிகிதத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் சொன்னதைப்போல, மாவட்டத்தினுடைய மேற்குப் பகுதிகளான நாட்றாம்பள்ளி, திருப்பத்தூர் போன்ற பகுதிகள் தொழிற்பேட்டை இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றன. திரு. ராஜா அவர்களும், திரு. எதிரொலி மணியன் அவர்களும் குறிப்பிட்டதைப்போல விவசாய நிலமாக இருந்தாலும்கூட அதை எடுக்கும்போது நிச்சயமாக அவர்கள் தடை செய்யமாட்டார்கள். அவர்களே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிலத்தை எடுத்து, எப்படியாவது அங்கே ஒரு தொழிற்பேட்டை உடனடியாக அமைக்கவேண்டும். நாட்றாம்பள்ளி பகுதியிலே புறம்போக்கு நிலம்கூட நிறைய இருக்கிறது. ஆகவே, அங்கேயாவது தொழிற்பேட்டை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே 5 தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. மேலும் தொழிற்பேட்டைகள் வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து, அது ஏற்ற இடமாக இருந்தால் நிச்சயமாக தொழிற்பேட்டை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 145, மாண்புமிகு உறுப்பினர், திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

145—

மின்னணு முறை

***33987—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக சார்-பதிவாளர் அலுவலகங்களில் முத்திரைத் தீர்வையைச் செலுத்த மின்னணு முறையைக் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மின்னணு முறையில் முத்திரைத் தீர்வை வசூலிக்கும் முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுக்கான முத்திரைத் தீர்வை செலுத்த, சில சமயங்களிலே பத்திரத் தாள்கள் தேவைக்கேற்ப கிடைப்பதில்லை. போலி முத்திரைத் தாள்களைத் தவிர்க்கவும், முத்திரைத் தீர்வையை மின்னணு முறையிலே செலுத்தும் முறை கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், போலிப் பத்திரப் பதிவைத் தவிர்க்க, கர்நாடகா மாநிலத்தில் உள்ளதைப்போல, மின்னணு ரேகைப் பதிவு முறை மற்றும் புகைப்படப் பதிவு முறையை (Electronic thumb impression and biometric camera) அனைத்து சார்-பதிவாளர் அலுவலகங்களிலும் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைச் சட்டத்தின்படி முத்திரைத் தீர்வை நீதிசாரா முத்திரைத் தாளின்மூலம் செலுத்தப்படவேண்டும். போலி முத்திரைத் தாள்கள் புழக்கத்தை முறியடிக்கும் நோக்கத்துடன் மின்னணு முறையிலோ அல்லது இயந்திரங்களின்மூலம் அத்தாட்சி செய்யும் முறையிலோ மாற்று வழியில் முத்திரைத் தீர்வை வசூலிக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது. இவ்வாறு மாற்று வழியில் முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படும் அண்டை மாநிலங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு, இவ்விரு முறைகளில் சிறந்த முறை எது என்பதைக் கண்டறிந்து அரசுக்கு விரிவான ஓர் அறிக்கை அனுப்பி வைக்குமாறு பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். அறிக்கை வந்தவுடன், முதலமைச்சர் அவர்களுடைய ஆணைப்படி நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் எத்தனை சார்-பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன? அவற்றிலே கணினிமயமாக்கப்பட்டுள்ள சார்-பதிவாளர் அலுவலகங்கள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், என்னுடைய தளி தொகுதியில் கெலமங்கலத்திலே உள்ள சார்-பதிவாளர் அலுவலகத்தில் கடந்த ஆண்டு 7 ஆயிரம் ஆவணங்கள் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டு இதுவரை 2,800 ஆவணங்கள் பதிவாகியுள்ளன. ஆகவே, வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவருகின்ற இந்த சார்-பதிவாளர்

அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார்-பதிவாளர் அலுவலகத்தைப் பொறுத்தமட்டில், 568 சார்-பதிவாளர் அலுவலகங்கள் தமிழகத்திலே இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டடங்களைப் பொறுத்தவரையில் அதற்கு ஆண்டுதோறும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிகளை ஒதுக்கித் தந்துக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த ஆண்டு 20 சார்-பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக நிதிகளை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். படிப்படியாக அது உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பத்திரப் பதிவுத் துறை என்பது நம்முடைய வணிக வரித் துறையைப் போல அரசு நிர்வாகத்திற்கு மிகப் பெரிய அளவிலே வருவாயை ஈட்டித் தரக்கூடிய ஒரு துறையாக இருக்கின்ற காரணத்தினால், அந்தத் துறையின்மூலமாக வருகின்ற வருவாயைக் கொண்டு, நம்முடைய பத்திரப் பதிவு அலுவலகங்களை நவீனமயமாக்குகின்ற முயற்சிகளை அரசு மேற்கொள்கின்றவகையிலே, பல பத்திரப் பதிவு அலுவலகங்களிலே கம்ப்யூட்டர்களை இயக்குகின்ற பணியாளர்கள், அதில் முறையாகப் பயிற்சி பெற்றவர்களாக இல்லாத காரணத்தினால், வெளியிலேயிருந்து வேலையில்லாத இளம் பட்டதாரிகளைக் கொண்டுவந்து, அந்தக் கம்ப்யூட்டர்களை அங்கே இயக்கிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியத்தைக்கூட, பத்திரத்தைப் பதிவு செய்ய வருகின்றவர்களிடமிருந்து வசூலிக்கின்ற ஒரு நிலையும் அங்கே இருந்துவருகிறது. அதுகுறித்து விசாரித்தால், இப்பணிகளுக்காக கம்ப்யூட்டர்களைக் கொடுத்தார்களேயொழிய, அந்தக் கம்ப்யூட்டர்களை இயக்குவதற்கான முறையான பயிற்சி பெற்ற நபர்களை அரசு நியமனம் செய்து தரவில்லை என்றும், ஏற்கெனவே பத்திரப் பதிவுத் துறையிலே வேலை

[2008 ஏப்ரல் 23

பார்த்தவர்களுக்கு ஒரு மாதம், இரண்டு மாதம் என்று ஒரு பயிற்சியைக் கொடுத்து அவர்களை அனுப்பினார்கள், அவர்களால் அந்தக் கம்ப்யூட்டர்களை இயக்கமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. எனவே, இதற்கு முழுநேரமாக ஒவ்வொரு பத்திரப் பதிவு அலுவலகத்திலேயும் ஒரு கம்ப்யூட்டர் ஆபரேட்டரை, கணினி இயக்குகின்ற பணியாளரை நியமிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில், 80 சதவிகிதம் கணினிமயமாக்கப்பட்டுவிட்டது. அங்கேயிருக்கக்கூடியவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக பயிற்சி நிலையமும் இந்தத் துறையின் சார்பாக சென்னையிலே இயக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டு இப்போது அங்கு பணியாற்றக்கூடியவர்கள் மூலமாகத்தான் இயக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில், 568 சார்-பதிவாளர் அலுவலகங்களில், 450 சார்-பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரம் பதிவு செய்வதற்காக, நிலத்தினை மதிப்பீடு செய்வதில் கடந்த ஆண்டு ஒரு மாறுதல் செய்யப்பட்டது. அப்படி மாறுதல் செய்யப்படுகிறபோது சில பகுதிகளில் வசதியான, தொழில் நடத்தக்கூடியவர்கள் வங்கிகளில் கடனைப் பெறுவதற்காக அவர்கள் அந்த நிலத்தினுடைய மதிப்பினைவிடக் கூடுதலாக பத்திரத்தை வாங்கிப் பதிவு செய்துவிட்டால் அதையே அளவுகோலாக வைத்து, அந்தப் பகுதியினுடைய நிலத்திற்கான மதிப்பீடு செய்யப்படுகிறது. அந்தவகையிலே குறிப்பாக, திருப்பூரில் அந்த நிலத்தினுடைய மதிப்பு 5 ஆயிரம் சதவிகிதம் வரையில் கடந்த ஆண்டு உயர்ந்திருக்கிறது. அது சாதாரண மக்களை மிகக் கடுமையாக பாதிக்கிறது. பத்திரம் பதிவு செய்யமுடியாத நிலை இருக்கின்ற காரணத்தினால், அரசு இதனை மறுபரிசீலனை செய்யுமா அல்லது குறைந்தபட்சம் சாதாரண

2008 ஏப்ரல் 23]

மக்கள் குடியிருப்பதற்கு வீடு வாங்குகிறவர்களுக்காவது, அதனைப் பரிசீலித்து குறைக்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புகூடக் கொடுத்திருப்பதாக அறிகிறேன். வழிகாட்டு மதிப்பீடுகளைப் பொறுத்தமட்டில், வட்டக் குழு உறுப்பினர்களாக உள்ள வட்டாட்சியாளர்கள், சார்-பதிவாளர், வழிகாட்டு சார்-பதிவாளர், பஞ்சாயத்து யூனியன் ஆணையர் ஆகியோரைக் கொண்ட குழு அந்த இடங்களை ஆய்வு செய்து, கிராம நிர்வாக அலுவலர், பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் ஊர் பிரமுகர் ஆகியோரை விசாரணை செய்து புள்ளிவிவரங்களைக் கருத்திற்கொண்டு வழிகாட்டு மதிப்புகள் தயார் செய்யப்படுகின்றன. இவர்களால் தயார் செய்யப்படுகின்ற வழிகாட்டு மதிப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவில், மாவட்ட வருவாய் அலுவலர், துணை பதிவுத் துறைத் தலைவர், மாவட்டப் பதிவாளர், சார்-பதிவாளர், பஞ்சாயத்து உதவி இயக்குநர், நகராட்சி துணை இயக்குநர், நகராட்சி ஆணையர் ஆகியோரைக் கொண்ட குழுவில் வட்டக் குழு தயார் செய்த வழிகாட்டு மதிப்புகளைப் பரிசீலனை செய்து, பொதுமக்கள் பார்வைக்கு விளம்பரம் செய்து, அதன் பின்பு, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் ஆட்சேபணைகளைப் பரிசீலனை செய்து, இறுதியாக வழிகாட்டு மதிப்புகள் அங்கீகாரம் செய்யப்படுகின்றன. இருந்தாலும்கூட சில கோரிக்கைகள் வருகின்றபோது, அதையும் நாங்கள் 47-A என்ற பிரிவின் அடிப்படையில் ஆய்வு செய்து, முடிந்த அளவிற்கு பொதுமக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இந்தத் துறை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 10-05

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட விவாதத்தில் பேசுகிறபோது, Court fee stamps கிடைக்காமல், ஆங்காங்கே வழக்கறிஞர்கள் அவஸ்தைப்படுகிறார்கள் என்ற கருத்தை நான் சொன்னேன். ஆகவே, மின்னணு முறையைக் கொண்டு

[2008 ஏப்ரல் 23

வருவதாகவும், stamping முறையைக் கொண்டு வருவதாகவும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அரசு கொள்கை முடிவை அறிவித்தது. ஆனால், இதுவரை அதைச் செய்யாத காரணத்தாலே, இப்போது stamp கிடைக்கவில்லை. ஆகவே, ஆங்காங்கு stamp vendor-களைப் போட்டு போதிய அளவுக்கு Court fee stamp-களையும், பத்திரங்களையும் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்னனு முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்தத் துறையின் சார்பாக அதிகாரிகளை பக்கத்து மாநிலமாகிய கர்நாடக மாநிலத்திற்கு அனுப்பிவைத்து, ஆய்வு செய்யப்பட்டு அது ஆய்வில் இருக்கிறது. அதனுடைய சாதக, பாதகங்களை இந்தத் துறை கண்டறிந்த பிறகு, அதைச் செயல்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தத் துறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Stamp-ஐப் பொறுத்தமட்டிலும், இதுவரையிலும் மாநிலத்தில் எந்த இடத்திலும் தட்டுப்பாடு இருப்பதாக இந்தத் துறைக்குச் செய்தி வரவில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் நேற்றுகூடப் பேசுகிறபோது இதே கருத்தைச் சொன்னார்கள். உடனடியாக, துறையினுடைய அதிகாரிகளிடத்திலே இதுபோன்ற நிலைமை இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், இதைப்போன்ற நிலைமை தமிழகத்திலே எங்கும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்ட ஓர் இடத்தைச் சொன்னால் நிச்சயமாக அது துறையின் சார்பாகப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, பத்திரப் பதிவு அலுவலகங்களில் பெரும்பாலானவை கணினிமயமாக்கப்பட்டுவிட்டன என்று குறிப்பிட்டார்கள். ஆனால், பத்திரம் பதிவு செய்கின்றவர்கள், குறைந்தது 30 நாட்களுக்குள்ளே தங்களுக்கு அந்தப் பத்திரம் கிடைக்க வேண்டுமென்று விரும்பினாலும்,

2008 ஏப்ரல் 23]

இரண்டு மாதங்கள் அல்லது 3 மாதங்கள் காலதாமதம் ஏற்படுகிறது, அதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு செய்தவுடன் உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று துறையினுடைய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. எனவே, உடனடியாகக் கிடைக்கக்கூடிய அளவிற்கு இந்தத் துறை செயல்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 146, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

147—

தரம் உயர்த்துதல்

***20589—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கொட்டுக்காரம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மூன்றாம்பட்டி ஊராட்சி, கொட்டுக்காரம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 34 கிராமப் பஞ்சாயத்துகளை உள்ளடக்கிய ஊத்தங்கரை வட்டத்தில் ஒன்பதே ஒன்பது உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே இருக்கின்றன. ஏறக்குறைய 10,000 மாணவர்கள் படிக்கின்ற அந்த வட்டத்தில் 9 உயர்நிலைப் பள்ளிகள் தவிர, மாணவர்கள் அதிகமாக படிக்கச் செல்ல வேண்டுமென்றால், கொட்டுக்காரம்பட்டியில் தரம் உயர்த்த வேண்டும் என்று கோருகிற இந்தப் பள்ளியிலிருந்து மிட்டப்பள்ளிக்கோ அல்லது சிங்காரப்பேட்டைக்கோ சுமார் 5 கிலோ மீட்டர் தூரம்வரை செல்லவேண்டும். 8 ஏக்கர் நிலம் இந்தப் பள்ளிக்காக வாங்கி வைத்து, 3 ஆண்டுக் காலமாக அப்படியே தூங்கிக் கொண்டிருக்கிறது. 50,000 ரூபாய் பணம் கட்டியும், இரண்டு ஆண்டுக் காலமாக அப்படியே இருக்கிறது. ஆகவே, தமிழக அரசு அனைவருக்கும் கல்வி வழங்கவேண்டிய, இலவசக் கல்வி வழங்க வேண்டிய அந்தத் திட்டத்தில், தமிழகத்திலே எந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி, கல்வியில் பின்னுக்குத் தள்ளப்பட்ட பகுதி என்பதையெல்லாம் கணக்கில் எடுத்து அதில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய சில மாவட்டங்களின் வரிசையைப் பார்க்கிறபோது, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கல்வியறிவு சதவிகிதம் மிகவும் குறைவாகவே உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏறக்குறைய 5 கிலோ மீட்டர் தூரம், 6 கிலோ மீட்டர் தூரம் அந்த மாணவர்கள் பஸ் போக்குவரத்து இல்லாமல் நடந்து செல்லவேண்டிய நிலையைத் தவிர்க்க, (மணியடிக்கப்பெற்றது) கொட்டுக்காரம்பட்டி பள்ளியைத் தரம் உயர்த்தி, உயர்நிலைப் பள்ளியாக அறிவிப்பார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய இந்தக் கொட்டுக்காரம்பட்டியில் இப்போது 8 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்கள் 22 பேர்தான் இருக்கிறார்கள். 50 மாணவர்கள் இருந்தால் பொதுவாக இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றக்கூடிய ஒரு பரிசீலனையை எடுத்துக்கொள்ளலாம். நாம் அந்த இடத்தினுடைய சூழ்நிலையைக் கருதி சிறப்பாக விலக்கு அளித்தாலும்கூட, அங்கே இட வசதி இப்போது வெறும் 54 சென்ட் மாத்திரம்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

தேவைப்பட்ட நிலத்தை, 8 ஏக்கர் நிலத்திற்கு மேலாகவே அங்கே வாங்கி வைத்திருப்பதாக இப்போது இங்கே, தெரிவித்திருக்கிறார்கள். அந்த நிலம் இருக்கிறது, அங்கு இருக்கக்கூடிய பொதுமக்கள் தங்களுடைய பங்குத் தொகையினை, மீதம் இருக்கக்கூடிய பங்குத் தொகையினைச் செலுத்தியிருக்கிறார்கள் என்று அங்கிருந்து முறையான முன்மொழிவுகள் அரசுக்கு வரப்பெற்றால் நிச்சயமாக இந்த ஆண்டு அரசு அதைப் பரிசீலிக்கும்.

இன்னொன்றையும் சொன்னார்கள். தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களிலே பொதுவாக இருக்கக்கூடிய கல்விச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டுதான் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், கடந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும், 2 ஆண்டுகளாகச் சிறப்பு நிதி ஒதுக்கீடாக ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக அந்த மாவட்டங்களுக்கு அளித்து, கல்விப் பணிகளை அங்கே சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, வரக்கூடிய ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக அந்த மாவட்டங்களிலே கல்விப் பணிகளை முடுக்கிவிடுவதற்கு அரசு ஆவன செய்யும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் காலமாக ஊத்தங்கரை வட்டத்தில் எந்தப் பள்ளியும் தரம் உயர்த்தப்படவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். கேத்தநாயக்கன்பட்டி, பொம்மராசன்பட்டி, மூன்றாம்பட்டி மற்றும் சூரக்கல் ஆகிய பகுதிகளிலுள்ள மாணவர்கள், இந்தப் பள்ளி தரம் உயர்த்தப்பட்டால், இதைச் சுற்றியிருக்கின்ற கிராமத்திலுள்ள மாணவர்கள் நிச்சயமாக இந்தப் பள்ளிக்கு வருவார்கள். இது தரம் உயர்த்தப்படாதபட்சத்தில், இதைச் சுற்றியிருக்கின்ற கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிங்காரப்பேட்டை மற்றும் வேறு, வேறு பகுதிகளுக்கு அதாவது, 5 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டிய நிலைமை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது என்கின்றார். இது தரம் உயர்த்தப்பட்டால் ஏறக்குறைய 50 முதல் 70 மாணவர்கள் அந்தப் பள்ளியிலே நிச்சயமாகப் பயில்வார்கள். ஆகவே, இதைக் கருத்தில்கொண்டு, ஐந்தாண்டுக் காலமாக தரம் உயர்த்தப்படாததால்,

[2008 ஏப்ரல் 23

தாலுகா அளவிலான கொட்டுக்காரம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய அழுத்தமான கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட மதுக்கரை ஒன்றியத்தில், பிச்சனூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தவும், அதேபோன்று குமிட்டிபதி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னால் இது கல்வி அமைச்சரின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி என்பதால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது. எனவே, இந்த ஆண்டிலாவது அவற்றைத் தரம் உயர்த்த இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அவர் குறிப்பிட்டமாதிரி, உயர்நிலைப் பள்ளிகளை அல்லது மேல்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு, அரசு வகுத்திருக்கக்கூடிய விதிமுறைகளில், அப்படி ஒரு ஷரத்து இல்லை. பள்ளிகளைத் தரம் உயர்த்துவதுபற்றி பலமுறை இந்த அவையில் நான் குறிப்பிட்டிருப்பதைப்போல, இன்னின்ன conditions பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றுதான் இருக்கின்றதே ஒழிய, நான் பார்த்த அளவுக்கு அரசின் எந்தக் condition-ஒும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருக்கக்கூடிய தொகுதிகளில் அப்படி உயர்நிலைப் பள்ளிகளையோ, மேல்நிலைப் பள்ளிகளையோ தரம் உயர்த்தக்கூடாது

2008 ஏப்ரல் 23]

என்று எந்தக் condition-ம் நிச்சயமாக அரசின் விதிகளில் இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கடந்தகாலங்களிலேகூட நீங்கள் பார்த்தீர்களானால், பல இடங்களில் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக்கூடிய இடங்களில் நாங்கள் பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தந்திருக்கின்றோம். ஏனென்றால், கல்விப் பணி அது. ஓர் ஊரிலே எந்தப் பள்ளியை எடுத்துக்கொண்டாலும், அந்தப் பள்ளியிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் படிக்கின்றார்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் படிக்கின்றார்கள். ஆகவே, கல்வி விஷயத்தில் நிச்சயமாக இதுபோன்ற கருத்து எந்தக் காலத்திலும் இல்லை. இதுபோன்ற ஒரு அளவுகோல் இல்லை என்பதை நான் இந்த அவையிலே உறுதிபடத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற பள்ளிகளை நிச்சயமாக ஆய்வு செய்து, வரக்கூடிய காலங்களில் தரம் உயர்த்துவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு நிச்சயமாக எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பள்ளிகளைத் தரம் உயர்த்துவதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நம்முடைய அரசு ஆண்டுதோறும் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கி வருகின்றது. அதைப்போல தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக நூற்றுக்கணக்கிலே தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. இப்படித் தரம் உயர்த்துகின்ற அந்தப் பள்ளிகளை ஆய்வு செய்கின்றவர்கள், கண்காணிக்கின்றவர்கள், தொடக்கக் கல்விப் பள்ளிகளுக்கான உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களாகப் பணியாற்றுகின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் பொறுப்பில் ஒன்றிய அளவில் நூற்றுக்கும் மேற்பட்ட, 150 முதல் 200 பள்ளிகள்கூட எண்ணிக்கையில் இருக்கின்றன. ஆகவே அந்தப் பள்ளிகளை ஆய்வு செய்வதன் அடிப்படையில், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் நீண்டகாலமாகப் பணியாற்றி வருகின்ற காரணத்தால், 10 முதல் 15 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றுவதால், அவர்களுக்குக் கூடுதல் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் என்று பதவி உயர்வை வழங்கினால், அது அவர்களுடைய பணிக்குப் பொருத்தமாக இருக்கும். அப்படிப்பட்ட நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

[2008 ஏப்ரல் 23

அதேநேரத்தில் ஏராளமான தொடக்கப் பள்ளிகளுக்கான உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்க விரும்புகின்றேன். அதேபோன்று, இப்போது மாவட்ட அளவில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மட்டுமே பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அதைப்போல, உயர்நிலைப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளைக் கண்காணிப்பதற்கு ஒரு வருவாய் மாவட்டத்திற்கு 2 அல்லது 3 மாவட்டக் கல்வி அலுவலர்கள் இருந்துகொண்டிருக்கின்றார்கள். அதைப்போல இந்தத் தொடக்கப் பள்ளிகளை ஆய்வு செய்வதற்கு, கண்காணிப்பதற்கு, இரண்டு கல்வி மாவட்டங்களாகப் பிரிப்பதற்கும் அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகின்றேன். அதேபோன்று, அவர்களுக்கு இந்த ஆண்டில் பதவி உயர்வு வழங்குவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதையும் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் மணி அவர்கள் சொன்ன கருத்து நல்ல கருத்து. தொடக்கக் கல்வி அலுவலர்களைப் பொறுத்தவரையில், நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். ஒரு நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர், தொடக்கக் கல்வி அலுவலராகப் பணியாற்றுகின்றார். மீண்டும் ஒருவேளை அவர் ஆசிரியராக வருவதாக இருந்தால் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியராகத்தான் வருவார். இது inter-changeable-ஆக இருந்ததே ஒழிய, தொடக்கக் கல்வி அலுவலர் பணியிலிருந்து அவர் எந்தவிதமான பதவி உயர்வும் பெற வாய்ப்பு இல்லாத நிலை இருந்தது.

முற்பகல் 10-15

நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே இந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கு என்ன முறையைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொன்னால், நேரடி நியமனங்கள்மூலமாக 30 சதவிகிதம் கொண்டுவரலாம் என்று முடிவு செய்தார்கள். இப்போது நேரடி நியமனங்கள் என்ற ஒரு முறை வருகின்றபோது, அந்தப் பதவியிலிருந்து

2008 ஏப்ரல் 23]

அடுத்த பதவிக்கு பதவி உயர்வு இல்லாத நிலை என்பது இயற்கை நியதிகளுக்கு முரணாக இருக்கின்ற காரணத்தினாலேதான், அரசு அந்த முறையை மிகச் சிறப்பாக ஆராய்ந்து, உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் வரை அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்கு அரசாணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மாவட்டக் கல்வி அலுவலர்களாக அல்லது உதவி மாவட்டக் கல்வி அலுவலர்களாக இங்கே பதவி உயர்வு கொடுப்பதற்கு பொதுவாக இருக்கக்கூடிய நிர்வாக நடைமுறைகளிலே ஒரு மிகப் பெரிய மாற்றத்தை நாம் உருவாக்கவேண்டும். அதுகுறித்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நம்முடைய நிதியாதாரங்கள் இவற்றையெல்லாம் கலந்துகொண்டுதான் அரசு அதுகுறித்த ஒரு முடிவை எடுக்கமுடியும்.

இன்னொன்று, இந்த உதவித் தொடக்க கல்வி அலுவலர்களைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டதால் சொல்கிறேன். காலாகாலமாக அவர்கள் அதே இடத்தில் இருந்தார்கள். முதல் முறையாகத்தான் தலைவர் கலைஞர் அவர்கள்—இதற்கு முன்பாக அவர்கள், அந்தக் கல்வி மாவட்டத்திற்குள் நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியராக இருந்து தொடக்கக் கல்வி அலுவலராக ஆகின்றபோது, அந்தக் கல்வி மாவட்டத்திலேயே பணியாற்றமுடியாது மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் அதனைக் கருத்திலேகொண்டு, அந்தக் கல்வி மாவட்டத்திலேயே ஏற்கெனவே நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பணிபுரிந்த அந்த ஒன்றியத்தைத் தவிர்த்து, ஏனைய ஒன்றியங்களிலே அவர்கள் பணிபுரியலாம் என்ற சிறப்பான வாய்ப்பை உருவாக்கித் தந்தது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு என்பதை இங்கே திட்டவட்டமாகச் சொல்வேன்.

இப்போது இருக்கக்கூடிய 412 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களிலே 800 பேர் பணியாற்றுகிறார்கள். 21 இடங்கள் மட்டும்தான் காலியாக இருக்கின்றன. விரைவிலே அவற்றை நிரப்புவதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், இராயபுரம் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டும். பங்களிப்புத் தொகை ரூபாய் 2 இலட்சம்

[2008 ஏப்ரல் 23

செலுத்தியாகிவிட்டது. உங்கள் வழிகாட்டுதலின்படி அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு எல்லா தகுதியும் இருக்கிறது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரம் உயர்த்தித் தருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா தகுதிகளையும் அந்தப் பள்ளி அங்கே பெற்று நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருக்கிறது என்று இங்கே தெரிவித்திருக்கிறார். எனவே, அரசு வரக்கூடிய காலங்களில் நிச்சயமாக அதற்கு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

148—

விளையாட்டரங்கம்

***5371—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனியில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டரங்கத்தை பயன்பாட்டுக்குக் கொண்டு வரவும், விளையாட்டரங்கத்தில் நீச்சல் குளம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அவைக்கு அளிக்கிறேன்.

தேனி மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில், 15 ஏக்கர் நிலப் பரப்பில், ஒரு மாவட்ட விளையாட்டு வளாகம் வடிவமைக்கப்பட்டு, அதில் சிறகுப் பந்து உள் விளையாட்டு ஆடுகளம், உடற்பயிற்சிக் கூடம், மேசைப் பந்து, ஸ்குவாஷ், டென்னிஸ், குத்துச் சண்டை மேடை ஆகிய விளையாட்டு வசதிகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 400 மீட்டர் ஓடுகளப் பாதை பணி மட்டும் இன்னும் நிறைவு பெறாமல் இருக்கிறது. அதையும் சீக்கிரமாக முடித்துக் கொடுக்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். மேலும், தேனி மாவட்டத்தினுடைய விளையாட்டு வளாகத்திற்குள்ளேயே, 25 x 13 மீட்டர் அளவிலான ஒரு நீச்சல் குளம், திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில், ரூபாய் 65.50 இலட்சத்தில் அமைத்திடும் பணி நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில், மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 2004-2005-ல் அனுமதி வழங்கப்பட்டு, அரசின் சார்பில் 34 இலட்சம் ரூபாயும், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், அன்புச் சகோதரர் திரு. டி.டி.வி. தினகரன் அவர்கள் நிதியில் 35 இலட்சம் ரூபாயும், நமது சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவர், அண்ணன் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் நிதியிலிருந்து ரூபாய் 5 இலட்சமும், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 10 இலட்சமும் ஒதுக்கி, அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளெல்லாம் நிறைவடைந்த நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் 400 மீட்டர் ஓடுகளம் அமைக்கப்படாத காரணத்தினாலும், அதேபோல, கால்பந்தாட்ட மைதானம், வலைப்பந்து மைதானம் போன்றவை அமைக்காத காரணத்தினாலும், மைதானம் விளையாட்டிற்குப் பயன்படாமல் இருக்கிறது. அங்கிருக்கின்ற அலுவலர்களை அணுகிக் கேட்கின்றபோது, இவற்றை நிறைவேற்றுவதற்கு அரசுக்குப் பதினேழரை இலட்சம் ரூபாய்க்கு அனுமதி கோரி கருத்துரு அனுப்பியிருக்கிறோம், அனுமதி பெற்றவுடன் அந்தப் பணி செய்து தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அரசுக்கு, தேனி மாவட்ட ஆட்சியரால் பதினேழரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தினை விளையாட்டுத் துறைமூலம் ஒதுக்கி, தேனி மாவட்ட விளையாட்டு அரங்கத்தினை பயன்பாட்டிற்குச் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 23

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதுபோல, அவர்களுடைய ஆட்சியில் 2003-2004-ல் Part-II திட்டத்திலே அனுமதிக்கப்பட்டது. ஆனால், துவக்கப்பட்ட அந்தத் திட்டத்தின் துவக்க விழா 16-6-2005-ல் நடத்தப்பெற்றது. ஆனால் அதற்குப் பின்னால்தான், இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னால் அவர் ஏற்கெனவே சொன்னதுபோல, அந்த நிதி போக, நம்முடைய விளையாட்டு ஆணையம் மூலம், மாநில அரசு பங்கை அடிப்படையாகக் கொண்டு, 30.30 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல 4-1-2008-ல் நீச்சல் குளம் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. அதற்காகவும் அரசு 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. அவர்கள் சொன்னதைப்போல முடியாத பணிகளைச் சீக்கிரமாக முடிப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்குத் தடகளப் பயிற்றுநர்கள் நியமிக்க வேண்டியுள்ளது. தேனி நகரிலிருந்து மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், 3 கி.மீ. தூரம் செல்ல வேண்டியுள்ளது. காலை நேரங்களிலும், மாலை நேரங்களிலும் அந்த விளையாட்டு அரங்கத்திற்கு ஒரு சிறப்பு நகரப் பேருந்து இயக்குவதற்கும் தேனியில் விளையாட்டு வீரர்களுக்கென அந்த விளையாட்டு அரங்கத்தில் தங்கும் விடுதி அமைப்பதற்கும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்ட வளாகத்திற்கு மாவட்ட விளையாட்டு அலுவலர் ஒருவரும், கால்பந்து பயிற்றுநர் ஒருவரும், கைப்பந்து பயிற்றுநர், கையுந்துப்பந்து பயிற்றுநர், கூடைப்பந்து பயிற்றுநர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். போக்குவரத்து

2008 ஏப்ரல் 23]

வசதியைப் பொறுத்தவரையில், அந்தத் துறை அமைச்சரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

149—

இருவழிச் சாலை

***31944—திரு. கே.எஸ். விஜயகுமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி வட்டம், கவரப்பேட்டை-சத்தியவேடு சாலையை இருவழிச் சாலையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

கவரப்பேட்டை-சத்தியவேடு சாலை ஒரு மாநில நெடுஞ்சாலையாகும். அந்தச் சாலை சென்னையிலிருந்து கல்கத்தா செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலை எண் 5-ல் கவரப்பேட்டை என்கிற இடத்தில் பிரிந்து சுமார் 22 கி.மீ. தூரத்திற்கு மாநில நெடுஞ்சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சாலை துவக்கத்திலிருந்து 6 கி.மீ. வரை இருவழிச் சாலையாகவும் மற்றும் 19-லிருந்து 20-வது கி.மீ. வரை ஒரு கி.மீ. சாலை, மொத்தம் 7 கி.மீ. சாலை ஏற்கெனவே இருவழிச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, 2006-2007 ஆம் நிதியாண்டிலும், 2007-2008 ஆம் நிதியாண்டிலும் மீதமிருக்கக்கூடிய பகுதிகளை இருவழிச் சாலையாக மாற்றுவதற்குத் திட்டம் எடுக்கப்பட்டு, திட்டப் பணிகள் வரக்கூடிய ஜூன் மாத இறுதியில் நிறைவடையவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையில் 4 தரைவழிப் பாலங்கள் உள்ளன. அவற்றையும் அகலப்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சாலையைப் பற்றியது. இருந்தாலும் அதில் வரக்கூடிய பாலங்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அதையும் எதிர்காலத்திலே இந்த அரசு நிச்சயம் நிறைவேற்றப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2005-ல் பெய்த கன மழையால் பொம்மாச்சிக்குளம் அருகே இருக்கின்ற தரைப் பாலத்தில் ஒரு கார் அடித்துச் சென்று அதில் 2 குழந்தைகள் மற்றும் தாய், தந்தையர் உயிர்ப் பலி கொடுத்திருக்கிறார்கள். அதுபோன்ற ஒரு சூழ்நிலை இருப்பதால், அந்தத் தரைப் பாலங்கள் அனைத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்டு நம்முடைய தலைமை பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. வருங்காலங்களிலே அந்தத் தரைப் பாலங்களை உயர் பாலங்களாக அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையிலே பல முறை குறிப்பிட்டிருக்கிறேன். பாலங்கள் அமைக்கிறோம் என்று சொன்னால், அரசு தாக்கூடிய நிதி பெருமளவில் அதிலே முடங்கிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, சாலையைப் பராமரிப்பதற்காகக் கொடுக்கப்படும் நிதி பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினால், பாலங்களை அமைப்பதற்கு நபார்டு போன்ற வங்கிகளுடைய கடனுதவியைப் பெறுகிறோம். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு

அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகச் செய்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லாம் கேட்கவில்லை என்று சொன்னாலும், நாங்களே நம்முடைய மாண்புமிகு முதல்வருடைய உத்தரவின் பேரில் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வலுவிழந்த பாலங்கள், குறுகிய பாலங்கள், பாலங்களே இல்லாத இடங்கள் என்று 3 வகைப்பாடுகள் செய்யப்பட்டு, ஏறத்தாழ 1,000 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசினுடைய கவனத்திலே இருக்கிறது. அது பகுதி, பகுதியாக நபார்டு வங்கியினுடைய ஒத்துழைப்போடு எதிர்காலத்திலே இதுபோன்ற பாலங்கள் நிறைவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

150—

கால்நடை மருத்துவர்

***23949—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, நல்லாடை ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு, நிரந்தரக் கால்நடை மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகார் தொகுதியில் அமைந்துள்ள நல்லாடை ஊராட்சியில், கால்நடைக் கிளை நிலையம்தான் செயல்பட்டு வருகிறது. அதில் கால்நடை ஆய்வாளர் பதவி காலியாக உள்ளதால், திரு. சுப்பிரமணியம் என்ற கால்நடை ஆய்வாளர் அவர்கள் தற்சமயம் கூடுதல் பொறுப்பில் சிகிச்சை அளித்து வருகிறார்.

[2008 ஏப்ரல் 23

முற்பகல் 10-25

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களின் உத்தரவுப்படி, 110 கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். பயிற்சி முடிவு பெற்றதும் மேற்படி கிளை நிலையத்திற்கு கால்நடை ஆய்வாளரை நிரந்தரமாகப் பணியமர்த்த இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாடை என்பது 5 ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒரு மையப் பகுதி. அங்கு தினந்தோறும் 30 கால்நடைகள் கருவூட்டலுக்கும், 75-லிருந்து 100 கால்நடைகள் மருத்துவத்திற்கும் வருகின்றன. இந்தப் பகுதியிலே நல்லாடை, தலச்சங்காடு, திருக்கடையூர், திருவெண்காடு போன்ற பகுதிகளுக்கு ஒரே ஒரு மருத்துவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் வாரம் ஒரு முறை அங்கு வருவார். ஆனால், அவரும் இப்போது வருவதில்லை. அங்கே ஒரு தனியார் கால்நடை மருத்துவர் சிறப்பாகக் கால்நடைகளுக்கு வைத்தியம் செய்து வந்தார். அவரையும் இப்போது நமது மருத்துவர்கள் அகற்றிவிட்டார்கள். அந்தப் பகுதியிலே இப்போது கால்நடைகளுக்கான மருத்துவம் நடைபெறுவதேயில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் பால் வளம் மற்றும் இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்ற ஆடுகள் போன்ற அனைத்துக் கால்நடைகளுக்கும் வைத்தியம் செய்ய அங்கு நிரந்தரமாக ஒரு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் கூறுவது உண்மையான நிலைதான். ஏனென்றால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியாளர்களால் 5 ஆண்டுகாலம் பணி நியமனம் தடை செய்யப்பட்டிருந்ததால், சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஆனால், 11 மாத பயிற்சியை முடித்த பிறகுதான், அவர்கள் பணியில் சேர இயலும். இப்போது பயிற்சி நடைபெற்று வருகிறது. தமிழக முதலமைச்சர் நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது, 2001-ல் கால்நடை ஆய்வாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்கள். அதற்குப் பிறகு, 6 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் கருணை அடிப்படையில் முதற்கட்டமாக 110 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி நடைபெற்று வருகிறது. பயிற்சி முடிவுபெற்றதும் நிச்சயமாக மேற்படி கிளை நிலையத்தில் கால்நடை ஆய்வாளர் நிரந்தரமாகப் பணியமர்த்தப்படுவார்.

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பல்வேறு இடங்களிலே அந்தப் பணிகள் நடைபெறமுடியாமல் இருக்கின்றன. நமது மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வருமுன் காப்போம் திட்டம் என்ற ஒரு திட்டத்தை நமக்குக் கொடுத்து அது மக்களிடத்திலே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக, அப்படி கால்நடைகளுக்கும் வருமுன் காப்போம் திட்டம் அந்தந்தப் பகுதி கால்நடை மருத்துவ நிலையங்களில் நடத்தப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கால்நடை பாதுகாப்புத் திட்டம் முறைப்படி அனைத்துப் பகுதிகளிலும், அனைத்து ஒன்றியங்களிலும் மாதத்திற்கு ஒரு முகாம்வீதம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் எந்தெந்தப் பகுதியில் நடைபெறுகின்றன என்ற தகவலை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. ஆகவே, நிச்சயமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினருக்கு அந்த விவரங்கள் தெரியாமல் இருந்தால் அதுகுறித்து துறை அலுவலர்களுக்கு அரசு உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்கும். இத்திட்டம் நல்ல முறையில், சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.
(குறுக்கீடுகள்)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

பட்டியல் 6@

1—

வாகன வசதி

வினா எண் 13463—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் சிரமமான பகுதிகளில் அமைந்துள்ள காவல் நிலைய துணை ஆய்வாளர்களுக்கு வாகன வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் வாகன வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அவசியத் தேவைகள் ஏற்படும் காலத்தில், தேவைக்கேற்ப அவ்வப்போது உரிய வாகனங்கள் வழங்குவதற்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, நீலகிரி மாவட்டத்தின் சிரமமான பகுதிகளில் அமைந்துள்ள காவல் நிலைய துணை ஆய்வாளர்களுக்கு எனத் தனியாக வாகன வசதி ஏற்படுத்திக் கொடுக்க அவசியம் தற்பொழுது எழவில்லை.

2—

காவலர்களை அதிகப்படுத்துதல்

வினா எண் 23382—திரு. மா. ராஜசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் தொகுதி, தொட்டியம் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலர்களை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொட்டியம் காவல் நிலையத்தில் தற்போது காலியாக உள்ள பணியிடங்களில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்மூலம் காவலர்கள் தேர்வு செய்தவுடன் தேவையான இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியமர்த்தப்படுவார்கள் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

3—

வாகன வசதி

வினா எண் 31644—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர், மணலூர்பேட்டை, கண்டாச்சிபுரம் கெடார் காவல் நிலையங்களுக்கு வாகன வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அரகண்டநல்லூர், மணலூர்பேட்டை, கண்டாச்சிபுரம் கெடார் ஆகிய காவல் நிலையங்களுக்கு தலா ஒரு ஈப்பு மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் ஆகிய வாகனங்கள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

4—

புதிய ஈப்பு வழங்கல்

வினா எண் 33972—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, அஞ்செட்டி, தளி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை காவல் நிலையங்களுக்குக் கூடுதலான எரிபொருளுடன் புதிய ஈப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 23

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதிக்குட்பட்ட அஞ்செட்டி, தளி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை காவல் நிலையங்களுக்குத் தேவையான அளவு எரிபொருளுடன் தலா ஒரு ஈப்பு வாகனம் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், குறிப்பிட்ட பகுதியில் உள்ள காவல் நிலையங்களின் வாகனங்களுக்கென அதிக அளவு எரிபொருள் ஒதுக்கீடு செய்திட இயலாது. இருப்பினும் தவிர்க்கமுடியாத தருணங்களில், மேற்குறிப்பிட்ட காவல் நிலையங்களின் வாகனங்களுக்கு கூடுதல் எரிபொருள் உபயோகப்படுத்தப்படும் நிலையில், அதுகுறித்து, குறிப்பிட்ட நிதியாண்டு முடிவுற்றவுடன் அரசின் பின்னேற்பு ஆணைகள் வெளியிடப்படும்.

5—

அதிநவீன ஊர்திகள்

வினா எண் 36356—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் காவல் துறையில் பழுதான ஊர்திகளை மாற்றி அதிநவீன ஊர்திகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவல் துறையின் வாகனங்கள் இயல்பு நிலையில் மற்றும் முதிரா நிலையில் அவ்வப்போது கழிவு செய்யப்பட்டு அதற்குப் பதிலாக புதிய அதிநவீன வாகனங்களாகிய மகேந்திரா, போலிரோ, டாட்டா ஸ்பேசியோ கோல்டு மற்றும் டாட்டா சுமோ விக்டர் ஆகியவை வாங்கி வழங்கப்பட்டு வருகின்றன.

6—

காவல் நிலையத்திற்கு வாகனம்

வினா எண் 37881—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 ஏப்ரல் 23]

(அ) தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி காவல் நிலையத்திற்கு வாகனம் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி காவல் நிலையத்திற்கு ஈப்பு மற்றும் இரண்டு சக்கர வாகனம் (மோட்டார் சைக்கிள்) வழங்கப்பட்டு அவ்வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன.

7—

ஈப்பு வழங்கல்

வினா எண் 39757—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள மகளிர் காவல் நிலையங்களுக்கு ஒரு ஈப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர்கள் அனைவருக்கும் வாகனம் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

8—

நவீனப்படுத்துதல்

வினா எண் 39762—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவை நவீனப்படுத்த, நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் நவீன ரக வாகனங்கள் வாங்கப்பெற்று வழங்கப்படுகின்றன. மேலும், போக்குவரத்தினை சீர்படுத்துவதற்காகவும், நெடுஞ்சாலைகளில் வழிப்பறி போன்ற குற்றங்கள் ஏற்படாவண்ணம் கண்காணிக்கவும் நவீன ரக வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவை நவீனப்படுத்துவதற்காக 2008-2009 ஆம் ஆண்டிற்கான வரைவுத் திட்டத்தில் ரூ. 10,88,61,000/- நிதி ஒதுக்கீடு கோரி நடுவண் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

9—

பணி நிரந்தரம்

வினா எண் 41400—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், காவல் துறையில் தொகுப்பூதியத்தில் பல ஆண்டுகளுக்கு முன் நியமிக்கப்பட்ட வீட்டுப் பணியாளர்களை (Domestic Assistants) பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கருணை அடிப்படையில் தொகுப்பூதியத்தில் இல்லப் பணியாளர்களாக (Domestic Assistants) பணிபுரிந்து வரும் பணியாளர்களை நிரந்தர அலுவலக உதவியாளர்களாக (Office Assistants) நியமனம் செய்வதற்கு பணியாளர் குழு ஒப்புதல் கோரி (Staff Committee approval) அரசுக்கு கருத்துரு வரப்பெற்றுள்ளது. இது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

10—

மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 14201—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், எல்லப்பாளையம் புதூர் ஆதி திராவிடர் காலனிக்கு மின் விளக்கு அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எல்லப்பாளையம், புதூர் ஆதி திராவிடர் காலனியில் ஏற்கெனவே மூன்று தெரு மின் விளக்குகள் "நமது கிராமம்" திட்டத்தின்கீழ் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு எரிய விடப்பட்டுள்ளன. மேலும், மின் விளக்கு அமைக்க விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை.

உரிய விண்ணப்பம் அளித்து அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அலுவலகம் செலுத்தும்பட்சத்தில் வாரிய விதிமுறைகளின்படி தெரு விளக்குகள் அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

11—

கம்பி வடம்

வினா எண் 20026—திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17-ல் உள்ள கௌஸ்முகிதீன் பேட்டை சாலையில் சீரான மின்சாரம் பெற கம்பி வடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17-ல் எல்லா இடங்களிலுமே மின் பாதைகள் ஏற்கெனவே புதைவடமாக அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது.

12—

மின் கம்பங்கள் மாற்றம்

வினா எண் 40260—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், சங்கங்குளம், வல்லாரேந்தலில் உள்ள மின் கம்பங்களையும், மின் கம்பிகளையும் பழுது பார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், சங்கங்குளம் மற்றும் வல்லாரேந்தல் கிராமங்களில் பழுதான 6 மின் கம்பங்கள் அகற்றப்பட்டு புதிய மின் கம்பங்கள் நிறுவப்பட்டன. மேலும், மேற்கண்ட பகுதிகளில் பழுதானதாகக் கண்டறியப்பட்ட 17 கிமீ. மின் கம்பிகளை அகற்றி புதிய 7/2.59 எம்எம்ஏசிஎஸ்ஆர். மின் கம்பிகள் 22-12-2007 அன்று நிறுவி பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

13—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3658—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சக்கரசெட்டிப்பட்டி ஊராட்சி, தொப்பளான் காட்டுவளவு மத்திவளவு காலனி பகுதி மற்றும் நாலுக்கால் பாலம் புது அருந்ததியர் காலனி பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) (i) ஓமலூர் ஒன்றியம், சக்கரசெட்டிப்பட்டி ஊராட்சி, தொப்பளான் காட்டுவளவு குடியிருப்பில் ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளதால், ஊரக குடிநீர்த் திட்ட விதிகளின்படி கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ii) மத்திவளவு காலனி (எ) மார்த்திவளவு, தும்பிப்பாடி ஊராட்சியைச் சார்ந்ததாகும். இக்குடியிருப்பின் மக்கள்தொகையையும் கணக்கில் கொண்டு பெரிய நாகலூர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம்) குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது பரிசீலனையில் இல்லை.

(iii) சக்கரசெட்டிப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த நாலுக்கால் பாலம் புதிய அருந்ததியர் காலனி (எ) சக்கரசெட்டிப்பட்டி புதிய அருந்ததியர் குடியிருப்பில் ஏற்கெனவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளதால், ஊரகத் குடிநீர்த் திட்ட விதிகளின்படி கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

பொதுக் கழிப்பறை

வினா எண் 32490—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி நகரம், 18-வது வார்டில் பொதுக் கழிப்பறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி நகரம், 18-வது வார்டில் பொதுக் கழிப்பிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நகராட்சி நிதி நிலைமைக்கேற்ப விரைவில் கட்டப்படும்.

15—

நியாயவிலைக் கடை

வினா எண் 3795—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, அண்ணா நகர் 1-வது வார்டு பகுதியில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, அண்ணா நகர் 1-வது வார்டு பகுதியில் ஓமலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் 1,050 குடும்ப அட்டைகளுடன் அண்ணா நகர் என்ற முழுநேர நியாயவிலைக் கடை நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், இப்பகுதியில் மேலும் ஒரு நியாயவிலைக் கடை அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை.

16—

ரேஷன் கடை

வினா எண் 5415—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி கே. சவுளூர் கிராமத்தில் ரேஷன் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 21-7-2008 ஆம் நாளிட்ட அரசு ஆணை (டி) எண் 261-ல், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், மலையாண்ட அள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் கத்தேரி-1 நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள 691 குடும்ப அட்டைகளிலிருந்து 167 குடும்ப அட்டைகளைப் பிரித்து கே. சவுளூர் கிராமத்தில் புதிய 3-வது பகுதிநேர நியாயவிலைக் கடையினை துவக்க அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

17—

பகுதிநேர நியாயவிலைக் கடை

வினா எண் 6087—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நக்கலப்பட்டி பஞ்சாயத்து, குஞ்சாம்பட்டி, போத்தம்பட்டி பஞ்சாயத்து, மூப்பம்பட்டி, அய்யம்பட்டி, மேக்கிழார்பட்டி பஞ்சாயத்து, சில்லாம்பட்டி, கல்யாணிப்பட்டி, சீமானூத்துப் பஞ்சாயத்து, நல்வீரன்பட்டி, அல்லிக்குண்டம் பஞ்சாயத்து, பொம்மன்பட்டி ஆகிய பகுதிகளுக்கு பகுதிநேர நியாயவிலைக் கடைகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நக்கலப்பட்டி பஞ்சாயத்து, குஞ்சாம்பட்டி, போத்தம்பட்டி பஞ்சாயத்து, மூப்பம்பட்டி, அய்யம்பட்டி, கல்யாணிப்பட்டி, சீமானூத்துப் பஞ்சாயத்து, நல்லிவீரன்பட்டி, அல்லிக்குண்டம் பஞ்சாயத்து, பொம்மன்பட்டி

[2008 ஏப்ரல் 23

ஆகிய கிராமங்களில் தற்போது நடைமுறையிலுள்ள அரசு ஆணையின்படி புதிய பகுதிநேரக் கடைகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், மேக்கிழார்பட்டி பஞ்சாயத்து, சில்லாம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே பகுதிநேரக் கடை திறக்கப்பட்டு செயல்பட்டு வருவதால், இக்கிராமத்தில் மீண்டும் ஒரு பகுதிநேரக் கடை அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை.

18—

நிரந்தரக் கட்டடம்

வினா எண் 6096—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், திம்மநத்தம் பஞ்சாயத்து, துரைசாமிபுரம், செல்லம்பட்டி யூனியன், பானாமூப்பன்பட்டி ஆகிய பகுதிகளில் இயங்கும் பகுதிநேர நியாயவிலைக் கடைக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், திம்மநத்தம் பஞ்சாயத்து, துரைசாமிபுரம் புதூர் பகுதிக்கு பகுதிநேரக் கடை அமைக்க அனுமதி கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ள நிலையில் துரைசாமிபுரம் புதூர் பகுதிநேரக் கடைக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், பானாமூப்பன்பட்டி பகுதிநேரக் கடைக்கு தற்காலிகமாக பானாமூப்பன்பட்டியிலுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊர்ப் பொதுமக்கள் வேண்டுகோளின்படி ஒரு அறை மட்டும் ஒதுக்கப்பட்டு இந்நியாயவிலைக் கடைக்கான குடிமைப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.

மேற்கண்ட இரு பகுதிநேரக் கடைகளுக்கும் அரசாணை 214, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15-10-1998-ன்படி, அவ்வூர் மக்களால் இலவசமாக கட்டட வசதி செய்து தரப்பட வேண்டுமாதலால் துரைசாமிபுரம் புதூர் பகுதிநேரக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர வழிவகை இல்லை.

2008 ஏப்ரல் 23]

19—

பகுதிநேர நியாயவிலைக் கடை

வினா எண் 6537—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, அய்யனூரில் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, அய்யனூரில் 243 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைதாரர்கள் இக்கிராமத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்தில், நடுவனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் தப்பக்குட்டை கிராமத்தில் செயல்பட்டுவரும் முழுநேர நியாயவிலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். தப்பக்குட்டை நியாயவிலைக் கடைக்கும், அய்யனூர் கிராமத்திற்கும் இடையே 1.5 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. பகுதிநேரக் கடை திறப்பதற்கு, தற்போது அமலில் உள்ள அரசாணைகளின்படி உள்ள வழிமுறைகள் பூர்த்தியாகியிருந்தபோதிலும் உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட ஏதுவாக கட்டடத்தை எவரும் இலவசமாகத் தர முன்வராததால் அய்யனூர் பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

20—

புதிய கட்டடம்

வினா எண் 6588—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டி ஊராட்சி பகுதியில் நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம் அமைக்க அரசு முன்வருமா?

[2008 ஏப்ரல் 23

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டி ஊராட்சிப் பகுதியில் வெள்ளாளப்பட்டி நியாயவிலைக் கடை எண் 1 முழுநேரக் கடையாக 1,277 குடும்ப அட்டைகளுடன் வெள்ளாளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. இந்நியாயவிலைக் கடைக்கு வெள்ளாளப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் 1,000 சதுர அடி நிலம் இலவசமாக ஒதுக்கித்தருவதாக சம்மதம் தெரிவித்துள்ளார். இந்நிலத்திற்கான ஆவணங்களை வெள்ளாளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு அவர் ஒப்படைத்த பின்னர், இந்நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

21—

நியாயவிலைக் கடை

வினா எண் 6795—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், வன்னிய நகர்ப் (பூலாம்பட்டி) பகுதியில் உள்ள மக்களுக்கு புதிய நியாயவிலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டியில், பூலாம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் குப்பனூர் என்ற இடத்தில் முழுநேர நியாயவிலைக் கடை நடத்தப்படுகிறது. இம்முழுநேரக் கடையுடன் மொத்தம் 867 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் பூலாம்பட்டி வன்னியநகர் பகுதியிலுள்ள 208 குடும்ப அட்டைகளும் அடங்கும். குப்பனூர் முழுநேர நியாயவிலைக் கடைக்கும், புதிய நியாயவிலைக் கடை அமைக்கக் கோரும் பூலாம்பட்டி வன்னிய நகர்ப் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டருக்கும் மேலாகும்.

2008 ஏப்ரல் 23]

வன்னிய நகர்ப் பகுதியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இருப்பினும், பூலாம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் குப்பனூர் நியாயவிலைக் கடையிலிருந்து 208 குடும்ப அட்டைகளைப் பிரித்து வன்னிய நகரில் புதிய பகுதிநேரக் கடை அமைக்கப்படுவதை அறிந்த கோயில்பாளையம், கனங்காடு மற்றும் குருணிக்காடு பகுதிகளைச் சேர்ந்த 110 குடும்ப அட்டைதாரர்கள் தாங்கள் குப்பனூர் நியாயவிலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற வரும்போது குப்பனூர் பால் கூட்டுறவுச் சங்கம், மளிகைக் கடை மற்றும் போக்குவரத்து அனைத்தும் தங்களுக்கு வசதியாக உள்ளது என்பதால், வன்னிய நகர்ப் பகுதி காட்டுப் பகுதியாகவும், ஊருக்கு ஒதுக்குப்புறமாகவும் உள்ளது, ஆகையால், 208 குடும்ப அட்டைதாரர்களில் 110 குடும்ப அட்டைதாரர்கள் வன்னிய நகர்ப் பகுதியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை ஆரம்பிக்க எதிர்ப்பு தெரிவித்துள்ள சூழ்நிலையில் எஞ்சியுள்ள 98 குடும்ப அட்டைகளைக் கொண்டு மேற்படி பகுதியில் தற்போது உள்ள அரசாணையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

நியாயவிலைக் கடை

வினா எண் 7113—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் பேரூராட்சி, குட்டைமேடு காலனி பகுதியில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் பேரூராட்சி, குட்டைமேடு காலனி பகுதியில் மொத்தம் 86 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இப்பகுதி மக்கள் அவர்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை 1 கிலோ மீட்டர் தூரத்தில் ஒலகடம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில்

[2008 ஏப்ரல் 23

செயல்பட்டு வரும் ஒலகடம் அங்காடி-1-லிருந்து பெற்று வருகின்றனர். நியாயவிலைக் கடை அமைக்கக் கோரும் குட்டைமேடு காலனிக்கும் ஒலகடம் அங்காடி எண் 1-க்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டருக்குக் குறைவாக உள்ளதாலும், உத்தேச நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்படவுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 150-க்கும் குறைவாக உள்ளதாலும், தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையின்படி குட்டைமேடு காலனி பகுதியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

23—

நியாயவிலைக் கடை

வினா எண் 11080—டாக்டர் க. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கபிலர்மலை ஒன்றியம், பெருங்குறிச்சி ஊராட்சி, கருந்தேவம்பாளையத்தில் நியாயவிலைக் கடை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், பெருங்குறிச்சி ஊராட்சி, கருந்தேவம்பாளையம் பகுதியில் 209 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேரக் கடை ஏற்கெனவே 28-6-1999 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் இதே பகுதியில் மீண்டும் ஒரு நியாயவிலைக் கடை அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை.

24—

பகுதிநேர நியாயவிலைக் கடை

வினா எண் 20379—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2008 ஏப்ரல் 23]

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோணூர் ஊராட்சி, மேட்டூர் நியாயவிலைக் கடையைப் பிரித்து பொறையூருக்கு புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதிக்குட்பட்ட கோணூர் ஊராட்சியில் மேட்டூர் மகளிர் நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாயவிலைக் கடையில் 630 குடும்ப அட்டைகள் உள்ளன. மேற்படி நியாயவிலைக் கடை மகளிர் சுய உதவிக் குழுவால் நடத்தப்பட்டு வருகிறது. இக்கடை மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் செயல்படும் கடையாகும்.

பொறையூரில் 90 குடும்ப அட்டைகளும், மேல் பொறையூரில் 55 குடும்ப அட்டைகளும், ஆக மொத்தம் 145 குடும்ப அட்டைகள் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கக் கோரும் பகுதியில் உள்ளன. மேட்டூரில் உள்ள தாய்க்கடையான மகளிர் நியாயவிலைக் கடைக்கும், பகுதிநேரக் கடைகோரும் பொறையூருக்கும் இடையே தூரம் ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவாகவே இருப்பதால், புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

25—

கட்டட வசதி

வினா எண் 20387—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கருங்கல்லூர் ஊராட்சி, தெலுங்கானூர் நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கருங்கல்லூர் ஊராட்சி தெலுங்கானூர் நியாயவிலைக் கடை 388 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேரக் கடையாக காவேரிபுரம் தொடக்க வேளாண்மைக்

[2008 ஏப்ரல் 23

கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தெலுங்கானூர் நியாயவிலைக் கடைக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டிற்கு அரசுக் கட்டடம் தற்போது கட்டப்பட்டு வருகிறது. எனவே, இந்நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டவேண்டிய அவசியம் எழவில்லை.

26—

நியாயவிலைக் கடை

வினா எண் 22443—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, செந்தட்டியேந்தல் மேலப்பிடாவூரிலுள்ள நியாயவிலைக் கடைகளைப் பிரித்து அரசகுளத்திற்கும் விளாத்திகுளத்திற்கும் தனியாக நியாயவிலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி செந்தட்டியேந்தல் நியாயவிலைக் கடை 407 குடும்ப அட்டைகளுடன், மிளகானூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்பட்டு வருகிறது. இந்த நியாயவிலைக் கடையிலிருந்து அரசகுளம் கிராமத்தைச் சேர்ந்த 211 குடும்ப அட்டைகளைப் பிரித்தால் தாய்க் கடையில் 196 குடும்ப அட்டைகளே இருக்கும். எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி பகுதிநேர நியாயவிலைக் கடை பிரித்த பின்னர் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும். எனவே, அரசகுளத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், பனைக்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்திவரும் மேலப்பிடாவூர் நியாயவிலைக் கடையில் 443 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. மேற்படி நியாயவிலைக் கடையுடன் விளாத்திகுளம் கிராமப் பகுதியின் 83 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, தற்போது

2008 ஏப்ரல் 23]

நடைமுறையிலுள்ள அரசு ஆணைகளின்படி விளாத்திகுளம் கிராமத்தில் தனியாக நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

27—

நியாயவிலைக் கடை

வினா எண் 26333—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் தொகுதி, வெண்ணந்தூர் ஒன்றியம், கீழூர், மேலூரில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், வெண்ணந்தூர் வட்டாரத்தின் புதுப்பாளையல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் கீழூர் நியாயவிலைக் கடை 222 குடும்ப அட்டைகளுடன் முழுநேர அங்காடியாகவும், மேலூர் நியாயவிலைக் கடை 135 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேர நியாயவிலைக் கடையாகவும் செயல்பட்டு வந்தன. இக்கிராமங்களுக்குச் செல்ல சாலை மற்றும் வாகனப் போக்குவரத்து வசதி இல்லாததால், 13 கி.மீ. தூரம் அத்தியாவசியப் பொருட்களை தலை சுமையாக கொண்டு செல்ல போதிய கூலி ஆட்கள் இல்லாததால் அப்பகுதி குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்வதில் சிரமம் ஏற்பட்டது. இந்நிலையில் கீழூர் மற்றும் மேலூர் கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று, கீழூரில் செயல்பட்டு வந்த நியாயவிலைக் கடை, ராசிபுரம் வட்டம், கல்லாக்குளம் கிராமத்திற்கும், மேலூர் நியாயவிலைக் கடை குள்ளப்பநாயக்கனூர் கிராமத்திற்கும் மாற்றம் செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. எனவே, கீழூர் மற்றும் மேலூரில் தற்போது நியாயவிலைக் கடைகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

28—

நியாயவிலைக் கடை

வினா எண் 26424—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 23

செங்கல்பட்டு தொகுதி, கொளத்தூர், மேலமையூர் ஊராட்சி, நியு லைன் குடியிருப்பு வேதநாராயணபுரம் ஊராட்சி, பீடி நகர், மணமை ஊராட்சி, நல்லூர் ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, கொளத்தூர் பகுதி, மணமை ஊராட்சி மற்றும் நல்லூர் ஊராட்சிப் பகுதிகளில் முறையே 287 குடும்ப அட்டைகள், 407 குடும்ப அட்டைகள் மற்றும் 411 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே முழுநேர நியாயவிலைக் கடைகள் நடத்தப்பட்டு வருவதால் அப்பகுதிகளில் மீண்டும் புதிய நியாயவிலைக் கடைகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலமையூர் ஊராட்சி நியு லைன் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைதாரர்கள் 1 கி.மீ. தூரத்தில் உள்ள மேலமையூர்-I, என்ற நியாயவிலைக் கடையிலும், பீடி நகர்ப் பகுதியைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைதாரர்கள் 1.25 கி.மீ. தூரத்தில் உள்ள வேதநாராயணபுரம் நியாயவிலைக் கடையிலிருந்தும் தங்களது அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளின்படி நியு லைன் குடியிருப்பு மற்றும் பீடி நகர்ப் பகுதிகளில் நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

29—

நியாயவிலைக் கடை

வினா எண் 27951—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மல்லியகுந்தம் ஊராட்சி, திப்பரத்தான்பட்டி, காமநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் நியாயவிலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திப்பரத்தான்பட்டியில் மொத்தம் 135 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைகள் அனைத்தும், இப்பகுதியிலிருந்து 1.00 கி.மீ. தொலைவில் உள்ள மல்லியகுந்தம் நியாய விலைக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. மல்லியகுந்தம் நியாயவிலைக் கடை, மல்லியகுந்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்பட்டு வருகிறது. இக்கடையுடன் மொத்தம் 1,077 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. புதிய நியாயவிலைக் கடை அமைக்கக் கோரும் திப்பரத்தான்பட்டிக்கும், தாய் நியாயவிலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீட்டருக்கும் குறைவாக உள்ளதால், தற்போது நடைமுறையிலுள்ள விதிகளின்படி, திப்பரத்தான்பட்டியில் புதியதாக நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மல்லியகுந்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் காமநாயக்கன்பட்டி என்ற பகுதிநேர நியாயவிலைக் கடை ஏற்கெனவே 477 குடும்ப அட்டைகளைக் கொண்டு செயல்பட்டு வருவதால், இக்கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை.

30—

கட்டட வசதி

வினா எண் 28022—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டவும், நத்தப்பேட்டை முருகன் குடியிருப்புப் பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், ஆரியப்பெரும்பாக்கம் ஊராட்சியில் கீழம்பி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் துலங்கம்தண்டலம் கூட்டுறவுப் பகுதிநேரக் நியாயவிலைக் கடை 134 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இது ஒரு பகுதிநேரக் கடையாதலால் அரசு விதிகளின்படி அரசு செலவில் கட்டடம் கட்ட வழிவகையில்லை. நத்தம்பேட்டை முருகன் குடியிருப்புப் பகுதியில் உள்ள 410 குடும்ப அட்டைகள், முருகன் குடியிருப்புப் பகுதியிலிருந்து 1.00 கி.மீ. தூரத்தில் செயல்பட்டு வரும் நசரத்பேட்டை கூட்டுறவு நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. அரசு விதிகளின்படி முருகன் குடியிருப்புப் பகுதிக்கும் நசரத்பேட்டை நியாயவிலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டருக்கும் குறைவாக உள்ளதால், முருகன் குடியிருப்புப் பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

31—

காட்டாமணக்கு சாகுபடி

வினா எண் 40972—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் காட்டாமணக்கு சாகுபடி செய்யவும், காட்டாமணக்கு சாகுபடியை மேம்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் காட்டாமணக்கு சாகுபடி செய்யவும், காட்டாமணக்குப் பயிர் சாகுபடியை மேம்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) இதன்படி, மானாமதுரை தொகுதியை உள்ளடக்கிய சிவகங்கை மாவட்டத்திற்கு 2007-2008 ஆம் ஆண்டிற்கு 375 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். உயிரி எரி பொருள் தயாரிக்க, தனியார் நிறுவனமான மோகன் புருவரிஸ் மற்றும் டிஸ்டில்லரீஸ் நிறுவனம் வேளாண்மைத் துறை களப் பணியாளர்களைக்கொண்டு பயனாளிகளுக்கு மானிய விலையில் காட்டாமணக்குக் கன்றுகளை நடப்பு மாதத்தில் வழங்கி, வரும் மாதங்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குப்படி நடவு மேற்கொள்ளப்படும்.

32—

தண்ணீர் வசதி

வினா எண் 1058—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பாசனத்திற்குத் தேவையான அளவு தண்ணீர் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

வால்பாறை தொகுதியின்கீழ் உள்ள பாசன நிலங்களுக்கு நீர் பங்கீட்டுத் தொகுப்பு விதிகளின்படியும், அணைகளின் நீர் இருப்பு மற்றும் பயிர்த்தேவை ஆகியவற்றின் அடிப்படையிலும் பாசனத்திற்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது.

33—

அணைக்கட்டு

வினா எண் 8258—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, மிருகண்டா அணைக்கட்டுப் பணியின் தற்போதைய நிலை என்ன?

[2008 ஏப்ரல் 23

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

கலசப்பாக்கம் தொகுதி, மிருகண்டா நதி அணைக்கட்டுப் பணிகள் 31-3-2006-ல் முழுமையாக முடிக்கப்பட்டு விட்டன.

34—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 13973—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, தேவரடியார்குப்பம் ஏரிக்கரை மீது தார்ச்சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) தற்போது திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

35—

தூர் வாருதல்

வினா எண் 25856—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பத்தூர் தொகுதி, செலந்தம்பள்ளி ஊராட்சியிலுள்ள ஏரிகளைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, செலந்தம்பள்ளி ஊராட்சியிலுள்ள ஏரிகள் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டு ரூ. 5.00 இலட்சம் செலவில் தூர் வாரப்பட்டன.

36—

தூர் வாருதல்

வினா எண் 26129—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், அச்சரப்பாக்கம் ஏரி நீர்ப்பாசனக் கால்வாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், அச்சரப்பாக்கம் ஏரி நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டம் என் 1-ன்கீழ் உலக வங்கி நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டது. நீர்ப்பாசனக் கால்வாய்களில் தூர் வாரும் பணிகளை விவசாயிகளேதான் செய்து கொள்ள வேண்டும். அதனடிப்படையில் நீர்ப்பாசனக் கால்வாய் மதகு எண் 1-ல் 200 மீட்டர் மற்றும் மதகு என்-2-ல் 200 மீட்டர் நீளத்திற்கு 2005-2006 ஆம் நிதியாண்டில் ஏரி நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம்மூலம் தூர் வாரப்பட்டது.

37—

ஏரிக் கரைகளை பலப்படுத்துதல்

வினா எண் 26131—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2008 ஏப்ரல் 23

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், நடுவக்கரை பெரும்பேடு, ஈச்சங்கரணை, கருமாரப்பாக்கம் ஏரிக் கரைகளைப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலுள்ள தலா இரு ஏரிகள் புனரமைக்கப்படும் என்ற திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பெரும்பேடு ஏரியைப் புனரமைக்க ரூ. 10.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண் 17, பொதுப் பணித் (டபிள்பு-1) துறை, நாள் 22-1-2008-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மற்ற ஏரிகளைப் புனரமைக்க நிதி நிலைமையைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் கருத்திற்கொள்ளப்படும்.

38—

வாய்க்கால் வெட்டுதல்

வினா எண் 28477—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, விஸ்வநாதபுரம்-வான்பாக்கம் வழியாக முள்ளிகிராம்பட்டு ஏரிக்கு வாய்க்கால் வெட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2006-2007 பகுதி II திட்ட நிதியில் இருந்து, திருவதிகை அணைக்கட்டின் பிரதானக் கால்வாயில் இருந்து பிரியும் கிளைக் கால்வாய் விஸ்வநாதபுரம்-வான்பாக்கம் வழியாகச் சென்று முள்ளிகிராம்பட்டு ஏரியைச் சென்றடையும் வகையில் பணி முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது.

2008 ஏப்ரல் 23]

39—

ஏரியைத் தூர் வாருதல்

வினா எண் 30353—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, ஏலத்தூர் ஏரியைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரில் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் 4-4-2007 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தில் அறிவித்த அறிவிப்பின் அடிப்படையில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் இரண்டு ஏரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரில் தூர் வாரும் திட்டத்தின்கீழ், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஏலத்தூர் ஏரி, சட்டமன்ற உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களால் தெரிவு செய்யப்பட்டு, அதற்காக மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு, அரசாணை (நிலை) எண் 17, பொதுப் பணித் (டபிள்யூ-1) துறை, நாள் 22-1-2008-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

40—

முன்னெச்சரிக்கை நடவடிக்கை

வினா எண் 37309—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, ராஜாக்கமங்கலம் துறையில் கடலரிப்பால் அபாயம் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 ஏப்ரல் 23

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதியில் அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் உள்ள ராஜாக்கமங்கலம் துறையின்,

1. மேற்குப் பகுதியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் ரூ.56.00 இலட்சம்
2. மையப் பகுதியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் ரூ.58.00 இலட்சம்
3. கிழக்குப் பகுதியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் ரூ.29.00 இலட்சம்

என ரூ.143.00 இலட்சத்திற்கு அரசாணை (நிலை) எண் 280, பொதுப் பணித் (டபிள்யூ-I) துறை, நாள் 3-9-2007-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

41—

குடிநீர் வசதி

வினா எண் 42619—திரு. வை. காவேரி:

திரு. அ. தமிழரசு:

திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் பொறியியல் கல்லூரியை நடத்திவரும் அங்கம்மாள் அறக்கட்டளையின்கீழ் இயங்கிவரும் பல்வேறு நிறுவனங்களில் தற்போது தகுந்த குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2008 ஏப்ரல் 23]

42—

ரோந்துப் பணி

வினா எண் 38013—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலை விபத்துகளைத் தடுக்கும் வகையில் நெடுஞ்சாலைகளில் ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாலை விபத்துகளைத் தடுக்கும் வகையில் அரசு நெடுஞ்சாலைகளில் சுற்றுக்காவல் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது மாநில நெடுஞ்சாலைகளில் 84 நெடுஞ்சாலை சுற்றுக்காவல் பணிக் குழுக்களும், தேசிய நெடுஞ்சாலைகளில் 160 சுற்றுக்காவல் பணிக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டு சுற்றுக்காவல் பணி தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

43—

லாரிகளுக்குத் தடை

வினா எண் 40761—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏற்காடு சாலைகளில் அதிக பாரம் ஏற்றிச் செல்லும் லாரிகளுக்குத் தடை விதிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சரக்கு வாகனங்களில் கூடுதல் பாரம் ஏற்றிச் செல்வது தொடர்பாக மோட்டார் வாகனச் சட்டம் 1988 பிரிவு 113 மற்றும் 114-ல் அறிவுறுத்தியவாறு, ஏற்காடு சாலை உட்பட தமிழ்நாட்டின் அனைத்துச் சாலைகளிலும் கூடுதல் பாரம் ஏற்றிச் செல்லும் சரக்கு வாகனங்களுக்குச் சோதனை அறிக்கை வழங்கப்பட்டு, அபராதம்

[2008 ஏப்ரல் 23

மற்றும் இணைக்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட பாரத்திற்கு மேலாக ஏற்றிச் செல்லும் சரக்கு வாகனங்களின் கூடுதல் பாரம், ஓட்டுநர் பொறுப்பில் இறக்கப்பட்டு பின்னர் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுகிறது.

44—

பேருந்து வசதி

வினா எண் 41863—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஊதியூரில் இருந்து கொடுவாய் வஞ்சிபாளையம் பிரிவு, கவுண்டம்பாளையம், அப்பியபாளையம் வழியாக திருப்பூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், ஈரோடு மண்டல தடம் எண் கே5 நகரப் பேருந்து ஊதியூர்-குண்டடம் வழித்தடத்தில் 14 தனி நடைகளும், தடம் எண்கள் 12, 12ஏ நகரப் பேருந்துகள் குண்டடம்-கொடுவாய் 20 தனி நடைகளும், கோவை மண்டல நகரப் பேருந்துகள், கொடுவாய்-திருப்பூர் வரை இயக்கப்பட்டு பகுதி வாரியாக, வழித்தடம் முழுமைக்கும் பேருந்து வசதி உள்ளது. தற்சமயம் இயங்கும் நகரப் பேருந்துகள் யாவும் குறுகிய கால இடைவெளியில் பல்முனை வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன.

45—

பேருந்து வசதி

வினா எண் 42024—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 ஏப்ரல் 23]

உளுந்தூர்பேட்டை தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், திம்மலை வழியாக பின்னல்வாடிக்கு இயக்கப்படும் 32ஏ பேருந்தை முழுநேரப் பேருந்தாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நகரப் பேருந்து தடம் எண் 32ஏ பல்திசை வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்தாகும். அப்பேருந்துமூலம் கள்ளக்குறிச்சி மற்றும் தியாகதுருகத்திலிருந்து திம்மலை வழியாக பின்னல்வாடிக்கு நாள் ஒன்றுக்கு, சென்று திரும்பும் வகையில் 8 நடைகள் இயக்கப்படுகின்றன. அப்பேருந்தை முழு நேரப் பேருந்தாக இயக்கினால் தற்போது பயன்பெற்று வரும் காச்சக்குடி, மரூர், அதையூர், மடம் முதலிய கிராம மக்கள் பேருந்து வசதி இழக்க நேரிடும்.

46—

பேருந்து வசதி

வினா எண் 42829—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி ஒன்றியம், புக்கம்பட்டி முதல் தாரலகுட்டை வரை பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் நகரப் பேருந்துகள் தடம் எண் 21, 22 மற்றும் 5 மூலமாக மேட்டூரிலிருந்து மேச்சேரி வழியாக புக்கம்பட்டி வரை தினசரி 14 நடைகள் இயக்கப்படுகின்றன. புக்கம்பட்டியிலிருந்து தாரலகுட்டை கிராமம் 3.6 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வழித்தடத்தில் எஜமானரில் இருந்து தாரக்குட்டை வரையிலான 1.3 கி.மீ. சாலை கப்பிச் சாலையாக, ஒருவழிப் பாதையாக கனரக

வாகனங்கள் இயக்கிட இயலாத நிலையில் உள்ளதால், இவ்வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கிட வழிவகையில்லை.

47—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 3463—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத் கட்டடத்தைத் திறக்கவும் அதன் தரத்தை உயர்த்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஆழியாறு நகர், ஆனைமலை, பெத்தநாயக்கனூர், பெரியபோது, சேத்துமடை, டாப்சிலிப், முடீஸ் நகர், சோலையாறு நகர், வால்பாறை ஆகிய 9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. தற்போது பயனடைந்து வரும் வெளிப்புற மற்றும் உட்புற நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இங்கு போதுமான மருத்துவ வசதி உள்ளது. படிப்படியாக ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் எனத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இனி வருங்காலங்களில் பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்புடையதாக இருப்பின் தரம் உயர்த்த பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

48—

நாய்க்கடி மருந்து

வினா எண் 5573—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, பொறையார் அரசு மருத்துவமனையில் நாய்க்கடிக்கான மருந்து போதுமான அளவு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதியிலுள்ள பொறையார் அரசு மருத்துவமனையில் நாய்க்கடிக்கான டி.சி.வி. ஊசி மருந்து போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு தேவைக்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

49—

மகப்பேறு வசதி

வினா எண் 9824—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு வசதிகள் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், வீரப்பெருமாநல்லூரில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. வீரப்பெருமாநல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேவைக்கேற்ப போதுமான அளவில் மகப்பேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

[2008 ஏப்ரல் 23

50—

மருத்துவமனை

வினா எண் 10741—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை ஊராட்சி பகுதிநேர மருத்துவமனை முழு நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் கொருக்கை கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இவ்வட்டாரத்தில் ஆலத்தம்பாடி பிரதான அரசு ஆரம்ப சுகாதார நிலையமும், மேலும் திருத்தங்கூர் மற்றும் வினாங்குடி ஆகிய இரண்டு கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. எனவே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை ஊராட்சி பகுதிநேர மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

51—

தரம் உயர்த்துதல்

வினா எண் 11908—திரு. க. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, சிவகங்கை நகரில் உள்ள அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, முழுநேர பொது மருத்துவமனையாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் உள்ள அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு அருகில் அம்மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை செயல்பட்டு வருவதால் அம்மருத்துவமனையை முழுநேர அளவில் பொது மருத்துவமனையாக உருவாக்க சாத்தியக்கூறுகள் தற்போது எழவில்லை.

52—

தாய்சேய் நல விடுதி

வினா எண் 14608—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கீழமேல்குடியில் தாய்சேய் நல விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் மக்கள்தொகை 1,02,794 ஆகும். இங்கு 4 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 27 துணை சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. கீழமேல்குடி கிராமத்தின் மக்கள்தொகை 1,192. இக்கிராமம் அன்னவாசல் துணை சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. இக்கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் மானாமதுரை அரசு மருத்துவமனை உள்ளது. கீழமேல்குடி கிராமத்திற்கும் அன்னவாசல் துணை சுகாதார நிலையத்திற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 2 கிலோ மீட்டர் ஆகும். எனவே, கீழமேல்குடியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

[2008 ஏப்ரல் 23

53—

விபத்துப் பிரிவு

வினா எண் 15735—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அரசு மருத்துவமனை மற்றும் கோட்டூர் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் காயப் பிரிவு ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலைகளில் அமையப்பெற்றுள்ள அரசு மருத்துவமனைகளுக்கும், அடிக்கடி விபத்து நேரிடும் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கும் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு மையங்கள் மைய அரசின் நிதி உதவி பெற்று துவக்கப்பட்டு வருகின்றன. வால்பாறை அரசு மருத்துவமனை மற்றும் கோட்டூர் அரசு மருத்துவமனை ஆகியவை தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் இல்லை என்பதால் இவ்விரு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் முகாந்திரம் எழவில்லை.

54—

இலவசக் கண்ணாடி

வினா எண் 16059—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள வயது முதிர்ந்தவர்களுக்கு இலவசமாகக் கண்ணாடி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், பொதுவாக வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் இலவசமாக கண் பார்வை பரிசோதனை செய்யப்படுகிறது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி வயது முதிர்ந்தவர்களுக்குக் கண்புரை காணப்பட்டால், இலவசமாக கண்புரை அறுவை சிகிச்சை செய்து, தேவைப்படின் கண்ணாடி வழங்கப்படும். மேலும், கண் பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு இலவசமாகக் கண் பரிசோதனை செய்யப்பட்டு, கண்ணாடிக்கு பரிந்துரை மட்டும் செய்யப்படும். இவர்களுக்கு இலவசமாகக் கண்ணாடி வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

55—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 18714—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, கத்திரிப்பட்டி, கருங்கல்பாடி, நரிப்பள்ளி, ஹெச்.ஈச்சம்பாடி, செட்டிப்பட்டி, ஜம்மனஹள்ளி ஆகிய பகுதிகளில் அரசு துணை சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் உள்ள அரூர் தொகுதியில் கத்திரிப்பட்டி, நரிப்பள்ளி, ஹெச்.ஈச்சம்பாடி, செட்டிப்பட்டி, ஜம்மனஹள்ளி ஆகிய இடங்களில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு தாய்சேய் நலப் பணிகள் மற்றும் இதர மருத்துவப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், கருங்கல்பாடி கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் வேடகட்டமடுவு துணை

[2008 ஏப்ரல் 23

சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது. எனவே, கருங்கல்பாடியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

56—

மருத்துவமனைக்கு மருந்து வசதி

வினா எண் 25100—திரு. சை. சையது கௌஸ் பாஷா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சில உயிர்காக்கும் மருந்துகளும் முக்கிய மருந்துகளும் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் நடப்பாண்டில் 276 மருந்து வகைகள், 71 அறுவைப் பொருட்கள் மற்றும் 103 தையல் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு மதுரை மாவட்டத்தில் உள்ள மருந்துக் கிடங்கில் இருப்பு வைத்து மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையின் தேவைக்கு அனுப்பப்பட்டு, மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு எவ்வித கட்டுப்பாடுமின்றி கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. மேலும், உயிர்காக்கும் மருந்துகள் உள்ளிட்ட அனைத்து மருந்துகளும் நெறிமுறைகளின்படி வாங்கி தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

57—

சுற்றுச் சுவர் அமைத்தல்

வினா எண் 31875—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் , துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், அமராவதி துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2008 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

திரு. மு.க. பெரியசாமி, திரு. கே.எல். இளவழகன், திரு. வீ.ஏ.டி. கலியவரதன், திரு. பெ. கண்ணன், திரு. டி. மூர்த்தி, திரு. அ. தமிழரசு, திருமதி பெ. கமலாம்பாள், திரு. கோ. எதிரொலி மணியன், திரு. த.அ. மேகநாதன், திரு. வை. காவேரி, திரு. இல. வேலுசாமி, டாக்டர் க. நெடுஞ்செழியன், மதிமுக. சார்பாக திரு. மு. கண்ணப்பன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. கு. செல்வம், திரு. து. ரவிக்குமார் ஆகியோர் விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தீவிலே வாழ்ந்துகொண்டிருக்கிற நம்முடைய சகோதரர்களும், சகோதரிகளுமான அப்பாவித் தமிழ் மக்களின் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய உடனடித் தேவை குறித்து நாட்டின் கவனத்தையும், நடுவண் அரசின் கவனத்தையும் திருப்பும் நோக்கில், சட்டப்பேரவையில் நெகிழ்ந்த உள்ளத்துடன் நாங்கள் சிலவற்றை இங்கே கூற விழைகின்றோம். இரக்கமற்ற இலங்கை அரசின் கொடுங்கரங்களில் சிக்கி இலங்கைத் தமிழர்கள் சொல்லொணாத் துன்பங்களையும், . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசும்போது இடைஞ்சல் செய்யாதீர்கள், உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: கொடுமையான மனித உரிமை மீறல்களையும், அடைந்து வருகிறார்கள். இதைப் பன்னாட்டு சமுதாயமும் வெளி உலகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன என்று இலங்கைக்கு எதிராக தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. அகதிகளுக்கான ஐ.நா. ஆணையாகத்தின் முயற்சியில் இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி, திரு. பகவதி அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட பன்னாட்டு வல்லுநர் குழு இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமைகளை மேம்படுத்துவதற்காக தெரிவித்த பரிந்துரைகள் எவற்றையும் இலங்கை அரசு செவிமடுக்கவில்லை. இலங்கை அரசு தொடர்ந்து செயல்பட மறுத்துவிட்டது. *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் சீர்கெட்டு வருவது குறித்து ஏறக்குறைய பன்னாட்டு மனித உரிமைகள் பாதுகாப்புக்

குழுக்கள் அனைத்துமே உலகளாவிய அளவில் எச்சரிக்கைக் குரல் எழுப்பியுள்ளன. தொடர்ந்து மனித உரிமைகள் மீறப்படும், மிகக் கேடான பகுதி என்று தர வரிசைப்படுத்தப்பட்டுள்ள இலங்கையில் நிலைமையை ஆழமாக ஆய்வு செய்வதற்காக உயர் அதிகாரி ஒருவரை ஐ.நா. பொதுச் செயலாளர் அனுப்பியுள்ளார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் சபையை நடத்தவிடாமல் இடைஞ்சல் செய்கிறீர்கள். நான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) என்ன இது? இதை முடித்துவிட்டு அதற்குப் பிறகு அதை எடுப்போம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நீங்கள் முதலில் உட்காருங்கள். அதைப் பிறகு பார்ப்போம், உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துச் சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஒன்றுபட்ட இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அமைதி வழியில் பேச்சு நடத்தி, அரசியல் தீர்வு காண்பதில்தான் எதிர்காலத்திற்கான வழி அடங்கியிருக்கிறது என்று பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்கள் அண்மையில் எழுதியிருக்கிறார். இது மிகவும் பாராட்டுதலுக்குரியது. இதைப்போலவேதான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சுமுக அரசியல் தீர்வு ஏற்பட்டு, அங்கே அமைதி நிலவவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலேகூட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது, வரவேற்கக்கூடியது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

போர்ப்படைமூலம் எந்தத் தீர்வும் காண முடியாது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அனைத்துச் சமூகங்களின், குறிப்பாக இனச் சிறுபான்மையினரின் கவலைகளையும் நலன்களையும் கருத்தில் எடுத்துக்கொண்டு ஒன்றுபட்ட இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அரசியல் சிக்கல்கள், அரசமைப்புச் சட்டச் சிக்கல்கள் மற்றும் பிற சிக்கல்களுக்கும் தீர்வு காணவேண்டுமென்பதே இப்போதைய தேவை என்று பாதுகாப்பு அமைச்சகம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் இனப்பூசலுக்கு போர்ப்படை வழியிலான தீர்வை இந்தியா நம்பவில்லை என்பதே இந்தச் செய்திகள் அனைத்தின் சாரமாகும்.

இவ்வாறு இருக்கும் நிலையில் ** இலங்கையின் போர்ப்படைத் தலைவர் சரத் ஃபொன்சேகாவை அண்மையில் இந்தியாவுக்கு வரவழைத்து எல்லா வகையிலும் சிறப்பான வரவேற்பு அளித்திருக்கிறது. போர்ப்படை வழியிலான தீர்வுகளும் திணிக்கப்படும் தீர்வுகளும் பயன் அளிக்காது என்பதை இது காட்டுகிறது. எனவேதான், உடனடியாக போர் நிறுத்தத்தை அறிவிப்பதன்மூலம்... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. சுதர்சனம், எல்லோரும் முதலில் உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி, கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, no. நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, no. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகு எழுந்து நிற்காதீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஜி.கே. மணி: நான் பேசி முடித்துவிடுகிறேன், அப்புறம் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, no. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஜி.கே. மணி: நான் பேசி முடித்துவிடுகிறேன், அப்புறம் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (கூச்சல்-குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஏப்ரல் 23

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் சார். திரு. டி. சுதர்சனம், உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: நான் பேசிவிடுகிறேன், அப்புறம் நீங்கள் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள் என்று சொல்கிறேன் இல்லையா? (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, இந்திய அரசுக்கு எந்தவித நெருக்கடியும் ஏற்படாதவண்ணமே சொல்லிக்கொண்டிருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: நான் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சுருக்கமாகச் சொல்லவேண்டும். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்லிவிட்டேன் அல்லவா? (குறுக்கீடுகள்)

திரு. ஜி.கே. மணி: நான் சொல்வதில் எந்த நெருக்கடியும் சிக்கலும் இல்லை. மாண்புமிகு பிரதமர் அவர்கள் நல்ல நோக்கத்துடன் சுட்டிக்காட்டியதை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதிலே காங்கிரஸ் கட்சிக்கு கருத்து மோதல் வருவதற்கு வாய்ப்பே இல்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்ல வருவதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் நீங்கள் நிற்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் நீங்கள் நிற்பது முறையல்ல. நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று

2008 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

சொல்லியிருக்கிறேன் அல்லவா? உட்காருங்கள் சார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) அவர் பேசி முடிக்கட்டும். அதற்குப்பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். ஆட்சேபகரமான சொல் இருந்தது என்றால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, நீங்கள் நிரம்ப நேரம் எடுத்துக்கொள்கிறீர்கள்.

திரு. ஜி.கே. மணி: உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதில் காங்கிரஸ் கட்சிக்கு நெருக்கடியே இல்லை. கருத்து மாறுபாடு வருவதற்கு வாய்ப்பு இல்லை. நான் சுருக்கமாகப் பேசிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) அவர் சொல்லி முடிக்கட்டும், திரு. சி. ஞானசேகரன். அவர் சொன்ன அந்த வார்த்தையை முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) எழுந்து நிற்கும் உறுப்பினர்கள் அவ்வளவுபேரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி, எல்லோரும் உட்காருங்கள் முதலில். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். Please. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No. No. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், நான் சொல்வதை நீங்கள் கேட்கிறீர்களா இல்லையா? உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம், நான் உங்களைக் கூப்பிடவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: Point of order. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, என்ன சொல்லுங்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள். மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள்.

[2008 ஏப்ரல் 23

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இந்த இலங்கைப் பிரச்சினையைப் பற்றி நண்பர் மணி அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொண்டுவந்தார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவர்கள் யாரும் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவ்வளவுபேரும் அப்படியே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது தகவல் கோரல் என்ற முறையில் எடுக்கப்பட்டுள்ளது. ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல. தகவல் கோரல்தான். உட்காருங்கள்.

திரு. டி. சுதர்சனம்: அதிலே, அவர்கள் குறிப்பிடும்போது மத்திய அரசு (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கலியவரதன், திரு. ராஜா எல்லோரும் உட்காருங்கள். டாக்டர் நெடுஞ்செழியன், உட்காருங்கள். திரு. தமிழரசு, திரு. மேகநாதன், உட்காருங்கள். திரு. கண்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கண்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், எல்லோரையும் உட்காரச்சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் Point of order என்று சொல்கிறார். என்ன சொல்கிறார் என்று கேட்போம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்மா நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினரைத்தான் பேசச் சொல்லப்போகிறேன். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்போம். திரு. சுதர்சனம், சொல்லுங்கள்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு மணி அவர்கள் பேசுகிறபோது, மத்திய அரசு, ** என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். மத்திய அரசின் அமைச்சரவையிலே பாட்டாளி மக்கள் கட்சி அங்கம் வகிக்கிறது. அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசவேண்டும் என்றால் பாட்டாளி மக்கள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2008 ஏப்ரல் 23] [திரு. டி. சுதர்சனம்]

கட்சியின் சார்பாக அமைச்சரவையிலே கேபினட் அமைச்சராகவுள்ள சகோதரர் அன்புமணி அவர்கள் அங்கே பேசியிருக்கவேண்டும். அதை விட்டுவிட்டு இங்கே வந்து பேசுவது அவ்வளவு முறையாகாது. ஏனென்றுசொன்னால், ** என்பது மிகவும் தவறான செயல். அதனால் அவர் குறிப்பிட்டிருக்கிற பல்வேறு வார்த்தைகளை நீங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி, நடுவண் அரசில் இடம்பெற்று இருக்கிறது. இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு டெல்லிக்குச் சென்ற பா.ம.க. நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் பிரதமர் அவர்களிடத்திலே, அன்னை சோனியா காந்தி அவர்களிடத்திலே, நீங்கள் கருணைகூர்ந்து இலங்கைப் பிரச்சினையிலே தலையிட்டு ஒரு அரசியல் தீர்வு, சுமுகத் தீர்வு ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கவேண்டும் என்று அதைத்தான் நேரடியாக வற்புறுத்தி வந்திருக்கிறார். இங்கே சொல்வதற்குக் காரணம், தமிழ்நாட்டிலே இருக்கிற தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வை இந்திய அரசுக்கு எடுத்துக்காட்டவேண்டும்; இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் தலையிடவேண்டும் என்று வற்புறுத்துவதற்காக இங்கே தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோமே தவிர எதிரானதாக அல்ல.

நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த நண்பர்கள் தெளிவுபட எண்ணிப்பார்க்க வேண்டும். நான் சொன்னதிலேகூட— பிரதமர் சொன்னது, அனைத்துச் சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஒன்றுபட்ட இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அமைதி வழியில் பேச்சு நடத்தி அரசியல் தீர்வு காண்பதுதான் எதிர்காலத்திற்கான வழி அடங்கியிருக்கிறது என்று பிரதமர் சொல்லியிருக்கிறார். அதைத்தான் இங்கே வலியுறுத்திச் சொல்கிறேன். பிரதமர் சொன்னதை முதலமைச்சரும் வலியுறுத்துகிறார்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் மணி அவர்களைக் கேட்கிறேன், பிரதமர் சொல்லியதில் 'ஒன்றுபட்ட இலங்கை' என்று சொல்லுகிறாரே! அதை மணி அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா?

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கேற்ப ஒன்றுபட்ட இலங்கை உருவாக வேண்டும். அங்கே ஒன்றுபட்ட இலங்கை என்ற அடிப்படையில், நான் அதை இறுதியாகச் சொல்லிவிடுகிறேன். முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கு, இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தியா-இலங்கை ஒப்பந்தம் 29-7-1987-லே ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் இராஜிவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தம். இந்தியாவுக்கும், இலங்கைக்குமான ஒப்பந்தம். இப்பொழுது அந்த ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு அங்கே தேர்தல் நடத்த இருக்கிறது. வரக்கூடிய 28 ஆம் தேதி அங்கே தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் 'ஒன்றுபட்ட இலங்கை' என்பதற்குக் காரணம், அந்த ஒப்பந்தத்தை மீறக் கூடாது என்பதை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்திச் சொல்கிறோம். அதேநேரத்தில், வடக்குக் கிழக்கு மாகாணம் குறித்த இராஜிவ்-ஜெயவர்த்தனே இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு தேர்தல் நடத்த உள்ளது. தேர்தல் பணி தொடங்கி 28-4-2008 அன்று அஞ்சல் வாக்குப் பதிவும் நடைபெறவுள்ளது. இந்நிலையில் இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தை மீறி, இலங்கை அரசு தேர்தல் நடத்தக்கூடாது என்று இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று இங்கே நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

அதுமட்டுமல்ல, சுருக்கமாக இந்திய பிரதமர் தெளிவுபடக் கூறியுள்ளபடி, அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைதி வழியில் பேச்சு நடத்தி, அரசியல் தீர்வு காணும் நடைமுறையில் சேர்வதற்காக இலங்கையில் போராடிக்கொண்டிருக்கிற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்களும் இதற்கு ஒத்துக்கொள்ளவேண்டும். இதைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

பிரதமர் சொன்னதுமாதிரி அங்கு நல்ல தீர்வு காண்பதற்கு இந்தியா எடுக்கிற முடிவுக்கு விடுதலைப் புலிகளும் ஒத்துக்கொள்ளவேண்டும்

என்ற தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். பிரதமர் சொன்னதை விடுதலைப் புலிகளும் ஒத்துக்கொள்ளவேண்டும் என்றுதான் கேட்கிறோம். வேறு ஒன்றும் சொல்லவில்லை; தவறே இல்லை. ஆகவேதான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, இங்கே பாருங்கள், நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள் என்றுதான் ஆரம்பத்திலே சொல்லியிருக்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சரப்ஜித்சிங்குக்கு அளிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்துச் செய்யவேண்டுமென்று நம்முடைய பிரதமர் சொன்னார்; இந்திய நாடு சொல்கிறது; முதலமைச்சர் சொல்கிறார். உலக நாடுகள் பூராவும் இதை வலியுறுத்துகிறோம். இதை வலியுறுத்துகிற அதேவேளையில், தினந்தோறும் நூற்றுக்கணக்கிலே தமிழர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றிச் சொல்லக்கூடாதா? அக்காரணத்தினாலேதான் இங்கே நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வது, தமிழக அரசு இம்மாமன்றத்திலே இதுபோன்ற ஒரு நல்ல தீர்மானத்தை நிறைவேற்றி, நடுவண் அரசை வலியுறுத்தவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன். (குறுக்கீடு)

***திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொறுங்கள், பார்த்துவிடுவோம். (குறுக்கீடுகள்)

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக ஆக்கப்படக்கூடிய சூழ்நிலை இலங்கை நாட்டிலே இருந்து கொண்டிருக்கின்றது. 1944, 1949 ஆம் ஆண்டு வாக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரச்சினையில் கடந்தகால நிகழ்வுகளைச் சுருக்கமாக நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அங்கே இருக்கக்கூடிய தமிழர்கள், சிங்கள மக்களிடையேயுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், ஈழத்து காந்தி என்று மதிக்கப்படுகின்ற தந்தை செல்வா அவர்களும்.

[திரு. மு. கண்ணப்பன்] [2008 ஏப்ரல் 23

பண்டாரநாயகா அவர்களும், 1957-லே ஒரு ஒப்பந்தத்தைச் செய்தார்கள். குறைந்தபட்ச அதிகாரத்தை, உரிமைகளைத் தமிழர்களுக்குத் தருவதற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஒப்பந்தம் அது. அந்த ஒப்பந்தமும் கிடப்பிலே போடப்பட்டது. அதேபோல, 1965 ஆம் ஆண்டில் தந்தை செல்வா-சேனநாயகா ஒப்பந்தம் அதுவும் கிடப்பிலே போடப்பட்டது. அதேபோல, இந்திய நாட்டுடன் 1954-ல் பண்டித ஜவஹர்லால் நேரு-கொத்தலாவலா இடையே ஏற்பட்ட ஒப்பந்தமும் செயல்படுத்தப்படவில்லை. 1962-ல் சிரிமாவோ பண்டாரநாயகா—மாண்புமிகு சாஸ்திரி அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமும் கிடப்பிலே போடப்பட்டது. அதேமாதிரி, மீனவர்கள் உரிமை சம்பந்தமாக 1976-ல் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது; அதுவும் செயல்படுத்தப்படவில்லை. கடைசியாக, 1987-ல் மாண்புமிகு இராஜிவ் காந்தி-ஜெயவர்த்தனே ஒப்பந்தம் போடப்பட்டது. அந்த ஒப்பந்தமும் முறையாகச் செயல்படுத்தப்படாமல், கிடப்பிலே போடப்பட்டது. இன்றைக்கு அங்கே இனப் பிரச்சினை தலைதூக்கி, கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-55

1987-ல் இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் தமிழர் சமுதாயத்தினுடைய வரலாற்று வாழ்விடம் என்று அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இது 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி பொது மக்களால் வாக்கு அளிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, அதற்குப் பிறகு அது ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையில் அங்கே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று, இராஜிவ் காந்தி ஒப்பந்தத்திலே, 1987-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு மாறாக இலங்கை அரசே அங்கே இருக்கக்கூடிய நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்து, அவர்களே நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையும் பெற்றிருக்கிறார்கள். இரண்டு மாகாணங்களாக இருக்க வேண்டுமென்று. இப்பொழுது வடக்கு, கிழக்கு மாகாணங்களை, தனித் தனியாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். இப்பொழுது கிழக்கு மாகாணத்திலே தேர்தல் என்று அறிவித்து, தமிழர்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, சிங்களவர்களை அங்கே குடியேற்றி, மீண்டும் இனப் பிரச்சினை அதிகமாகக்கூடிய சூழ்நிலையை, அங்கே உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அதேபோல, 1987 ஆம் ஆண்டு போடப்பட்ட

2008 ஏப்ரல் 23] [திரு. மு. கண்ணப்பன்]

ஒப்பந்தத்தினுடைய பல்வேறு இனங்கள் இப்போது மீறப்பட்டிருக்கின்றன. இந்த ஒப்பந்தம் என்பது இந்தியா-இலங்கை ஒப்பந்தம், சுயாதிபத்திய உரிமை கொண்ட, இரண்டு அரசுகளுக்கு இடையில் செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தமாகும். சர்வதேச சட்டத்தின்கீழ் வலுவாக இருக்கக்கூடிய ஓர் ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு ஒருபொழுதும், எப்பொழுதுமே எந்தக் காலத்திலும், தட்டிக்கழித்துவிட முடியாது. அந்தவிதமாகத் தட்டிக் கழிப்பதை, இந்திய அரசு எந்த வகையிலும் அனுமதிக்கக் கூடாது என்று நாம் வலியுறுத்த வேண்டும்.

இங்கேயுள்ள மீனவர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரை 1974-76 ஆம் ஆண்டில் கச்சத் தீவு மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான இலங்கை-இந்தியா ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வந்தாலே வட கடலில் தமிழக மீனவர்கள் பாதுகாப்புடன் இருப்பார்கள் என்று அந்த ஒப்பந்தத்திலே சொல்லப்பட்டது. 1976-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு இந்த ஒப்பந்தங்கள் நடைமுறையிலே இல்லாமல் போயின. 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு கச்சத் தீவிலுள்ள புனித அந்தோணியார் கோயிலுக்கு தமிழக கிறித்துவப் பெருமக்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தக் கோயில் திருவிழாவே அங்கு நடப்பதில்லை. அந்தக் கோயிலையே இப்போது இலங்கை அரசு மூடிவிட்டது. ஒப்பந்தங்கள் போடுவதும், அவற்றை நடைமுறைப்படுத்தாமல் பின்வாங்குவதும் இலங்கை அரசினுடைய கடந்த கால வரலாறு.

ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாக்கப்படாமல் 1987-லே போடப்பட்ட ஒப்பந்தத்தை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இன்றைக்கு விடுதலைப் புலிகளை அழிக்கிறோம், ஒடுக்குகிறோம் என்ற பெயரில் ஈழத் தமிழ் மக்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். குழந்தைகள், தாய்மார்கள், அதேமாதிரி மதத் தலைவர்கள், இந்துக் கோயில்கள், கிறித்துவக் கோயில்கள், இப்படி நாள்தோறும் அவையெல்லாம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட படுகொலைகளையும் தடுத்து நிறுத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் அருகிலே இருக்கக்கூடிய நம்முடைய நாட்டிற்கு இருக்கிறது என்ற அடிப்படையில் ஏதோ மத்திய சர்க்காருடைய கொள்கைதான் நம்முடைய கொள்கை; அவர்கள் எதைச்

சொல்கிறார்களோ அதை நாம் பின்பற்றுவோம் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்காமல், தமிழர்கள் வாழக்கூடிய பகுதி, நம்முடைய இன மக்கள் அங்கே இருக்கிறார்கள் என்ற உணர்வோடு நம்முடைய கருத்தை வலியுறுத்தி இந்திய அரசாங்கத்தைச் செயல்பட வைக்க வேண்டும்.

** எந்த வகையிலும், தமிழர்களைக் காக்கக்கூடிய அந்த மாபெரும், மகத்தான பொறுப்பு நம்முடைய தமிழக அரசுக்கு இருக்கிறது என்ற அடிப்படையில் இங்கே நாம் அனைவரும் ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு தமிழக மக்களைக் காப்பாற்றக்கூடிய பெரும் பொறுப்பும், கடமையும் இன்றையதினம் இருக்கிறது. எனவே, அத்தகைய தமிழ் மக்களைக் காப்பாற்றுங்கள், ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டி, விரும்பிக் கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம் அல்லது திரு. து. ரவிக்குமார். இருவரும் இருக்கையில் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

முற்பகல் 11-00

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைப் பிரச்சினையைப்பற்றி பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. மணி அவர்களும், நம்முடைய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அண்ணன் கண்ணப்பன் அவர்களும், இங்கே பல்வேறு கருத்துகளை வெளியிட்டார்கள். பல்வேறு ஒப்பந்தங்கள் போடப்பட்டன, அந்த ஒப்பந்தங்கள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. கண்ணப்பன் அவர்கள் (குறுக்கீடு) மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. கண்ணப்பன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உண்மையிலேயே அந்த ஒப்பந்தங்கள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்படாமல் போனதற்கு யார் காரணம் என்று நீங்கள் தெளிவாக இந்த அவையிலேயே தெரிவிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இலங்கையிலே போடப்பட்ட ஒப்பந்தம்—கடைசியிலே இராஜிவ் காந்திக்கும் ஜெயவர்த்தனே அவர்களுக்கும் இடையே 29-7-1987 அன்று ஓர் ஒப்பந்தம் காணப்பட்டது. அந்த ஒப்பந்தத்திலே உள்ள ஷரத்திலேகூட 2-வது ஷரத்து என்ன சொல்கிறது என்று சொன்னால், இலங்கை பல்வகைப்பட்ட மக்கள் ஒரு வாழ்கின்ற நாடு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை ஒத்துக்கொள்ள வைத்ததே அமரர் இராஜிவ் காந்தி அவர்கள். இலங்கையும் இந்தியாவும் போட்ட அந்த ஒப்பந்தத்தால்தான் இலங்கைக்கு மறுவாழ்வு தேடிக்கொடுக்க வேண்டும் என்று சொல்கின்ற நிலை இப்போது உலகம் பூராவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றாததற்கு யார் காரணம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அமரர் இராஜிவ் காந்தி அவர்கள் உயிரோடு இருக்கின்றபோது இலங்கைக்குச் சென்றார்கள். இந்த ஒப்பந்தத்தைக் கண்டார்கள். ஒப்பந்தம் கண்டு அவர் திரும்பி வருகின்றபோது இலங்கை சிப்பாய் தன் கையிலே இருந்த துப்பாக்கியைத் திருப்பி அவரை அடித்தார். அதை இந்த நாடு மறக்கவில்லை. அப்போது அந்த ஒப்பந்தம் போடப்பட்டது. ஒப்பந்தம் போடப்பட்டபோது ஒப்பந்தத்தை ஒத்துக்கொள்வதாக முதலிலே அறிவித்தார்கள். அதற்குப் பின்னாலே இந்த ஒப்பந்தத்தைக் கிடப்பிலே போட வேண்டுமென்று எண்ணியது, இந்திய அரசு அல்ல. இந்திய அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணம் இருந்தால், ஒரு நாளும் அந்த ஒப்பந்தத்தையே போட்டிருக்காது. அந்த ஒப்பந்தம் போடப்பட்ட பின்னால், இவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், ஒரு கட்டத்திலே அமரர் இராஜிவ் காந்தி அவர்கள் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களையே அழைத்து, நீங்கள் இலங்கைக்குப் போய் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணுங்கள் என்று தெரிவித்தார்கள். டாக்டர் கலைஞர் அவர்களும் நானும் இலங்கைக்குப் போகிறேன், அங்கே போய்ச் பிரச்சினையைப் பேசி முடிக்கிறேன் என்று சொல்லி, சென்னைக்கு வந்தார்கள். சென்னைக்கு வந்தவுடனே அவர்களுடைய காதிலே விழுந்த செய்தி, அவருக்கே அதிர்ச்சியளிக்கக்கூடிய செய்தியாக இருந்தது. அந்தச் செய்திக்கு, அந்த நிலைமைக்கு யார் காரணம் என்பதை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

[2008 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கண்ணப்பன், உட்காருங்கள்.

திரு. டி. சுதர்சனம்: அது என்னவென்று சொன்னால், இலங்கைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் தூதுவராகப் போகவேண்டுமென்று இராஜீவ் காந்தி அவர்கள் கலைஞரை வேண்டிக்கொண்டதற்குப் பின்னால், டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னைக்கு வந்தவுடனே, அன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த, இன்றைய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்கள், இங்கேயிருந்து இலங்கைக்கு, பாஸ்போர்ட் இல்லாமல், கள்ளத் தோணியிலே சென்றார்கள். அது மிகவும்... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கண்ணப்பன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். பேசி முடிக்கட்டும்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் கண்ணப்பன் அவர்கள், வைகோ அவர்கள் போகவில்லையென்று இங்கே மறுப்புத் தெரிவிக்க விரும்புகிறாரா? அப்படி மறுப்புத் தெரிவித்தால் தெரிவித்துக்கொள்ளலாம். அதனைப்பற்றி ஒன்றும் கவலையில்லை. ஆனால். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசி முடிக்கட்டும், உட்காருங்கள் நீங்கள்.

திரு. டி. சுதர்சனம்: அதற்கு இலங்கையிலே வாழ்கின்ற. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் எழுந்துகொண்டே இருக்கிறீர்கள். உட்காருங்கள், அவர் பேசி முடித்தவுடன் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

முற்பகல் 11-05

திரு. டி. சுதர்சனம்: அப்பாவித் தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இந்திய அரசுக்கு நிறையவே உண்டு. அப்பாவித் தமிழர்கள்மீது, அவர்கள் தாக்கப்படுவதை எந்தக் காங்கிரஸ்காரர்களும், எந்த இந்திய மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. (குறுக்கீடு) ஆனால், அந்த அப்பாவித் தமிழர்கள் பெயரிலே, ஒரு வன்முறைக் கலாச்சாரம் உருவாவதை, அந்த வன்முறைக் கலாச்சாரத்தின்மூலமாக, அங்கேயிருக்கின்ற விடுதலைப் புலிகளினாலே, நம்முடைய மண்ணிலே,

2008 ஏப்ரல் 23] [திரு. டி. சுதர்சனம்]

ஸ்ரீபெரும்புதூரிலே, காங்கிரஸ் கட்சியின் தலைவர் படுகொலை செய்யப்பட்டதை, எந்தக் காங்கிரஸ்காரனும் மறந்துவிடமுடியாது; மன்னிக்கவும் முடியாது. உலகத்திலே இருக்கின்ற அத்தனை பேரும், தமிழர்களாகட்டும், இந்தியர்களாகட்டும், அதை எந்தக் காலத்திலும் மன்னிக்கமாட்டார்கள்.

அப்படியிருக்கின்றபோது, இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்கவேண்டுமென்ற அக்கறை, உலகத்திலே இருக்கின்ற தமிழர்களுடைய தலைவராக, ஒப்புயர்வற்ற தலைவராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, எல்லோரையும்விட நிறையவே உண்டு என்று நாங்கள் நம்புகிறோம். அதுதான், அவர் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றுகின்ற ஒரு சேவை என்பதையும் நாங்கள் தெளிவாகவே தெரிந்து வைத்திருக்கின்றோம். அதனால்தான், இந்திய அரசு கொண்டு வருகின்ற பல்வேறு திட்டங்களுக்குத் தமிழக அரசு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

நண்பர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இங்கே பேசுகின்றபோது, ** அந்த வார்த்தைகளை நீங்கள் தயவு செய்து அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவர்கள் யாரும் பேசாதீர்கள்.

திரு. டி. சுதர்சனம்: இந்த ஒப்பந்தங்களை நிறைவேற்றாததற்கு முழுக் காரணம் யார் என்பதை நான் இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் விடுதலைப் புலிகள்தான் இந்த ஒப்பந்தங்கள் நிறைவேறாததற்கு முழுக் காரணம் என்பதை (குறுக்கீடுகள்) நான் ஒரு குற்றச்சாட்டாகவே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கேயிருக்கின்ற அப்பாவித் தமிழர்களுக்கு... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. கண்ணப்பன், நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். அதற்குப்பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

திரு. டி. சுதர்சனம்: அங்கேயிருக்கின்ற அப்பாவித் தமிழர்களுக்கு நல்வாழ்வைத் தேடிக் கொடுக்கவேண்டும்; அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்ற வேண்டுமென்ற அக்கறை இந்திய அரசுக்கு நிறையவே உண்டு.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம், கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. டி. சுதர்சனம்: இதோ முடித்துவிடுகிறேன். இருந்தாலும், இங்கே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், அந்தத் தீர்மானத்திலேயிருக்கின்ற ஆட்சேபகரமான விஷயங்களை நீங்கள் எடுத்துவிட்டு, அந்தத் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கின்ற விதத்திலே, (குறுக்கீடு) இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே அவர்கள் பேசிய ஆட்சேபகரமான வார்த்தைகளை நீக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகின்ற இயக்கம் தமிழகத்திலே ஊடுருவுவதை ஒருக்காலும் நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது; வன்முறைக் கலாச்சாரத்திற்குத் தமிழகத்திலே இடமில்லை; வன்முறைக் கலாச்சாரம் தமிழகத்திலே பரவுவதை எந்தக் காரணத்தை முன்னிட்டும் நாம் ஆதரிக்கமுடியாது. தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடித் தரவேண்டும் என்கிற எண்ணம் எல்லோருக்கும் இருக்கின்றபோது, அந்தப் பெயரிலே இங்கே வந்து பல்வேறுபட்ட சமூக விரோதச் செயல்களைச் செய்வதை அனுமதிக்கமுடியாது என்பதைத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் பேசும்போது, திரு. வைகோ அவர்கள் ஈழ நாட்டிற்குக் கள்ளத் தோணியிலே சென்றதாகக் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடுகள்) இன்னும் சொல்கிறேன்; கள்ளத்தோணியிலே போனதைப்பற்றி நாங்கள் பெருமையாக நினைக்கிறோமே தவிர, சிறுமையாக நினைக்கவில்லை. (குறுக்கீடுகள்) அங்கேயிருக்கிற தமிழர்களைப்பற்றித் தெரிந்துகொண்டு வருவதற்காகப் போனாரேதவிர, வேறொன்றுமில்லை. ** (குறுக்கீடுகள்) அதுதான் நடக்கிறது இன்றைக்குச் சபையிலே. (குறுக்கீடுகள்) அதுதான் நடக்கிறது; வேறு என்ன நடக்கிறது? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. கண்ணப்பன், no, no. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

வானூர் தொகுதி, திருச்சிற்றம்பலம் கூட்டுச்சாலையில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

82—

விளையாட்டு மைதானம்

வினா எண் 35721—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, உங்காரணை, அல்லி ஊராட்சி, எட்டி மரத்துப்பட்டில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி தொகுதி, உங்காரணை, அல்லி ஊராட்சி எட்டி மரத்துப்பட்டில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

83—

உடற்பயிற்சி நிலையம்

வினா எண் 35807—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம் நடுக்கரை ஊராட்சியில் உடற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

[2008 ஏப்ரல் 23

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம் நடுக்கரை ஊராட்சியில் உடற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

84—

விளையாட்டு அரங்கமாக மாற்றல்

வினா எண் 36017—திரு. அ. ராஜன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகர்கோவில் தொகுதி, புத்தன்துறை கிராமத்திலுள்ள மைதானத்தை விளையாட்டு அரங்கமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

நாகர்கோவில் தொகுதி, புத்தன்துறை கிராமத்திலுள்ள மைதானத்தை விளையாட்டு அரங்கமாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

கிரிக்கெட் மைதானம்

வினா எண் 39686—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கையில் கிரிக்கெட் மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கையில் கிரிக்கெட் மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

86—

விளையாட்டு மைதானம்

வினா எண் 39687—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் விளையாட்டு அரங்கம், விளையாட்டு மைதானம், கிரிக்கெட் மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் விளையாட்டு அரங்கம், விளையாட்டு மைதானம், கிரிக்கெட் மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

87—

நீச்சல் குளம்

வினா எண் 41003—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் நீச்சல் குளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

[2008 ஏப்ரல் 23

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் நீச்சல் குளம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

88—

பாம்புகள் நடமாட்டத்தைத் தடுத்தல்

வினா எண் 23781—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை 52-வது வட்டம், கீரைத் தோட்டம் பகுதியில் பாம்புகள் நடமாட்டத்தைத் தடுக்க அதற்குரிய செடிகளை நட வனத் துறை நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

மதுரை மாநகரம் 52-வது வட்டம், கீரைத் தோட்டம் குடியிருப்புப் பகுதியில் விவசாய நிலங்கள் இருப்பதால் சாரைப் பாம்புகள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. இது குறித்து புகார் பெறப்படும்போது பாம்புகளைப் பிடித்து வனப் பகுதியில் விடும் பணி மதுரை மாவட்ட வன அலுவலரால் மேற்கொள்ளப்படுகிறது. மூலிகை குணம் கொண்ட ஆடுதின்னா பாளை, கருடன் கிழங்கு, சிறியா நங்கை, பெரியா நங்கை, வசம்பு, பாம்பு கற்றாழை ஆகிய செடிகள் காணப்படும் பகுதிகளில் அவற்றின் வாசனை பிடிக்காமல் பாம்பு உட்பட விஷ ஜந்துக்கள் வருவதில்லை என்று நம்பப்படுகிறது. இதற்கான அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் ஏதுமில்லை. ஆகவே, குடியிருப்பு பகுதிகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள செடிகளை வனத்துறையின் மூலம் நடவு செய்வது குறித்த செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் ஏதும் இல்லை.

89—

வாகன விபத்தைத் தடுத்தல்

வினா எண் 33341—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 ஏப்ரல் 23]

சேலம்-ஓமலூர் நெடுஞ்சாலை எண் 7, முத்துநாயக்கன்பட்டி ரவுண்டானாவில் வாகன விபத்தைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

சேலம்-ஓமலூர் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் கிமீ 118/850-ல் ஓமலூர் சந்திப்பிலுள்ள முத்துநாயக்கன்பட்டி ரவுண்டானாவில் விபத்துகளைத் தடுக்கும்பொருட்டு மேம்பாலம் அமைக்கும் பணி ஒப்பந்த தொகுப்பு எண் என்.எஸ்.2/பிஓ.டி./டி.எண் 2-ல் சேர்க்கப்பட்டுள்ளது இந்தப் பணிகள் பிப்ரவரி, 2009-ல் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சேலம் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார். இப்பணி முடிவுறும்போது வாகன விபத்து தவிர்க்கப்படும்.

90—

உதவித்தொகை

வினா எண் 4346—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில், வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் சிறப்பு ஊராட்சிகளில் அரசு உதவித்தொகை கிடைக்காத உடல் ஊனமுற்றோர்களுக்கு அரசு உதவித்தொகை வழங்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:

கோவை, மாவட்ட மறுவாழ்வு மையத்தின்மூலம் மாவட்டம், முழுவதும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஜூலை 2007 மாதம் முழுவதும் ஊராட்சி ஒன்றியம் வாரியாக சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாம்களில் ஊனமுற்ற நபர்களுக்கு ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு அவற்றினை ஊனமுற்ற நபர்களின் கல்வி, வயது, பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரித்து உரிய உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையின்போது

[2008 ஏப்ரல் 23

இதுவரையில் அரசு உதவித்தொகை கிடைக்காத உடல் ஊனமுற்ற நபர்களுக்கு அரசு உதவித்தொகை வழங்கப்படும். மேலும், வால்பாறை தொகுதியில் வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் சிறப்பு ஊராட்சிகளில் ஊனமுற்ற நபர்கள் அதிக அளவு உதவித்தொகை பெறும் வகையில் அதிக விண்ணப்பங்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

91—

சிறப்பு நிதி ஒதுக்கீடு

வினா எண் 26666—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியிலுள்ள ஊனமுற்றோர்களுக்கு சிறுதொழில் செய்யும் வகையில் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் ஓமலூர் தொகுதியிலுள்ள ஊனமுற்றோர்களுக்கு சிறுதொழில் செய்ய வங்கிக் கடன் கோரி விண்ணப்பித்த நபர்களின் விண்ணப்பங்கள் பரிந்துரை செய்து வங்கி மேலாளர் கடன் வழங்க ஒப்புக்கொள்ளும்பட்சத்தில் வங்கிக் கடன் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாவட்ட மறுவாழ்வு மையம்மூலம், ஓமலூர் தொகுதியில் உள்ள ஊனமுற்றோர்களுக்கு தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழக திட்டத்தின்கீழ் பயன்பெறும் வகையில் விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டு, கடன் தொகை குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. S.G.S.Y. என்ற திட்டத்தின்கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் பயனடையும் வகையில் மாவட்ட மறுவாழ்வு மையத்திலிருந்து விண்ணப்பங்கள் பரிந்துரை செய்தும் அனுப்பி வைக்கப்படுகின்றன என்பதால் ஓமலூர் தொகுதியிலுள்ள ஊனமுற்றோருக்கு தனியாக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது.

92—

கட்டடம்

வினா எண் 28754—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 ஏப்ரல் 23]

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், ஜம்பேரி, பெரும்பேடு கிராமங்களில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் ஜம்பேரி மற்றும் பெரும்பேடு கிராமங்களில் அங்கன்வாடி மையங்கள் ஏற்கெனவே அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

93—

பயிற்சிக் களம்

வினா எண் 32284—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் பார்வையற்றவர்களுக்காக கூடை முடைதல், நாற்காலிகளுக்கு வலை பின்னுதல் போன்ற பயிற்சி அளிக்க பயிற்சிக் களம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்து மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு மையங்களில் (சென்னை, மதுரை நீங்கலாக) நாற்காலி ஒயர் பின்னும் பார்வையற்றோர் பணியிடம் ஒன்று வீதம் ஏற்படுத்தப்பட்டு, அம்மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு அலுவலங்களுக்குச் சென்று நாற்காலி ஒயர் பின்னும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

மானாமதுரையில் பார்வையற்றவர்களுக்காக கூடை முடைதல், நாற்காலிகளுக்கு வலை பின்னுதல் போன்ற பயிற்சி அளிக்க, பயிற்சிக் களம் துவக்க தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வருமாயின், அரசு அத்தொண்டு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்து (Recognition) நிதி உதவி வழங்க அரசு பரிசீலிக்கும்.

94—

கட்டட வசதி

வினா எண் 39620—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழடி அரசு மேல்நிலைப் பள்ளியில் சத்துணவு மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இப்பள்ளியில் பொதுப் பணித் துறையினரால் ஏற்கெனவே கட்டடம் கட்டப்பட்டு சிமென்ட் அட்டையால் மேற்கூரை அமைக்கப்பட்டுள்ள கட்டடம் உள்ளது. அதில் சிறு பழுதுகள் உள்ளன. அவற்றினை நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

95—

சமையல் கூடம்

வினா எண் 41578—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம் உள்ளுகுறுக்கை சத்துணவு மையத்திற்கு புதிய சமையல் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம் திம்ஜேப்பள்ளி ஊராட்சியைச் சேர்ந்த உள்ளுக்குறுக்கை கிராமத்தில் உள்ள

1. ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி
2. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி (உருது)
3. அரசு மேல்நிலைப் பள்ளி

ஆகிய 3 பள்ளிகளிலும் உள்ள சத்துணவுக்கூடம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே, தற்போதுள்ள சமையல் கூடமே போதுமானதாக கருதப்படுகிறது.

96—

மருத்துவமனை விரிவுபடுத்துதல்

வினா எண் 30629—திரு. கு.ப. வேலுமணி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, மதுக்கரையில் கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மதுக்கரை கால்நடை மருத்துவமனை 1994 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இக்கால்நடை மருத்துவமனையில் சராசரி வருகை 2005-2006 ஆம் ஆண்டில் 41.03% மற்றும் 2007-2008 ஆம் ஆண்டில் 42.90% ஆகும். அப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமான சிகிச்சைகள் இம்மருத்துவமனையின்மூலம் அளிக்கப்பட்டு வருவதால் இக்கால்நடை மருத்துவமனையை கால்நடை பெருமருத்துவமனையாக விரிவுபடுத்த தற்போது வாய்ப்பில்லை.

[2008 ஏப்ரல் 23

97—

இலவச ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 38926—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு அரசின் சார்பில் இலவச ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு அரசின் சார்பில் இலவச ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை.

இருப்பினும், மானாமதுரையிலுள்ள ஹரிபாலா ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிமூலம் 25-11-1997-லிருந்தும் திருப்புவனத்திலுள்ள கே.பி. தேவர், ஓட்டுநர் பயிற்சியகம்மூலம் 24-11-2000-லிருந்தும் ஆதி திராவிட இளைஞர்களுக்கு இலவசமாக ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

98—

புதிய கட்டடம்

வினா எண் 41637—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதி, தென்பாலை கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி, தென்பாலை கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை ஏதும் இல்லாததாலும், இடம் கொள்முதல் செய்வதற்கான நிதி ஆதாரம் இல்லாததாலும், புதிய கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை. எனினும், அடிமனை இனாமாகக் கிடைக்கும்பட்சத்தில் புதிய கட்டடம் கட்ட அரசு பரிசீலனை செய்யும்.

99—

பால் விற்பனை நிலையம்

வினா எண் 41681—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, சேலம் சூரமங்கலம் உழவர் சந்தை அருகில் 24 மணி நேரமும் பால் சில்லறை விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, சேலம் சூரமங்கலம் பகுதி உழவர் சந்தை காலை 4-00 மணி முதல் 10-00 மணி வரை இயங்கிவருகிறது. உழவர் சந்தை செயல்படும் நேரத்தில் முகவர் ஒருவர்மூலம் பால் சில்லறை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், உழவர் சந்தைக்கு எதிர்புறமும் பின்புறமும் காலை, மாலை ஆகிய இருவேளையிலும் முகவர்கள்மூலம் சில்லறை பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சூரமங்கலம்உழவர் சந்தை மற்றும் அதன் சுற்றுப்பகுதி மக்களின் தேவைக்கு ஏற்ப ஆவின் பால் சில்லறை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 23

100—

ஏற்றுமதி

வினா எண் 43458—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பதநீர், நுங்கு போன்ற பனை உற்பத்திப் பொருட்களை பதப்படுத்தி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

பதநீர்:

பதநீர் பனை மரத்திலிருந்து கிடைக்கும் இயற்கை பானமாகும். பதநீர் பருவகாலம் வருடத்தில் நூறு நாட்கள் மட்டுமே ஆகும். பதநீர் பனை மரத்திலிருந்து இறக்கி இருபத்தி நான்கு (24) மணி நேரத்திற்குள் பயன்படுத்திடக்கூடிய தன்மையுடையதாகும். பதநீரை அதிக காலம் வைத்து பயன்படுத்துவதற்கு அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டு வருகிறார்கள். அது வெற்றிகரமாக முடிவுற்று பதநீர் அதிக நாட்கள் கெடாமல் இருந்தால் மட்டுமே பதநீரை ஏற்றுமதி செய்வது குறித்து பரிசீலிக்க இயலும்.

நுங்கு:

நுங்கு வருடத்தில் நூறு நாட்கள் மட்டுமே கிடைக்கும். நுங்கினைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2008 ஏப்ரல் 23]

2. தகவல் கோரல்

(அ) மதுரை கோரிப்பாளையத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு இழைக்கப்பட்ட அவமரியாதை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேரத்தை வீணாக்காதீர்கள், உட்காருங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அரி, அனுமதி இல்லாமல் நின்று கொண்டிருக்கக் கூடாது. உட்காருங்கள்.

21-4-2008 அன்று மதுரை, கோரிப்பாளையத்தில் உள்ள பசும்பொன் தேவர் சிலையை சிலர் அவமரியாதை செய்தது குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. இ. மகேந்திரன், திரு. ஆர்.டி. கணேசன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. ஏ.கே. போஸ், திருமதி எஸ். தேன்மொழி, திரு. சி. துரைராஜ், திரு. இரா. விசுவநாதன், திரு. வி.பி. கலைராஜன், திரு. டி. ஜெயக்குமார், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. செ.ம. வேலுசாமி, திரு. எல். ரவிச்சந்திரன், திரு. ஆர். சாமி ஆகியோர் விதி 56-ன்கீழும், தி.மு.க. சார்பாக திரு. பி. மூர்த்தியும், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், திரு. மா. தண்டபாணி, திரு. விடியல் எஸ். சேகர், திரு. எம்.ஆர். சுந்தரம், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோரும், பா.ம.க. சார்பில் திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக திரு. என். நன்மாறன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. தி. இராமசாமி, திரு. சு. குணசேகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. உலகநாதன் மற்றும் ம.தி.மு.க. சார்பாக திரு. வீர இளவரசன் ஆகியோர் விதி 55-ன்கீழும் கவன ஈர்ப்பாகக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடு) அந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்களோ அவர்கள் கைது செய்யப்பட்டும் ஆகிவிட்டது.

[2008 ஏப்ரல் 23

முற்பகல் 10-30

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது, பல கட்சிகளைச் சார்ந்தவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பினை முன்கூட்டியே தங்களிடத்திலே தந்து இருந்தாலும்கூட, ஒருவர்தான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை முன் மொழிந்து, அதற்கு விடை அளிக்கப்பட்டதற்குப் பின்னர், ஒருவேளை மிக முக்கியமான பிரச்சினையாக இருந்து, வேறு கட்சியைச் சார்ந்தவர்கள் ஏதேனும் கேள்வி கேட்க வேண்டுமானால் கேட்கலாமே தவிர, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே ஒவ்வொரு கட்சியினரும் பேசுவதாக இருந்தாலும், அப்படி பேசக்கூடிய அளவுக்கு, அந்தப் பிரச்சினையில் விவரமாகப் பேசுவதற்கு அதிக இடம் இல்லை என்பதையும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்து, பிரச்சினையை யாராவது ஒருவர் எழுப்பி, அந்த அளவிலே விடை அளிக்க அனுமதிப்பதுதான் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பொருத்தமானதாக இருக்கும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யார், யார் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறீர்கள் என்று பெயரையெல்லாம் சொல்லியாகிவிட்டது. அத்தனைக் கட்சிகளின் சார்பாக யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடு) யார் பேசுவது? (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள் (குறுக்கீடுகள்) அப்பகுதி எந்தச் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கிறதோ, அந்தச் சட்டமன்ற உறுப்பினர் பேசட்டும். (கூச்சல்-குழப்பம்)

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே உள்ள அவ்வளவு பேருக்கும் அந்தப் பிரச்சினையிலே அக்கறை இருக்கும், ஆர்வம் இருக்கும் என்பதிலே தடையில்லை; அவர்கட்கு உரிமையும் இருக்கிறது. ஆனால், சாதாரணமாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று வருகிறபோது, அந்த நிகழ்ச்சி, எந்தத் தொகுதியிலே நடைபெற்றதோ அந்தத் தொகுதி உறுப்பினரே பேசுவதை எல்லோருமாக ஏற்றுக்கொள்வார்கள். அப்படி இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்த உரிமை வரும். ஒருவர் தொகுதியாக இருக்குமானால், அந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அதை எழுப்ப, மற்றவர்கள் அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சர்க்கார்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏற்கெனவே இதில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டும் ஆகிவிட்டது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: பதிலில் சொல்லப் போகிறீர்கள். அதைச் சொல்லுங்கள். அதிலொன்றும் பிரச்சினையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையினுடைய நேரம் வீணாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் முக்கியம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்சினை. ஏற்கெனவே ஸ்ரீரங்கத்தில் தந்தை பெரியார் அவர்களுடைய சிலை உடைக்கப்பட்டபோது, நாம் எல்லாம் மிகவும் வருத்தப்பட்டு அந்த நிலை தொடர்ந்து, தேசியத் தலைவர்கள், அரசியல் ரீதியான தலைவர்களுடைய சிலையை இதுமாதிரி அவமரியாதை செய்யக்கூடிய ஒரு நிகழ்வு எதிர்காலத்தில் நடக்கக்கூடாது என்பதனை அனைத்துக் கட்சியினரும் குறிப்பிட்டுப் பேசினோம். அவரவர்கள் உணர்வுகளைச் சொல்வதற்கு அனைத்துக் கட்சிகளுக்கும் உரிமை இருக்கிறது. புது மாதிரியாக இன்றைக்கு அனைத்துக் கட்சிகளின் சார்பாக ஒருவர் பேசலாம் என்று புதிய நடைமுறையைக் கொண்டு வருவது, எந்த விதத்திலும் சரியாக இராது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மிக முக்கியமான பிரச்சினை. மதுரையில் நேற்றைய முன்தினம் நடந்தது. மிகவும் அவமரியாதை செய்யப்பட்டிருக்கின்ற ஒரு பிரச்சினையை, எழுப்பிப் பேசுவதற்கு அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்பு கொடுப்பதுதான் சரியான தீர்வாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரில்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 ஏப்ரல் 23

இருந்து, அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இதிலே எவ்வளவு அக்கறை காட்டுகிறார்களோ, அதைப்போலவே ஆளும் கட்சிக்கும் அதிலே அக்கறை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், தேவர் திருமகன் சிலையை வைத்தவரே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிலையைத் திறப்பதற்காக அன்றையதினம் குடியரசுத் தலைவராக இருந்த மாண்புமிகு திரு. கிரி அவர்களை அழைத்து வந்து விழா எடுத்தார்கள். ஆனால், வேண்டும் என்றே, யாரோ ஒருவர் தவறு செய்துவிட்டார் என்பதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுக்காமல் இல்லை. உடனடியாகக் கண்டுபிடித்து யார் அந்தத் தவறான செயலிலே ஈடுபட்டாரோ அவரைக் கைது செய்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின்மீது விவாதம் நடைபெற இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தயவு செய்து ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுசம்பந்தமாக அரசினுடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட எதிரி கைது செய்யப்பட்டாகி விட்டது. அதற்குப் பிறகும் நீங்கள் நேரத்தை வீணாக்கும் நோக்கத்தோடு செயல்பட்டால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) சரி, இதைக் கடைசியாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

(ஆ) இலங்கைத் தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்து இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இலங்கைவாழ் தமிழர்கள்மீது இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் ஏற்படும் உயிர் இழப்பினைத் தடுத்திட இந்திய அரசு விரைவான நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசு, இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், திரு. தி.க. ராஜா, திரு. கே.வீ. ராமநாதன்

2008 ஏப்ரல் 23]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் சுகாதார மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், அமராவதி ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் செயல்படும் அமராவதி துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் நிதி ஒதுக்கீடு பெற்று, நடவடிக்கை எடுக்குமாறு திருப்பூர் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும், சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

58—

ஆய்வாளர் பயிற்சி மையம்

வினா எண் 38513—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் தொழுநோய்ப் பிரிவும் தொழுநோய் ஆய்வாளர் பயிற்சி மையமும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தொழுநோயாளிகள் எண்ணிக்கை குறைந்துவிட்டதால் அன்றைக்கு இருந்த தொழுநோய் கட்டுப்பாடு நிலையங்கள் மூடப்பட்டு, தொழுநோய் தடுப்புத் துறை 1-6-2007 முதல் பொது சுகாதாரத் துறையுடன் இணைக்கப்பட்டு, ஆரம்ப சுகாதார நிலையங்கள்மூலமாக தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழகத்தில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை 10,000 மக்கள் தொகைக்கு 1 என்ற அளவில் குறைந்து,

[2008 ஏப்ரல் 23

தொழுநோய் ஒழிக்கப்பட்டுள்ளது. எனவே, மானாமதுரை மருத்துவமனையில் தொழுநோய்க்கு தனிப் பிரிவு துவக்குவதற்கு அவசியம் இல்லை.

தொழுநோய் ஆய்வாளர்களுக்குத் தமிழக அரசால் அளிக்கப்பட்டு வந்த பயிற்சி 1992 முதல் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. 1992 வரை பயிற்சி முடித்தவர்களுக்கு தொழுநோய் ஆய்வாளர் பணி நியமனம் அரசால் வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். தற்போது, தமிழகத்தில் தொழுநோயாளிகள் எண்ணிக்கை குறைந்துவிட்டதால் எதிர்காலத்தில் தொழுநோய் ஆய்வாளர்களைப் புதிதாக நியமிக்க வாய்ப்பு ஏதும் இல்லையென்பதால், இதற்கான அடிப்படைப் பயிற்சி வழங்குவதற்கான தொழுநோய் ஆய்வாளர் பயிற்சி மையம் துவக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

59—

தொழில் துவங்குதல்

வினா எண் 26053—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் கருவேல மரங்கள் சார்ந்த தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் கருவேல மரங்கள் சார்ந்த தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

2. மானாமதுரை பகுதியில் கண்மாய் மற்றும் புறம்போக்கு பகுதியில் 9,27,012 ஹெக்டேர் பரப்பில் கருவேல மரங்கள் தழைத்து வளர்ந்துள்ளன. அரசுக்குச் சொந்தமான கருவேல மரங்கள் ஆண்டுதோறும் ஏலமிடப்பட்டு தனி நபர்களால் வெட்டி எடுக்கப்படுகின்றன. வெட்டப்பட்ட கருவேல மரங்கள் எரியூட்டப்பட்டு (கரிமூட்டம்) மரக்கரியாக விற்பனை செய்யப்படுகின்றன. இத்தொழில்மூலம் மாதத்திற்கு 16 டன் கரிமூட்டைகள் தயார் செய்யப்படுகின்றன. ஒரு டன் மாத்தின் கொள்முதல் விலை ரூ.4,000/- வரை வாங்கப்பட்டு மரக்கரியாக்கப்பட்டபின் டன் ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

2008 ஏப்ரல் 23]

3. மானாமதுரை பகுதியில் கரிமூட்டம் செய்யப்படும் 5 சிறு தொழில் நிறுவனங்களும், 50 குறுந்தொழில் நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. தனியார் கரிமூட்டம் செய்யும் தொழில்கள் துவங்கிட முன்வந்தால் தக்க ஆலோசனைகள் வழங்கி, வங்கிகளின்மூலம் நிதி உதவி பெற்று தொழில் துவங்கிட மாவட்ட தொழில்மையம்மூலம் வழிவகைகள் செய்து தரப்படும்.

60—

ஏற்றுமதி

வினா எண் 36254—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர், பிலிசின்னம்பாளையம், தென்செங்கம்பாளையத்தில் தேங்காய்ப் பூ மற்றும் கொப்பரைத் தேங்காயிலிருந்து எண்ணெய் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேங்காயில் இருந்து எண்ணெய் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசிடம் இல்லை.

வால்பாறை தொகுதியைச் சேர்ந்த கோட்டூர், பிலிசின்னம்பாளையம், தென்செங்கம்பாளையம் பகுதிகள் அடங்கிய ஆனைமலை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 17,520 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் 30.66 இலட்சம் தென்னை மரங்கள் வளர்க்கப்பட்டு ஆண்டொன்றிக்கு 4,599 இலட்சம் தேங்காய்கள் கிடைக்கின்றன.

[2008 ஏப்ரல் 23

இந்தப் பகுதியில் கிடைக்கும் தேங்காய்கள் அனைத்தும் மக்களுடைய அன்றாட உணவுப் பயன்பாட்டிற்கும், உள்ளூர் மற்றும் வெளியூர் தேவைக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும், கொப்பரைத் தேங்காயாக மாற்றம் செய்தும் அவற்றை தென்னை விவசாயிகள் வியாபாரம் செய்து வருகின்றனர்.

ஆனைமலை வட்டாரம் மற்றும் பொள்ளாச்சியின் இதரப் பகுதிகளில் தேங்காயில் இருந்து எண்ணெய் தயாரிக்கும் 23 சிறு தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிறுவனங்களுக்கு மேற்கண்ட பகுதிகளில் உற்பத்தியாகும் தேங்காய் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், இத்தகைய தொழில் செய்ய முன்வருபவர்களுக்கு தேவையான ஆலோசனைகளை மாவட்ட தொழில் மையம் அளிக்கும்.

61—

தொழிற்சாலை

வினா எண் 36364—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதியில் 4 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் மல்லிகை பூ சாகுபடி செய்யப்படுகிறது. இதில் கிடைக்கும் பூக்கள் அங்குள்ள மக்களின் பயன்பாட்டிற்கே போதுமானதாக இல்லை. வால்பாறை தொகுதியில் பிற மலர் சாகுபடி ஏதுமில்லை. எனவே, சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை வால்பாறை தொகுதியில் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

2008 ஏப்ரல் 23]

62—

சிறு தொழிற்சாலை

வினா எண் 37174—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சியில், தக்காளிச் சாறு தயாரிக்கும் சிறு தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதி அங்கலக்குறிச்சியில் தக்காளிச் சாறு தயாரிக்கும் சிறு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

2. வால்பாறை தொகுதிக்குட்பட்ட அங்கலக்குறிச்சியை உள்ளடக்கிய ஆனைமலை ஊராட்சி ஒன்றியப்பகுதியில் 50 ஹெக்டேர் நிலப் பரப்பளவிலும், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 396 ஹெக்டேர் நிலப் பரப்பளவிலும், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 68 ஹெக்டேர் நிலப் பரப்பளவிலும் ஆக மொத்தம் 514 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் தக்காளி பயிரிடப்படுகிறது. இதன் வாயிலாக ஆண்டொன்றுக்கு 12,000 டன் தக்காளி மகசூல் கிடைக்கிறது. இவை அனைத்தும் மக்களுடைய அன்றாட உணவுப் பயன்பாட்டைப் பூர்த்தி செய்யும் விதத்திலேயே உள்ளன.

3. எனினும் ஆர்வமுள்ள இப்பகுதி தொழில் முனைவோர் தக்காளிச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிக்கைகளை, கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக உதவியுடன் தயார் செய்து, வங்கிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து தேவையான நிதியுதவியினைப் பெற்று தொழில் துவங்கவும், இத்தொழில் துவங்க தேவையான பல்துறை உரிமங்களையும் முதலீட்டிற்கான மத்திய, மாநில

மானியங்கள் உள்ளடக்கிய அனைத்துச் சலுகைகளையும் பெற்றுத்தர மாவட்ட தொழில் மையம் முனைப்புடன் அனைத்து வழிகாட்டுதல் சேவைகளையும் வழங்கும்.

63—

தொழிற்சாலைகள்

வினா எண் 39329—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அரசு சார்பில் செங்கல், ஊதுபத்தி, மைதா மாவு, முந்திரிச் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் செங்கல், ஊதுபத்தி, மைதா மாவு, முந்திரிச் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. எனினும், தனியார் நிறுவனங்கள் தொழில் துவங்கிட முன்வந்தால் அந்நிறுவனங்கள் தொழில் துவங்கிட மின் இணைப்பு, சட்டப்படியான தடைநீக்கச் சான்றிதழ்கள் மற்றும் இதர உதவிகளை சிவகங்கை மாவட்ட தொழில் மையம் மூலமாகப் பெறலாம்.

64—

தொழிற்சாலை

வினா எண் 40140—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் செங்கல் உற்பத்தி தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் செங்கல் உற்பத்தி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. தனியார் நிறுவனங்கள் தொழில் தொடங்கிட முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான மின் இணைப்பு, சட்டப்படியான தடைநீக்கச் சான்றிதழ்கள் மற்றும் இதர உதவிகள் விரைவில் கிடைத்திட சிவகங்கை மாவட்ட தொழில் மையம் உதவும்.

65—

தொழிற்சாலை

வினா எண் 40141—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், செயற்கை தலைப்பாகை, சிகையலங்காரப் பொருட்கள் தயார் செய்யும் தொழிற்சாலையைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் செயற்கை தலைப்பாகை, சிகையலங்காரப் பொருட்கள் தயார் செய்யும் தொழிற்சாலை துவங்கிடும் திட்டம் அரசிடம் இல்லை. தனியார் நிறுவனங்கள் இத்தகைய தொழில் துவங்கிட முன்வந்தால் அந்நிறுவனங்களுக்கு மின் இணைப்பு, சட்டப்படியான தடைநீக்கச் சான்றிதழ்கள் மற்றும் இதர உதவிகள் விரைவில் கிடைத்திட மாவட்ட தொழில் மையம், சிவகங்கையின் பொது மேலாளர் அலுவலகம் தக்க உதவிகள் செய்யும்.

[2008 ஏப்ரல் 23

66—

ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 10234—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் கிராமம், தாளபாளையம் ஜெயந்தி காலனி மயானத்திற்குச் செல்லும் பாதையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி ஒலகடம், தாளபாளையம் ஜெயந்தி காலனி மயானத்திற்குச் செல்லும் பாதையில் உள்ள முட்புதர்கள் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. தற்போது ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை. மேலும், மயானத்தைச் சுற்றி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், ஒலகடம் பேரூராட்சியில், மயான சுற்றுச் சுவரும் கட்டப்பட்டுள்ளது.

67—

சுற்றுலா விடுதி

வினா எண் 31390—திரு. செ. புஷ்பராஜ்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவக்கரை ஸ்ரீவக்ரகாளியம்மன் கோயிலுக்குச் சுற்றுலா விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவக்கரை ஸ்ரீவக்ரகாளியம்மன் கோயிலுக்குச் சுற்றுலா விடுதி கட்டுவது சம்பந்தமாக, எந்தவிதமான செயற்குறிப்பும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

68—

சுற்றுலாத் தலம்

வினா எண் 43512—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் வல்வில் ஓரியின் நினைவாக சுற்றுலாத் தலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

கொல்லிமலையை மேம்படுத்த சுற்றுலாத் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. முதற்கட்டமாக அடிப்படை வசதிகளை ஏற்படுத்த 2008-2009-ல் நிதி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் மைய அரசின் சுற்றுலாத் துறையிடமிருந்தும் கொல்லிமலையை மேம்படுத்த நிதி உதவி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. கடையெழு வள்ளல்களுக்கு கலைக்கோட்டம் நிறுவவும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

69—

அடிப்படை வசதிகள்

வினா எண் 43556—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிக சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 23

செங்கல்பட்டு தொகுதி, திருக்கச்சூர் அருள்மிகு தியாகராஜ சுவாமிகள் மற்றும் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் சுற்றுலாத் துறையின்மூலம், அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

திருக்கச்சூர் அருள்மிகு தியாகராஜ சுவாமிகள் மற்றும் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்வது குறித்து கருத்துருக்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

70—

நினைவுத் தூண்

வினா எண் 44210—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை வடக்கு சித்திரை வீதியில் திலகர் அவர்களுக்கு நினைவுத் தூண் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

தொகுப்பு வீடு

வினா எண் 40771—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் நரிக்குறவர்களுக்கு தொகுப்பு வீடு கட்ட அரசு முன்வருமா?

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

நரிக்குறவர்களுக்கு தொகுப்பு வீடுக் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் இத்துறையில் இல்லை.

72—

மயானப் பாதை

வினா எண் 42089—திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, கோட்டூர் ஊராட்சி, சங்கால்பட்டி கிராமத்தில் போயர் மயானப் பாதையை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை வட்டம், கோட்டூர் ஊராட்சி, சங்கால்பட்டி கிராமத்தில் ச.எண்.34 கிராம நத்தத்தில் போயர் இனத்தினர் 120 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள், ச.எண். 139-ல் 0.31.0 ஹெக்டேர் ஓடைப்புறம்புகள் உள்ளதில், சுமார் 0.10.0 ஏர் நிலப் பகுதியினை மயானமாக பயன்படுத்தி வருகிறார்கள். மயானப் பாதை சஎண்கள் 131/2பி, 149, 132, 147/3பி மற்றும் 138 தார்ச் சாலையில் வந்து ஓடைப்புறம்புகள் 139-ல், ஓடைக்கரையின் ஓரமாக உள்ள 17 அடி அகலமுள்ள மண்-சரளை சாலை வழியாக மயானத்திற்கு சென்று வருகின்றனர். இந்த மண் சரளைச் சாலை கோட்டூர் ஊராட்சிமூலம் சீரமைக்கப்பட்டுள்ளது. எனவே, மயானத்திற்குச் செல்ல பாதை வசதி உள்ளது.

[2008 ஏப்ரல் 23

73—

சுற்றுச் சுவர்

வினா எண் 39637—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாடு அருள்மிகு கருப்பண்ணசாமி கோவிலுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மாரநாடு அருள்மிகு கருப்பண்ணசாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

74—

நவீனக் கழிப்பறை

வினா எண் 39641—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மடப்புரம் பத்திரகாளியம்மன் கோயில் அருகில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டவும், நவீன கழிப்பறை வசதி செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மடப்புரம், அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் சுமார் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி 2004 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டில் உள்ளது. தற்போதைக்கு திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு இதுவே போதுமானதாக உள்ளது. திருக்கோயிலின் கிழக்குப் பக்கம் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறைகள் தலா 6 வீதம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தற்போதைக்கு இதுவே போதுமானதாக உள்ளது. கூடுதலாக பக்தர்கள் இத்திருக்கோயிலுக்கு வருகைதரும் நிலையில் மேற்கொண்டு கூடுதலாக வசதிகள் செய்துதர திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

75—

பணி நியமனம்

வினா எண் 8994—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓவியப் பயிற்சி, கைவினைப் பயிற்சி முடித்தவர்களுக்கு அரசுப் பள்ளிகளில் பணி நியமனம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசு ஆணை நிலை எண் 279, பள்ளிக் கல்வி, நாள் 19-11-2007-ல் 2007-2008 ஆம் ஆண்டுக்கான பணியிடங்களை கீழ்க்கண்டவாறு நிரப்ப அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 1-6-2007 நிலவரப்படி கீழ்க்கண்ட பணியிடங்களுக்கான விவரம்:

ஓவிய ஆசிரியர்	144	
இசையாசிரியர்கள்	47	
தையல் ஆசிரியர்கள்	80	
	271	(நேரடி நியமனம்மூலம்)

[2008 ஏப்ரல் 23

76—

தொழிற்கல்வி

வினா எண் 16659—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 8 ஆம் வகுப்பு முதல் தொழிற்கல்வி கற்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் மட்டுமே தொழிற்கல்வி பாடப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 8 ஆம் வகுப்பு முதல் தொழிற்கல்வி சார்ந்த பாடங்களைக் கற்பிப்பது குறித்து எந்த ஒரு முடிவும் அரசால் எடுக்கப்படவில்லை. எனினும் 6, 7, 8 ஆம் வகுப்புகளில் தொழிற்கல்வி கற்பிப்பது சார்பாக தையல், இசை, ஓவியம் ஆகியவை கற்பிக்கப்படுகின்றன.

77—

வளர்கல்வித் திட்டம்

வினா எண் 40418—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் வளர்கல்வித் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதி, ஆனைமலை ஒன்றிய வளர்கல்வித் திட்டப் பகுதியுடன் இணைக்கப்பட்டு வால்பாறையில் 10 வளர்கல்வி மையங்களும் ஒரு தலைமை வளர்கல்வி மையமும் துவங்கப்படவுள்ளன. இதற்காக வால்பாறை நகராட்சி வளர்கல்வி தேர்வுக் குழுவின் சார்பில் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு வளர்கல்வி மையங்கள் துவங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

78—

வளர்கல்வித் திட்டம்

வினா எண் 40420—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் பேரூராட்சியில் வளர்கல்வித் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதி வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் பேரூராட்சியில் வளர்கல்வித் திட்டத்தின் சார்பில் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மற்றும் பேரூராட்சி தேர்வுக் குழுவின் சார்பில் வளர்கல்வி மையப் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு வளர்கல்வி மையங்கள் துவங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

79—

மாணவர் விடுதி

வினா எண் 31718—திரு. சை. சையது கௌஸ் பாஷா: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 23

(அ) மதுரை வக்ஃபு வாரியக் கல்லூரி இடங்களில் கல்லூரியைச் சுற்றி கீழ் தளத்தில் வணிக வளாகமும் அதன் மேல் பகுதியில் மாணவர் தங்கும் விடுதியும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை வக்ஃபு வாரிய கல்லூரியில் வணிக வளாகத்துடன் கூடிய மாணவர் தங்கும் விடுதியினை அமைப்பது குறித்த திட்டம் ஏதும் அரசிடம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

80—

விளையாட்டுத் திடல் அமைத்தல்

வினா எண் 34474—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், பெரிய புத்தேரி ஊராட்சி, சென்னேரி பகுதியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், பெரிய புத்தேரி ஊராட்சி, சென்னேரி பகுதியில் விளையாட்டுத் திடல் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

81—

விளையாட்டு மைதானம்

வினா எண் 35707—திரு. ந. கணபதி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, திருச்சிற்றம்பலம் கூட்டுச் சாலையில் விளையாட்டு மைதானம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

2008 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) அவைக் குறிப்பைப் பார்க்கிறேன். அதை நான் பார்த்து அந்த வார்த்தைகளை எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) அந்த ஆட்சேபகரமான வார்த்தைகள் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆட்சேபகரமான வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படும், உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 11-10

3. அரசினர் தனித் தீர்மானம்

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசை வலியுறுத்துதல்

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை பரிவுணர்வோடும், இரக்க சிந்தனையோடும், தமிழர்களுக்கு உதவிட வேண்டும் என்கின்ற பாச மனப்பான்மையோடும் கொண்டுவந்து, அதே அடிப்படையிலே விவாதம் நடைபெற்றிருந்தால் நான் மிகுந்த ஆறுதல் அடைவேன். ஆனால், எந்த நோக்கத்திற்காக நண்பர் மணி அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதாகச் சொல்லி முன்மொழிந்தாரோ அந்த நோக்கம் சிதைகின்ற வகையில், இந்த அவையிலே சில வார்த்தைப் பிரயோகங்கள் அமைந்ததற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.

நாம் இந்த அவையை, இந்தியப் பேரரசின் ஆதிக்கத்திலே உள்ள ஒரு நிருவாகத்தின் அடிப்படையில் நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்த அவையிலே நாம் எழுப்புகின்ற கருத்துகள், நிறைவேற்றுகின்ற தீர்மானங்கள் எதுவானாலும் அந்த ஆணி வேரை அசைத்துவிடக்கூடாது. அதுதான் இந்தியாவினுடைய ஒருமைப்பாடு, இறையாண்மை இவையாகும். இங்கே நம்முடைய அருமை நண்பர், தம்பி கண்ணப்பன் அவர்கள், திரு. சுதர்சனம் அவர்களுடைய கருத்துக்கு மாறுபட்ட கருத்தைச் சொல்ல எழுந்தபோது, உணர்ச்சி வேகத்தில் ** அவர் சொன்னது நான் அவரிடத்திலே எதிர்பார்க்காத ஒன்று. அவர் துடிப்பாகப் பேசக்கூடியவர்; தீவிரமாக சிந்திக்கக்கூடியவர், நான் மறுக்கவில்லை. ஆனால், இப்படிக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கடுப்பாகப் பேசக்கூடியவர் என்பதை நான் எதிர்பார்க்கவில்லை. (சிரிப்பு) அந்தவகையிலே அவர் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்குவதற்கு நான் பரிந்துரை செய்கிறேன்; உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. கண்ணப்பன் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இதிலே ஒரு தீர்மானத்தை இங்கு நிறைவேற்றுவதிலே எந்தவிதமான கருத்து மாறுபாடும் இந்த அரசுக்கு இல்லை; ஆளும் கட்சிக்கு இல்லை; எனக்கு இல்லை. ஏனென்றால், இலங்கைப் பிரச்சினை ஆரம்பமான அந்தக் காலத்திலேயிருந்து, இன்னும் சொல்லப்போனால் தந்தை செல்வா அவர்களுடைய காலத்திலிருந்து நடைபெறுகின்ற போராட்டம் இந்த உரிமைப் போராட்டம். செல்வா அவர்கள் மறைந்து, அதற்குப் பிறகு, அவருடைய வழித்தோன்றல்களாகப் பல பேர் இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு, அறவழியிலே அவர் நடத்திய கிளர்ச்சிகளெல்லாம் பயனற்றுப்போன பிறகு, அதிலே விடுதலை பெற்றே தீர வேண்டும், கொடுமையான ஆதிக்கத்திலேயிருந்து என்று கிளம்பி, அவர்கள் போராளிகளாக மாறி—போராளிகளாக மாறியவர்கள் ஒரு குழுவாக இருந்து அந்தப் பேராட்டத்தை நடத்தியிருந்தால் இந்நேரம் அவர்கள் நேபாளத்தைப்போல வெற்றியினை ஈட்டியிருக்கமுடியும் அல்லது வேறு பல நாடுகளிலே நடந்த விடுதலைக் கிளர்ச்சிக்குக் கிடைத்த வெற்றியைப்போலப் பெற்றிருக்க முடியும்—போராளிகளுடைய முக்கியக் குறிக்கோளே, போராளிகளுக்குள் போராளிகள். இந்தப் போராளிகளுக்குள்ளே நடந்த போராட்டம்தான் இன்றைக்கு நாம் இந்த அவையிலே அவர்களுக்காகப் பரிந்துரை செய்து பேசவேண்டிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறதென்பதை இந்தத் தீர்மானத்திலே வேகமாகப் பேசிய கண்ணப்பன் அவர்களும் மறந்துவிட முடியாது; நானும் மறந்துவிடவில்லை.

முற்பகல் 11-15

அதனால்தான் இடைக்காலத்திலே நான் விடுதலைப் போராளிகளுக்குச் சொன்ன அறிவுரை சகோதர யுத்தத்தை நிறுத்துங்கள் என்பதுதான். நான் கேட்கிறேன், எந்தப் போராளிக் குழுவாவது ஒரே போராளிக் குழுவாக இருந்து ஒரே ஒற்றுமையோடு இலங்கையிலே நடைபெறுகின்ற அக்கிரமங்களைக் கண்டிக்க

வேண்டும், தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற வேண்டும் என்ற எண்ணத்திலே செயல்பட்டதா என்றால் எதுவும் இல்லை. ஒரு குழுவை, இன்னொரு குழு வீழ்த்தவேண்டும், ஒரு குழுவை இன்னொரு குழு மாய்க்கவேண்டும், ஒரு குழுவிற்குச் செல்வாக்கு இல்லாமல் செய்யவேண்டும் என்ற முறையிலேதான் ஒவ்வொரு குழுவின் தலைவர்களும் அங்கே கொல்லப்பட்டார்கள், வெட்டப்பட்டார்கள், சுடப்பட்டார்கள் என்பதையெல்லாம் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

கண்ணப்பன் அவர்களுக்கு என்னைப்போல இளகிய மனது உண்டு. அதை நம்பிச் சொல்கிறேன். திரு. அமிர்தலிங்கம் அவர்கள் கொல்லப்பட வேண்டியவரா? நம்முடைய ம.பொ. சிவஞானத்தைப் போன்றவர் அங்கே. அவர் ஏன் கொல்லப்பட்டார்? அதுவும் எப்படி? வீட்டுக்கு விருந்துக்கு அழைத்து அவருக்கு சிற்றுண்டி பரிமாறி சிற்றுண்டியினுடைய அடுத்தக் கட்டமாக தேனீரை எடுத்துக்கொண்டு அம்மையார் மங்கையர்கரசி, அமிர்தலிங்கத்தினுடைய துணைவியார், மாடிக்குச் சென்றபோது அங்கே பிணங்களைத்தான் பார்க்கிறார்; தன்னுடைய கணவரும், கணவருடைய தோழர்களும் பிணங்களாக அங்கே கிடந்த காட்சியைத்தான் பார்க்கிறார்.

இப்படிப் பல பேர், போராளிகளிலேயே அவர்களுக்குள்ளே அடித்துக்கொண்டு, அவர்களுக்குள்ளேயே சுட்டுக்கொண்டு செத்திருக்கிறார்கள். இவை எல்லாம்தான் இந்தப் போராட்டத்தைப் பலகீனப்படுத்தியது என்பதை இங்கே வீரகர்ஜனை செய்த என்னுடைய நண்பர் மணி அவர்களும் மறந்துவிடமாட்டார். இந்தப் போராட்டம் வலுவிழந்ததற்குக் காரணம் இந்த விடுதலைப் போராட்டம் உலகத்திலே எல்லா இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கும்போது இந்த சின்னஞ்சிறு நாடு இலங்கையிலே வலுவிழந்ததற்குக் காரணம் நமக்குள்ளே ஒற்றுமையில்லாததால்தான் நாம் வலுவிழந்து போனோம், பகைவர்களுக்கு இடம் கொடுத்துவிட்டோம், சிங்கள இராணுவம் இன்றைக்கு நம்மை ஏறி மேய்கிறது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் நம்முடைய வீட்டுப் பிள்ளை கிணற்றோரத்திற்குச் சென்று கிணற்றிலே விழுந்துவிடுகிற நிலை வரும்போது அதைத் தாங்கிப் பிடிக்கிற அந்தத் தாயுள்ளம், தமிழ் உள்ளம், தமிழர்களுடைய உள்ளமாக, தமிழ்நாட்டிலே வாழ்கின்ற நம்முடைய உள்ளமாக இருக்கின்ற காரணத்தால் 'தொப்புள்கொடி உறவு' என்று சொன்னால் மாத்திரம்

[கலைஞர் மு. கருணாநிதி] [2008 ஏப்ரல் 23

போதாது, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உறவு உள்ளவர்களைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகத்தான் இங்கே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நண்பர் மணி எண்ணினால் நானும் அதை ஆதரிக்கிறேன். அதேநிலையிலே கண்ணப்பன் ஆதரித்தால் நானும் அவ்வாறே ஆதரிக்கிறேன். ஆனால், இதிலே இந்திய அரசைக் குறைக் கூறிப் பயனில்லை. அவர்கள் ஏற்கெனவே பெரும் இழப்புக்கு ஆளானவர்கள். அவர்களுடைய பெருந்தலைவர் இராஜிவ் காந்தியை இந்தக் காரணத்திற்காக இழந்தவர்கள். அவர்களை நாம் பழி சொல்லியோ, புறங்கூறியோ பயனில்லை. இருந்தாலும் அந்தக் குடும்பத்திலே இன்னமும் அந்த மனித நேயம் உண்டு என்பதை சமீபகாலத்திய செய்திகள் எல்லாம் நமக்கு விளக்குகின்றன. அது வேலூர் சிறைச்சாலைச் செய்தியாக இருந்தாலும் (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது அன்றைக்கு நம்முடைய சோனியா காந்தி அம்மையார் அவர்கள் மன்னிப்புக் கொடுத்தார்; அந்த அம்மையார் தூக்கு மாட்டிக்கொண்டால் அவர்களுடைய குழந்தை என்ன கதியாவது என்று சிந்தித்தார் என்ற இவற்றையெல்லாம் பார்க்கும்போது அவர்களிடத்திலே மனிதநேயம் குடிகொண்டிருக்கிறதென்று கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மனித நேயத்தின் அடிப்படையில் நாம் நிறைவேற்றுகின்ற தீர்மானத்தை எண்ணிப்பார்ப்பார்கள், அங்கே வாழுகின்ற தமிழர்களுடைய உயிர்களுக்குப் பாதுகாப்பாக இருப்பார்கள் என்கின்ற நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை உங்கள் முன்னால் நான் முன்மொழிகிறேன்.

முற்பகல் 11-20

"இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்காக, அங்கே மோதலில் ஈடுபட்டுவரும் இரு பிரிவுகளுக்கிடையே பேச்சுவார்த்தைகளுக்கு இந்திய அரசு ஏற்பாடு செய்யவேண்டும். இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முறையானதொரு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்காக பயனுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசு முன்வரவேண்டுமென இப்பேரவை வலியுறுத்துகிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். நீங்கள் அதை ஆதரித்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்மானத்திலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லாத காரணத்தால், திரு. சுதர்சனம் அவர்களும்கூட, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும்கூட அதைப்பற்றிச் சிந்தித்து எழுந்து நின்று ஆதரிக்கலாம் என்று நான் கருதுகின்றேன்.

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை காங்கிரஸ் கட்சி முழுமனதோடு ஆதரிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, மத்திய அரசைப் பற்றி, ** என திரு. மணி அவர்கள் குறிப்பிட்ட வார்த்தைகளையும் அவைக்குறிப்பிலிருந்து எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு, மத்திய அரசு சமாதான முயற்சியிலும், போர் நிறுத்த முயற்சியிலும் ஈடுபட்டு, அதை நிறைவேற்றித்தரவேண்டும் என்று அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய மூத்த அரசியல் அனுபவத்தாலும், தமிழினத்தின் தலைவர் என்ற முறையிலேயும், இலங்கைத் தமிழர்கள் அமைதியான வழியில் வாழ்வதற்கும், சுமுகத் தீர்வு ஏற்படுவதற்கும் நடுவண் அரசை வலியுறுத்தி நல்லதொரு தீர்மானத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டி, நன்றி தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2008 ஏப்ரல் 23

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

அடுத்த அலுவல் எடுக்கப்பட வேண்டும். உட்காருங்கள். மற்ற முன்னறிவிப்புகள் நாளையதினம் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) மதுரை கோரிப்பாளையத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு இழைக்கப்பட்ட அவமரியாதை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. துரைராஜ், சொல்லுங்கள்.

***திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசம், தியாகம், தெய்வீகம் இவை மூன்றையும் தன் வாழ்க்கையில் இலட்சியமாகக் கடைப்பிடித்து, வாழ்ந்து, மறைந்தபிறகும், தென் மாவட்ட மக்களால் மனித தெய்வமாகப் போற்றிப் புகழப்படும் பசும்பொன் தேவர் திருமகன் திருவுருவச் சிலையை அவமதிப்பு செய்தது—** நமக்கு மிகுந்த மன வேதனையை உண்டாக்குகிறது. இதுபோல், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போன்ற மரியாதைக்குரிய தலைவர்களின் சிலைகளும் உடைக்கப்பட்டதை நாம் அறிவோம். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். திரு. சி. துரைராஜ், சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய பத்திரிகைச் செய்தியில், சிலை அவமதிப்பு தொடர்பாக ஒரு மன நோயாளியைக் காவல் துறையினர் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மதுரை மக்கள், இக்கைது நடவடிக்கை, காவல் துறையினர் திட்டமிட்டு நடத்திய நாடகம் என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட தீய செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றது.

2008 ஏப்ரல் 23] [திரு. சி. துரைராஜ்]

முற்பகல் 11-25

தென் மாவட்டங்களில் பல நகரங்களுக்கு கடந்த இரண்டு தினங்களாகப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, உசிலம்பட்டி பகுதியில் கடந்த இரண்டு நாட்களாகப் பேருந்துகள் இயக்கப்படவில்லை. கடைகள் மூடப்பட்டுள்ளன.

மேலும், உயிரோடு இருக்கின்ற அரசியல் கட்சித் தலைவர்களுக்கே இந்த அரசாங்கத்தில் பாதுகாப்பு இல்லாத இந்த காலகட்டத்தில், மறைந்த அரசியல் கட்சித் தலைவர்களுடைய சிலைகளுக்குப் பாதுகாப்பு இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன என்று காவல் துறையினர் ஏனோதானோவென்று நடப்பதை உண்மையில் மன வேதனையோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மதுரை மாநகரில், கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள பசும்பொன் தேவர் சிலைக்கு கடந்த 21-4-2008 அன்று காலையில் நேர்ந்த அவமதிப்பு காரணமாக, கண்டனப் போராட்டம், பஸ் போக்குவரத்து பாதிப்பு, கடையடைப்பு என பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ள பதற்றமான சூழ்நிலை குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

***திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்ட மக்களினுடைய தெய்வமான தேவர் திருமகனாருடைய சிலையை, மதுரை மாநகரிலே உருவாக்கியவரே நம்முடைய தலைவர் கலைஞர்தான் என்பதனை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், இந்த முக்குலத்தோர் சமுதாயம், படிப்பறிவிலும், கல்வியறிவிலும் மட்டுமின்றி வேலைவாய்ப்பிலும் உயர வேண்டும் என்பதற்காக மூன்று கல்லூரிகளைக் கொண்டுவந்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், இந்தச் சமுதாயத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்த்தவரும் நம்முடைய முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி, இந்தச் சமுதாய மக்களுக்கும், பல்வேறு சிலைகளெல்லாம் உருவாக்கி பாதுகாப்புத் தந்த நம்முடைய தலைவர் அவர்களுடைய ஆட்சியில் சில விஷமிகள் வேண்டுமென்றே இதுபோன்ற பலவற்றைச் செய்துவந்தாலும்கூட, கடந்த 21 ஆம் தேதி நடந்த தேவர் சி[illegible]

அவமதிப்பில் ஈடுபட்ட, ஏர்வாடியிலிருந்து வந்த மனநோயாளி திருவழகு என்பவரை காவல் துறை கைது செய்ததன்மூலம் இப்பொழுது தென் மாவட்டங்களிலே அமைதி நிலவி, எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாமல், மக்கள் அமைதியான முறையிலே இருக்கிறார்கள் என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன். short ஆகச் சொல்லுங்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட தியாகியும், தேசியத் தலைவருமாகிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலை மதுரை மாநகரிலே, என்னுடைய மதுரை மேற்கு தொகுதியிலே அமைந்திருக்கின்றது. அந்தச் சிலை ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட சிலை என்பதை நாடு அறியும். அந்தச் சிலையினை, நேற்று முன்தினம் ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட நோயாளி, தேவர் திருமகனாரை வணங்குவதுபோல் சென்று, ஏதோ ஒருவகையான பொருளால் அசிங்கத்தை உருவாக்கிய அந்த நிலைமையால் மதுரை மாநகரிலே பதற்றம் ஏற்பட்டது. ஆனால், இப்போது காவல் துறை அந்த மனநோயாளியைக் கைது செய்து ஒரு சுமுக நிலையை உருவாக்கியிருக்கின்றது. மதுரை மேற்கு தொகுதியிலே எந்தவிதமான பதற்ற சூழ்நிலையும் இல்லை. அதையொட்டி ஏற்பட்ட கலவரம் ஒடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த பதற்றத்தின் காரணமாக சிலரைக் கைது செய்திருக்கிறது அரசு. அவர்களை அரசு உடனடியாக விடுதலை செய்து, இதுபோன்ற சூழ்நிலை எதிர்காலத்தில் நடக்காத அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் கடைசியில் சொல்லுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. நன்மாறன், கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைராஜ் அவர்கள் பேசுகிறபோது அவர் ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே பதிவு செய்தார். ** அதை முதலில் நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ** நீங்கள் எப்படி அவ்வாறு சொன்னீர்கள்? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைராஜ், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: நாங்களும்தான் இங்கே இருந்திருக்கிறோம். நாங்களும்தான் தென் மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறோம். தென் மாவட்டங்களிலே என்ன நடந்தது என்று எங்களுக்கும் தெரியும். (குறுக்கீடு) நீங்கள் அப்படிச் சொல்லமுடியாது. அந்தக் கருத்தை அவைக் குறிப்பிலிருந்து பேரவைத் தலைவர் அவர்கள் நீக்க வேண்டும். அது எப்படி அவர் சொல்லலாம்? ** எப்படிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்? அதை எப்படி ஒத்துக்கொள்வது? அதை உடனடியாக பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பார்ப்போம். (குறுக்கீடு) பிரச்சினையை உருவாக்கிக் கொண்டிருக்காதீர்கள்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கோரிப்பாளையம் பகுதியில். . . (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

(முற்பகல் 11-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

[2008 ஏப்ரல் 23

திரு. என். நன்மாறன்: தேவர் திருமகனார் அவர்களுடைய திருவுருவச் சிலைக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. துரைராஜ் உட்காருங்கள். திரு. சி. துரைராஜ் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள பசும்பொன் தேவர் திருமகன் அவர்களுடைய திருவுருவச் சிலை ஒரு மனநோயாளியால்.... (குறுக்கீடுகள்)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? திரு. என். நன்மாறன், கொஞ்சம் பொறுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) என்னைச் சொல்லவிடுங்களேன். அடுத்து, நீங்கள் மறுப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது அல்லவா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நீங்கள் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அந்தச் சிலையை உருவாக்கியவர் என்று சொன்னார்கள். அது தவறான கருத்து. அந்தச் சிலையை உருவாக்கியவர் அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியின் தலைவராக இருந்த திரு. மூக்கையா தேவர் அவர்கள்தான், ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திரு. வி.வி. கிரி அவர்கள் அந்தச் சிலையைத் திறந்து வைத்தார்கள். அதுதான் உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். திரு. என். நன்மாறன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குப் பெயர்தான், இதுதான், வரலாற்று புரட்டு.

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன மாதம்கூட எங்களுடைய மாவட்டத்திலே, ராஜபாளையத்திலே மரியாதைக்குரிய தேவர் திருமகனாருடைய சிலையின் தலை துண்டாக உடைக்கப்பட்டிருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இரண்டே தினங்களிலே, அந்த சிலையினுடைய தலையை யார் உடைத்தார்கள் என்பதைக் கண்டுபிடித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்தார்கள். அதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அங்கே மண் வாருவதிலே, மண் அள்ளுவதிலே பிரச்சினை ஏற்பட்டு உடைத்தார்கள். நம்முடைய தென்மாவட்டங்களிலே மீண்டும் சாதிக் கலவரத்தை உண்டாக்குவதற்காக இந்தக் குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தோர் தொடர்ந்து இந்தப் பணிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் எந்தக் கட்சி என்றே சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எந்தக் கட்சி என்றே அவர் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். (குறுக்கீடுகள்) அவர் எந்தக் கட்சி என்றே சொல்லவில்லை. நீங்கள் ஏன் உங்கள் கட்சியைச் சொன்னதாக நினைக்கிறீர்கள். அவர் எந்தக் கட்சி என்று சொன்னாரா? (குறுக்கீடுகள்) No.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோரிப்பாளையம். . .

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியத் தலைவர் தேவர் பெருமகனார் அவர்களுடைய சிலையை மதுரையில் நிறுவியவரும் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அவர்களுடைய நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியவரும் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தவறான ஒரு கருத்தை இங்கே பதிய வைத்திருக்கிறார். அருள்கூர்ந்து அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. என். நன்மாறன், நீங்கள் பேசுங்கள்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் கோரிப்பாளையம் பகுதியில் அமைந்திருக்கின்ற பசும்பொன் தேவர் திருமகனாருடைய திருவுருவச் சிலை ஒரு மனநோயாளியால் இழுக்குப்படுத்தப்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. காவல் துறை முயற்சி செய்து அதைக் கண்டுபிடித்திருக்கிறது. அதேசமயத்தில் அந்த மனநோயாளிக்குப் பின்னால் இருக்கக்கூடிய வேறு சில நோயாளிகள் யார் என்பதையும் கண்டறிந்து, அரசு அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அமைதியைக் குலைப்பது யாராக இருந்தாலும் அதைத் தடுத்து நிறுத்தி மக்கள் மத்தியில் நல்லுறவு மேம்பட அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற செயல்கள் வேறு எங்கும் நடைபெறாவண்ணம் தடுக்கப்படவேண்டும். பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களுடைய வரலாற்றைப் பற்றி நான் இந்த அவையில் சொல்லவேண்டியதில்லை. இதே அவையில் இருந்தவர். இந்த அவையிலேயே பணியாற்றியிருக்கிறார். படமாகவும் இருக்கிறார். தியாக வாழ்வே தேசிய வாழ்வு என்று இருந்திருக்கிறார். பிறர் நலனுக்காக, தன் நலனை இழந்திருக்கிறார். அவரை வைத்து தன் நலனை வளர்த்துக்கொள்வதற்கு யாரையும் நாம் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டு, அதேசமயத்தில் அவரோடு சேர்ந்து கம்யூனிஸ்டுகள் பணியாற்றியதையும் எங்களுடைய தலைவர் தோழர் கே.பி. ஜானகி அம்மாள் அவர்களும், தோழர் ராமமூர்த்தி, ஜீவானந்தம் போன்றவர்களும் ஆற்றிய பணியையும், நாடு அறியும் என்பதையும் கூறி, இதுபோன்ற செயல் எதிர்காலத்தில் நடைபெறாவண்ணம் தடுக்கவேண்டுமென்பதை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் தேவர் திருமகன் அவர்களின் சிலை அவமதிப்பிற்குள்ளானது மிகவும் வேதனை அளித்து, தென் மாவட்ட மக்கள் மத்தியில் மிகப் பெரிய பதற்றத்தை

உருவாக்கியிருக்கிறது. இந்தப் பதற்றத்தை எல்லாம் போக்குகின்றவகையில் நம்முடைய தமிழக அரசின் உத்தரவின் அடிப்படையில் காவல் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றி, உடனடியாகக் குற்றவாளியைக் கைது செய்ததாக, இன்று செய்தி வந்திருக்கிறது.

முற்பகல் 11-35

இங்கே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், அவர்தான் குற்றவாளியா என்றும், அவருக்குப் பின்னால் யார் இருந்தாலும்கூட, அதைக் கண்டறிந்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே முன்வைக்க விரும்புகிறோம். அதேவேளையில், இப்படி யாரோ ஒரு சிலர் செய்கிற சில சதிச் செயல்களால் அப்பகுதியில் வாழக்கூடிய, தென் மாவட்ட மக்கள் மத்தியிலே இருக்கக்கூடிய அமைதி நிலைகுலைந்து விடக்கூடாது. அங்கே சாதிக் கலவரம் ஏற்பட்டுவிடக்கூடாது. எல்லா சமுதாய மக்களும் அமைதியாக வாழ்வதற்கு, நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு அரசு எச்சரிக்கையோடு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, இந்த அவமதிப்புச் செயலில் ஈடுபட்டவர்களைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கண்டித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையின் மையப் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய சிலை அசிங்கப்படுத்தப்பட்டு, அதன் விளைவாக காவல் துறையும் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. பொதுவாக, அமைதி தவழ்கின்ற நமது தமிழகத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி வந்ததற்குப் பிறகு, திட்டமிட்டு சில சீர்குலைவு நடவடிக்கைகளை ஏற்படுத்தி, அமைதிக்குப் பங்கம் விளைவிக்கின்ற சில நிகழ்ச்சிகள் கடந்த 2, 3 மாதங்களாக நடந்து வருகின்றன. 3-11-2007 ஆம் தேதி நெல்லை மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, வேலாயுதபுரத்தில் இதேபோன்ற ஒரு சம்பவம் நடந்தது. கடைசியில் விசாரித்துப் பார்க்கும்போது, அண்ணா தி.மு.க.-வும், தே.மு.தி.க.-வும் தகராறு செய்து, அண்ணா தி.மு.க.மீது பழியைப் போட தே.மு.தி.க.வினர் அந்தச்

[திரு. தி. இராமசாமி] [2008 ஏப்ரல் 23

சம்பவத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. அதேபோல 3-3-2008 ஆம் தேதி, ராஜபாளையம் தாலுகா, சங்கரலிங்கபுரத்தில் தேவர் சிலை உடைக்கப்பட்டது. அந்தச் சம்பவத்தில் மணல் அள்ளுகின்ற நபர்களிடம் மாமூல் வசூலிப்பதில் ஏற்பட்ட தகராறின் காரணமாக, ஊர் நாட்டாண்மையின் மகன் அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்தவர், அவரே அந்தச் சிலையை உடைத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படித் திட்டமிட்டு, சில சம்பவங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த, ஆதரித்துக் கொண்டிருந்த மக்கள் எல்லாம் நமது கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் வழங்கப்படுகிற சலுகைகள், உரிமைகளின் காரணமாக இன்றைக்கு மனம் திருந்தி, தெளிவடைந்து, மாற்றம் அடைந்து வருகிற இந்த நேரத்தில் (குறுக்கீடுகள்) மீண்டும் ஒரு குழப்பத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து வருகின்றன. (குறுக்கீடுகள்) எனவே, இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை உடனடியாகக் கண்டறிந்து அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமசாமி, சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் உரையை முடிக்கட்டும்.

திரு. தி. இராமசாமி: அந்தக் கொந்தளிப்பான மக்கள்மீது போடப்பட்டிருக்கக்கூடிய (குறுக்கீடுகள்) வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எனது கருத்துகளைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசிய உறுப்பினர் அவர்கள் ராஜபாளையத்தில் நடைபெற்ற சிலையை உடைத்தது அண்ணா தி.மு.க. என்று சொன்னார். அவரால் அதை நிரூபிக்க முடியுமா? நிரூபிக்கும் வரையில், அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். அண்ணா தி.மு.க.-வே அல்ல, வேண்டுமென்றே அண்ணா தி.மு.க. என்று ஒரு பொய்யான செய்தியை இங்கே தந்திருக்கிறார். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இல்லையென்றால்... (குறுக்கீடுகள்)

2008 ஏப்ரல் 23]

திரு. வை. சிவபுண்ணியம்: ஒரே நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் சொன்ன அந்த சங்கரலிங்கபுரத்திலே அதைச் செய்தவர் ஊர் நாட்டாண்மையினுடைய மகன் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அவர் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்தான் என்பதற்கு ஆதாரமாக இருக்கிறார். (குறுக்கீடுகள்) இதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டிய அவசியம் இல்லை. ஊர் நாட்டாண்மையினுடைய மகன் அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர், ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்தான் அந்தச் சிலை உடைப்பிலே ஈடுபட்டிருக்கிறார் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், திரு. சிவபுண்ணியம் சொல்லியிருக்கின்றார்; அவர் சொன்னதற்கு நீங்கள் இல்லையென்று சொல்கின்றீர்கள். ஆக, இரண்டுமே record ஆகி இருக்கின்றது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.

***திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய ஆட்சியை எதிர்த்து நடந்த சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டதால், தன்னுடைய வாழ்நாளில் ஐந்தில் ஒரு பகுதி நாட்களைச் சிறையிலே கழித்த உத்தமசீலர் தேவர் திருமகனார், ஆதி திராவிட மக்களுடைய காற்றுகூட ஆலயத்தைத் தீண்டக்கூடாது என்றிருந்த அந்தக் காலகட்டத்தில் மதுரை வைத்தியநாத அய்யர், தோழர்களை அழைத்துக்கொண்டு மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் நுழைவதற்காகத் திட்டம் தீட்டியபோது, சுற்று வட்டாரத்தில் பலத்த எதிர்ப்புகள் கிளம்பிய சூழ்நிலையில், ஆலயப் பிரவேசத்திற்கு எனது ஆதரவு இருக்கின்றது, இதனை எதிர்ப்பவர்களை நான் முறியடிப்பேன் என்று அறிக்கை வெளியிட்ட தேவர் திருமகனார். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீர. இளவரசன், சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

திரு. வீர. இளவரசன்: ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகின்றேன்.

[2008 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீர. இளவரசன், வரலாறெல்லாம் எல்லோருக்கும் தெரியும். நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***திரு. வீர. இளவரசன்:** அதற்குப் பிறகுதான் வைத்தியநாத அய்யர் அவர்களும், தலைவர் சத்தியமூர்த்தி அவர்களும், பெருந்தலைவர் காமராசர் அவர்களும், அங்கே ஆதி திராவிடத் தோழர்களோடு மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் நுழையக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பசும்பொன் கிராமத்திலும், அதனைச் சுற்றியுள்ள 32 கிராமங்களிலும் இருந்த தன்னுடைய சொத்து, சுகங்களையெல்லாம் ஏழை எளியவர்ளுக்குத் தானமாகக் கொடுத்து, அதிலும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், 90 சதவிகிதம் நிலங்களை ஆதி திராவிடத் தோழர்களுக்கு, அந்தக் குடும்பங்களுக்கு வழங்கியவர் தேவர் திருமகனார். பிறந்ததும் அக்டோபர் 30, மறைந்ததும் அக்டோபர் 30 என்ற சிறப்பு பெற்றவர் தேவர் திருமகனார். அவருடைய குருபூஜைக்கு அக்டோபர் 30 ஆம் தேதி ஆண்டுதோறும் இலட்சக்கணக்கானவர்கள் தன்னுடைய குடும்பங்களோடு, பிள்ளை குட்டிகளோடு அங்கே தவறாமல் சென்று அஞ்சலி செலுத்தி வருவதை நாடு நன்கறியும். அப்படிப்பட்ட தலைவரின்பால் ஈர்க்கப்பட்டுதான், உண்மையும், நேர்மையும் மிக்க அந்தத் தலைவர்மீது பக்தி வைத்துதான், தொடர்ந்து 34 ஆண்டுகளாக எங்கள் பொதுச் செயலாளர் அண்ணன் வைகோ அவர்கள் அந்தக் குருபூஜையிலே கலந்துகொண்டு வருகின்றார். அப்படிப்பட்ட தேவர் திருமகனாருடைய திருவுருவச் சிலை, மதுரை கோரிப்பாளையத்தில் அவமானப்படுத்தப்பட்டது என்பது, தேவர் இன மக்களுக்கு மட்டுமல்ல, உண்மைக்கும், நேர்மைக்கும் ஏற்பட்ட ஓர் இழுக்கு என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எனவே, சம்பந்தப்பட்ட அந்தக் குற்றவாளியைக் கைது செய்வது மட்டுமல்ல, இதற்கான உண்மைக் காரணம் என்ன, தொடர்ந்து நான்கு மாதங்களில், 4, 5 சம்பவங்களில் தேவர் திருமகனார் திருவுருவச் சிலைக்கு அவமதிப்பு நேரிட்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி, அப்படிப்பட்ட கயவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்குரிய தண்டனையை வழங்குவதற்கு அரசு உரிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டு, இதுபோல எதிர்காலத்தில் தேவர் சிலை மட்டுமல்ல. . .

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லி முடியுங்கள்.

திரு. வீர. இளவரசன்: வேறு எந்தத் தலைவருடைய சிலைக்கும் இதுபோன்ற அவமான நிகழ்வுகள் ஏற்படக்கூடாது என்பதைத் தெரிவித்து, மத நல்லிணக்கம், சமுதாய முன்னேற்றம், சமுதாய ஒற்றுமை, அமைதி இவையெல்லாம் ஏற்படுவதற்கு அனைவரும் ஓரணியில் நின்று பாடுபடவேண்டும். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு என்றைக்கும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், என்ன? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். மற்றவர்கள் எல்லாம் ஏன் எழுந்து நிற்கின்றீர்கள்? எல்லோரும் உட்காருங்கள். அவர் கட்டுப்பாட்டில் நீங்கள் இருக்கின்றீர்களா, இல்லையா? உங்கள் கொறடா எழுந்து நின்ற பிறகு மற்றவர்களெல்லாம் ஏன் எழுந்து நின்கின்றீர்கள்?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, அவர் அழுத்தந்திருத்தமாக அண்ணா தி.மு.க. என்று சொன்னார். அவரால் அதை நிரூபிக்க முடியுமா? ராஜபாளையத்தில் நடைபெற்றதே, அப்படி நடைபெற்றிருந்தால் யார் அப்படிச் செய்திருக்கின்றார்கள் என்பது காவல் துறைக்கு நன்றாகத் தெரியும். அவர் எதற்கு வேண்டுமானாலும் அரசுக்கு வக்காலத்து வாங்கட்டும். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், வேண்டுமென்றே அண்ணா தி.மு.க.வை இழுத்து, அண்ணா தி.மு.க.வைச் சார்ந்த ஒருவர் அந்தச் சிலையை உடைத்திருக்கிறார் என்ற ஒரு தவறான செய்தியை இந்தச் சபையிலே குறிப்பிடுவது, ஓர் இயக்கத்தையே குந்தகப்படுத்துகின்ற நிலையாகும். அப்படி அவர் வலியுறுத்துவதை நீங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கவில்லை என்று சொன்னால் நாங்கள் வெளிநடப்புச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம், நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா? அவர் A.D.M.K.-காரர் என்பதை நிரூபிப்பதற்கு பொறுப்பேற்றுக்கொள்கிறீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) அவர் A.D.M.K.-காரர் (குறுக்கீடுகள்) என்பதை நீங்கள் prove பண்ணுவதற்கு பொறுப்பேற்றுக்கொள்கிறீர்கள்

அல்லவா? (குறுக்கீடுகள்) பொறுப்பேற்றுக்கொள்கிறாரா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். கொறடா இருக்கிறார், துணைத் தலைவர் இருக்கிறார், ஏன் எல்லோரும் சேர்ந்து நிற்கிறீர்கள்?

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) விருதுநகர் மாவட்டம், சங்கரலிங்கபுரத்திலே, தேவர் சிலை உடைப்புச் சம்பவத்தில் அந்த ஊர் நாட்டாண்மை, அதிலே அவருடைய மகன் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அண்ணா தி.மு.க.வைச் சார்ந்தவர்தான் அந்த ஊர் நாட்டாண்மை. (கூச்சல்-குழப்பம்) இல்லையென்று அ.தி.மு.க. சார்பில் மறுப்பதற்கான ஆதாரம் இருந்தால் அவர்கள் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்ற ஒரு சர்ச்சை, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழக முதலமைச்சராக இருந்தபோது இந்த அவையிலே உருவாயிற்று. அன்றைக்கு அமைச்சராக இருந்த, மறைந்த நண்பர் குழந்தைவேலு அவர்கள், என்மீது ஒரு அவதூறு குற்றச்சாட்டைக் கூறினார்.

அந்தக் குற்றச்சாட்டு, தேனி மாவட்டம், முத்துதேவன்பட்டியில், நிலத்தை,—நம்முடைய நண்பர் இராமகிருஷ்ணனுடைய—இப்போது ம.தி.மு.க.வில் இருக்கிறாரே அந்த இராமகிருஷ்ணனுடைய நிலத்தை, நான் வாங்கி, என் மகன் அழகிரிக்கு எழுதிக் கொடுத்துவிட்டேன் என்று சொன்னார். எந்த நேரம் என்றால், பெரியகுளம் இடைத்தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் கூட்டங்களிலும் சொன்னார். அதோடுவிடாமல், அந்தத் தேர்தலிலே வெற்றி, தோல்வி என்பதில், தோல்வியை நாங்கள் கண்டு, வெற்றியை அவர்கள் பெற்று, பின்னர் சட்டப் பேரவையிலே அமர்ந்திருந்தபோது, அதையே திருப்பிச் சொன்னார். "நான், கருணாநிதி முத்துதேவன்பட்டியிலே நிலம் வாங்கியதை நிரூபித்துக் காட்டுவேன்" என்று சொன்னார். அப்போது எதிர்த் தரப்பு வரிசையிலே அமர்ந்திருந்த தம்பி துரைமுருகன் அவர்கள் எழுந்து 'நிரூபிக்க முடியுமா' என்று கேட்டார். இப்போது நடைபெறுகின்ற இதேமாதிரி, கூச்சல்-குழப்பம் எல்லாம் இங்கே நடைபெற்றது. நான், எதிர்த்

தரப்பிலே எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களும், அதைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில் குழந்தைவேலு சொன்னார், 'துரைமுருகன் இப்படித் துள்ளுகிறாரே? அவருடைய தலைவர் கருணாநிதி, வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாலே, அது உண்மை என்று தெரிகிறதல்லவா' என்றார். நான் உடனே எழுந்து 'வீணாக என்னை வம்புக்கு இழுக்காதீர்கள்; நீங்கள் ஆதாரம் இருந்தால் கொடுங்கள், நான், முதலமைச்சர் எம்.ஜி.ஆர். என்ன சொல்கிறாரோ அதற்குக் கட்டுப்படுகிறேன், நாளைக்கே அந்த ஆதாரத்தை நீங்கள் கொடுத்தால், நான் இந்தப் பதவியிலிருந்து, ஏன் அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறேன்' என்று சொன்னேன். 'நீங்கள் இந்தப் பதவியிலிருந்தாவது ஓய்வு பெறுகிறீர்களா' என்று கேட்டபோது அந்தச் சவாலை அமைச்சர் குழந்தைவேலு ஏற்றுக்கொண்டார். அப்போது இராசாராம் அவர்கள் அவைத் தலைவர். மறு நாளிலிருந்து தினம், தினம் எழுந்து 'ஆதாரம் கொண்டு வந்தீர்களா', 'ஆதாரம் கொண்டு வந்தீர்களா', என்று கேட்டுக்கொண்டே இருந்தேன். 'நாளைக்கு', 'நாளைக்கு' என்று சொல்லிக் கொண்டிருந்தார். எம்.ஜி.ஆர். அவர்களும் அவரை நம்பி 'நாளைக்குத் தருவதாகச் சொல்கிறாரே, எதிர்க்கட்சித் தலைவர் பொறுமையாக இருங்கள்' என்று சொன்னார். எங்களுக்குள்ள நட்பிலே ஏற்பட்ட நம்பிக்கையின் காரணமாக அவர் சொல்வதை நம்பி நான் இருந்தேன். கடைசியாக ஆதாரத்தைக் கொண்டுவந்து கொடுத்தார். அதை நம்முடைய, அன்றைய அவைத் தலைவர் அவர்கள், இராசாராம் அவர்கள் வாங்கிப் பார்த்தார். வாங்கிப் பார்த்துவிட்டு, இங்கிருந்த எல்லாக் கட்சித் தலைவர்களையும் தன்னுடைய அறைக்கு அழைத்து அந்த ஆதாரத்தைக் காண்பித்தார். ஆனால், அது உண்மையான ஆதாரம் இல்லை. போர்ஜரி கையெழுத்துப் போட்டு—நான் கையெழுத்துப் போட்டதைப் போல, என் மகன் அழகிரி கையெழுத்துப் போட்டதைப் போல, ஒரு போர்ஜரி பத்திரத்தை அவர் காண்பித்தார்.

முற்பகல் 11-50

இதைக் கண்டுபிடித்த இராசாராம் அவர்கள் "நீங்கள் சொல்வது தவறு, கருணாநிதி அன்றைக்கு மறுத்ததுதான் சரி. ஆகவே, என்னுடைய தீர்ப்பு அவருக்குச் சாதகமாக வழங்கப்படுகிறது" என்று இங்கே குறிப்பிட்டார். இது அன்றைக்கு நடந்தது. அதிலிருந்து நாளும் பார்த்தேன், அவர் ராஜிநாமாச் செய்கிறாரா, ராஜிநாமாச் செய்கிறாரா

என்று நான் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே கேட்டேன், என்ன, எப்போது ராஜிநாமா உங்கள் மந்திரி என்று. வழக்கம் போல அவர் ஜாடை காட்டுவாரே வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருங்கள் என்று. அப்படிச் சொன்னார். நானும் சும்மா இருந்துவிட்டேன் எம்.ஜி.ஆர். சொல்கிறாரே என்பதற்காக. அது அப்பொழுது நடந்தது. இப்பொழுது நடப்பதாக இருந்தால் நாளைக்கே நம்முடைய சிவபுண்ணியம் அவர்களும், நம்முடைய செங்கோட்டையன் அவர்களும் இதைச் சவாலாக எடுத்துக்கொண்டு யாராவது நிரூபிக்கலாம். நிரூபிக்கத் தவறினால் அதற்கு என்ன தண்டனை என்பதை இந்த அவையிலே நாமே தீர்மானமாகக் கொண்டு வரலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது யார் வேண்டுமானாலும் நிரூபிக்கலாம் என்று சொன்னார். பொறுப்பு யாருக்கு இருக்கிறது? காவல் துறையிலா அல்லது எங்களிடத்திலா இருக்கிறது? காவல் துறை வழக்கு பதிவு செய்திருக்கிறது. யார் குற்றம் செய்தார்கள் என்று பதிவேட்டிலே இருக்கிறது. அது யார் என்பதை நீங்கள் வெளிப்படுத்தலாமே தவிர எதற்கோ ஒப்பிட்டு இந்தக் கதைகளை நீங்கள் சொல்லக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. செங்கோட்டையன் அவர்களைப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். அடிக்கடி எழுந்து இப்படி சவால் விடுகிறீர்கள். உண்மையிலேயே சரக்கு இருந்தால் சவால் விடு, இல்லையென்றால் சலாம் போட்டு ஓடிவிடு. (குறுக்கீடுகள்)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது நான் சொன்னது (குறுக்கீடு) இல்லை. சவால் போட்டுவிட்டெல்லாம் ஓடுவதற்கு—இந்தச் செங்கோட்டையன் அண்ணா தி.மு.க.-வில் இருப்பவன், என்றைக்குமே சவாலைச் சந்திக்கக்கூடியவன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இதிலே நீங்கள் யார் என்பதை நிரூபிக்க வேண்டும் என்று சொன்னாரே தவிர காவல் துறை அதன்மீது வழக்குப் போட்டிருக்கிறது. நீங்கள் முதலிலே அதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு முன்னாலே குழந்தைவேலு அவர்கள் குறிப்பிட்டது வேறு. இது வேறு. காவல் துறை முதலமைச்சர் கையிலே இருக்கிற ஒரு துறை. இந்தத் துறையில் யாரால் அந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது என்று காவல் துறையால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் ஒரே நிமிடத்தில் வேண்டுமென்றால் யார் அதைச் செய்திருக்கிறார்கள் என்பதை நிரூபிக்க முடியுமே தவிர அதை விட்டுவிட்டு சவால் விடுவதாக இருந்தால் சவால் விடுங்கள். இல்லையென்றால் சவாரி விடுங்கள் என்றெல்லாம் ஓர் அமைச்சர் பேசுவது அழகாக இருக்காது. ஓர் எதிர்க்கட்சியைப் பார்த்து சொல்வது (குறுக்கீடு) நானும் அதைச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டதற்கு அவர் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு மன்றத்தில் ஓர் உறுப்பினர், ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால் அந்தக் குற்றச்சாட்டுக்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா என்று மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் கேட்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொன்னால் அதை அத்தோடு விடுவதுதான் முறை. அதற்கு மேலே தாங்கள்தான் நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர அவைக்குறிப்பிலிருந்து எடுப்பது அல்ல. சொல்கிற உறுப்பினர் நான் பொறுப்பேற்கிறேன் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுதான் முறை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

[2008 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் முதலமைச்சர் பதில் சொல்லவேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சிவபுண்ணியம் அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்வதாக இந்த அவையிலே சொல்லியிருக்கிறார். நாளைக்கு அதை என்னிடத்திலே கொண்டு வந்து உண்மை என்று காட்டினால் அதை நான் அவைக்கு அறிவிக்கிறேன். இல்லையென்றால் அதையும் அவைக்கு அறிவிக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பன்னீர்செல்வம், நீங்கள், மற்றவற்றையெல்லாம் விடுங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) இந்த விவரம் குறித்து, இந்த சப்ஜெக்ட் குறித்து மட்டும் பேச வேண்டும். சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அப்போதுகூட அவர்கள் சொன்ன குற்றச்சாட்டு அவைக்குறிப்பிலிருந்து எடுக்கப்படவில்லை. அது அப்படியே இருந்தது. விசாரணை தனியாக இருந்தது. ஆகையால் விசாரணைக்காக, நிரூபிப்பதற்காக சொல்லப்பட்ட குற்றச்சாட்டை அன்றைக்கு நீக்கவில்லை. அது செங்கோட்டையனுக்கும் தெரியும். அது அப்படியே இருந்தது. பத்திரிகையிலே வந்தது. நித்தம், நித்தம் கலைஞர் எழுந்திருந்து கேட்டதும் வந்தது. அதற்குப் பிறகு நிலைமையை சபாநாயகர் ஆராய்ந்தார். ஆகையால், இதை அதுவரையில் எடுக்கத் தேவையில்லை. இருக்கட்டும். இரண்டு பேரும் மாண்புமிகு முதல்வரிடம் சென்று தெரிவித்தால் பிறகு அவர் தீர்ப்பு சொல்வார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பன்னீர்செல்வம், இப்போது நீங்கள் மீண்டும், மீண்டும் எழுந்திருந்து நிற்பதைப் பார்த்தால்தான் சந்தேகம் வருகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

முற்பகல் 11-55

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் நடந்த தேவர் திருமகன் சிலை அவமதிப்பு குறித்து, நேற்றைய தினம் கேட்டோம், எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று, 'நாளை எடுத்துக்கொள்ளலாம், அரசின் சார்பாக பதில் வரவில்லை' என்று சொன்னீர்கள். நாங்கள் அமைதியாக உட்கார்ந்துகொண்டோம். இன்று மறுபடியும் காலையில் எழுந்து

2008 ஏப்ரல் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கேட்டோம். அனைத்துக் கட்சியின் சார்பாக ஒருவர் பேசுங்கள், நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொன்னீர்கள். சரி, அதற்குப் பின்னால் அனுமதி கொடுத்தீர்கள். அனுமதி கொடுத்து, எங்கள் உறுப்பினர் பேசினார், அதில் எந்தவிதமான ஆட்சேபணையான பிரச்சினையும் இல்லை. தந்தை பெரியார் சிலை பிரச்சினையைப் பற்றிச் சொன்னார். (குறுக்கீடு) பேசி முடித்துவிடுகிறேன், நீங்கள் பிறகு பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: உங்களுடைய உறுப்பினர், எடுத்தவுடனே பிரச்சினையைப் பேசவில்லை. ** ஆனாலும் அப்போது நாங்கள் அமைதி காத்தோம். அது ஞாபகம் இல்லையா? ஆனால், திருப்பி எங்களால் சொல்ல முடியும். சிலையைத் திருடுவது, தூக்கி எறிவது இதெல்லாம் எங்களுடைய கலாச்சாரம் அல்ல.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: என்ன குற்றச்சாட்டு சொன்னாலும் அரசின் சார்பாக மறுப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. நேரம் இருக்கிறது. அனைத்தும் இருக்கின்றது. ஆனால், அதற்குப் பின்னாலே நடந்த நிகழ்வுகளைப் பார்க்க வேண்டும். சட்டப் பேரவைத் தலைவர் என்ற முறையில் அனைத்து உறுப்பினர்களும்—நன்றாக, உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். அனைத்துக் கட்சியின் சார்பிலும் பேச வைக்கப்பட்டது. அதிலும் இதற்கு முன்னால் நடைபெறாத நடைமுறையாக ஆளுங்கட்சியில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினரைக்கூட இங்கே பேச வைத்தீர்கள். பரவாயில்லை. அனைத்து உறுப்பினர்களும் பேசிய உள்நோக்கம்—இந்தப் பிரச்சினையை, முக்கியமான பிரச்சினையை. எதிர்காலத்தில் எந்தத் தலைவருக்கும் வரக்கூடாது என்ற நிலை உருவாக வேண்டும் என்ற நிலையைத்தான் நாம் இன்றைக்கு எடுக்கவேண்டும். அரசும் அந்தப் பதிலைத்தான் தரவேண்டும். தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால், அனைத்து உறுப்பினர்களும் பேசியது, ஏற்கெனவே பேசி வைத்துக்கொண்டு, தவறாக இதை ஒரு விவாதப் பொருளாக கொச்சைப்படுத்துகின்ற வகையில் மிகவும் வருத்தப்படக்கூடிய இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி காணாமல், எங்கள்மீது குற்றச்சாட்டு சொல்வதும், அவர்கள்மீது குற்றச்சாட்டு சொல்வதும் என்று, இந்தச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்

சபை இன்றைக்கு நடந்த நடைமுறை உண்மையிலேயே ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று, என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள், பிரச்சினை முடிந்தது. (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், மாண்புமிகு முதல்வர் பதில் சொல்கிறார். உட்காருங்கள் எல்லோரும். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு முதல்வர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள், இல்லை, இல்லை. எல்லோரும் உட்காருங்கள், (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள். உட்காருங்கள். உட்காருங்கள் தயவுசெய்து. (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், சொல்லுங்கள். சொல்லுங்கள், என்னவென்று?

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. உண்மை நிலையைச் சொல்கிறபோது கொஞ்சம் சுடத்தான் செய்யும். நான் சொல்வது, சங்கரலிங்கபுரம் கிராமத்தில், தேவருடைய சிலை உடைக்கப்பட்டதிலே அந்த ஊர் நாட்டாண்மையாக இருக்கிற வேல்முருகன் என்பவருடைய தம்பி மணிமுத்து என்பவர் அந்த சிலை உடைப்பிலே ஈடுபட்டு இருக்கிறார். நாட்டாண்மையினுடைய தம்பி. நான் பெயரையும் பதிவு செய்கிறேன். அவர் அந்த ஊரிலே அ.தி.மு.க.காரர். இதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லி பதிவு செய்ய விரும்புகிறேன். அதிமுககாரர் என்பது அந்த ஊரறிந்த, அந்தப் பகுதியறிந்த உண்மைச் செய்தி. இதை மறுக்க முடியாது. இதைச் சொல்கிறபோது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொல்வது உண்மையா, அதை . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சந்திரா, உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அதை எதிர்க்கட்சியினர் மறுத்துரைப்பது உண்மையா (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம் சொன்ன புகார் அல்லது குற்றச்சாட்டு உண்மையா, அல்லது எதிர்க்கட்சித்

துணைத் தலைவர் அல்லது கொறடா, திரு. செங்கோட்டையன் இருவரும் சொன்னது உண்மையா என்பதை நாளையதினம் அவர்களே என்னிடத்திலே ஆதாரத்தோடு தருவார்கள். அதை இந்த அவைக்கு நான் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) நாளைக்கு அவர் கொண்டுவந்து கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அவர் கொடுக்கிறாரா இல்லையா என்பதைப் பார்த்துவிட்டு முதல்வர் நாளைக்கு பதில் சொல்கிறேன் என்றிருக்கிறார். இதைவிட வேறு என்ன வேண்டும்? நாளைக்கு அவர் கொண்டுவந்து கொடுப்பதைப் பார்த்துவிட்டு பிறகு பேசுவோம். உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பதில் கொடுத்ததற்குப் பிறகு பேசுங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு ஒரு ஆவல். எல்லோரும் பேசியாகி விட்டது. இதற்கு முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டாமா என்பது. அந்தப் பதிலை அவர் கேட்க விரும்புவது என் பாக்கியம். அவருக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சியிலே உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும், ஆளுங்கட்சியிலே உள்ள உறுப்பினர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வது முத்துராமலிங்கத் தேவர் இன்றைக்கு சிலை வடிவத்திலே இருக்கிறார் என்றாலும், அவர் ஒரு காலத்திலே பெருந்தலைவர் காமராஜரை உருவாக்கியவர் என்கின்ற அளவுக்கு தேசிய இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர். பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கும், முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும் இடையிலே சில அரசியல் மாறுபாடுகள் ஏற்பட்டாலுங்கூட அதன்காரணமாக தேவர் அவர்கள் சில சங்கடங்களை அனுபவிக்க நேர்ந்தாலுங்கூட அவரிடத்திலே பெருந்தலைவர் காமராஜர் கொண்ட அன்பு, பாசம், வைத்த மரியாதை எள்ளளவும் குறைந்தது கிடையாது. இவற்றுக்கெல்லாம் மேலாக, இன்னும்சொல்லப்போனால், தேவர் அவர்களிடத்தில், தேவர் திருமகனாரிடத்தில் பேரறிஞர் அண்ணா கொண்டிருந்த அன்பு, அவர்களிடத்தில் அண்ணா வைத்திருந்த மதிப்பு, மரியாதை மிக அதிகம். அவர்களிடத்திலே என்னைப் போன்றவர்கள் பழகி அறிந்தது, அந்த அளவுக்கு பெரும் புகழும்

பெற்றிருந்தும்கூட அவர் காட்டிய எளிமை, அவர் பெற்றிருந்த தொண்டுள்ளம், தியாக மனப்பான்மை, இங்கே நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப்போல கொடைத் தன்மை, தனக்கு என்று எதையும் வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் ஏழையெளியவர்களுக்கு, சாதாரண மக்களுக்கு, சாமானிய மக்களுக்கு, எடுத்து வாரி இறைப்பதிலே வள்ளலாகத் திகழ்ந்தார். வள்ளல்களுக்கும் மேலாகவே திகழ்ந்தார். அவருடைய மறைவு இந்த மாநிலத்தையே உலுக்கியது. இந்தியத் திருநாட்டையே உலுக்கியது என்று சொல்லலாம். அவர் மறையும் வரையில் தமிழகத்திலே, அதுவும் தென் பகுதியிலே, நடைபெற்ற தேர்தல்கள் அனைத்திலும் அவர் வீடுவீடாகச் சென்று வாக்கு கேட்டு வெற்றி பெற்றார் என்ற வரலாறு இல்லை. தனக்கு வாக்கு அளிக்குமாறு கேட்கச் சொல்லி ஆட்களை அனுப்புவார். மக்களும் வாக்களித்தார்கள். இப்படி வீட்டுக்குள்ளேயிருந்து ஓட்டுபெற்ற ஒரே ஒரு தலைவர் முத்துராமலிங்கத் தேவர்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட தலைவரை இந்தியத் திருநாடு இன்னும் சில நாட்கள் வைத்துப் பாதுகாக்கமுடியாத நிலையில் இழந்தது நாம் பெற்ற நற்பேறு என்று சொல்ல மாட்டேன், அவப்பேறு; அவரைக் காப்பாற்ற முடியாத, அவரை நீண்டகாலம் வாழ வைக்கமுடியாத அந்தச் சூழல் தமிழகத்திற்கு ஏற்பட்டது என்றாலுங்கூட அவர் மறைந்த பிறகு இன்றைக்கு தமிழகத்திலே அவருடைய உருவச் சிலை இல்லாத சிற்றூர், பேரூர், நகரம், பட்டிதொட்டி எதுவும் இல்லை. அந்த அளவிற்கு அவருடைய சிலைகள் பரவி இருக்கின்ற காட்சியைக் காணுகின்றோம்.

பிற்பகல் 12-05

அப்படிப் பல்லாயிரக்கணக்கான சிலைகள் தமிழகத்திலே அமைந்திருக்கின்ற காரணத்தினால்தான், விளையாட்டுத்தனமாகக் கூட சிறுவர்கள், பைத்தியக்காரர்கள், அந்தச் சிலையினுடைய மகத்துவம் தெரியாதவர்கள், அந்தத் தலைவருடைய பெருமையை உணராதவர்கள், ஏதோ அதைக் களங்கப்படுத்தக்கூடிய அசிங்கப்படுத்துகின்ற காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். அப்படி ஈடுபட்டவர்களிலே ஒரு பைத்தியக்காரன் மதுரையில் நாம் வைத்த அந்தப் பிரம்மாண்டமான சிலையை—திரு. பன்னீர்செல்வம் அவர்கள், அதை மூக்கையா தேவர் அல்லவா வைத்தார் என்று சொன்னார். மூக்கையா தேவர் திரும்பி வந்து யார் வைத்தார் என்று சொல்லப் போவதில்லை. அதை எல்லாம் விசாரிக்கவேண்டிய அவசியமும்

இல்லை—அது ஃபார்வர்டு பிளாக் கட்சியில் உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தச் சிலையை வைத்தது மாத்திரமல்ல, 3, 4 கல்லூரிகள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, முக்குலத்தோர் மக்களுக்காக, தேவர் பெயரால் அமைத்ததும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எல்லோரும் அறிவார்கள். அத்தகைய அன்பும், மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்த அந்தச் சிலைக்குரியவர் அவமானப்படுத்தப்பட்டார். அந்தச் சிலையை அவமானப்படுத்த ஒரு பைத்தியக்காரன் முயன்றான் என்பதுதான் நமக்குள்ள வேதனை. இனி அப்படிப்பட்ட வேதனையான நிகழ்ச்சிகள் நடைபெறாமல் பாதுகாக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கும் என்பதையும், மதுரையிலே உள்ள அந்தப் பெரிய சிலையைப் பொறுத்தவரையில் தினம் இரண்டு அல்லது மூன்று போலீசார் அந்த இடத்திலேயே காவல் காத்துக்கொண்டிருப்பார்கள். அங்கே யாரும் நெருங்க முடியாமல் அந்தச் சிலையைப் பாதுகாப்பார்கள் என்ற உறுதியையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிலையைப் பற்றி, அதற்கு ஏற்பட்ட களங்கத்தைப் பற்றிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், எதிர்க்கட்சிகள் உட்பட, தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்கள் உட்பட அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன்.

4. கவன ஈர்ப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

***திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு சரிவர பணம் பட்டுவாடா செய்யாதது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[2008 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

திருவண்ணாமலை மாவட்டத்தில் 651 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இச்சங்கங்களைச் சார்ந்த 52,029 உறுப்பினர்கள்மூலம் நாளொன்றுக்குச் சராசரியாக 1,72,125 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் செயல்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உபரி நிதி வசதி உள்ள 170 சங்கங்கள் 21,973 உறுப்பினர்களுக்கு 31-3-2008 தேதிவரை நிலுவையின்றி பால் பணம் பட்டுவாடா செய்துள்ளன. மீதமுள்ள 481 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் வழங்கும் 30,056 உறுப்பினர்களுக்கு வேலூர் ஒன்றியத்திலிருந்து பால் பணம் பெறப்பட்டு 21-3-2008 தேதிவரை பால் பணம் நிலுவையின்றிப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. சங்கத்திற்கு பால் வழங்கிய அங்கத்தினர்களுக்கு உடனுக்குடன் பால் பணம் பட்டுவாடா செய்ய தக்க நடவடிக்கைகள் ஒன்றியத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் போதிய விவரங்கள் அளிக்கப்படவில்லை. 27-4-2007 அன்று இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள், பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவையின்றி பால் பணம் பட்டுவாடா செய்ய ஒன்றியத்திற்கு உதவப்படும் என்றும், நலிவடைந்த ஒன்றியங்களை நிதியிழப்பிலிருந்து தடுக்க உதவப்படும் என்றும், அதேபோல சங்கங்கள் இலாபத்தில் இயங்குவதற்கும், பால் பணம் பட்டுவாடா குறித்த காலத்தில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்கள். தற்போது நிர்வாகக் குறைபாடுகள் காரணமாக பால் உற்பத்தியாளர்களுக்கு 4 முதல் 6 வார காலப் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் காலதாமதமாக வழங்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்யப்பட்ட

2008 ஏப்ரல் 23] [திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

தினத்திலிருந்து எத்தனை நாட்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது? தற்போது கொள்முதல் செய்யப்படும் பாலில் கொழுப்புச் சத்து 4.3 சதவிகிதமும், இதர சத்து 8.2 சதவிகிதமும் இருந்தால் ரூபாய் 12 வழங்கப்படுகிறது. அதேபோல, இதர சத்து 7.9 சதவிகிதம் இருந்தால் பாலுக்கு 50 காசும், 7.8 சதவிகிதம் உள்ள பாலுக்கு 75 காசும், 7.7 சதவிகிதம் உள்ள பாலுக்கு ஒரு ரூபாயும் பிடித்தம் செய்யப்படுகிறது. இதர சத்து 7.6 சதவிகிதத்திற்குக் குறைவாக வருகின்ற பாலை நிர்வாகம் தரமற்ற பால் என்று சொல்லி பறிமுதல் செய்துவிடுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் தினசரி 3,000 முதல் 4,000 லிட்டர் பாலைத் தரமற்ற பால் என்று கூறிப் பறிமுதல் செய்துவிடுகிறார்கள். அப்படிப் பறிமுதல் செய்யப்படுகின்ற பாலை நிர்வாகம் பால் உற்பத்தியாளர்களுக்குத் திருப்பி வழங்குவதில்லை. (மணியடிக்கப்பெற்றது) அதே சமயம் அந்தப் பாலுக்குரிய பணத்தை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு கேள்விகளை மாத்திரம்தான் நீங்கள் கேட்கவேண்டும்.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: பணம் கொடுக்காததைப் பற்றித்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், இரண்டு கேள்விகளை மாத்திரம்தான் கேட்கவேண்டும்.

பிற்பகல் 12-10

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: பறிமுதல் செய்யப்படுகின்ற பாலுக்கு உரிய பணத்தை பால் உற்பத்தி செய்கின்றவர்களுக்கு வழங்குவதில்லை. ஆனால், தரமற்ற பால் என்று கூறி நிர்வாகத்தால் பறிமுதல் செய்யப்படுகின்ற பாலை நிர்வாகமே நுகர்வோர்களுக்கு நல்ல விலையில் இலாபத்தில் விற்றுவிடுகிறது. அரசு உடனடியாக உரிய கவனம் செலுத்தி, இதரச் சத்து 7.6 சதவிகிதத்திற்குக் குறைவாக உள்ள கொள்முதல் செய்யப்பட்ட பாலை உற்பத்தியாளர்களுக்கே திருப்பித்தரவேண்டும் என்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு கேள்விகள் மட்டும்தான் கேட்கவேண்டும் என்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவன ஈர்ப்புத்

தீர்மானத்திற்கு மாறாக வெவ்வேறு தகவல்களைத் தருகிறார்கள். பாலினை வெளியில் விற்பதாகச் சொல்கிறார். தவறான தகவல்களைத் தருகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இரண்டு கேள்விகள் மட்டும்தான் கேட்கவேண்டும் என்று இருக்கிறது. அதாவது, அவர் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் இரண்டு கேள்விகளை மட்டும் கேளுங்கள்.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: கொள்முதல் செய்யப்படுகின்ற பாலினைத் தரமற்ற பால் என்று சொல்லி நிர்வாகம் எடுத்துக்கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய பணத்தை வழங்கவில்லை என்பதுதான் உண்மை. அந்தக் குற்றச்சாட்டைத்தான் நான் இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன். அப்படிக் சிறு உற்பத்தி செய்பவர்களுக்கு உரிய பணம் வழங்காத காரணத்தினால்தான் எங்களது மாவட்டத்திலே தனியார்கள் பாலைக் கொள்முதல் செய்து அதிக விலைக்கு விற்கிறார்கள். இதே நிலைமை தமிழகம் முழுவதும் இருக்கிறது. குறிப்பாக திருப்பூர், பொங்கலூர், திருவண்ணாமலை போன்ற பகுதிகளில் தனியார் விற்பனை செய்கின்ற பாலில் கலப்படம் இருப்பதாக நான் இந்த அவையிலே கடுமையாக குற்றஞ்சாட்டி அதற்கு இந்த அவை நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் 651 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இச்சங்கங்களைச் சார்ந்த 52,029 உறுப்பினர்களிடமிருந்து நாள் ஒன்றுக்கு சராசரியாக 1,72,125 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் செயல்படும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உபரி நிதி வசதியுள்ள 170 சங்கங்கள் 21,973 உறுப்பினர்களுக்கு 31-3-2008 ஆம் தேதிவரை நிலுவையின்றி பால் பணம் பட்டுவாடா செய்துள்ளன. மீதம் உள்ள 481 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் வழங்கும் 30,056 உறுப்பினர்களுக்கு வேலூர் ஒன்றியத்திலிருந்து பால் பணம் பெறப்பட்டு 21-3-2008 ஆம் தேதி வரை பால் பணம் நிலுவையின்றிப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. சங்கத்திற்கு பால் வழங்கிய அங்கத்தினர்களுக்கு உடனுக்குடன் பால் பணம் பட்டுவாடா செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மற்றபடி நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் தரமற்ற பால் என்று சொல்லி, பின்னர் அதைத் தரமான பால் என்று விற்க முடியாது. பாலினை பொறுத்த அளவில் கொள்முதல் செய்கிற நேரத்திலிருந்து அல்லது கறக்கப்படும் நேரத்திலிருந்து 1/2 மணி நேரத்திலிருந்து ஒரு மணி நேரத்திற்குள் Bulk Milk Cooler-க்கு கொண்டுவரப்பட்டு குளிரூட்டப்பட்டுதான் விற்பனை செய்யப்படுகிறது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தருகிறார். கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு சம்பந்தம் இல்லாத கேள்வியைத் தொடுக்கிறார். தனியாக இதற்கென்று ஒரு கேள்வியைக் கொடுத்தால் சரியான பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொறுங்கள். நீங்கள் கொஞ்சம் ஒதுங்கி நில்லுங்கள். திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் என்ன இருக்கிறதோ அதையேதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் இங்கே படித்துக்காட்டினார்கள். நான் கேட்ட கேள்வி பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்யப்பட்ட தினத்திலிருந்து எத்தனை நாட்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது என்றும், 7.6 சதவிகிதத்திற்குக் குறைவாக இதரச் சத்துள்ள பாலை கொள்முதல் செய்கின்றபோது தரமற்ற பால் என்று நிர்வாகத்தால் மறுக்கப்படுகின்றபோது அந்தப் பால் ஏன் திருப்பி பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை அல்லது அவர்களுக்கு உரிய பணம் ஏன் வழங்கப்படுவதில்லை என்று கேட்கிறேன். இந்தக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பதில் சொல்லவேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் 15 நாட்களுக்கு ஒரு முறை அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறை பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. அவருடைய திருவண்ணாமலை மாவட்டத்தை பொறுத்த அளவில் கடந்த 15-4-2008 ஆம் தேதி வரை பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை

[திரு. உ. மதிவாணன்] [2008 ஏப்ரல் 23

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் யூனியனில் உள்ள திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் இந்த மாவட்டங்களைத் தவிர தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பணப் பட்டுவாடா செய்யப்பட்டு உற்பத்தியாளர்களுக்கு பாக்கியே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.154,30,92,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 19, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 231, திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9055, திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13582, திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 14481, திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10672, திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1145, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1997, திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10730, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13235, திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5329, திரு. வீ.ஏ.டி. கலியவரதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6205, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6473, திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9565, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9873, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11172, திரு. கே.எல். இளவழகன்.

திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11910, திரு. இ.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12097, திரு. கே.வி. ராமநாதன்.

திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 14426, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14670, திரு. த.அ. மேகநாதன்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 16190, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15689, திரு. சி. கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15953, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1473, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1745, திரு. எஸ். ராஜகுமார்.

திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1805, திரு. மு. பரஞ்ஜோதி.

திரு. மு. பரஞ்ஜோதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீரங்கம் தொகுதி, அந்தநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1822, திரு. போ. சின்னப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1884, திரு. தா. மலரவன்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை அரசு மருத்துவமனையில் மழைக்காலத்தில் தண்ணீர் தேங்கிவிடுகிறது. இதனால் மருத்துவமனையிலேயே சுகாதாரம் இல்லாமல் போகிறது. இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2302, திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் தொகுதி அரசு மருத்துவமனையில் உள்ள பிணவறைக்குக் குளிர்சாதன வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2397, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2986, திரு. சு. செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3149, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3534, திரு. இரா. இராம்பிரபு.

திரு. இரா. இராம்பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி நகராட்சி, எமனேஸ்வரம் பகுதியில் அரசு மகப்பேறு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4062, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் அரசு மருத்துவக் கல்லூரியில் ஜி.ஓ. போட்ட 2000 ஆம் ஆண்டிலிருந்து மாணவர் சேர்க்கைக்கு முன்பு டிஎம்எஸ். சைடிலிருந்து

டி.எம்.இ. சைடுக்கு மாற்றம் செய்யப்பட்டு தொடர்ந்து பணியாற்றிவரும் மருத்துவர்களின் பணிக் காலத்தைக் கணக்கில் எடுத்து அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4900, திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் இருதயப் பிரிவு, நரம்பியல் பிரிவு, கேன்சர் பிரிவு போன்ற துறைகளை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5047, திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5181, திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், மாகால் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6743, திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து ஒன்றியங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி மையங்களை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைமூலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6801, திரு. இரா. குமரகுரு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7324, திருமதி எஸ். தேன்மொழி.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில் பொது மருத்துவமனைக்கு படுக்கை வசதியை கூடுதல் எண்ணிக்கையாக அதிகரித்து கூடுதல் கட்டட வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7483, திருமதி ராணி வெங்கடேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7836, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை சிறப்பு மருத்துவரை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8868, திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனை அருகில் டி.பி. நோயால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு தனியாகக் கட்டியுள்ள மருத்துவமனையில் டி.பி. (ஆஸ்துமா) நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பது பற்றியும், டி.பி. நோயாளிகளுக்கென கட்டப்பட்ட மருத்துவமனையைத் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9106, திரு. இரா. துரைக்கண்ணு.

திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதி, அய்யம்பேட்டை பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டவும், மருத்துவர் தங்கும் இல்லம் கட்டவும், கூடுதல்

தலைமை இருப்பிட மருத்துவரை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9199, திரு. மா. தண்டபாணி.

திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்ட மருத்துவமனைக்கு அதிகமான மருத்துவர்களையும், செவிலியர்களையும், உதவியாளர்களையும் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9253, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதி, திருச்செந்தூரில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10071, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

திரு. ல. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதியில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர், செவிலியர், சுகாதாரப் பணியாளர் பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10320, திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்த வைத்தியப் பிரிவு தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10397, திரு. வே. மாரிமுத்து, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10507, திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் அரசு பொது மருத்துவமனையில் மருந்து வழங்கும் பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. போதிய பணியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10904, திரு. பெ. கண்ணன்.

திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11236, திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு அவர்களின் நலன் கருதி மறுவாழ்வு உதவி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11740, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11829, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதி, வேலூர் அரசு பொது மருத்துவமனையில் நிரந்தரமாக கண் மருத்துவரையும், பல் மருத்துவரையும், மகப்பேறு மருத்துவரையும் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 12472, திரு. ராம. சுப்புராம்.

திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் தொகுதி, பொன்னமராவதி ஒன்றியம், காரையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கூடுதலாக 30 படுக்கை வசதி கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 12741, திரு. தி. இராமசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12768, திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வேப்பூர் ஊராட்சியில் செவிலியர் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13088, திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி மாவட்ட மருத்துவமனையாகச் செயல்படவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13150, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13422, திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் அரசு மருத்துவமனையில், தீக்காயத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்குத் தனியாக மருத்துவ விடுதி அமைத்து சிறப்பு சிகிச்சை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13631, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆலத்தம்பாடி அரசு மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்களைப் பணி அமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13685, திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை அரசு மருத்துவமனையின் பொது மருத்துவம், பொது அவசர சிகிச்சை, குழந்தைகள் நலப் பிரிவு, கண் பிரிவு, மகப்பேறு

பிரிவு, நுண்கதிர் பிரிவு, காது, மூக்கு, தொண்டைப் பிரிவு ஆகியவற்றைத் தரம் உயர்த்தியது போன்று மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையிலும் மேம்படுத்தி உரிய கருவிகள் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13742, திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளியில் இயங்கிக் கொண்டிருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 30 படுக்கை வசதி கொண்ட கட்டடமாக கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13772, திரு. எஸ். ஜான் ஜேக்கப்.

திரு. எஸ். ஜான் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டட வசதி இல்லாமல் இருக்கிறது. புதிய கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13780, திரு. மா. ராஜசேகரன்.

திரு. மா. ராஜசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொட்டியம் தொகுதி, அரசு பொது மருத்துவமனைக்கு புதிய வளாகம் வழங்கி பிண அறை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13879, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14272, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14361, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, குழித்துறை அரசு தாலுகா மருத்துவமனையை சீமங் (Cemonc) மையமாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 14461, திருமதி பி. பத்மாவதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14924, திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் செயல்படும் கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில்

புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 14954, திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டையில் உள்ள அரசு மருத்துவமனையில் நரம்பியல் நிபுணர் மற்றும் சிறுநீரக மருத்துவர் போன்ற சிறப்பு மருத்துவத் துறை மருத்துவர்களை நியமிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 15007, திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "10 கி.மீ.-க்கு மேல் இடைவெளி மற்றும் 30,000 மக்கள்தொகை கொண்ட கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் என்கின்ற நிலையை மாற்றி 5 கி.மீ. இடைவெளி அல்லது 15,000 மக்கள்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 15157, திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல், கோபாலசமுத்திரம் ஆகிய பேரூராட்சிகளிலும், கிராம ஊராட்சியான பொட்டல், குத்தப்பாஞ்சான் பகுதிகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 15163, திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, எண் 4, வீரபாண்டி கிளை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 16251, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் சித்த மருத்துவக் கல்லூரி நிறுவவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 16364, திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் உதவியாளர்கள் நியமிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 16510, திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் தொகுதியில் இயங்கும் அரசு மகப்பேறு மருத்துவமனைக்குக் கூடுதலாக கழிப்பறைக் கட்டடம் கட்டுவது குறித்தும் மற்றும் குடிநீர் வசதியும், கூடுதலாக படுக்கைகளும் அமைத்துக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 16717, திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 16780, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க உள்ள நிபந்தனையில் மாற்றம் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 16815, திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள ஆம்புலன்ஸ் ஊர்திகளுக்கு ஓட்டுநர்கள் நியமிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 16943, திரு. ஆர். வைத்திலிங்கம்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, நார்த்தேவன் குடிக்காடு, ஆவிநலவிஜயபுரம், வடசேரி, தெலுங்கன்குடிக்காடு ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 16964, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாசுதேவநல்லூர் தொகுதியிலுள்ள சிவகிரி வட்ட மருத்துவமனைக்கு சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 16983, திரு. பி. தங்கமணி.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதி, குமாரபாளையம் அரசு மருத்துவமனைக்குப் போதிய மருத்துவர்கள் நியமிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 17039, திரு. ஞா. செந்தமிழன்.

திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெறிநாய்க் கடியினால் பாதிக்கப்படுபவர்களுக்கு உடனடியாக மருந்துகள் தட்டுப்பாடின்றி வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 17087, திரு. வீர. இளவரசன்.

திரு. வீர. இளவரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில், திருமங்கலம் அரசு மருத்துவமனையில் அமரர் அறை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.154,30,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

@ 441 முதல் 574 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மணி 12-20. ஒரு மணி 10 நிமிடங்கள்தான் நேரம் இருக்கிறது. பேசுவதற்கு 10 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். தங்களுடைய அறையிலே நாம் எடுத்த முடிவிற்கேற்ப, 10 பேருக்கும் நேரம் ஒதுக்க வேண்டுமென்றால் குறைந்தது 2 மணி நேரம்; மேலும் அமைச்சருக்கு முக்கால் மணி நேரம் தேவைப்படுகிறது. எனவே, அதற்கு மாறாக முக்கியமானக் கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க., தி.மு.க., காங்கிரஸ் - 10 நிமிட நேரமும் மற்ற கட்சிகள் 7 நிமிட நேரமும், கடைசியிலே பேசக்கூடிய தி.மு.க., காங்கிரஸ், அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு தலா 7 நிமிடங்கள் என்று வைத்துக்கொண்டால்கூட இன்றைக்கு நேரம் போதாது. 1-30 வரையிலே அவையை நடத்திவிட்டு, மீதி இருப்பவர்களை கேள்வி நேரத்தை ஒத்திவைத்து நாளைக்கு அவர்களையும் பேச விட்டு, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வதற்கு அவை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், 10 நிமிடங்கள். (குறுக்கீடு) திரு. கே.எஸ். விஜயகுமார், உரையாற்ற 10 நிமிடங்கள்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: தமிழக மக்களின் நலன் காக்க, தமிழர்களின் உரிமை காக்க தன்னலம் பாராமல் புரட்சி கீதம் இசைக்கும் தமிழகத்தின் புதிய புறநானூறு எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) திசை நோக்கி வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் ஆசியாவின் மருத்துவ வாயிலாகத் தமிழகம் திகழ்ந்தது. சென்னை, அரசு பொது மருத்துவமனைக்கு 10.5 கோடி ரூபாயில் இரண்டு தொகுப்பு கட்டடங்களைக் கட்டி, தெற்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்தினார். சென்னை பொது மருத்துவமனையில் எலும்பு வங்கி தொடங்கினார். அனைத்து ஏழையெளிய மக்களும் அங்கு தனியார் மருத்துவமனைகளுக்கு நிகராக சிகிச்சைப் பெற்றிட வழி செய்தார்கள். அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் நோயை அறிந்து, அதற்குண்டான சிகிச்சை அளித்து கொடிய நோய்களைக் குணப்படுத்துகின்றவகையில் விலை மதிப்பற்ற மனித உயிர்களைக் காத்த ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பொது மருத்துவமனை மேம்பாட்டிற்காக தலைவர் கலைஞருடைய முயற்சியால் 22-2-2001 ஆம் நாளன்று அரசாணை போட்டிருக்கிறோம். அப்போதே 104 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, தலைவர் கலைஞர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். நாங்கள் போன பிறகு நீங்கள் கட்டிவிட்டு, குடிவந்துவிட்டீர்கள். அதுதான். அதிலேயே பாதி குறைகளை வைத்துவிட்டீர்கள். இப்போது பாருங்கள், நாங்கள் மீண்டும் வந்து அவற்றை முடித்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார், சுற்றி, வளைத்துப் பேசாமல் subject-க்குள்ளே வாருங்கள்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மனித உயிர்களைக் காத்த மக்கள் நல மருத்துவர் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்பொழுது மருத்துவமனைகளே நோய்களை உண்டாக்கும் கேந்திரங்களாக மாறி இருக்கின்ற நிலை. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பு படித்த குஜராத்தைச் சேர்ந்த கரிமா பிரதான் என்ற மாணவியை மரணப் படுக்கைக்கு அனுப்பிய ஆட்சி இன்றைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) நாளுக்கு நாள் நாட்டில் வியாதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: தவறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே? 5 ஆண்டு காலம் நீங்கள்தான் ஆட்சியிலே இருந்தீர்கள். நாங்கள் இப்போதுதான் வந்திருக்கிறோம். நீங்கள் சரியாகப் பராமரிக்கவில்லை; விடுதிகளைச் சரியாகப் பராமரிக்கவில்லை. இப்போது தலைவர் கலைஞர் அவர்கள் 100 கோடி ரூபாய் கொடுத்து, விடுதி கட்டுவதற்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். இப்போது 10 ஏக்கர் நிலமும் தனியாக ஸ்டான்லி மருத்துவமனையினை விரிவாக்கம் செய்வதற்குக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கடந்த ஆட்சி 5 ஆண்டு காலத்திலே ஒன்றுமே செய்யவில்லை. மருத்துவர்

நியமனம் செய்யவில்லை, செவிலியர் இல்லை, பணியாளருமே இல்லை; ஒன்றுமே செய்யவில்லை. ஆனால், குறை பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) அதனால்தான் நோயே வந்தது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், எல்லாவற்றையும் பதிலுரையில் சொல்லிவிட்டால் போதும், அவர்களை முதலில் பேச விடுங்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், நீங்கள் உட்காருங்கள்.

பிற்பகல் 12-25

திரு. கே.எஸ். விஜயகுமார்: கரிமா பிரதான் என்ற கல்லூரி மாணவி இறந்தது எந்த ஆட்சியில் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு மருத்துவமனையில் பணியாற்றக்கூடிய மருத்துவர்கள், அங்கு முழுமனதோடு பணியாற்றுவதற்குப் பதில், தனியார் மருத்துவமனைகளில்தான் குடியேறுகிறார்கள். அதற்குக் காரணம், தனியார் தரும் அதிகப்படியான ஊதியம். அரசு மருத்துவர்கள், தனியாக practice செய்யக்கூடாது என்ற ஏட்டளவில் உள்ள உத்தரவை நடைமுறைப்படுத்துவதில்லை. இந்த உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டும். அதே நேரத்தில், மருத்துவர்கள் திருப்தியடையும் வகையில், அவர்கள் தகுதிக்கேற்ப அதிகப்படியான சம்பளம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழக அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் மருத்துவர்களின் ஊதிய உயர்வு, பதவி உயர்வு ஆகியவற்றில் முரண்பாடுகளைக் களைய ஒரு சிறப்பு ஊதியக் குழு அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதன் பரிந்துரைகளை, ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு முன்பே, அமல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள்.

நம் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிராவைவிட தமிழகத்தில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை குறைவே. தமிழகத்தில் 23 அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் மட்டும் உள்ளன. இவற்றில் ஆண்டு ஒன்றுக்கு 2,800 மாணவ, மாணவிகள் பயில்கின்றனர். தமிழ்நாட்டில், அரசுக்

கலைக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தைவிட, அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியம் மிகக் குறைவாக உள்ளது. அதேபோல, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், மருத்துவர்களுக்கும் ஊதியம் குறைவாக உள்ளது.

தமிழக அரசுக் கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கு 16,400 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனால், தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கு 12,000 ரூபாய்தான் அடிப்படைச் சம்பளமாக வழங்கப்படுகிறது. உதாரணமாக, மருத்துவக் கல்லூரியின் முதல்வரைவிட, அந்தக் கல்லூரியில் பணிபுரியும் உடற்பயிற்சி ஆசிரியர் அதிகமான ஊதியம் பெறுகிறார். தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் மருத்துவர்கள்கூட அரசுக் கல்லூரிகளில் பணியாற்றும் மருத்துவர்களைவிட அதிக ஊதியம் பெறும் அவல நிலை தற்போது தமிழ்நாட்டில் நிலவுகிறது.

தமிழகத்தில் அரசு மருத்துவக் கல்லூரி ஆசிரியர்களுக்கும், மருத்துவர்களுக்கும், அனுபவத்திற்கேற்ப பதவி உயர்வு கிடைப்பதில்லை. Promotions are based only on vacancies in spite of Medical Council of India norms. இதனால் 20 ஆண்டுகளாகப் பதவி உயர்வு கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். இந்த நிலைமை மாற, ஐந்தாவது சம்பள கமிஷனில் உள்ள குறைகளைச் சீர் செய்ய, 4-4-2008 அன்று சென்னை அரசு மருத்துவக் கல்லூரியில் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர். 17-4-2008 அன்று அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் கறுப்பு badge அணிந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். எனவே, ஐந்தாவது சம்பள கமிஷனில் உள்ள குறைகளைச் சீர் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 31-3-2008 வரை 4,59,037 கருவுற்ற பெண்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறீர்கள். அப்படியானால், 2007-2008 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு தாய்-சேய் நல மருத்துவமனைகளில் எத்தனைக் குழந்தைகள் பிறந்தன என்பதைத் தெளிவுபடுத்தவில்லை.

கருவுற்ற பெண்கள் அனைவருக்கும், பேறுகால உதவி வழங்கப்படுவதில்லை. ஒவ்வொரு மருத்துவமனையிலும் இரண்டு அல்லது மூன்று பெண்களுக்கு மட்டுமே பேறுகால உதவி வழங்கிட வாய்மொழி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார்கள். பேறுகால நிதி உதவி அனைத்து கருவுற்ற பெண்களுக்கும் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு மருத்துவமனை ஊழியர்களின் அலட்சியப் போக்கிற்கு எல்லையில்லாமல் போய்விட்டது. பத்துத் திங்கள் சுமந்து ஈன்றெடுத்த தாய்க்கு, தங்கள் குழந்தையைச் சொந்தம் கொண்டாட முடியாத துர்பாக்கிய நிலை இன்று அரசு மருத்துவமனைகளில் நிலவுகிறது. இதற்கு ஓர் உதாரணமாக, கடந்த வாரம் சென்னை R.S.R.M. மகப்பேறு மருத்துவமனையில் குழந்தைகள் இடம் மாறின. ஆண் குழந்தை யாருக்குப் பிறந்தது என்பதில், ஒரு இஸ்லாமியத் தாய்க்கும், இந்து மதத்தைச் சார்ந்த ஒரு தாய்க்கும் ஏற்பட்டுள்ள மன உளைச்சல், மரபணு சோதனை வரை சென்றுள்ளது. தாய்ப்பால்கூடக் குடிக்க முடியாமல் தவிக்கும் இந்தப் பிறந்த குழந்தைகள் மாறுவதற்குக் காரணமானவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும். இதுபோன்ற அவலங்கள் இனியும் நடக்காமல் அரசு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கிறேன்.

இதுவரை இல்லாத அளவிற்கு, அரசு மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்திருக்கின்ற மருத்துவமனைகளிலே கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபாய் செலவில் Life saving Ambulance, அதாவது உயிரைக் காக்கக்கூடிய அனைத்துக் கருவிகளும் பொருத்தப்பட்ட அவசரகால ஊர்தி சேவையை அறிமுகப்படுத்தி நோயாளிகளை அழைத்து வருவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். உங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பக்கம் 8-ல், 15 மாவட்டங்களில் உள்ள 187 வட்டாரங்களில் அரசுசாரா அமைப்புகளின் பங்கேற்புடன், அவசரகால ஊர்தி சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-30

இப்பொழுது வழங்கியுள்ள அவசரகால ஊர்திகளில் Life-saving Ambulance-ல் உள்ளதுபோல, உயிர் காக்கக்கூடிய கருவிகளும், மருந்துகளும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, வழங்கியுள்ள அவசரகால ஊர்திகளுக்கு ஓட்டுநர்களும் இல்லை

என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும், 6 புதிய அவசரகால ஊர்திகள் கடந்த ஆறு மாத காலமாக ஓட்டுநர் இல்லாத காரணத்தால் இயக்கப்படவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், திருவள்ளூர் மாவட்டத்தில், இந்த அவசரகால ஊர்திகளைத் தொடங்கி வைத்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்—Tamil Nadu Medical Services Corporation — இதுவரையிலும் எந்த அரசும் செய்யாத சாதனையை, மற்ற மாநிலங்களிலுள்ள அரசுகள் எல்லாம் பாராட்டும் அளவிற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1-7-1994-லே, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் என்ற ஒரு கழகத்தை, தமிழ்நாடு இந்தியாவிற்கே ஓர் எடுத்துக்காட்டாக அமையும் வகையிலே நிறுவி மற்ற மாநிலங்களிலுள்ள அமைச்சர்களும் நேரடியாக விஜயம் செய்து, மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள். இதன்மூலம், தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் தட்டுப்பாடின்றித் தரமான மருந்துகள் வழங்கப்பட்டன. ஆனால், இந்த ஆட்சியில் அரசு மருத்துவமனைகளில் போதிய மருந்துகள் கிடைக்கவில்லை என்கிற நிலைதான் ஏற்பட்டுள்ளது. மேலும், X-ray film போதிய அளவிற்குக் கிடைக்காததால், X-ray எடுக்கமுடியாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் நாய்க்கடி மருந்தான T.C.V. மருந்து தட்டுப்பாடின்றிக் கிடைத்தது. ஆனால், இந்த ஆட்சியில், மருத்துவமனைகளிலே போதிய அளவிற்கு நாய்க்கடி மருந்தான T.C.V. இல்லை. அதுமட்டுமல்ல; நாய்க்கடி ஊசி போடுவதற்காக வரக்கூடிய நோயாளிகளிடம், ரேஷன் கார்டு இருந்தால்தான், ஊசி போடும் நிலை உள்ளது. இதை மாற்றியமைக்க, இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழகத்தில், The Transplantation of Human Organs Act 1994 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. மனித உறுப்புகளை வியாபாரம் செய்வதைத் தடுக்கவும், மனித உறுப்புகளை மருத்துவரீதியாக உபயோகிப்பதற்காகவும் இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. முக்கியமாக, ஏழ்மையில் இருக்கின்ற மக்கள், தங்களுடைய kidney-ஐ வியாபாரத்திற்குக் கொடுக்கின்ற ஓர் அவல நிலையைப்

போக்குவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், இந்தச் சட்டத்தின் நோக்கம் முழுமையாக இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால், அது கேள்விக்குறியாக இருக்கிறது. காரணம், இப்போது kidney வியாபாரம் தொடர்ந்து மறைமுகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசு அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: இப்போது ஆண்டொன்றிற்கு, சென்னை நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலே, 1,000 விபத்துகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த விபத்துகள்மூலமாக, மூளைச் சாவு ஏற்பட்டு coma-வால் பாதிக்கப்படுகின்றவர்களின் kidney போன்ற உறுப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். (மணியடிக்கப்பெற்றது) ஆனால், அரசு அதை முறையாகப் பயன்படுத்திக் கொள்கிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே.எஸ். விஜயகுமார், உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். தற்போது அரசு மருத்துவமனைகளிலே, ஆண்டொன்றுக்கு 15-லிருந்து 20 kidney transplantations செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், முன்னணி தனியார் மருத்துவமனைகளிலே, 500-லிருந்து, 600 kidney transplantations நடக்கின்றன. இதைக் கருத்தில்கொண்டு, விபத்துமூலமாக brain death என்ற மரணம் அடைகின்ற...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி அவர்கள். (குறுக்கீடு) Sir, உங்களுக்கு ஒதுக்கப்பட்டது 10 நிமிடங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமானால், படித்ததாகக் கருதி சபைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ளச் சொன்னாலும், ஏற்றிக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு)

திரு. இ.ஏ.பி. சிவாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பசுமைப் புரட்சி...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே.எஸ். விஜயகுமார், முடியாது Sir. பத்து நிமிடங்களுக்கு மேல் முடியாது என்று

அவர்கள்தான் சொல்லி விட்டார்கள் அல்லவா? (குறுக்கீடு) முடியாது. பாருங்கள்; அதேபோல, இவரையும் 9 நிமிடங்களில் உரையை முடிக்கச் சொல்வேன். திரு. இ.ஏ.பி. சிவாஜி, நீங்கள் பேசுங்கள்.

திரு. இ.ஏ.பி. சிவாஜி: பசுமைப் புரட்சி, தொழிற்புரட்சி, சமூக நீதி இணைந்த சமுதாயப் புரட்சி; ஆக, முப்பரிமாணங்களை உள்ளடக்கிய 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையில் என் கருத்துகளை, கோரிக்கைகளை வைத்திட வாய்ப்பு வழங்கியமைக்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கை தாக்கல் என்று சொன்னாலே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றாக, healthy-ஆகப் பேசுங்கள். இன்றைக்கு Health Department மானியக் கோரிக்கையின்மீது விவாதம் அல்லவா?

திரு. இ.ஏ.பி. சிவாஜி: பத்திரிகைகளிலே பரபரப்பானச் செய்திகள் இருக்கும்; தொலைக்காட்சியிலே தொடர் விவாதங்கள் நடக்கும். 'நிதிநிலை அறிக்கை வரும் முன்னே; வரிகள் வரும் பின்னே, விலைவாசி உயரும் உள்ளே' என்கின்ற பல்வேறு விவாதங்கள் நடந்து கொண்டிருக்கும். 'புலி வரும், புலி வரும்' என்ற பிரச்சாரமும் இருக்கும். இந்த நடைமுறையை மூன்றாவது முறையாக முறியடித்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே, 'வரியும் இல்லை; புலியும் புகாது தமிழகத்திலே' (மேசையைத் தட்டும் ஒலி) 'புலியும் புகாது தமிழகத்திலே; அதற்கு வாய்ப்பில்லை' என்று புது வரலாறு படைத்துள்ள முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மூன்று மணி நேரம் தொடர்ந்து மணிப் பிரவாள நடையிலே, திட்டங்கள் குற்றாலச் சாரலாய்க் கொட்டிட, சுவை குன்றாது 85 பக்கங்கள், 2316 வரிகள் இருந்தனவேதவிர, வரி விதிப்பு என்ற ஒரு வரிகூட இல்லை என்ற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நிதிநிலை அறிக்கையை வழங்கிய பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், தன்னுடைய ஓயாத உழைப்பால், உள்ளாட்சித் துறையை வல்லாட்சித் துறையாக மாற்றி, வல்லாட்சியோடு நடைபெறும் நல்லாட்சிக்கு உயிரோட்டமாய், உந்துசக்தியாய் செயல்பட்டு வரும் தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

இந்த நிதிநிலை அறிக்கை ஒட்டுமொத்தமாக சமூகநீதியை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாக இருந்தாலும் 'வருமுன் காப்போம்' திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது தமிழக மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாதாரணமாக, வரம் கேட்க, வேண்டுதலை நிறைவேற்ற ஆண்டவனைத் தேடி பக்தர்கள் செல்வது நடைமுறை. ஆனால், அந்த வாடிக்கையை மாற்றி, ஆண்டவனே ஒரு நாள் புறப்பட்டு பக்தனுடைய வீட்டின் கதவைத் தட்டி, "என்ன வரம் வேண்டும், கேள், கொடுக்கிறேன்" என்று சொல்லும் அற்புதத்தைப்போல, குறிப்பாக கிராமத்திலே வாழும் மக்கள் அடிப்படை மருத்துவத்திற்கே வசதியும், வாய்ப்பும் இல்லாத மக்கள், ஏழையெளிய மக்கள் மருத்துவமனையைத் தேடி நகரங்களுக்குச் செல்லும் அந்த பிரம்மப் பிரயத்தனத்தை மாற்றி மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தோடும் மற்ற உபகரணங்களோடும் மருத்துவமனையே இடம்பெயர்ந்து கிராமங்களுக்குச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) ஆதரவற்றவர்கள், ஏழை எளிய மக்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள், அடிப்படை மருத்துவத்திற்கே வசதியும் வாய்ப்பும் இல்லாதவர்கள், முதியோர் ஆகியோரைக் கூட்டி, அவர்களது நோய் நாடி, நோய்முதல் நாடி, தொடர் சிகிச்சை அளித்து, நோயற்ற வாழ்வு வாழ்ந்திட வழிவகைசெய்யும் இந்தத் திட்டம் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய எல்லையையும் தாண்டி சர்வதேசத்திலும் இல்லாத (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மகோன்னதமான திட்டம், இந்த 'வருமுன் காப்போம்' திட்டம் என்பதை, இந்தத் திட்டத்தினுடைய பிதாமகன், (மணியடிக்கப்பெற்றது) முத்தமிழ் அறிஞர், முதல்வர் கலைஞர் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார் Point of order கேட்கிறார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் துணைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏன் வாய் திக்குகிறது? (சிரிப்பு)

திரு. டி. ஜெயக்குமார்: உங்களைப் பார்த்தாலே திக்குகிறது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, 'திக்' என்றுள்ளது. அதனால் திக்குகிறது.

திரு. டி. ஜெயக்குமார்: அதாவது, நீங்கள் எப்போதும் பேச விடமாட்டீர்கள். திடீரென்று பேச விட்டீர்கள். எனக்கே ஆச்சரியமாகப் போய்விட்டது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விவாதம், அதுவும் மக்கள் நல்வாழ்வுத் துறை மீது விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது, ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கின்றார், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இல்லை. இது எப்படி இருக்கிறது! (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏதோ பெரிய விஷயம் சொல்லப் போகிறார் என்று நினைத்தேன். (சிரிப்பு) உறுப்பினர், பேசுங்கள்.

திரு. இ.ஏ.பி. சிவாஜி: இந்த 'வருமுன் காப்போம்' திட்டம், தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய எல்லையையும் தாண்டி, சர்வதேசத்திலும் இல்லாத ஒரு மகோன்னதமான திட்டம். இந்தத் திட்டத்தின் பிதாமகன், முத்தமிழ் அறிஞர், முதல்வர் கலைஞர் என்பதிலே நாங்கள் பெருமைப்படுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

(உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி மாண்புமிகு அமைச்சர் வரிசைக்குச் சென்று பேசிக்கொண்டிருந்தார்.)

திருவள்ளூர் தொகுதியிலே 29 மருத்துவ முகாம்கள் இதுபோன்று நடைபெற்றன. அதிலே 30 ஆயிரம் பொதுமக்கள் பயன்பெற்றார்கள். அந்த 30 ஆயிரம் பேரும், முதல்வர் கலைஞர் அவர்களே, உங்களை மனமார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், 1996-2001-ல் நீங்கள் நான்காவது முறையாக முதலமைச்சராக வந்தபோது, . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. து. அமரமூர்த்தி, நீங்கள் கொஞ்சம் எழுந்து போய்விடுங்கள். (குறுக்கீடு) அந்த அம்மா, திருமதி தேன்மொழி, நீங்கள் அமைச்சரா என்று கேள்வி கேட்டு, point of order, waste of time வரும். அதனால், சீக்கிரம் கிளம்பிவிடுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. இ.ஏ.பி. சிவாஜி: எங்கள் தொகுதியிலே 30 ஆயிரம் மக்கள் வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். 1996-2001-ல், நான்காவது முறையாக முதலமைச்சராக வந்தபோது 'வருமுன் காப்போம்' திட்டத்தை அறிமுகப்படுத்தினீர்கள். 2006-ல் ஐந்தாவது முறையாக முதலமைச்சராக வந்து, தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். இனி, ஆறாவது முறையும் நீங்கள் முதலமைச்சராக வரவேண்டுமென்றும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை தொடர்ந்து நீங்கள் நடத்திட வேண்டுமென்றும் 234 தொகுதிகளிலே இருக்கின்ற மக்கள் அதனால் பயனடைந்த மக்கள்—மொத்தத்திலே 6,027 முகாம்கள் நடத்தப்பட்டதாகவும், 66 இலட்சம் பேர் பயனடைந்திருக்கின்றார்கள் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவித்திருக்கின்றார்கள்; இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்திட வேண்டுமென்று அவர்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

2006 ஆம் ஆண்டு முதன்முறையாக திருவள்ளூரில் மருத்துவக் கல்லூரி அமைத்திட வேண்டி கோரிக்கை வைத்தேன். தொடர்ந்து அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு, மருத்துவக் கல்லூரிக்கு இட ஒதுக்கீடு செய்ய வருவாய்த் துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்து, அனுமதி பெற்று, மாவட்ட ஆட்சியரால் இடம் தேர்வு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறை அரசுச் செயலாளரிடம் அந்தக் கோப்பு சென்றுள்ளது.

பிற்பகல் 12-10

இடம் கட்டமைப்புப் பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ள நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அருள்கூர்ந்து இந்த ஆண்டே திருவள்ளூரில் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைக்கின்ற ஆணையினை வழங்கிட வேண்டுகிறேன். உடனடிக் காரணம் என்னவென்று சொன்னால், சென்னையிலே உள்ள மருத்துவமனைகள், பொது மருத்துவமனை—G.H. ஆக இருந்தாலும், ஸ்டான்லி, இராயப்பேட்டை, K.M.C. ஆகிய மருத்துவமனைகளிலே பெருமளவு சிகிச்சை பெறுபவர்கள் எங்கள் திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். திருவள்ளூரிலே மருத்துக் கல்லூரி மருத்துவமனை அமைவதால் சென்னையில் உள்ள அரசு மருத்துவமனைகளிலே இட நெருக்கடி முழுமையாகக் குறைந்துவிடும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1996-ல் நான்காவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றபோது திருவள்ளூர் மாவட்டத்தைத் தனி மாவட்டமாகப் பிரித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, அடிக்கல் நாட்டியது மட்டுமல்லாமல் அடுத்த ஆண்டே அந்த எழில்மிகு மாளிகையைத் திறந்து, அந்த நிகழ்ச்சியிலே எம்.எல்.ஏ.-க்களாக நாங்கள் எல்லோரும் பங்கேற்கும் பெருமையைக் கொடுத்தீர்கள். முதல்வர் அவர்களே, அதேபோன்று மருத்துவக் கல்லூரியும் இந்த ஆண்டே தொடங்குவதற்கு ஆணையிட்டு திறப்பு விழாவிலும் நாங்கள் எல்லாம் பங்கேற்கும் பெருமைமிகு வாய்ப்பினை வழங்குங்கள் என்று இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு மருத்துவர்களோடு தொடங்கப்பட்ட திருவள்ளூர் மருத்துவமனை, மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையாக உயர்ந்து, இப்போது 22 மருத்துவர்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். திருவள்ளூர் மருத்துவமனை சென்னையையொட்டி அமைந்துள்ளதால் பணிபுரியும் ஊழியர்கள் பெரும்பாலோர் சென்னையிலேயே தங்கிப் பணிக்கு வந்து போகும் நிலை உள்ளது. மருத்துவர்கள், செவிலியர்கள் பணிபுரியும் இடத்திலேயே தங்கிப் பணியாற்றிடவும், பணியில் உள்ள மருத்துவர்கள் செவிலியர்கள் யார், யார் அவர்களின் இருப்பிடம், தொலைபேசி, செல்பேசி எண் விவரமும் அறிவிப்புப் பலகையிலே இடம்பெற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இரவில் பணிபுரிவோர், மருத்துவர்கள், செவிலியர்கள் பணியில் உள்ளார்களா என்பதைக் கண்காணிக்க, கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்திட வேண்டுகிறேன்.

பாம்பு கடித்து சிகிச்சைக்காக உயிருக்குப் போராடிக்கொண்டு கிராமத்திலிருந்து வருபவர்களுக்கு முதலுதவி கொடுத்து மேல் சிகிச்சைக்காக தலைநகர் சென்னை மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைப்பது மிகவும் ஆபத்தானது. கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையிலே பாம்புக் கடிக்கான உரிய மருத்துவ வசதியை திருவள்ளூர் மருத்துவமனையிலேயே ஏற்படுத்தித்தர வேண்டுகிறேன்.

அதேபோன்று நாய்க் கடிக்குச் சிகிச்சைப் பெற வருபவர்களை ரூபாய் 12,000/-த்திற்கான வருமானச் சான்றிதழ் அளித்தால்தான் சிகிச்சை என்ற நிலையை மாற்றி எப்படி மகப்பேறு உதவிக்கு வருமானச் சான்றிதழ் தேவையில்லை என அறிவித்தீர்களோ அதேபோன்று ஆணையை வெளியிட்டு நாய்க் கடிச் சிகிச்சைக்கும் வருமானச் சான்றிதழை இரத்துச் செய்ய வேண்டுகிறேன்.

இதயம், சிறுநீரகம், தண்டுவட பாதிப்பு தொடர்பான அறுவைச் சிகிச்சைக்கும் வருமான வரம்பு 12,000 ரூபாய் என்பதை 50,000 ரூபாய் என உயர்த்தி ஆணை பிறப்பித்திட வேண்டுகிறேன். திருவள்ளூர் அரசுப் பொது மருத்துவமனையில் இரத்த வங்கி, அவசர இருதய சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, சர்க்கரை நோய்ப் பிரிவு, மகப்பேறுப் பிரிவு உருவாக்கி தொண்டை, தோல், கண், காது, மூக்கு, மூளை ஆகிய சிகிச்சைப் பிரிவுகளுக்கு சிறப்பு மருத்துவர்களை நியமித்திடவும் திருப்பதி-திருவள்ளூர்-திருத்தணி தேசிய நெடுஞ்சாலையில் திருக்கோயில்கள் அதிகமாக இருப்பதால் விபத்துகளை தவிர்க்கமுடியாத நிலையில் உள்கட்டமைப்பு வசதியோடு Accident Emergency Ward உடன் துவக்கிட கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் முடிந்துவிட்டது. சித்த வைத்தியர் மாதிரி எல்லா வியாதிக்குரிய பிரிவுகளையும் சொல்கிறீர்கள்.

திரு. இ.ஏ.பி. சிவாஜி: ஆரம்ப சுகாதார நிலையங்கள் திருவள்ளூரில் பூண்டி ஒன்றியம் திம்மபூபாலபுரத்திலும், எல்லாபுரம் ஒன்றியம் ஏனம்பாக்கத்திலும் அமைத்திட நான் கேட்டுக்கொள்கிறேன்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உலகப் பொது நெறிக்கு உதாரணமாக வாழும் நரிக்குறவர் வாழ்வினை நெறிப்படுத்தி நாடோடி வாழ்க்கையை நாடாளும் வாழ்வாக மாற்றும் முயற்சியாக நரிக்குறவர் நல வாரியம் அமைத்தீர்களே முதல்வர் கலைஞர் அவர்களே, சமுதாயத்தின் எள்ளல் நகைப்புக்கும் ஏளனத்திற்கும் ஆளாவது மட்டுமல்ல, பெற்ற தாய் தந்தையராலும் ஒதுக்கப்படும் இனம் அரவாணி இனம். அகிலத்தை ஆளும் அகிலாண்டேஸ்வரி ஆனாலும் அழுத பிள்ளைக்கே பால் தருவாள் என்பதையும் புறந்தள்ளி அரவாணிகளையும் இனம் கண்டு அவர்கள் கேட்காமலேயே அவர்களுக்குத் தனி நல வாரியம் அமைத்து T. முத்திரை குடும்ப அட்டை வழங்கிய சமூக நீதிக் காவலராக இருந்து மனித நேயத்தின் உச்சத்தைத் தொட்டிருக்கிறீர்கள். மனிதகுலம் சிந்தித்திராத இந்த மனிதநேயப் பணிகளுக்காக இந்த மாமன்றம் (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நோபல் பரிசினை வழங்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் கிராமப்புறங்களில் 8700 துணை சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இம்மையங்களில் கிராம சுகாதாரச் செவிலியர்கள்

தங்கிப் பணிபுரியும் விதமாக இருப்பிடத்துடன் கூடிய மையங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. செவிலியர் முக்கிய வேலையாக கிராமங்களில் உள்ள வீடுகளுக்குச் செல்லும்போது இந்த மையங்கள் மூடப்பட்டிருக்கும். இதனைக் காணும் பொதுமக்கள் கிராமச் சுகாதார மையங்கள் மூடிக் கிடப்பதாகக் குறை கூறுகின்றனர்.

பிற்பகல் 12-45

எனவே, செவிலியர் ஒருவரும், அவருக்கு உதவியாக உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டு துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டால், பொதுமக்கள் பெரிதும் பயன்பெறுவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு சிவாஜி, முடித்துவிடுங்கள்.

திரு. இ.ஏ.பி. சிவாஜி: இறுதியாக,

"கோல் நிலை திரிந்திடின் கோள் நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரி வறம் கூறும்
மாரி வறம் கூறின் மன் உயிர் இல்லை
மன் உயிர் எல்லாம் மண் ஆள் வேந்தன்
தன் உயிர் என்னும் தகுதி இன்று ஆகும்."

இது மணிமேகலையின் கூற்று. இந்த இலக்கணத்திற்கு இம்மியளவும் குறையாமல் ஆட்சி செய்யும் எங்களுடைய முதல்வர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணாளும் மன்னவன் நெறிதவறி ஆட்சி செய்தால், மழை இருக்காது. பசி, பஞ்சம், பட்டினி, வறுமை, விவசாயிகள் தற்கொலை, எலிக்கறி தின்னும் இழிநிலை, நெசவாளர் கஞ்சித் தொட்டிமுன் கையேந்தும் கொடுமை, (குறுக்கீடுகள்) சுனாமிப் பேரழிவு எல்லாம் நடக்கும் என்று மணிமேகலை சொல்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி. (குறுக்கீடு)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of order.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்படிப் பேசுகிறபோது, சிறப்பான முறையிலே மருத்துவமனைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு, அந்த மருத்துவர்கள் அனைவரும் பக்கத்திலேயிருக்கிற சென்னைக்குச் செல்கிறார்கள், அவர்களைக் கண்காணிப்பதற்கு குழு ஒன்றைப் போட வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே, எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதை உறுப்பினரே குறிப்பிட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி. (குறுக்கீடு) டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, பேசுங்கள்.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையைத் தொடங்குகிறேன்.

எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்த ஒப்பற்ற தலைவர் அன்னை சோனியா காந்திஜி அவர்களின் வேண்டுகோளையேற்று, மேல் சபைக்கு காங்கிரஸ் சார்பாக கூடுதலாக ஓர் இடமளித்து, அந்த இடத்தில் எங்கள் அன்புத் தலைவர் திருமதி ஜெயந்தி நடராஜன் அவர்களை ஆதரித்து, அதேபோல், தமிழ்நாடு மகளிர் ஆணையத்திற்கு சட்டரீதியான அதிகாரத்தை வழங்கிய பெண்களின் காவலர், முத்தமிழ் அறிஞர், தமிழினத் தலைவர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"மருத்துவம் ஒரு சமூக அறிவியல். சற்றே விரிந்த தளத்தில், அதுவே அரசியலும் ஆகும்" என்று ரூடால்ஃப் விர்சோ என்ற மருத்துவ அறிஞர் சொன்ன இக்கூற்றை முன்வைத்து, என் உரையைத் தொடங்குகிறேன்.

மருத்துவத் துறையின் சமூகப் பரிமாணத்தை முறையாக உள்வாங்கியிருக்கும் சமூகநீதியின் பிதாமகன், முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்

காரணமாகவே, தமிழ்நாடு மருத்துவத் துறை பிற மாநிலங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்கி வருகின்றது. தேசிய மருத்துவத் திட்டங்களின் அமலாக்கத்தில் தமிழகமே சிறந்து விளங்கி வருகின்றது என்பதை நினைக்கும்பொழுது உள்ளபடியே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. மத்திய அரசினுடைய தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டம், நாட்டிலேயே தமிழகத்தில்தான் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று மத்திய அரசே பாராட்டிய செய்தியை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஆட்சியைக் காட்டிலும், 2005-2006 ஆம் ஆண்டைக் காட்டிலும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக 2008-2009 ஆம் ஆண்டில் 1,088.67 கோடி ரூபாய் கூடுதலாக நிதியொதுக்கியிருப்பது அனைவராலும் பாராட்டப்படவேண்டிய ஒரு விஷயமாகும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை நன்குணர்ந்த தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள், "வருமுன் காப்போம்" திட்டத்தின்மூலமாக மருத்துவத் தொழில்நுட்பத்தைக் கடைக்கோடி தமிழனின் வீட்டு வாசலுக்கே எடுத்துச் சென்றிருக்கிறார் என்பதை இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அகில இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழும் இத்திட்டம், கடந்த ஆட்சிக்காலத்தில் கைவிடப்பட்டாலும், மீண்டும் மக்கள் நலன் கருதி, இத்திட்டத்தினை ஒவ்வொரு கிராமத்திலும் சிறப்பாக நிறைவேற்றி வரும் இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் அரசியல் ஆதாயத்தை முன்நிறுத்தி, தேர்தலுக்குமுன் விண்ணம்பள்ளி, பெரிகோபனப்பள்ளி மற்றும் குன்னம் ஆகிய மூன்று இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் இதுவரை ஒரு மருத்துவர்கூட நியமிக்கப்படவில்லை என்பது மிகுந்த வேதனையளிக்கின்றது. எனவே, அந்த மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் உடனடியாக மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த ஆட்சியில் 2,865 மருத்துவர்களும், 3,825 செவிலியர்களும் புதிதாகப் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

பிற்பகல் 12-50

மேலும், கடந்த ஆட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பு ஊதியமாக ரூ.8,000/-க்கு பணியமர்த்தப்பட்ட சுமார் 1,500 மருத்துவர்களை இந்த அரசு பதவி ஏற்றதும் பணி நிரந்தரம் செய்தமைக்காக மருத்துவர் என்ற முறையில் நான் எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதே வேளையில், ஊரகப் பகுதிகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு யாதொரு முன்னுரிமையோ அல்லது சலுகைகளோ வழங்கப்படாமல் இருப்பதனால், ஒரு சில பகுதிகளில் மருத்துவத் திட்ட அமலாக்கம் கீழ்மட்ட மக்களைச் சென்றடைவதில்லை. எனவே, மலைப் பகுதிகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு மலைப் பகுதிப் படி Hill allowance வழங்குவதுபோல், rural பகுதியில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு Rural allowance மற்றும் மேற்படிப்புக்காகத் தேர்வு செய்யும்பொழுது குறிப்பிட்ட வருடங்கள் rural area-ல் பணிபுரிந்திருந்தால் குறிப்பிட்ட சதவிகித மதிப்பெண்களை வழங்கினால் மருத்துவர்களும் யாதொரு தயக்கமுமின்றி rural area-ல் பணிபுரிய தன்னிச்சையாக முன்வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்த காலம் மாறி, கடந்த ஆண்டு மருத்துவ மாணவர்கள் சேர்க்கையின்போது மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தும் சுமார் 130 மாணவ, மாணவிகள் விலகி Engineering-ல் போய் சேர்ந்தார்கள் என்ற செய்தி நம்மை அதிர்ச்சியடைய வைக்கின்றது. இந்நிலை தொடருமானால், பெருகிவரும் மக்கள் தொகையைக் கவனத்தில் கொண்டு பார்க்கும்பொழுது ஒருகாலத்தில் மருத்துவர்களைத் தேட வேண்டிய சூழ்நிலை ஏற்படுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கடந்த வாரம் 'Times of India'-ல் வந்த ஒரு article "Shortage of doctors in India: 6 lakhs" ஆறு இலட்சம் டாக்டர்கள் ஏற்கெனவே குறைவாக உள்ளார்கள் என்று தந்திருக்கிறது. "According to a Planning Commission Report, while India is short of six lakh doctors, 10 lakh nurses and two lakh dental surgeons,. . .

. . .According to the report, for every 10,000 Indians, there is one doctor. In contrast, Australia has 249 doctors for every 10,000 people, Canada has 209, U.K. has 166 and U.S. has 548" என்று தந்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே 10,000 மக்களுக்கு ஒரே ஒரு மருத்துவர்தான் இந்த நாட்டில் உள்ளார் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்த நாட்டிலுள்ள 7 கோடி மக்களின்

பிரதிநிதிகளாக இங்கே 234 பேர் இந்த அவையிலே அமர்ந்துள்ளோம். இப்பொழுது இங்கு யாருக்காவது நெஞ்சு வலி ஏற்பட்டால் நாம் அடுத்த நொடி தேடப்போவது ஒரு மருத்துவரைத்தான். அப்படிப்பட்ட மருத்துவர்களுக்கு இந்த சமூகத்தில் சரியான பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றது என்பதுதான் உண்மை.

ஆம். சமீப காலமாக தனியார் மருத்துவமனைகளில் எதிர்பாராத மருத்துவ அசம்பாவிதங்கள் ஏற்படும்போது மருத்துவர்களும், மருத்துவமனைகளும் தாக்குதலுக்கு ஆளாகும் சம்பவங்கள் அன்றாடச் செய்திகளாக பத்திரிகைகளில் கட்டம் போட்டு இடம் பிடிக்கின்றன. ஓர் இடம் என்றில்லாமல், ஏதோ ஒரு நாள் என்றில்லாமல், பரவலாகத் தமிழகம் முழுவதும் இது அன்றாடச் செய்தியாக ஆகிவருவது நம்மை கவலைகொள்ளச் செய்கின்றது.

மரியாதைக்குரிய பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்கள் கவலையோடு பகிர்ந்துகொண்ட செய்தி, மதுக்கூரைச் சார்ந்த மருத்துவர் ஒருவரை சிகிச்சைக்கு வந்த நோயாளியின் உறவினர் அரிவாளால் தாக்கி மருத்துவர் காயமடைந்த சம்பவம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது ஒருவகையான operation தான். (சிரிப்பு)

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: அதையொட்டி மருத்துவர்கள் மேற்கொள்ள நேர்ந்த வேலைநிறுத்தம். பட்டுக்கோட்டை அருகே மருத்துவருக்கு அரிவாள் வெட்டு; முத்துப்பேட்டையில் நள்ளிரவில் மருத்துவருக்கு அச்சுறுத்தல்; சென்னையில் தனியார் மருத்துவமனை அடித்து நொறுக்குதல்; கன்னியாகுமரியில் தனியார் மருத்துவமனையில் கல் வீச்சு; கோவையில் நோயாளிகளின் பிணத்தோடு சாலை மறியல் என்று ஆங்காங்கே அரங்கேறிவரும் சம்பவங்கள் மருத்துவர்களை மிகப் பெரும் அச்சுறுத்தலுக்கு ஆளாக்கி வருகின்றன.

நோயாளிகளின் தரப்பில் சட்டரீதியான அணுகுமுறைக்கு வாய்ப்பிருக்கும்பட்சத்தில் இதுபோன்ற சம்பவங்களுக்கு இடம் கொடுக்காமல் மருத்துவர்களின் தொழில் சூழல் பாதுகாக்கப்படவேண்டியது சமூக நன்மைக்கு மிகவும் அவசியம் என்பதில் இருவேறு கருத்து இருக்கமுடியாது.

இந்நிலை தொடருமானால், மருத்துவக் கல்வி, மருத்துவ அறிவியல், மருத்துவ ஆராய்ச்சி, இறுதியாக அரசு மருத்துவத்தின் நிலை என்னவாகும் என்பதை சிந்திக்கும்போது கவலையே மிஞ்சுகிறது. இந்தப் போக்கினை சரிசெய்யக்கூடிய ஆற்றலும், சமூக விழிப்புணர்வும், தலைமுறை பொறுப்பும், சமூக நீதியின் பிதாமகன் முத்தமிழ் அறிஞர், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கே உண்டு என்று உளமார நம்புகிறேன். மருத்துவர்கள் அச்சமற்று தொழில் செய்ய ஏதுவாக ஆந்திராவில் இயற்றப்பட்டதுபோல் பாதுகாப்புச் சட்டம் (protective ordinance) உடனடியாகத் தமிழ்நாட்டிலும் இயற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில்தான் மருத்துவர்கள் மிகக் குறைந்த சம்பளம் பெற்று வருகிறார்கள். உதாரணத்திற்கு பேராசிரியர் பதவியை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், தமிழகத்தில் ரூ.35,000 சம்பளம் பெறுகிற அதே பேராசிரியர் கர்நாடகாவில் ரூ.75,000 சம்பளம் பெறுகிறார். அதே பேராசிரியர் ஆந்திராவில் ரூபாய் ஒரு இலட்சம் சம்பளம் பெறுகிறார். பல அரசு மருத்துவக் கல்லூரிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாததற்குக் காரணம் குறைந்த ஊதியமே. உதவி மருத்துவராகப் பணியில் சேரும் பல மருத்துவர்கள் பதவி உயர்வு இல்லாமலே பணியிலிருந்து ஓய்வு பெறுகின்ற நிலையும் தமிழ்நாட்டில் உள்ளது.

இதையேதான் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களும் இன்றையதினம் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். 'The Hindu' ஏட்டில் வந்துள்ள இந்த அறிக்கையில் "In the neighbouring States of Andhra Pradesh and Karnataka, doctors working in health and medical departments are getting better salary and promotions compared to those in Tamil Nadu." மிகச் சரியாகச் சொல்லியிருக்கிறார். இதில் ஒரேயொரு வேடிக்கை என்னவென்று சொன்னால், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்தத் தமிழகத்தை 10 ஆண்டு காலம் ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் டாக்டர்களுக்கு எத்தனை Pay Commission fix செய்திருக்கிறார்? எத்தனை டாக்டர்களுக்கு அந்த நேரத்தில் Time-bound promotion—பதவி உயர்வு கிடைத்தது என்பதை இந்த அவையில் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எனவே, ஊதிய விகிதத்தை மறுசீரமைப்பு செய்திட உயர்நிலைக் குழு அமைக்க வேண்டுமென்று கோரி, ஊதிய மறுசீரமைப்போடு மருத்துவர்களுக்கு காலம்சார்ந்த பதவி உயர்வும் (Time-bound promotion) வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-55

அடுத்து, செவிலியர்கள். மக்களைப் பற்றியேதான் எப்போதும் பேசிக்கொண்டேயிருப்போம். அந்த மக்களைப் பார்த்துக்கொள்கிற மருத்துவர்களைப் பற்றியும், செவிலியர்களைப் பற்றியும் யார்தான் பேசுவது? தமிழ்நாட்டில் 105 செவிலியர் கல்லூரிகளும், 110 செவிலியர் பள்ளிகளும் இருக்கின்றன. இதன்மூலமாக 10,500 செவிலியர்கள் ஆண்டுதோறும் வெளிவருகின்றனர். செவிலியர் துறையில் மட்டுமே உலகில் வேறு எந்தத் துறையிலும் இல்லாத அளவிற்கு 99.9 விழுக்காடு பெண்கள் உள்ளனர். பெண்கள் செவிலியர் பயிற்சி எடுப்பதற்காக 50 தனியார் செவிலியர் கல்லூரிகள் தொடங்க அரசாணை பிறப்பித்த இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இருந்தபோதிலும், செவிலியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியையும் இங்கு கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளேன். எந்தப் பட்டமாயினும் எந்தக் கல்லூரியில் பயின்றிருந்தாலும், தமிழ்நாடு தேர்வாணயம் நடத்தும் தேர்வு எழுதி அரசுப் பணியில் சேர முடியும். ஆனால், செவிலியர்கள் மட்டும் அரசுப் பணிக்கு செல்லவேண்டுமாயின் அரசுக் கல்லூரியில்தான் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இந்த நிலை மாறி செவிலியர்களும், எந்தக் கல்லூரியில் பயின்றிருந்தாலும், தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் நடத்தும் தேர்வு எழுதி அரசுப் பணியில் சேருவதற்கான வழிவகை செய்து செவிலியர் பற்றாக்குறையை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

உலகிற்கே முன்மாதிரியாகவும், இந்தியாவிலே முதன்முதலாகவும் செவிலிய பல்கலைக்கழகம் தொடங்க சட்டம் பிறப்பித்து, இதைத் தமிழ்நாடு செவிலிய மற்றும் மருத்துவச்சியர் குழுமம்மூலம் நடத்த அரசாணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஒரு மனிதனுக்கு மொத்தம் 32 பற்கள்தான் என்று உள்ளதால்தான் என்னவோ, மொத்தம் 385 வட்டார சுகாதார நிலையங்களில் 32-ல் மட்டுமே பல் மருத்துவ சேவைகள் கிடைத்து வருகின்றன. அனைத்து நிலையங்களுக்கும் பல் மருத்துவ சேவையை விரிவாக்கம் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அரசால் வழங்கப்பட்டிருக்கும் ஆம்புலன்ஸ் சேவை மக்களுக்கு மிகுந்த பயன் அளித்து வருகின்றது. ஆனால், பாமர மக்கள் பலருக்கு அந்தப் பலனை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியவில்லை.

எனவே, அவசர போலீஸ் எண் 100 என்பது போல் ஆம்புலன்ஸ் எண் மாநிலம் முழுமைக்கும் 1000 என்று இருக்குமேயானால், மக்கள் எளிதில் நினைவில் நிறுத்திக்கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

தற்பொழுது ஆரம்பகால கருப்பை வாய் புற்றுநோய் (Cancer of the Cervix) கண்டறிவதற்கான சிறப்பு முகாம்கள் Video coloscopy மூலம் சில மாவட்டங்களில் நடத்தப்படுகின்றன. மகளிர் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு இத்திட்டத்தை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, அதிகரித்துவரும், மார்பகப் புற்று நோயை ஆரம்ப காலத்திலேயே கண்டறிய அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் Mammogram கருவியை நிறுவி அதற்கான பயிற்சியை அனைத்து அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கும் (மணியடிக்கப்பெற்றது) வழங்க வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லா வகைப் புற்றுநோய்களுக்கும், மருந்துகளும், அதிநவீன சிகிச்சையும் எல்லா அரசு மருத்துவமனைகளிலும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

> *"மங்கையராய்ப் பிறப்பதற்கே – நல்ல*
> *மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"*

என்று தாய்மையின் மகத்துவத்தைப் போற்றிப் பாடியவன் தமிழன். மழலைச் செல்வம் இல்லாத பெற்றோரின் நிலையைத்தான் வள்ளுவனும்,

> *"குழலினி தியாழினி தென்பதம் மக்கள்*
> *மழலைச்சொல் கேளா தவர்"*

என்று பாடினான். மகப்பேறின்மை மங்கையரை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து அவர்கள்.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கைமீது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில

கருத்துகளைப் பதிய வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு இந்திய சுகாதாரத் துறையை, மிகப் பெரிய அளவிற்கு மேம்படுத்தவேண்டிய சூழல் உருவாகி இருக்கிறது. சமீபத்திலே சென்னையிலே நடைபெற்ற ஒரு மாநாட்டில், சுகாதாரத் துறைச் செயலாளர் திரு. சுப்புராஜ் அவர்கள் பேசுகின்றபோது, இந்தியாவில் மக்கள்தொகைக்கு ஏற்ப மருத்துவ விகிதாச்சாரம் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். மேலும், மருத்துவ மாணவர்களுக்குப் பாடம் நடத்த போதுமான மருத்துவப் பேராசிரியர்கள் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே, இத்தகைய சூழ்நிலையில் மருத்துவத் துறை என்பது மிகப் பெரிய அளவிற்கு இன்றைக்கு பேணிப் பாதுகாக்கவேண்டிய ஒரு துறையாக இருக்கிறது. ஏற்கெனவே ஓர் உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, இன்றைக்கு இந்திய மருத்துவத் துறையில், ஏறத்தாழ 6 இலட்சம் டாக்டர்கள் பற்றாக்குறை இருக்கிறது. 10 இலட்சம் நர்சுகள் பற்றாக்குறை இருக்கிறது. ஏறத்தாழ இரண்டு இலட்சம் பல் மருத்துவர்கள் பற்றாக்குறை இருக்கிறது. ஆனால், இன்னொரு பக்கம், வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய மருத்துவர்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. *(குறுககீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Dr. Gayathri Devi, I expect you to co-operate with the Chairperson, because of want of time. I have to keep up the time. *(குறுக்கீடுகள்)* *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1-00

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று அவையில் மானியக் கோரிக்கைமீதான விவாதம் தொடங்கியதே பிற்பகல் 12-20 மணிக்குத்தான். நான், அ.தி.மு.க. உள்பட அனைவரையும் கேட்டுக்கொண்டேன். டாக்டர் காயத்ரி தேவி அவர்களுக்கு இன்னும் நேரம் வேண்டுமென்றால், அவர்களுடைய கட்சி உறுப்பினர் ஒருவர் பேச இருக்கிறார். அந்த நேரத்தை எடுத்துக்கொள்வதாக இருந்தால் அவைக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பெ.சு. விஜயகுமார்தான் அடுத்துப் பேசப் போகிறார். திரு. விஜயகுமார், பேசுகிறீர்களா. இல்லையா? *(குறுக்கீடு)* திரு. மாரிமுத்து அவர்களை நான் பேச அழைத்துவிட்டேன். *(குறுக்கீடு)* திரு. மாரிமுத்து, இருங்கள்.

(குறுக்கீடு) இல்லை, இல்லை. அவர்களுடைய நேரத்தை எடுத்துக்கொள்கிறோம். இன்னொரு காங்கிரஸ் உறுப்பினருடைய நேரத்தை இவருக்கு எடுத்துக்கொள்கிறோம்.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மங்கையராய். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த 'மங்கையராய்ப் பிறத்தல்' என்று சொன்னீர்களே?

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: ஆமாம் சார். இதெல்லாம் முக்கியமான விஷயங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆமாம், ஆமாம். உங்கள் தொடர்புடைய சப்ஜெக்ட் அல்லவா!

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: "மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்று தாய்மையின் மகத்துவத்தை போற்றிப் பாடியவன் தமிழன். மழலைச் செல்வம் இல்லாத பெற்றோரின் நிலையைத்தான் வள்ளுவரும்,

'குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்'

என்று பாடினான். மகப்பேறின்மை மங்கையரை வாட்டியெடுக்கும் சமூக வேதனை. அதற்குத் தேவைப்படும் பலப் பல மருத்துவ சோதனை. அப்பேர்ப்பட்ட மங்கை ஏழையாய் இருந்துவிட்டால் சொல்லவும் வேண்டுமோ அவள் அடையும் வேதனை. எண்ணற்ற ஏழை மகளிருக்கு மகப்பேறின்மைக்கான சிறப்பு சிகிச்சை மையம் அரசால் தொடங்கப்படுமானால், ஆகிடும் அதுவே கலைஞர் அரசியல் வரலாற்றின் ஈடு இணையற்ற சாதனை. Infertility Speciality Centre—மகப்பேறின்மை சிறப்பு சிகிச்சை மையம் ஒன்றை பொது மருத்துவமனைகளில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இருதய நோய் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி அனைவரையும் தாக்குகிறது. இதைக் கண்டறிவதற்கு 64 Slice CT Scan எடுக்க சில நட்சத்திர மருத்துவமனைகள் ரூ.15,000/- முதல் ரூ.20,000/- வரை வசூலிக்கின்றனர். எனவே, இந்நோயைக் கண்டறிவதற்கான 64 Slice CT Scan கருவியை அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் நிறுவிட வழிவகை காண வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் MRI Scan அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

'அரிது அரிது மானிடராதல் அரிது
மானிட ராயினும் கூன் குருடு
செவிடு பேடு நீங்கிப் பிறத்த லரிது.'

என்று கூறியுள்ளார்கள். இதனால்தான் Rubella வைரசால் பிறவி ஊனம் ஏற்படும் என்று அறிந்து, அதைத் தடுப்பதற்காக 15 வயது இளம் பெண்களுக்கு Rubella தடுப்பூசி போடுவதற்காக கடந்த சமூக நலத் துறை மானியக் கோரிக்கையில் நான் கேட்டதற்கிணங்க, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் தன்னுடைய மானியக் கோரிக்கையில் இனி தமிழகத்தில் உள்ள இளம் பெண்களுக்கு Rubella Vaccine வழங்கப்படும் என்று அறிவித்தார். ஆனால், அது அறிவிப்பு நிலையிலேயே இருக்கின்றது என்பதுதான் வேதனையாக இருக்கின்றது.

சிவகங்கை மாவட்டத்தைச் சோதனை மாவட்டமாக எடுத்துள்ளதாகவும், மத்திய அரசின் நிதி உதவியை எதிர்பார்ப்பதாகவும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பில் வெளியிட்டுள்ளார்கள். மேலும், தமிழ்நாட்டை பிறவி ஊனமில்லாத தமிழ்நாடாக மாற்ற வேண்டுமாயின் மத்திய அரசின் உதவியை எதிர்பாராமல் உடனே Rubella தடுப்பூசியை தமிழக அரசு 14 முதல் 15 வயதுள்ள பெண்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டத்திற்கு 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அத்திட்டத்தின் செயலாக்க விவரத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்குமாறு இச்சபையில் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், பச்சிளம் குழந்தைகளுக்கு சின்னம்மைத் தடுப்பூசி (Chicken Pox Vaccine) அரசு மருத்துவமனைகளில் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, அரசு மருத்துவமனைகளில்—அதிலும் குறிப்பாக, நேற்றையதினம் ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன்—அங்கே கழிவறைகள், நோயாளிகள் தங்கும் இடங்கள், சுற்றுப்புறம் எல்லாம் அசுத்தமாக இருக்கின்றன. ஆகையால், முடிந்தவரையிலும், சுத்தமாக, hygienic ஆக வைப்பதற்கு அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அரியலூர் மற்றும் ஆத்தூர் அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு டாக்டர், 'கொல்கிறேன், கொல்கிறேன்' என்று நிறைய தடவை 'கொல்கிறேன்' என்று சொல்கிறீர்களே! காப்பாற்றுங்கள், உயிரைக் காப்பாற்றுங்கள் டாக்டர். (சிரிப்பு)

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: தமிழகத்தில் கிராமப்புறங்களில் 8,706 துணை சுகாதார மையங்கள் செயல்படுகின்றன. கிராம சுகாதார மையங்கள் பாதி நேரம் மூடிக் கிடப்பதாகக் குறை கூறுகின்றனர். இந்நிலைமை மாறி, இந்தத் துணை சுகாதார மையங்களும் நாள் முழுவதும் திறந்து வைக்கப்பட்டு மருத்துவ வசதிகள் கிடைக்க வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கே.எம்.சி.-யில் உள்ள Ortho Laser Theatre ஓராண்டாகச் செயல்படாமல் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

காங்கேயம் அரசு மருத்துவமனை ஒரு தாலுகா தலைமை மருத்துவமனை. தாலுகா தலைமை மருத்துவமனை என்று சொன்னால் 5 முதல் 7 மருத்துவர்கள் அங்கு பணியில் இருக்கவேண்டும். ஆனால், அங்கே இரண்டே இரண்டு மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். அதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

வேலூர் நகரில் 80 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த வேலூர் Government Pentland Hospital மூடப்பட்டதை திறந்து செயல்பட அரசு 21-11-2007 ஆம் நாளன்று G.O. Ms. No. 432-ஐ, பிறப்பித்து, 5 மாதங்களாகியும் அது இன்னும் திறக்கப்படவில்லை. அரசு உடனே அதைத் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆதி திராவிட மக்களான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்ற வால்பாறையிலுள்ள அரசு மருத்துவமனை மற்றும் கோட்டூர் அரசு மருத்துவமனை ஆகியவற்றை 50 படுக்கைகள் கொண்டவையாக விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, எனது தொகுதியான மதுராந்தகத்தில் அமைந்துள்ள அரசு பொது மருத்துவமனை NH 45 National Highways அருகே அமைந்துள்ளது. இந்த NH 45-ல் தினந்தோறும் விபத்துகள் நடைபெறுவதை நீங்கள் எல்லோரும் பத்திரிகைகள்மூலம் அறிந்திருப்பீர்கள். எனவே, மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் ஓர் அவசர விபத்து சிகிச்சைப் பிரிவைத் தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும், இந்த மருத்துவமனையில் தற்போதுள்ள 88 படுக்கைகளை 150 ஆக உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதியில் உள்ள படாளம் சர்க்கரை ஆலையை விரைவாகத் திறந்து, அங்குள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் தினந்தோறும் ஒரு தொழிற்சாலை திறக்கப்படுகின்றது. ஆனால், சென்னைக்கு மிக அருகிலேயே இருக்கக்கூடிய எனது மதுராந்தகம் தொகுதியில் இதுவரை எந்தத் தொழிற்சாலையும் திறக்கப்படவில்லை என்பது வருத்தத்தை அளிக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: எனவே, நாடாளுமன்றத்திலே மத்திய அரசு பொருளாதார அறிக்கையை தாக்கல் செய்திருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எடுத்தவுடனே எனவே என்றால் எப்படி?

திரு. வே. மாரிமுத்து: ஏற்கெனவே நான் பேசியதன் தொடர்ச்சி இது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைச் சொல்லுங்கள்.

திரு. வே. மாரிமுத்து: நாடாளுமன்றத்திலே மத்திய அரசு தாக்கல் செய்திருக்கின்ற பொருளாதார அறிக்கையின்படி, இந்தியாவில் வசதியின்மையால், மருத்துவ வசதி பெறமுடியாதவர்களின் எண்ணிக்கை, நகர்ப்புறத்தில் 10 கோடியிலிருந்து 21 கோடியாக உயர்ந்திருக்கின்றது. கிராமப்புறங்களிலே 15 கோடியிலிருந்து 24 கோடியாக உயர்ந்திருக்கின்றது என்கின்ற அதிர்ச்சியான தகவல் நமக்குக் கிடைத்திருக்கின்றது. எனவே, பொதுச் சுகாதாரத் துறைக்கு மேலும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு தேவை என்பதை இந்த அறிக்கை

சுட்டிக்காட்டுகின்றது. இன்றைக்கு தமிழகத்திலே மாவட்டத் தலைநகரங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் சுகாதாரமற்ற நிலையில் இருக்கின்றன. அத்தகைய மருத்துவமனைகளை சுகாதாரம் மிக்க மருத்துவமனைகளாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் நாகப்பட்டினம் தலைமை மருத்துவமனை, திருப்பூர் மருத்துவமனை ஆகியவற்றைப் பார்த்தாலே அவை எப்படி இருக்கின்றன என்ற நிலை தங்களுக்குத் தெரியும்.

தற்பொழுது மத்திய அரசு இந்தியாவிலே மூன்று இடங்களில் மருந்துகள் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளை நடத்தி வருகின்றது. அவற்றிலே ஓர் ஆலை இமாசலப் பிரதேசத்திலும், மற்ற இரண்டு ஆலைகள் தமிழ்நாட்டிலும் இயங்குகின்றன. குன்னூரில் ஓர் ஆலையும், கிண்டியில் மற்றோர் ஆலையும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், நிதி நெருக்கடி என்ற காரணத்தைச் சொல்லி, மத்திய அரசு தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்த இரண்டு ஆலைகளையும் மூடுவதற்கு முயற்சி எடுத்திருக்கின்றது. இந்த ஆலைகள் மூடப்பட்டால், நோய்த் தடுப்பு மருந்துகள் ஏழைகளுக்குக் குறைந்த விலையில் கிடைப்பது எட்டாக்கனியாக மாறிவிடும். சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள் பயன்பெற வேண்டுமென்று சொன்னால், குன்னூரில் இயங்கக்கூடிய ஆலையும், கிண்டியில் இயங்கக்கூடிய ஆலையும் உடனடியாக இயக்கப்படவேண்டுமென்று அரசை வலியுறுத்துகின்றேன். மத்திய அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லையென்று சொன்னால், மாநில அரசே நிதியுதவி அளித்து அந்த ஆலைகளை இயக்கவேண்டுமென்று நான் வலியுறுத்துகின்றேன்.

தமிழக அரசு மருத்துவத் துறைக்கு இப்போது ஏராளமாகச் செய்து வருகின்றது. அதில் மாற்றுக் கருத்து ஒன்றுமில்லை. ஆனால் கடந்த 5 ஆம் தேதி சென்னை மாநகரத்திலே, பெரம்பூர் பகுதியிலே பிரசவத்திற்குச் சென்ற கலைவாணி என்ற இளம் பெண்ணுக்கு அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டு அங்கே ஆம்புலன்ஸ் வசதி இல்லாத ஒரே காரணத்தால், அந்தப் பெண் மரணமடைந்திருக்கின்றார். இப்படிப்பட்ட நிகழ்வுகள் தமிழ்நாட்டில் தவிர்க்கப்படவேண்டும்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் விபத்துக்குள்ளாகி நோயாளிகள் மருத்துவமனைக்குச் சென்றால், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்ற அத்தகைய நோயாளிகளிடம்

X-ray, Scan எடுப்பதற்குப் பணம் கட்டவேண்டுமென்று வலியுறுத்துவது ஒரு மனிதாபிமானமற்ற செயல் என்று நாங்கள் கருதுகின்றோம். எனவே விபத்தில் சிக்கி, நோயாளிகள் மருத்துவமனைகளுக்கு வருகின்றபோது எத்தகைய கட்டணமும் பெறாமல் X-ray, Scan போன்ற வசதிகளைத் தரவேண்டுமென்று வலியுறுத்துகின்றோம். அதேபோல, மாநிலம் முழுவதும் இருக்கின்ற மாவட்ட, வட்ட மருத்துவமனைகளில் M.R.I. Scan வசதி இருப்பதற்கு அரசு உத்தரவாதம் செய்யவேண்டும்.

பிற்பகல் 1-10

கிராமப்புறங்களில் துணை சுகாதார நிலையங்கள் பெரும்பகுதி ஊருக்கு வெளியேதான் அமைக்கப்படுகின்றன. அத்தகைய சுகாதார நிலையங்களுக்கு இரவு நேரங்களில் மக்கள் செல்வதற்கு அச்சப்படுகின்றார்கள். எனவே, மக்கள் வாழ்கின்ற மத்தியப் பகுதிகளில், துணை சுகாதார மையங்கள் அமைப்பதற்குண்டான முறையில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போது ஒரு துணை சுகாதார மையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் 7 கிலோ மீட்டர் இடைவெளி இருக்கவேண்டும் என்கிற வரையறை தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த வரையறை உடனடியாக நீக்கப்பட்டு மக்கள்தொகை அடிப்படையில் துணை சுகாதார மையம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். மலைப் பகுதிகளில் நடமாடும் மருந்தகம் தற்போது செயல்படுகிறது. ஆனால், போதுமான மருத்துவர்கள் இல்லை என்கிற குறைபாடு இருக்கிறது. அது உடனடியாகக் களையப்படவேண்டும். இப்போது தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் நாய்க் கடி, பாம்புக் கடிக்கு உரிய மருந்துகள் ஸ்டாக் இல்லை என்கிற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, அத்தகைய மருந்துகள் கைவசம் இருப்பதற்குண்டான முறையில் அரசு உத்தரவாதம் செய்யவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அறிவிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி உடன் துவக்கப்படுவதோடு சித்த மருத்துவக் கல்லூரி ஒன்றும் அங்கே துவக்கப்படவேண்டுமென வலியுறுத்துகிறேன். அதேபோல, தருமபுரி மாவட்டத்தில், மாவட்டத் தலைமை மருத்துவமனையை அரூரில் அமைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட மருத்துவமனைகளில், அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பிட வசதிகள் சுகாதாரமான முறையில் நோயாளிகளுக்குக் கிடைப்பதற்கு அரசு உத்தரவாதம்

செய்யவேண்டும். நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் செயல்படும் தாய் சேய் நல விடுதிகளை மக்கள் முழுமையாகப் பயன்படுத்த ஆபரேஷன் தியேட்டர் வசதியுடன் செயல்பட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மதுரை, இராஜாஜி மருத்துவமனையை தினசரி பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட உள், வெளி நோயாளிகள் பயன்படுத்துகின்றார்கள். போதுமான மருத்துவர்கள் இல்லை. தற்போது 80 மருத்துவர்கள் பற்றாக்குறை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அதை உடனடியாக சீர் செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். துணை சுகாதார நிலையங்களில், V.H.N.-க்கு உதவியாக தாய் ஒருவர் இருந்து வருகிறார். அவருக்கு மாநில அரசு வழங்கக்கூடிய தொகை என்பது மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய். தமிழ்நாட்டிலே முதியோர் உதவித் தொகையே மாதம் 400 ரூபாய் வழங்கப்படுகிறது. எனவே, அப்படிப்பட்டவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேபோல, மருத்துவத் துறையில் அரசு மருத்துவர்கள் பெறும் சம்பளம் மற்றும் பதவி உயர்வுகளிலும் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமெனக் கோரியுள்ளார்கள். அவற்றின்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு, என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். நாகை தலைமை மருத்துவமனையில், மகப்பேறு மருத்துவர் இல்லை. மகப்பேறு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 10 மருத்துவர்கள் நியமிக்கப்படவேண்டும். ஆனால், ஒரு மருத்துவர்கூட நியமிக்கப்படவில்லை. Scan வசதி இருக்கிறது. மருத்துவர் இல்லை. 33 மருத்துவர்கள் இருக்கவேண்டும். 12 மருத்துவர் பணியிடங்கள் இப்போது நிரப்பப்படாமல் இருக்கின்றன.

அதேபோல, நவீன சலவை இயந்திரம் பல கோடி ரூபாயில் தருவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக செயல்படாமல் இருக்கிறது. இறுதியாக நான் கேட்டுக்கொள்வது நாகை மாவட்டத் தலைமை மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக செயல்படுவதற்குண்டான தரத்தோடு இருக்கிறது. எனவே, அரசு வரக்கூடிய ஆண்டிலாவது நாகையிலே மருத்துவக் கல்லூரியை துவக்க வேண்டுமென வலியுறுத்தி வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை, ஒரு அறிவிப்பு (குறுக்கீடு) நான் announce பண்ணிவிடுகிறேன்.(குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் announce பண்ணவேண்டும். இன்று காலை திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது, ** என்று கூறிய வார்த்தைகளும் அதனைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்கள், ** அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் பேசுகின்றபோது, குன்னூரிலும், கிண்டியிலும் இருக்கின்ற மத்திய அரசினுடைய மருந்து உற்பத்தித் தொழிற்சாலைகளை மத்திய அரசு மூடுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றது என்ற ஒரு தகவலை இங்கே தெரிவித்திருக்கின்றார். அது உண்மைக்கு மாறான தகவல். மத்திய அரசோ, மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சரோ அல்லது அத்துறையின் செயலாளர் அவர்களோ, எந்தவித அறிவிப்பும் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை. இது உங்களுக்கு அவசியமே இல்லை. அதற்கு Minister பதில் சொல்வார். எப்படி? மத்திய அரசினுடைய பிரதிநிதியாக நீங்கள் பதில் சொல்லமுடியுமா? இல்லை, எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதாலேயே அந்த அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாக நீங்கள் பதில் சொல்லமுடியாது. திரு. குணசேகரன் அவர்கள். Sir, ஒரு accusation-க்கு நீங்கள் பதில் சொல்லமுடியாது. அதற்கு அமைச்சர்தான் பதில் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-15

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக எங்கள் மருத்துவர் சின்னய்யா அவர்கள் டெல்லிக்குச் சென்ற பிறகுதான் தாம்பரத்தில் பல கோடி ரூபாயில் இந்திய நாட்டினுடைய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை அழைத்து வந்து

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டிருக்கிறது. 520 கோடி ரூபாயில் சேலத்தில் Super Speciality என்கிற மருத்துவமனை கொண்டு வரப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். நேரமில்லை. அவருடைய கட்சி உறுப்பினர் நாளைக்குப் பேச இருக்கிறார். அவர் எதைச் சொல்லவேண்டுமோ அதை அவர்மூலமாகச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச அனுமதியளித்த தங்களுக்கும், வாய்ப்பளித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிவகங்கை மாவட்டம், தலைநகர் சிவகங்கைக்கு இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பிலும் தொகுதி மக்கள் மற்றும் மாவட்ட மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டம், கல்லலில் உள்ள ஒன்றிய மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக ஏற்று நடத்தவேண்டும். 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வசிக்கும் ஒன்றியத் தலைநகரான கல்லலில் மருத்துவமனை இல்லாமல் இருக்கும் நிலையை மாற்ற வேண்டும். எனது தொகுதியில் மதகுபட்டி, மறவமங்கலம், சிலுக்கப்பட்டி பகுதிகளில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை உருவாக்க வேண்டும்.

ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்தில் 30 படுக்கைகள் கொண்ட 24 மணி நேர மருத்துவமனையாக மாற்றித் தரவேண்டும்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை, ஆதிச்சபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக மாற்றித் தரவேண்டுகிறேன். திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மருத்துவர் நியமிக்க வேண்டும்.

நன்னிலத்திலுள்ள அரசு பொது மருத்துவமனையில் பெண் மருத்துவரை அவசியம் நியமிக்க வேண்டும்.

மக்கள் நல்வாழ்வுத் துறை மற்ற எல்லாத் துறைகளையும்விட ஒவ்வொரு மனிதனுக்கும் தேவைப்படுகிற துறையாகும். மனிதன் முழு ஆற்றலோடு, ஆரோக்கியத்தோடு, சுகாதாரத்தோடு இருந்தால்தான் மற்ற துறைகளில் கவனமும், ஈடுபாடும் கொள்ளமுடியும். உடல் ஆரோக்கியமற்ற சூழலில் எத்தகைய திறமைகள் பெற்ற மனிதனாக இருந்தாலும், அவனது திறமைகளைப் பயன்படுத்தமுடியாது. எனவேதான் நமது முன்னோர்கள் சுகாதாரத்தை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்க்கை முறைகளை உருவாக்கி வாழ்ந்துள்ளார்கள். நமது பாரம்பரியத்தில் உடல் நலனுக்காக பாதுகாப்பான உணவு, குடிநீர், சுற்றுப்புறச்சூழல், உடற்பயிற்சி, விளையாட்டுக்கள் மற்றும் இயற்கைச் சார்ந்த மூலிகை வைத்திய முறைக்ள் என்று வகைப்படுத்தப்பட்டு மனித இனத்தைப் பாதுகாத்து வளர்த்துள்ளனர். அந்த அடிப்படையில் தமிழக அரசும், தமிழக மக்களின் நலனில் அக்கறை கொண்டு நிதியொதுக்கீடுகளைச் செய்வதோடு, பல திட்டங்களைச் செயல்படுத்தி, சிறப்பாக நிறைவேற்றி வருவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

முதலில் நமது மக்கள்தொகைப் பெருக்கத்திற்கேற்ப மருத்துவர்களின் எண்ணிக்கை இடம்பெறவேண்டும் என்ற நோக்கில் தமிழக முதல்வர் அவர்கள் மாவட்டத் தலைநகர்களில் ஒரு மருத்துவக் கல்லூரி என்றத் திட்டத்தை அறிவித்தது மிகச் சிறப்புக்குரியது.

இது ஏழை கிராமப்புற மாணவர்கள் மருத்துவக் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்குவதோடு அனைத்து வசதிகளடங்கிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் எதிர்காலத்தில் மாவட்டங்களில் உருவாக வாய்ப்பளிக்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரை தமிழகம் முழுவதும் மருத்துவமனைக் கட்டடங்கள் மற்றும் நவீன உபகரணங்கள் மருத்துவமனைகளில் வைப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை.

கடந்த 2 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 90 விழுக்காடு அளவில் மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மருத்துவர்கள் பணியமர்த்தப்படுகிற அதே நேரத்தில் பல மருத்துவமனைக் கட்டடங்கள், உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பணம் செலவழிக்கப்படுகிறது. மேலும் ஆபரேஷன் தியேட்டர் போன்ற நுட்பமான அறைகள் பழுதுபார்க்கப்படுகின்றன. இந்தப் பணிகள் தற்போது பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவின்மூலம் செய்யப்படுகின்றன. இம்முறையை மாற்றி காவல் துறை, நீதிமன்றங்களைப்போல தனியான கட்டடப் பிரிவை மருத்துவமனைகளுக்கு மட்டும் உருவாக்கி கட்டுமானப் பணிகளைச் செய்திடவேண்டும்.

மருத்துவமனை கட்டட வடிவமைப்புகளையும், தரத்தையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் அரசு தலைமை மருத்துவமனை வரை மருத்துவமனைக்கு உள்ளும் அதைச் சுற்றிலும் சுகாதாரத்தை உருவாக்குவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். மருத்துவமனைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு கூடுதல் நிதியொதுக்கீடுகள் செய்துகொள்வதோடு தொண்டு நிறுவனங்கள், என்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளைக் கண்டிப்பாகப் பயன்படுத்தும் முறைகளை வகுக்கவேண்டும். கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு எளிதில் மருத்துவ உதவிகள் கிடைத்திட கிராமப்புற மருத்துவமனைகளில் பணிபுரிபவர்களுக்குக் கூடுதல் சலுகைகள் வழங்கவேண்டும்.

பிற்பகல் 1-20

பல துறைகளில் ஊதியம் உயர்ந்துள்ள நிலையில், மருத்துவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கவேண்டும். அரசு மருத்துவர்களை ஊக்கப்படுத்துகிற வகையில் சிறந்த மருத்துவர்களுக்கு கௌரவப்படுத்துகிற விருதுகள் வழங்கவேண்டும். தனியார் அரசு மருத்துவமனைகளில் தவறான சிகிச்சையால் மரணம் அடைந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவும், தவறு செய்யும் மருத்துவர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் வழிமுறைகளை உடனடியாக உருவாக்க வேண்டும். தவறான சிகிச்சையால் ஏற்படுகிற மரணம், சட்டம் ஒழுங்கை பாதிக்கிற பிரச்சினையாக உருவெடுக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். தமிழகத்தில் உள்ள மருத்துவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கவேண்டும். நிரந்தரம் செய்யப்பட்ட ஒப்பந்த

மருத்துவர்கள், ஒப்பந்தப் பணியில் பணியமர்த்தப்பட்ட காலத்திலிருந்து பணிக்காலமாக எடுத்துக்கொள்ளவேண்டும். அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பான, அன்பான மருத்துவ வசதி கிடைக்க உறுதி செய்யவேண்டும்.

மத்திய அரசு தடுப்பூசி உற்பத்தி செய்யும் குன்னூர், கிண்டி பொதுத் துறை நிறுவனங்களை மூட எடுத்த நடவடிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தடுத்து நிறுத்தவேண்டும். அங்கு உற்பத்தி செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். கிண்டி தடுப்பூசி மையத்தில்தான் தெற்கு ஆசியாவிலேயே மஞ்சள் காய்ச்சலுக்கு தடுப்பூசி தயாரிக்கிறார்கள். இந்த உற்பத்தி நிறுத்தப்படுவதன்மூலம் மிகப் பெரிய ஆபத்து ஏற்படும். தடுப்பூசிகளில் 60 சதவிகித உற்பத்தி செய்யும் பொதுத் துறை நிறுவனங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன்மூலம்தான் ஏழையெளிய மக்கள், இலவசமாக போலியோ, வெறி நாய்க்கடி, T.T. போன்றவற்றுக்கான தடுப்பூசிகளைப் பயன்படுத்தமுடியும். அத்தியாவசியமான இந்தத் தடுப்பூசிகளுக்கு தனியார் கம்பெனிகளைச் (மணியடிக்கப்பெற்றது) சார்ந்திருப்பதன்மூலம் ஏழையெளிய மக்களுக்கு பெரும் பாதிப்பு உண்டாகும்.

அரசின் சார்பில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவ மாணவிகளுக்கு அரசே கல்விக் கட்டணத்தை ஏற்கவேண்டும். மருத்துவக் கல்லூரியில் முதுநிலை மருத்துவம் படிப்பதற்கு அதிக இடங்களை உருவாக்க வேண்டும். மயக்க மருந்து அளிக்கும் மருத்துவர்களுக்கு தமிழகத்தில் மட்டுமல்லாமல், உலக அளவில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், மயக்க மருந்து அளிக்கும் மருத்துவர்கள் அதிக அளவில் படிக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள்.

திரு. சு. குணசேகரன்: ஒப்பந்தத் தொழிலாளர்கள் 3,000 நபர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் ஒரு நாளைக்கு 10,000 புற நோயாளிகள் வருகிறார்கள். அதற்கேற்ப Pharmacists இல்லை. அந்தப் பணியிடங்களை நிரப்பவேண்டும். தமிழ்நாடு முழுவதும் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும்.

தடுப்பூசி மையங்களைப்பற்றி முதலிலேயே நான் குறிப்பிட்டேன். அதைப்போல, இன்றைக்கு மத்திய அரசாங்கம் தனியார்மூலமாக தடுப்பூசிகளைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன்மூலமாக இந்தியாவில் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள், மிகப் பெரிய பாதிப்படையக்கூடிய அபாயம் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையை மேற்கொள்கிற. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிரீடங்கள் தேவையில்லை, நான் மறுபடியும் பிறக்க விரும்பவில்லை, என்னுடைய நோக்கம் எல்லாம், என் அருகில் இருப்பவரின் துன்பத்தைத் துடைப்பதுதான் என்று முழக்கமிட்ட மருத்துவத்தின் தந்தை ஹிப்போகிரடிஸ் அவர்களை நினைவுகூர்ந்து, இந்த மன்றத்தில் நான் நின்று பேசுவதற்கு வாய்ப்பளித்த மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், எங்கள் ஆருயிர் அண்ணன், வைகோ அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அனுமதியளித்தத் தங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மறுபிறவி வேண்டாமென்று சொன்னதாலே சன்னியாசி ஆகிவிடுவீர்களோ என்னமோ என்று நினைத்தேன். (சிரிப்பு)

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

என்ற அய்யன் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க நோய் நொடி இல்லாமல் மக்கள் நலமுடன் வாழ்வதே ஒரு நாட்டிற்கு அழகு. இந்த அழகினைப் பாதுகாப்பதில் நாட்டில் உள்ள மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் துறையில் உள்ள உதவியாளர்களின் பங்கு மிகப் பெரியது. மருத்துவம் என்பது புனிதமான சமூக சேவை. ஒரு மருத்துவரிடம் சிகிச்சை பெற வரும் மருத்துவப் பயனாளிகள் நற்குணம் அடைந்து செல்லவேண்டும் என்றுதான் ஒவ்வொரு மருத்துவரும் நினைப்பார். இதற்காக மருத்துவர்கள் செய்யும் தியாகம்

அளவிட முடியாதது. ஓய்வின்றி உறக்கமின்றி, இரவு பகல் பாராது பணி புரிகிறார்கள், சேவை செய்கிறார்கள். இப்படிப்பட்ட சேவையைப் பாதிக்கின்ற வகையில் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களைக் களங்கப்படுத்தும் வகையில் அல்லது அவர்கள் மனச் சோர்வு அடையும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிகழ்வுகள் சம்பந்தமாக இந்திய மருத்துவச் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையின் தலைவர் டாக்டர் மோகன்தாஸ் அவர்கள் நாட்டிலுள்ள மருத்துவர்களுக்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார்கள். இதே அறிக்கையை அரசின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கின்றார்கள். அந்த அறிக்கையை நான் இங்கே படிக்கின்றேன்.

பிற்பகல் 1-25

"Nowadays our profession is at crossroads. Daily we are receiving messages from our doctors regarding problems by all sections of society. Many times patients' attenders are mis-lead and join hands with anti-social mobs, media and the public at large. Sometimes we are focussed as villains in the society and are always considered guilty."

உதாரணமாக மாரடைப்பு போன்ற வியாதிகளாலும், பாம்புக் கடி, சாலை விபத்து போன்ற விபத்துக்களாலும் உயிருக்கு ஆபத்தான நிலையில் வருகின்ற மருத்துவப் பயனாளிகளின் நிலைமையை அவர்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் விளக்கிச் சொல்லி மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிகிச்சை பலனின்றி சில நேரங்களில் உயிரிழப்பு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நேரங்களில் மருத்துவப் பயனாளிகளின் நிலைமையை எடுத்துக்கூறிய பின்பும், உயிரிழப்பு ஏற்பட்டால் சில சமூகவிரோதிகளின் தூண்டுதலால் மருத்துவமனைக்கும், மருத்துவர்களுக்கும் சேதாரம் ஏற்படுகின்றது. இதைத் தவிர்ப்பதற்காக அண்டை மாநிலமான ஆந்திராவில் மருத்துவர்களைப் பாதுகாப்பதற்காக ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதைப்போல் நம் தமிழ்நாட்டிலும் பிறப்பிக்க வேண்டுகிறேன். தற்போது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் அனைத்துத் துறைகளுக்கும் அமல்படுத்தப்பட்டிருக்கின்றது. சில இடங்களில் இச்சட்டம் சிலரால் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சட்டத்தை குறைந்தபட்சம் மருத்துவர்கள்மீது திணிப்பதை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழகத்தில் கிராமப்புறங்களில் சுமார் 8,860 துணை சுகாதார மையங்கள் செயல்படுகின்றன. இம்மையங்களில் கிராமச் சுகாதார செவிலியர்கள் தங்கிப் பணிபுரியும் விதமாக இருப்பிடத்துடன்கூடிய மையங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. கிராமத்திலுள்ள மக்களுக்கு அவர்கள் வீடு தேடிச் சென்று மருத்துவ உதவிகள் அளிப்பதே இவர்களின் முக்கிய வேலையாகும். ஆனால், இவர்கள் அவ்வாறு கிராமங்களில் உள்ள வீடுகளுக்குச் செல்லும்போது இந்த மையங்கள் மூடப்பட்டிருக்கும். இதனைக் காணும் பொதுமக்கள் கிராமச் சுகாதார மையங்கள் மூடப்பட்டிருப்பதாகக் குறை கூறுகின்றனர். இந்நிலைமை மாறி இந்த துணை சுகாதார மையங்களும் நாள் முழுவதும் திறந்து வைக்கப்பட்டு மருத்துவ வசதிகள் கிடைக்க வசதிகள் செய்யப்படின் பொதுமக்கள் பெரிதும் மகிழ்வடைவர். எனவே, செவிலியர் ஒருவரும் அவருக்கு உதவியாக உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டு துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டால் பொதுமக்கள் பெரிதும் பயன்பெறுவர்.

செவிலியர்கள் துணை சுகாதார நிலையங்களில் தங்க இயலாது. அவர்கள் சம்பந்தப்பட்ட P.H.C-லிருந்து சென்று வர வாய்ப்புகள் தர வேண்டும். ஒவ்வொரு துணை இயக்குநர் அலுவலகத்திலும், Reserve மருத்துவர் மற்றும் மருந்தாளுனர் பதவிகளை உருவாக்கிட வேண்டும். மருத்துவப் பயனாளிகள் நலச் சங்கத்தை நிர்வகிக்கும் மருத்துவர் தலைவராக இருக்கிறார். மருந்தாளுநர், Member-Secretary ஆகியோருக்கு சங்க சட்ட விதி குறித்தும், அதன் செயலாக்கம் குறித்தும் பயிற்சி வழங்கவேண்டும்.

புதிதாக செவிலியர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியமர்த்தும்போது பொதுச் சுகாதாரப் பயிற்சி கொடுக்கவேண்டும். வட்டார மருத்துவ அலுவலரின்கீழ் சுமார் 90 பேர் பணியாற்றுகிறார்கள். இதில் சுமார் 70 பேர் களப் பணிக்குச் செல்கிறார்கள். வட்டார மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிர்வாகத்தையும் பார்க்கவேண்டும். களப் பணி நடைபெறுவதையும் மேற்பார்வையிடவேண்டும். இப்படிப்பட்ட பணிச் சுமை இருப்பதால் வட்டார மருத்துவ அலுவலருக்கு O.P. பார்ப்பதிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும். மருத்துவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மருத்துவப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். நீதிமன்றம், Postmortem போன்ற பணிகளுக்குச் சென்று வரும் மருத்துவர்களுக்கு தனியாக அலவன்ஸ் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் கருவுற்ற பெண்களுக்கு ரூபாய் 6,000 நிதியுதவி எவ்வித வருமானச் சான்றிதழுமின்றி வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர், உங்கள் பேச்சை முடியுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: One second. ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் கைத் தொலைபேசி, land line Phone connection மற்றும் Two Wheeler போன்றவை இருந்தால் அவர்களுக்கு, உழவர் அட்டை வேண்டுமென்று கேட்கிறார்கள்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

6. அறிவிப்பு

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கை விவாதம் 24-4-2008 அன்றும் தொடர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் நாளையும் தொடரும். நாளை, முதலில் டாக்டர் க. நெடுஞ்செழியன், பின்னர் திரு. எம். அன்பழகன், அதன் பின்னர் திரு. ஆர்.கே. பாரதி மோகன் ஆகியோர் பேசலாம்.

7. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (24-4-2008) வியாழக்கிழமை, வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 24-4-2008, வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, 24-4-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, 24-4-2008 (வியாழக்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

48. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 323 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

118. மானியக் கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

119. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

120. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஆறாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை)

இணைப்பு

(400 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

அத்தியாயம்–1

முன்னுரை

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழிக்கேற்ப மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் செயல்படும் இந்த அரசு, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையைப் பொறுத்தளவில், நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்புப் பணிகளுக்கு அதிமுக்கியத்துவம் அளித்து, நோய் வராமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகளையும், நோயுற்றவர்களுக்கு நவீன மருத்துவக் கருவிகள்மூலம் சிகிச்சை அளித்து நோய்த் தீர்ப்புப் பணிகளையும் செவ்வனே செயல்படுத்த முழு ஆதரவையும் அளித்து வருகிறது.

1.1. நோய்த் தடுப்பு நடவடிக்கையில் இந்த அரசு தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டு, அதன் அடிப்படையில் முன்னரே நோய் கண்டறிந்து மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் நோக்கோடு 'வருமுன் காப்போம் திட்டத்தினை' அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 31-3-2008 வரை 5,894 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 61.23 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

1.2. மக்களின் வாழ்க்கைத் தரம் மாறியது உட்பட பல்வேறு காரணங்களுக்காக தடுப்பூசிமூலம் தடுக்கக்கூடிய நோய்கள் திரும்ப உதயமாகி, அதிகமாகியும் உள்ளன. இந்த நோய்களை ஒழிக்க அரசு தீவிரம் காட்டிவருகிறது. சமீபகாலமாக போலியோ சொட்டு மருந்து முகாம்கள் 6-1-2008 மற்றும் 10-2-2008 அன்றும் நடத்தப்பட்டு அதன்மூலம் 72 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டம் பெரம்பலூர், விழுப்புரம், கடலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, அதன்மூலம் 17.34 இலட்சம் குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்.

[2008 ஏப்ரல் 23

டி.இ.சி. மற்றும் அல்பென்டாஜோல் மாத்திரைகள் வழங்கும் ஒட்டுமொத்த சிகிச்சைத் திட்டம் யானைக்கால் நோய் அதிகமாகக் காணப்படும் 13 மாவட்டங்களிலும் சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டு அதன்மூலம் 2.60 கோடி மக்கள் பயன் பெற்றுள்ளனர். நல்ல முறையில் தடுப்பூசித் திட்டங்களை நிறைவேற்றி வருவதால், மைய அரசு, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மஞ்சள் காமாலை தடுப்பூசித் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு மாநிலத்தினைத் தேர்வு செய்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 6-1-2008 அன்று இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்கள். தற்சமயம் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1.3. தமிழ்நாட்டில் மட்டும் ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய ஊசிகள் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நோக்கத்திற்காகத் தேவையான நிதியும் வழங்கப்பட்டுள்ளது. அண்டை மாநிலமான கேரளத்தில் சிக்குன்குன்யா காய்ச்சல் பரவியிருந்த வேளையில், இந்த அரசு உரிய நேரத்தில் எடுத்த தடுப்பு நடவடிக்கைகளால் அந்தக் காய்ச்சல் தமிழகத்தில் பரவாமல் தடுக்கப்பட்டுள்ளது.

1.4. பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே காணப்படும் இரத்த சோகை மற்றும் ஊட்டச் சத்துக் குறைவினைக் கட்டுப்படுத்த பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்நோக்கத்தினை அடைய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் கொண்டுவரப்பட்டு, கருவுற்ற பெண்களுக்கு ரூ. 6,000/- நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ரூ.6,000/-, பெண்கள் கருவுற்ற 7 வது மாதத்தில் ரூ. 3,000/-, பிரசவம் ஆன பிறகு ரூ. 3,000/- என இரண்டு தவணைகளாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதி உதவியினால், கருவுற்ற காலத்தில் அவர்களது உடல் எடை கூடும் நிலை ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தை இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் வெகுவாகப் பாராட்டியுள்ளன. இதுவரை ஏழு இலட்சம் மகளிர் பயனடைந்து ரூ. 400 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தின் விதிமுறைகளின்படி, இப்பயன்களைப் பெற கருவுற்ற பெண்கள் குடும்ப வருமானச் சான்றிதழ் பெறவேண்டியுள்ளது. கருவுற்றிருக்கும் காலத்தில், இதற்காக அவர்கள் சிரமப்பட வேண்டியுள்ளதைக் கருத்தில் கொண்டு, வருமானச் சான்றிதழ் பெறவேண்டிய தேவையைத் தளர்த்த இந்த

2008 ஏப்ரல் 23]

அரசு முடிவு செய்துள்ளது. ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு பேறுகாலப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் கிராம சுகாதாரச் செவிலியர்களின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, இவர்களுக்கு இந்த நிதியாண்டிலிருந்து, இத்திட்டத்தின்கீழ் எவ்வித வருமானச் சான்றிதழும் இன்றி நிதியுதவி வழங்கப்படும்.

1.5. தமிழகத்தில், கிராம மக்களுக்கு 24 மணி நேர பிரசவ சேவை வழங்கும் நோக்குடன், 24 மணி நேர பிரசவ சேவைப் பணிகள், 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்று செவிலியர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் 24 மணி நேரமும் முதல் உதவி மற்றும் பிரசவ சேவைகளைக் கவனிப்பர். தமிழகத்தில்தான் 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் கொண்டு வந்தபிறகு, ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கை அதிக அளவில் கூடியுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டும் 71,390 பிரசவங்கள் கூடியுள்ளன. இத்திட்டம் நடப்பாண்டில் எஞ்சிய 421 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். 98 மாவட்ட, வட்ட மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தாய்-சேய் அவசரகால மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த மையங்களில், சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்த முயற்சியினால், அரசு மருத்துவமனைகளில் நிகழும் பிரசவங்கள் 64.25 விழுக்காடாக உயர்ந்துள்ளன. தமிழகத்தில் மட்டும் 98.9 விழுக்காடு பிரசவங்கள் மருத்துவமனைகளில் நிகழ்கின்றன. 1.1 விழுக்காடு பிரசவங்கள் மட்டும் அவரவர் இல்லங்களில் நிகழ்கின்றன. வரும் ஆண்டுகளில் 100 விழுக்காடு பிரசவங்கள் மருத்துவமனைகளில் நிகழுமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1.6. கிராம ஏழை மக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சை கிடைப்பதற்காக, இவ்வரசு, அரசு மருத்துவமனைகளில் நவீன மருத்துவக் கருவிகளை வழங்கியுள்ளது. அவற்றில் 6 எம்.ஆர்.ஐ ஸ்கேன் கருவிகள் ஒரு 64 ஸ்லைஸ் சிடிஸ்கேன் கருவி, லித்தோடிரிப்சி கருவி, மல்டி ஸ்லைஸ் சி.டி. ஸ்கேன் கருவி, 2 கோபால்ட் சிகிச்சைக் கருவிகள், 385 செமி ஆட்டோ அனலைசர் கருவிகள் அடங்கும். மேலும் 385 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செமி ஆட்டோ அனலைசர் கருவிகள் வழங்கப்படவுள்ளன. 2008-09 ஆம் ஆண்டில், 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகள் வழங்கப்படும்.

[2008 ஏப்ரல் 23

1.7. தமிழகத்தில் குடும்ப நலத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1971-ல் 1,000 மக்கட்தொகைக்கு 31 விழுக்காடாக இருந்த பிறப்பு விகிதம் 2006-ல் 16.2 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இது நாட்டிலேயே பெரிய மாநிலங்கள் பட்டியலில் இரண்டாவது குறைவானதாகக் கருதப்படுகிறது. அதேபோல குழந்தை இறப்பு விகிதம் 2006-ல் 1,000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளில் 31 ஆகவும், தாய்மார் இறப்பு ஒரு இலட்சம் உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு 90 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

1.8. பல்வேறு திட்ட நிதிகளையும் மாநில அரசின் நிதியினையும் பயன்படுத்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட, வட்ட மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை அரசு குழந்தை நல நிறுவனம் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை ரூ. 13.83 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல ரூ. 25 கோடி செலவில் சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ரூ. 10.00 கோடி செலவில் சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, ரூ. 25 கோடி செலவில் அரசு செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, ரூ. 13.00 கோடி செலவில் சென்னை பல் மருத்துவக் கல்லூரி, ரூ. 22.06 கோடி செலவில் மதுரை இராஜாஜி மருத்துவமனை, ரூ. 100 கோடி செலவில் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியன மேம்படுத்தப்பட்டு வருகின்றன. சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரூ. 120 கோடி செலவில் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தைப்போல தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு, திருச்சி, சென்னை கீழ்ப்பாக்கம் மற்றும் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்காக ரூ. 20.87 கோடி செலவில் புதிய விடுதிகளும், அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் உதகமண்டலம் மாவட்ட தலைமை மருத்துவமனை செவிலியர் மாணவிகளுக்காக ரூ. 1.97 கோடி செலவில் விடுதிகளும் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. வேலூர் மற்றும் தேனி அரசு மருத்துவக் கல்லூரிகளில் புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் 2008-09 ஆம் ஆண்டில் தொடங்கப்படும். ரூ. 13.49 கோடி செலவில் 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு, அநேக ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுகாதாரத்

2008 ஏப்ரல் 23]

திட்டத்தின்கீழ், ரூ. 221 கோடி செலவில் 232 அரசு மருத்துமனைகளில் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் தேவைக்கேற்ப மருத்துவக் கருவிகளுக்கும் கூடுதல் பணியாளர்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1.9. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படவேண்டும் என்ற இந்த அரசின் குறிக்கோளை நிறைவேற்றும் நோக்கத்தோடு, கடந்த இரண்டு ஆண்டுகளில் விழுப்புரம், திருவாரூர், தருமபுரி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க ஆணையிடப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேபோன்று, சிவகங்கை மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில், நடப்பு நிதியாண்டில் இரு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும்.

1.10. மருத்துவக் கழிவுகளை அப்புறப்படுத்தும் திட்டம், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மாவட்ட மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகளிலும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் விரைவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 16.32 கோடி அளவுக்கு நிதி ஏற்கெனவே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

1.11. அனைத்து மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், வட்ட மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 1,607 மருத்துவப் பயனாளிகள் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்த இச்சங்கங்களுக்கு ரூ. 26 கோடி வழங்கப்பட்டுள்ளது.

1.12. கிராம ஊராட்சிகளில் 12,618 கிராம சுகாதாரம் மற்றும் குடிநீர்த் தூய்மைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல 2,540 கிராம சுகாதாரம் மற்றும் குடிநீர்த் தூய்மைக் குழுக்கள் 561 பேரூராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ளன. தூய்மை மற்றும் துப்பரவுப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு குழுவிற்கும் ரூ. 10,000/- வழங்கப்பட்டுள்ளது.

1.13. 2001 ஆம் ஆண்டில் தமிழகம் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தாக்கம் அதிகம் உள்ள மாநிலமாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. கருவுற்ற தாய்மார்களிடையே எச்.ஐ.வி/எய்ட்ஸ் தாக்கம் காணப்படுவது

1.13 விழுக்காடாக இருந்தது. தமிழகத்தில் திட்டச் செயல்பாடு திறம்பட நடைபெறுவதால், எச்.ஐ.வி/எய்ட்ஸ் தாக்கம் தற்சமயம் 0.38 விழுக்காடாகக் குறைந்துள்ளது. எச்.ஐ.வி. தொற்று பரவுவதை நிறுத்துவதற்கான ஆயிரம் ஆண்டுகால வளர்ச்சி இலக்கு அடைவதில் தமிழகம் நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. 760 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களை ஏற்படுத்தி தமிழகம் நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. மக்கள் தங்கியிருக்கும் இருப்பிடங்களிலேயே ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை வசதியைச் செய்வதற்கு 2007 ஆம் ஆண்டில் அரசு 10 நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களை எற்படுத்தியுள்ளது.

1.14. எய்ட்ஸ் நோயினால் பெற்றோரை இழந்த குழந்தைகள் எவ்வித ஆதரவுமின்றி அல்லலுறும் நிலையைப் போக்கிட, அவர்களுக்காக அரசுசார்ந்த அறக்கட்டளை ஒன்றை நிறுவ தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்த நோயினால் தந்தை அல்லது தாய் அல்லது பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு பராமரிப்பு, படிப்பு மற்றும் மருத்துவ உதவித் தொகையாக இவ்வறக்கட்டளைமூலம், இக்குழந்தைகளை வளர்க்கும் தொண்டு நிறுவனங்கள் அல்லது இக்குழந்தைகளின் உறவினர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை அளிக்கப்படும். இந்த அறக்கட்டளைக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.15. தமிழகத்தின் 15 மாவட்டங்களில் உள்ள 187 வட்டாரங்களில் அரசுசாரா அமைப்புகளின் பங்கேற்புடன் 24 மணிநேர அவசரகால ஊர்தி சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 198 வட்டாரங்களுக்கு அவசரகால ஊர்தி விரைவில் வழங்கப்படும். அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் தருணங்களில், பொதுமக்கள் உடனடியாக மருத்துவமனைகளுக்குச் செல்லும் வகையில், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளில் உள்ளோரும் ஒரே தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு அவசரகால மருத்துவ ஊர்தி சேவையை இலவசமாகப் பெறுவதற்கான ஒரு புதிய திட்டத்தை நடப்பு நிதியாண்டில் இந்த அரசு தொடங்கும். கணினிமயமாக்கப்பட்ட மையக் கட்டுப்பாட்டு அறை மற்றும் இடம் அறியும் கருவிகள் (GPS) பொருத்தப்பட்ட மருத்துவ ஊர்திகளோடு இந்தச் சேவை தொடங்கப்படும். இதனோடு, காவல் துறை மற்றும் தீயணைப்புப் படையினரின் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு,

அவசரகாலங்களில் மக்களுக்கு உடனடியாக இச்சேவை கிடைக்குமாறு செய்யப்படும். இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பெரும் விபத்துகளில், அதிக எண்ணிக்கையிலானோர் ஒரே நேரத்தில் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கத் தேவையான வசதிகள் கொண்ட சிறப்பு மையம் ஒன்று, மைய அரசின் நிதி உதவியுடன் சென்னையில் அமைக்கப்படும்.

1.16. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இதய நோய் அறுவை சிகிச்சை காலதாமதமின்றி மேற்கொள்ளப்பட, தனியார் மருத்துவமனைகள்மூலம் செயற்படுத்தும் கூட்டு முயற்சியாக, இளம் சிறார்கள் இருதய அறுவை சிகிச்சைத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு அறுவை சிகிச்சைக்கும் அரசின் உதவியாக ரூபாய் 70,000/- வரை தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை, 17 புகழ்பெற்ற தனியார் மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டு, 200 குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைக்கான அரசு உதவி வழங்கப்பட்டுள்ளது.

1.17. மலைவாழ் மக்களுக்கு, அவர்கள் இருப்பிடத்திலேயே மருத்துவச் சேவை வழங்கவேண்டி 100 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பிரிவு ஒவ்வொன்றிலும் ஒரு மருத்துவரும், செவிலியர் ஒருவரும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2008-09 ஆம் ஆண்டில் இதேமாதிரி 139 நடமாடும் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

1.18. தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைகளில் செயல்படும் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை வலுப்படுத்துவதன் அவசியம் உணர்ந்து இந்த அரசு, ஏற்கெனவே 10 மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளிலும், 2 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்ள இப்பிரிவுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. மைய அரசின் நிதியுதவியோடு, சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் ரூபாய் 8 கோடி செலவிலும், வேலூர் மருத்துவக் கல்லூரியில் ரூபாய் 7 கோடி செலவிலும், கிருஷ்ணகிரி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் ரூபாய் 3 கோடி செலவிலும், அவசர விபத்து சிகிச்சை மையங்கள் அமைக்கப்படும்.

[2008 ஏப்ரல் 23

1.19. இந்திய மருத்துவத்திற்கு இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்திய மருத்துவத்திற்கென்று தனியாக மாநில மருந்து உரிமம் வழங்கும் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கான கட்டடம் கட்டுவதற்கும், அலுவலகப் பணியாளர்களுக்காகவும் ரூ.75 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

1.20. அரசு, ஏழை மக்கள் தாமதமின்றி தரமான மருத்துவச் சேவையை அடைய உதவும் பொருட்டும், மருத்துவச் சேவை அளித்துவருவோரிடம் பொறுப்புணர்ச்சி கொண்டு வருவதற்காகவும், அனைத்து அரசு மருத்துவமனைகளுக்காக மருத்துவமனைக் குறைகளைக் களையும் அமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்த உத்தரவிட்டுள்ளது. இந்த அமைப்பு அனைத்து துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அதனோடு இணைந்த அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகளை கவனிக்கும். இந்த அமைப்பானது அனைத்து வேலை நாட்களிலும் 24 மணி நேரமும் இயங்கும். தற்சமயம் மாவட்டந்தோறும் செயல்பட்டுவரும் அவசர ஊர்தி கட்டுப்பாட்டு அறையினை பொதுமக்களிடமிருந்து கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1056 மூலம் குறைகள் / யோசனைகளைப் பெற பயன்படுத்திக்கொள்ளப்படும். குறைகள் இருப்பின் அவைபற்றிச் சொல்ல யாரேனும் விரும்பினால், 1056 எண்ணைத் தொடர்பு கொண்டு கட்டுப்பாட்டு அறைப் பணியாளரிடம் குறையைத் தெரிவிக்கலாம். அவர் மாவட்டக் குறைதீர்க்கும் பிரிவு அலுவலருக்கு தொலைபேசிமூலம் குறைகளைத் தெரிவிப்பார். அவர் சம்பந்தப்பட்ட மருத்துவமனையினைத் தொடர்புகொண்டு குறையினை களையச் செய்வார். அவர் சொல்லியும் குறை தீர்க்கப்படுவதில் தாமதம் இருந்தால், மாநிலக் குறைதீர்க்கும் பிரிவு அலுவலரிடம் தெரிவிப்பார். பிறகு அவர் தலையிட்டு குறை தீர்ப்பார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்டக் குறைதீர்க்கும் பிரிவு அலுவலரை மாதந்தோறும் நியமிப்பதற்கு அலுவலர்களின் பட்டியல் தயாரிக்கப்படும். மாநில அளவில் திட்ட அலுவலர்கள் மாநிலக் குறைதீர்க்கும் பிரிவு அலுவலராக நியமனம் செய்யப்படுவர். ஆரம்பத்தில் தவறு செய்பவர்கள் எச்சரிக்கப்படுவர். தொடர்ந்து தவறு செய்பவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2008 ஏப்ரல் 23]

1.21. மானியக் கோரிக்கை எண் 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு 2008-09 ஆம் ஆண்டுக்கு ரூ.2,740.71 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விவரம் வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

மானியக் கோரிக்கை	திட்டத்தில் சேராதது	திட்டப் பணிகள்			
		மாநிலத் திட்டம்	மைய அரசு பொறுப் பேற்பவை	மைய மற்றும் மாநில அரசுகள் பொறுப் பேற்பவை	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
19. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1804.15	653.19	278.17	5.00	936.36

(ரூபாய் கோடியில்)

மானியக் கோரிக்கை	திட்டப் பணிகள் மற்றும் திட்டத்தில் சேராதது	கூட்டுக-திருப்பி வசூலிப்பவை	மொத்தம்
(1)	(7)	(8)	(9)
19. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	2740.51	0.20	2740.71

இந்த ஒதுக்கீட்டில், வருவாய்க் கணக்கில் ரூ.2,586.20 கோடியும், மூலதனக் கணக்கில் ரூ.154.31 கோடியும் அடங்கும். வருவாய்க் கணக்கில் உள்ள ஒதுக்கீடு, 2008-2009 ஆம் ஆண்டுக்கான மாநில மொத்த வருவாய் செலவினக் கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.51,421.57 கோடியில் 5.03 சதவிகிதம் ஆகும்.

1.22. மானியக் கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் 2008-09 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டில் இயக்ககம் வாரியான நிதி ஒதுக்கீடு வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

1	தலைமைச் செயலகம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1145.42
2	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்	40888.08
3	மருத்துவக் கல்வி இயக்ககம்	83890.01
4	பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம்	93975.67
5	குடும்ப நல இயக்ககம்	8957.24
6	மருந்துக் கட்டுப்பாட்டு இயக்ககம்	803.53
7	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்	8629.68
8	தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை	1402.14
9	பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்ட இயக்ககம்	5330.93
10	தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்	29048.69
	மொத்தம்	**274071.39**

குறிப்பு :

(அ) மேற்சொன்ன நிதி ஒதுக்கீட்டுடன், பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்படும் மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட கட்டடப் பணிகளுக்காக ரூ.199.68 கோடி, மானியக் கோரிக்கை எண் 39-ன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்ட மருந்துவமனைகளுக்காக மானியக் கோரிக்கை எண் 32—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின்கீழ் ரூ.119.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.23. 2008–2009 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் :

2008-2009 ஆம் ஆண்டில் 23 புதிய திட்டங்களை (பகுதி-II திட்டங்களை) ரூ.510.36 இலட்சம் மொத்த செலவில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இயக்ககவாரியான விவரங்கள் கீழே தரப்படுகின்றன:—

(ரூபாய் இலட்சத்தில்)

வ எண்	இயக்ககம்	திட்டங்களின் எண்ணிக்கை	இறுதி நிலைச் செலவு	2008-2009-ல் செலவு
1	தலைமைச் செயலகம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1	35.00	35.00
2	மருத்துவக் கல்வி இயக்ககம்	4	152.17	152.17
3	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்	3	44.19	44.15
4	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்	2	145.00	83.89
5	பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம்	2	47.25	47.25
6	குடும்ப நல இயக்ககம்	3	6.70	6.70
7	மருந்துக் கட்டுப்பாட்டு இயக்ககம்	6	75.05	75.05
8	தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை	2	5.00	5.00
	மொத்தம்	**23**	**510.36**	**449.21**

1.24. உத்தேசிக்கப்பட்ட புதிய திட்டப் பணிகள் மற்றும் இயக்ககங்களின் பணிகள் அடுத்து வரும் அத்தியாயங்களில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

[2008 ஏப்ரல் 23

அத்தியாயம்–2

மருத்துவக் கல்வி

2.1. மருத்துவக் கல்வி இயக்ககம் 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்ககத்தின் முக்கியப் பொறுப்புகள் பின்வருமாறு:—

(1) மருத்துவக் கல்வியை மேம்படுத்துதல்.

(2) மருத்துவக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகளை நிருவகித்தல்.

(3) மருத்துவம் மற்றும் செவிலியர் படிப்புகளுக்கான சேர்க்கைக்காக தேர்வுக் குழுவைத் திறம்படக் கண்காணித்தல்.

2.2. மருத்துவ நிலையங்கள்:

மாநிலத்தில் தற்போது 14 மருத்துவக் கல்லூரிகள், 1 பல் மருத்துவக் கல்லூரி, 2 இயன்முறை மருத்துவக் கல்லூரிகள், 2 பி.எஸ்.ஸி. (செவிலியர்) கல்லூரிகள் மற்றும் 21 செவிலியர் பயிற்சி (டிப்ளமா-நர்சிங்) நிலையங்கள் (மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் 13 நிலையங்கள் மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின்கீழ் 8 பயிற்சி நிலையங்கள்) அரசின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இந்த இயக்ககத்தின்கீழ் இயங்கும் 45 மருத்துவமனைகளில் உள்ள ஒட்டுமொத்த படுக்கை வசதிகளின் எண்ணிக்கை 23,336. நாளொன்றுக்கு பயன்பெறும் உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகளின் சராசரி எண்ணிக்கை முறையே 22,605 மற்றும் 77,019 ஆகும். மருத்துவக் கல்வியானது, இம்மாநிலத்தில் அரசு மற்றும் தனியார் நிலையங்களின்மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பான விவரங்கள் கீழே அட்டவணை 1 மற்றும் 2-ல் தரப்பட்டுள்ளன.

2008 ஏப்ரல் 23]

அட்டவணை – 1: அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள இடங்களின் எண்ணிக்கை.

(அ) பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பில் உள்ள இடங்களின் விவரம்.

படிப்பின் பெயர்	மொத்த இடங்கள்
எம்.பி.பி.எஸ்	1645
பி.டி.எஸ்.	100
பி.எஸ்.ஸி (செவிலியர்)	75
போஸ்ட் பேசிக் பி.எஸ்.ஸி (செவிலியர்)	40
இயன்முறை மருத்துவம்	50
மருந்தாக்கியல்	110
செவிலியர் பட்டயப் படிப்பு	1795

செவிலியர் பட்டயப் படிப்பு

பயிற்சி உதவித் தொகை பெறுபவர்	பயிற்சி உதவித் தொகை பெறாதவர்	மொத்தம்
645	1150	1795

(ஆ) பட்ட மேற்படிப்பில் உள்ள சிறப்புப் படிப்பு மற்றும் அவற்றிற்கான இடங்கள் விவரம்.

படிப்புகள்	சிறப்புப் படிப்பு எண்ணிக்கை	மொத்த சேர்க்கை இடங்கள்
பட்ட மேற்படிப்பு	23	489
பட்டய மேற்படிப்பு	15	436
எம்.டி.எஸ்.	8	35
உயர் சிறப்பு மேற்படிப்பு	15	77
எம். பார்மஸி	4	32
எம்.எஸ்.ஸி. (செவிலியர்)	4	8

அட்டவணை—2 : தனியார் துறையில் இயங்கும் சுயநிதி மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த நிறுவனங்களின் விவரம்.

கல்லூரிகள்	மொத்த கல்லூரிகள்	மொத்த இருக்கைகள்	அரசுக்கு ஒப்புவிப்பு செய்த இடங்களின் எண்ணிக்கை
ஐ.ஆர்.டி. மருத்துவக் கல்லூரி. பெருந்துறை (தமிழ்நாடு அரசு நிறுவனம்)	1	60	39
மருத்துவக் கல்லூரிகள்- எம்.பி.பி.எஸ்.	3	350	212
பல் மருத்துவக் கல்லூரிகள்	15	1170	732
மருந்தாக்கியல் கல்லூரிகள் (பி.பார்ம்)	33	1915	1227
இயன்முறை மருத்துவம் (பி.பி.டி.)	33	1630	1010
செவிலியர் பட்டப் படிப்பு (பி.எஸ்.சி.)	54	2825	1726
தொழில் வழி சிகிச்சை- பட்டப் படிப்பு (பி.ஓ.டி.)	3	150	96
பட்டயமருந்தாக்கியலிலிருந்து பட்ட மருந்தாக்கியல் படிப்பு (பிற்சேர்க்கை 10 சதவிகிதம்)	31	178	178

2.3. தேர்வு முறை:

2.3.1. மருத்துவம்/பல் அறுவை சிகிச்சை மருத்துவம்/ செவிலியர்/ இயன்முறை மருத்துவம்/தொழில்வழி மருத்துவம்/ மருந்தாக்கியல் ஆகிய பட்டப் படிப்புகளுக்கு மருத்துவக் கல்வி இயக்குநரின் தலைமையிலான தேர்வுக் குழு ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கப்படும் அரசின் கொள்கைக்கிணங்க ஒற்றைச் சாளர முறையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்பு, முதுநிலை பல் மருத்துவம், உயர் சிறப்பு மேற்படிப்பு ஆகிய இடங்களுக்கு பொது நுழைவுத் தேர்வினைத் தொடர்ந்து

கலந்தாய்வுமூலம் தேர்வுக் குழுவால் இட ஒதுக்கீட்டினைப் பின்பற்றி மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். பட்டயப் படிப்பு (செவிலியர்) இடங்களுக்கும் மதிப்பெண் அடிப்படையில் (+2 மதிப்பெண்) மற்றும் கலந்தாய்வுமூலம் தேர்வுக் குழுவால் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றி மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

2.3.2. இந்திய உச்ச நீதிமன்றம் பி.ஏ. இனாம்தார் வழக்கு சம்பந்தமாக வழங்கிய தீர்ப்பின்படி உச்ச நீதிமன்றத்தின் விதிமுறைகளுக்கிணங்க தனியார் சுயநிதிக் கல்லூரிகளுக்கு உரிய இடங்களை நிரப்ப உரிமை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், மாணவர்களின் நலன் கருதி அரசு, தனியார் சுயநிதிக் கல்லூரி நிருவாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசு உதவி பெறாத சுயநிதி நிறுவனங்கள் 65 சதவிகித இடங்களையும் (சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு 50 சதவிகித இடங்களும்) அரசு ஒதுக்கீட்டிற்கு ஒப்புவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

2.4. புதிய மருத்துவக் கல்லூரிகள்:

2.4.1. அரசு விழுப்புரம், தருமபுரி மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகள் துவக்க அறிவிப்பு செய்துள்ளது. அதன் தற்போதைய நிலை பின்வருமாறு.

2.4.2. அரசு மருத்துவக் கல்லூரி, விழுப்புரம்: விழுப்புரத்தில் புதிய மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கு முன்னேற்பாட்டுப் பணிகள் செய்யத் தனி அலுவலர்/முதல்வர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது. மருத்துவமனைக்கான இடம் தேர்வு செய்யப்பட்டு முன்னுழைவு அனுமதி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின்கீழ் இயங்கி வரும் விழுப்புரம் அரசு தலைமையிட மாவட்ட மருத்துவமனையை, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், இடம், கட்டடம், கருவிகள், வாகனம் மற்றும் பணியாளர்கள் ஆகியவற்றுடன் மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் மாற்றம் செய்து அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கான கட்டடம் கட்ட ரூ.41.01 கோடி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

2.4.3. அரசு மருத்துவக் கல்லூரி தருமபுரி: தருமபுரியில் புதிய அரசு மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதற்கு முன்னேற்பாட்டுப் பணிகள் செய்யத் தனி அலுவலர்/ முதல்வர்

[2008 ஏப்ரல் 23

பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின்கீழ் இயங்கி வரும் தருமபுரி அரசு தலைமையிட மாவட்ட மருத்துவமனையை, அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் பணியாளர்கள் உட்பட மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் மாற்றம் செய்து அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. தருமபுரியில் அரசு மருத்துவக் கல்லூரிக்கான கட்டடம் கட்ட ரூ.47.58 கோடி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது .

2.4.4. அரசு மருத்துவக் கல்லூரி, திருவாரூர்: திருவாரூரில் புதிய மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதற்கு முன்னேற்பாட்டுப் பணிகள் செய்யத் தனி அலுவலர்/ முதல்வர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின்கீழ் இயங்கி வரும் திருவாரூர் அரசு தலைமையிட மருத்துவமனையை, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடன் பணியாளர்கள் உட்பட மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் மாற்றம் செய்து அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. திருவாரூரில் அரசு மருத்துவக் கல்லூரிக்கான கட்டடம் கட்ட ரூ.42.77 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

2.4.5. தற்போது சிவகங்கை மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் இரண்டு புதிய மருத்துவக் கல்லூரிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2.5. புதிய பல் மருத்துவம், செவிலியர் மற்றும் இயன்முறை மருத்துவக் கல்லூரிகள்:

2.5.1. தனியார் சுயநிதி நிறுவனங்கள் ஊரகப் பகுதிகளில் பல் மருத்துவம், பி.எஸ்.சி. செவிலியர் பட்டப் பயிற்சி, செவிலியர் பட்டயப் பயிற்சி மற்றும் பிற மருத்துவம் சார்ந்த பயிற்சிகள் நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி தொடங்கி நடத்தக் கோரும் கோரிக்கைகளை பரிசீலிக்கும்படி அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் பி.எஸ்.சி. செவிலியர் பட்டப் படிப்பு/பட்டயப் படிப்பு நடத்தும் தனியார் சுயநிதி நிறுவனங்கள்/சங்கங்கள் மாணவர்களின் எண்ணிக்கையை 50-லிருந்து 100 ஆக உயர்த்தவும் செவிலியர் பட்டயப் பயிற்சியில் 20-லிருந்து 40 ஆக உயர்த்தவும் கேட்டுக்கொண்டால் அவர்களின் கோரிக்கைகளுக்கு அனுமதி வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

2008 ஏப்ரல் 23]

2.5.2. 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டில் 63 தனியார் சுயநிதி நிறுவனங்கள் பி.எஸ்.சி. (செவிலியர்) படிப்பை நடத்தவும், 51 தனியார் சுயநிதி நிறுவனங்கள் செவிலியர் பட்டயப் படிப்பை நடத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருத்திய கட்டண விகிதங்கள் பின்வருமாறு:

பி.எஸ்சி. (செவிலியர்)	ஆண்டிற்கு	ரூ.1200/-
பட்டய செவிலியர் / டி.எம்.எல்.டி	ஆண்டிற்கு	ரூ.200/-

2.5.3. சென்னை மருத்துவக் கல்லூரியில் ஏற்கெனவே நடத்தப்பட்டு வரும் பி.எஸ்.சி செவிலியர் பட்டப் படிப்பில் மாணவர் எண்ணிக்கை 25-லிருந்து 50 ஆக உயர்த்தவும், எம்.எஸ்.சி (செவிலியர்) இடங்களை 8-லிருந்து 100 ஆக உயர்த்தவும் மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரியில் எம்எஸ்சி. (செவிலியர்) படிப்பு துவங்கவும் அரசு பரிசீலித்து வருகிறது. சான்றிதழ் படிப்புகளில் சேரும் மாணவர் எண்ணிக்கை 2,700-லிருந்து 5,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர்/ பழங்குடியின மாணவர்களுக்காக 125 இடங்கள் செவிலியர் பட்டயப் படிப்பில் ஒதுக்கப்பட்டுள்ளன. ரூபாய் 4.00 கோடி செலவில் வேலூர் மற்றும் தேனி மருத்துவக் கல்லூரிகளில் புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்படும்.

2.5.4. சென்னை அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்பத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு விடுதிக்கு ரூ 1.00 கோடி வீதம், ரூ. 5.00 கோடி செலவில் விடுதிகள் கட்டப்படும்.

2.6. அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள பட்ட மேற்படிப்பு இடங்களை ஆரம்பித்தல் / அதிகரித்தல்:

2.6.1. அரசு மருத்துவக் கல்லூரிகளில் 69 புதிய பட்ட மேற்படிப்பு படிப்புகளை ஆரம்பித்தல், 5 பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை அதிகப்படுத்துதல் தொடர்பாக மைய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. இந்திய மருத்துவக் கழகம் ஆய்வு மேற்கொண்டு 10 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் 30 படிப்புகள் தொடங்க அனுமதி

[2008 ஏப்ரல் 23

வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள படிப்புகளுக்கான ஆய்வறிக்கை இந்திய மருத்துவக் கழகத்திற்கு அனுப்பிவைக்கப்படும். 5 படிப்புகள் தொடர்பாக ஆய்வறிக்கைக்கு பதில் அனுப்பி மறு ஆய்வு நடத்த இந்திய மருத்துவக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

2.7. சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை டில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தைப்போல் தரம் உயர்த்துதல்:

அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தைப்போல பிரதான் மந்திரி ஸ்வத்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ் தரம் உயர்த்த மைய அரசு கருதியுள்ளது. அதற்காக மைய அரசு தனது பங்காக ரூ 100.00 கோடி தர முடிவு செய்துள்ளது. தமிழக அரசு ரூ.20 கோடி நிதி அளித்துள்ளது.

2.8. மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகளின் மேம்பாடுகள்:

1. திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி செய்து கொடுக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டது. ஸ்டான்லி மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வசதி செய்து கொடுக்க ரூ.4.27 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. தஞ்சாவூர் தவிர பிற இடங்களில் எம்.ஆர்.ஐ.ஸ்கேன் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2. சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு உயர்தர நவீன 64 கூறுகள் கொண்ட சி.டி. ஸ்கேன் கருவி வாங்க ரூ.5.5 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்மூலம் இந்தக் கருவி வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.

3. சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை இரண்டுக்கும் லித்தோடிரிப்ஸி கருவிகள் வாங்க ரூ.3.00 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. தற்போது சென்னை அரசு பொது மருத்துவமனையில் நிறுவப்பட்டு நோயாளிகளுக்கு உபயோகப்பட்டு வருகிறது. மதுரையில் சுங்க

2008 ஏப்ரல் 23]

வரித் துறையிடம் தடையில்லாச் சான்று பெற்றவுடன் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்மூலம் இக்கருவிகள் நிறுவப்படும்.

4. அரசு மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் நிறுவனம் மற்றும் அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் பச்சிளம் குழந்தைகளுக்கான பிரிவை ஆரம்பிக்க, ரூ.2.31 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

5. பல்நோக்கு கூறுகள் கொண்ட சி.டி.ஸ்கேன் மற்றும் மருத்துவக் கருவிகள் வாங்க சென்னை அரசு பொது மருத்துவமனையின் பெர்னார்ட் கதிரியக்கவியல் துறைக்கு ரூ 2.70 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

6. சென்னை அரசு பொது மருத்துவமனையின் எலும்பு வங்கிக்கு மருத்துவக் கருவிகள் வாங்க ரூ.28.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து மருத்துவக் கருவிகளும் வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

7. தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 50 பல் சிகிச்சை நாற்காலிகள் வாங்க ரூ.52.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

8. சென்னை அரசு குழந்தை நல நிறுவனம் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு, 300 படுக்கைகள் வசதி கொண்ட கூடுதல் கட்டடம் கட்ட ரூ 14.00 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

9. சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில், அறுவை சிகிச்சை பிரிவுக்காக, 5 வது மாடி கட்ட ரூ.0.87 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் ஏழு அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்களுக்கான விடுதி மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தர ரூ.21.00 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

   (1) அரசு செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு.

   (2) அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி.

   (3) அரசு கி.ஆ.பெ. விஸ்வநாதம் மருத்துவக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

[2008 ஏப்ரல் 23

(4) அரசு மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை,

(5) அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை,

(6) அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை,

(7) தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி, சென்னை.

2.9. புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்:

2.9.1. கீழ்க்காணும் மருத்துவமனைகளில் கோபால்ட் தெரபி கருவி நிறுவப்பட்டு புற்றுநோய் உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

1. அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.
2. அரசினர் மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் நிறுவனம் மற்றும் தாய்-சேய் நல மருத்துவமனை, சென்னை.
3. அரசு பொது மருத்துவமனை, சென்னை.
4. அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.
5. அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.
6. அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை.
7. அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.
8. அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை, காஞ்சிபுரம்.

2.9.2. காஞ்சிபுரம், காரப்பேட்டையில் உள்ள, அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்கு, லீனியர் ஆக்ஸிலரேட்டர் கருவி, சி.டி. ஸ்டிமுலேட்டர், சுழற்சி முறை கோபால்ட் கருவிகள் வாங்க, மைய அரசு ரூ.7.88 கோடி வழங்கியுள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்மூலம் இந்த மருத்துவக் கருவிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2008 ஏப்ரல் 23]

2.10. மெமோகிராபி கருவி சிகிச்சைப் பிரிவுகள்:

கீழ்க்காணும் மருத்துவமனைகளில் மெமோகிராபி கருவி சிகிச்சைப் பிரிவுகள் (மார்பகப் புற்றுநோயை ஆரம்ப காலத்தில் கண்டறிய) நிறுவப்பட்டு உள்ளன:—

1. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.
2. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்
3. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.

2.11. 2007– 2008–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டங்கள்:

1. சென்னை, அரசு பொது மருத்துவமனையில் பொது நுண்மம் நீக்கும் நிலையம் அமைக்க மொத்தம் ரூ.127.92 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் பரிசீலனையில் உள்ளன.
2. சென்னை, அரசு குழந்தை நல நிறுவனம் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் இருதய நோய் அறுவை சிகிச்சைத் துறையை துவக்குவதற்கு ரூ. 60.95 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
3. மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இருதய நோய்ப் பிரிவிற்கு கருவிகள் வாங்க ரூ.106 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
4. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியிலிருந்து அரசு இராயப்பேட்டை மருத்துவமனைக்கு பயிற்சிக்காக மாணவர்கள் சென்றுவர இரண்டு பேருந்துகள் வாங்க ரூ.16.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
5. சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் குடல் நோய் மருத்துவப் பிரிவிற்கு வீடியோ என்டோஸ்கோபி கருவி வாங்க ரூ.40.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2.12. கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையம்:

கிண்டியிலுள்ள கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையம், நாட்டிலுள்ள தலைசிறந்த ஆய்வுக் கூடங்களில் ஒன்றாகும். இந்த நிலையத்தில் தடுப்பு ஊசி மருந்துகள் மற்றும் ஊநீர் தயாரிக்கப்படுகின்றன. இது ஒரு கற்பிக்கும் மையமாகவும், ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. இந்நிலையத்தின் நுண்ணுயிரியல் நஞ்சாய்வுப் பிரிவு, இந்திய அரசாங்கத்தாலும், உலக சுகாதார நிறுவனத்தாலும், உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான தேசிய இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு ஆய்வகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திலிருந்து பெறப்படும் மருந்து மாதிரிகள் மற்றும் குருதி வங்கிகளிடமிருந்து பெறப்படும் குருதி மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கைகள் அவரவர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

2.13. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்:

2.13.1. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் 1988 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டது. கல்வித் தரத்தை உன்னத நிலைக்கு உயர்த்துவது, மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளில் ஆராய்ச்சி மற்றும் அறிவைப் பெருக்குவது இதன் நோக்கமாகும். இப்பல்கலைக்கழகத்தின் பொறுப்பில் 250 கல்வி நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

2.13.2. தற்போது இம்மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ், குருதி ஏற்ற மருத்துவத் துறை, பாடத் திட்ட மேம்பாட்டுத் துறை, கொள்ளை நோயியல் துறை, சோதனை மருத்துவத் துறை, தொலைத் தொடர்பு நுண் மின் நூலகம் ஆகியவை இயங்கி வருகின்றன.

2.13.3. 1997 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட குருதி ஏற்ற மருத்துவத் துறையில் முதுநிலை பட்டப் படிப்பு இம்முயுனோ ஹெமடாலஜி மற்றும் குருதி ஏற்ற மருத்துவப் படிப்பு நடத்தப்படுகிறது. 2 மாணவர்கள் சேர்க்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றனர். இது இந்தியாவில் இந்திய மருத்துவக் கழகத்தின் ஒப்புதலுடன் நடத்தப்படும் இரண்டாவது கல்வி நிறுவனமாகத் திகழ்கிறது. தற்போது 6 மாணவர்கள் 3 தொகுதிகளாகப் படித்து வருகின்றனர்.

2.13.4. கொள்ளை நோயியல் துறையில் முதுநிலை அறிவியல் கொள்ளை நோயியல் படிப்பு நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 4 தொகுதி மாணவர்கள் பட்டம் பெற்று வெளி வந்துள்ளனர்.

இத்துறையில் ஆராய்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு முனைவர் பட்டமும் வழங்கப்படுகிறது. இத்துறையில் இதுவரை 18 ஆராய்ச்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 550 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2.13.5. சித்த மருத்துவத் துறை 2007 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது. அதில் முழுநேர/பகுதிநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்புகள் துவக்குவது, D.M. (சித்தா) உயர் சிறப்பு மேற்படிப்பு, பட்ட மேற்படிப்பு (சித்தா) மற்றும் ஆறு பாடப் பிரிவுகளில் பட்டய மேற்படிப்பு (சித்தா) மற்றும் ஏனைய பிற பாடப் பிரிவுகளை ஆரம்பிப்பது இத்துறையின் குறிக்கோளாகும்.

2.13.6. நிருவாகத் துறை கட்டடத்தின் இணைப்புக் கட்டடத்தில் தற்பொழுது வட்டார மருத்துவ நூலகம் மற்றும் அதன் பிரிவான மருத்துவப் புள்ளி விவர மையம், டிஜிடல் நூலகம் மற்றும் தொலைத் தொடர்பு நுண் மின் நூலகம் ஆகியன செயல்பட்டு வருகின்றன.

2008–2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:

1. ரூ.46.44 இலட்சம் செலவில் மாணவர்கள் உபயோகத்திற்காக 52 இருக்கைகள் கொண்ட பேருந்து கீழ்க்கண்ட மருத்துவக் கல்லூரிகளுக்கு வாங்குதல்:—

(i) அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சேலம்

(ii) அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்

(iii) அரசு செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு

2. ரூ.33.23 இலட்சம் செலவில் பின்வரும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் இயங்குகிற செவிலியர் பயிற்சிப் பள்ளி உபயோகத்திற்காக 52 இருக்கைகள் கொண்ட 2 பேருந்துகள் வாங்குதல்:—

(i) சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை

(ii) மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை

3. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு ரூ.50.00 இலட்சம் செலவில் ஏற்கெனவே உள்ள செவிலியர் விடுதியில் மேலும் ஒரு தளம் கட்டுதல்.

4. சென்னை, கிண்டி கிங் நிலையத்தில் ரூ.22.50 இலட்சம் செலவில் ரியல் டைம் பி.சி.ஆர். கருவி வாங்குதல்.

[2008 ஏப்ரல் 23

அத்தியாயம்–3

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்

3.1. முன்னுரை:

3.1.1. தமிழகத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை குறித்த அனைத்துத் திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்கு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் பொறுப்பானவர் ஆவார். அவர் 26 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், 155 வட்ட மருத்துவமனைகள், 80 வட்டம்சாரா மருத்துவமனைகள், 11 மருந்தகங்கள், 11 நடமாடும் மருந்தகங்கள், 7 பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள் 2 காசநோய் நிலையங்கள்-மருத்துவமனைகள், 2 காசநோய் மருந்தகங்கள் மற்றும் 7 தொழுநோய் மறுவாழ்வு மையங்கள் மூலமாகப் பொதுமக்களுக்கு மருத்துவக் கவனிப்புப் பணிகள் வழங்கும் பொறுப்பு வகிக்கிறார். மேலும், அவர் மனித உள்ளுறுப்புகளை மாற்றும் அறுவை சிகிச்சைச் சட்டம், பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்பம் குறித்த (பாலினத் தெரிவு செய்வதைத் தடுப்பு) சட்டம், 1994 மற்றும் தனியார் மருத்துவமனைகளை அங்கீகரித்தல், மாவட்ட மனநலத் திட்டம் முதலிய பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தையும் கவனித்து வருகிறார்.

3.1.2. மருத்துவ கவனிப்புப் பணிகளைச் செவ்வனே செயல்படுத்த இம்மாநிலம் 30 வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில், குடும்பநலம் உட்பட அனைத்து மருத்துவ கவனிப்புப் பணிகளைச் செயல்படுத்த அனைத்து மருத்துவமனைகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துபவர் மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நல இணை இயக்குநராவார். மேலும், அனைத்து சுகாதாரத் திட்டங்கள் செவ்வனே செயல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பும் அவரையே சார்ந்ததாகும். மாவட்ட காசநோய் துணை இயக்குநர் அந்தந்த மாவட்டத்தில் காசநோய்த் தடுப்புப் பணியைச் செயல்படுத்துபவராவார். மேலும், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிறப்புத் துறைக்கான குடிமுறை மருத்துவ அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட தொழுநோய் துணை இயக்குநர் ஒவ்வொரு மாவட்டத்திலும், தொழுநோய்த் தடுப்புத் திட்டத்தைச்

2008 ஏப்ரல் 23]

செயல்படுத்துபவராவார். தற்போது தொழுநோய்த் தடுப்புத் திட்டம் தமிழக அரசால் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், தொழுநோய்த் தடுப்புக் களப் பணியாளர்களைப் பொது சுகாதாரப் பணியிலும், சுகாதார ஆய்வாளர்களைத் தொழுநோய்த் தடுப்புப் பணியிலும் செயல்படுத்தி இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடிகிறது.

3.1.3. மாவட்ட, வட்டம் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் ஆகிய மருத்துவ நிலையங்களின் மருத்துவம் மற்றும் இதர வசதிகளை மேம்படுத்துவது இத்துறையின் முக்கிய திட்டச் செயல்பாடாகும். இம்மருத்துவ நிலையங்களில் அத்தியாவசியமான மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துதல், மருத்துவம், அறுவை சிகிச்சை, மகப்பேறு, கண் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பால்வினை நோய்கள், எலும்பு முறிவு சிகிச்சை, அறுவைச் சிகிச்சை, மயக்க மருந்து தருதல், குழந்தைகள் நலம், பல் சிகிச்சை, மனநோய் மருத்துவ சிகிச்சை, நோயாளிகளுக்கான ஊர்தி வசதி, நுண் ஆய்வுக்கூட வசதி, தொழுநோய், காசநோய், நீரிழிவு நோய், இருதய நோய், சிறுநீரக நோய், மற்றும் இதர சிறப்புப் பிரிவுகளை நவீனமயமாக்குதல் போன்ற பணிகள் இதில் அடங்கும். விபத்துகளால் பாதிக்கப்படுவோர்களைக் காப்பாற்ற விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் படிப்படியாக மாநில அளவில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், குடும்ப நலத் துறையின் பேறுகாலப் பின் கவனிப்பு மையங்கள் மூலமாக தாய்சேய் நலச் செயல்பாடுகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.1.4. இவை தவிர, இத்துறை கண் பார்வை இழப்பைத் தடுப்பது தொடர்பான திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் மருத்துவ வசதிகள் வழங்குவது மற்றும் ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் நலத் திட்டம் போன்ற பிற துறைகளின் திட்டங்களையும் இத்துறையின் மருத்துவமனைகள் மூலமாகச் செயல்படுத்தி வருகிறது.

3.2. செவிலியர் பணி நியமனம்:

தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் அனைத்து சுகாதாரப் பிரிவு மாவட்டங்களிலும் 100 நடமாடும் மருத்துவக் குழுக்களை ஏற்படுத்தி, ஒரு நடமாடும் மருத்துவக் குழுவிற்கு ஒரு செவிலியர் வீதம் 100 செவிலியர்களைப் பணி நியமனம் செய்ய அ...

[2008 ஏப்ரல் 23

ஆணையிட்டுள்ளது. கிராமப்புறங்களில் 220 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேர பிரசவ சேவை மையங்களாக அறிவிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மூன்று செவிலியர்கள் வீதம் தொகுப்பூதியத்தில் 600 செவிலியர்களை நியமனம் செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. அவசரகால தாய்சேய் மருத்துவ சிகிச்சை மையம் செயல்படும் 32 மருத்துவமனைகளில் 200 செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2007-08 ஆம் ஆண்டில், 1,400 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு திட்டங்களில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

3.3. முன் நிர்ணயம் மற்றும் பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்பம் (பாலினத் தெரிவு செய்வதைத் தடுத்தல்) சட்டம், 1994:

பாதகமான ஆண், பெண் விகிதாச்சாரத்தைக் கட்டுப்படுத்தவும், பெண் சிசுக் கொலையைத் தடுக்கவும், பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப (பாலினத் தெரிவு செய்வதைத் தடுத்தல்) சட்டம், 1994, இம்மாநிலத்தில் திறம்படச் செயல்படுத்தப்படுகிறது. மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்கீழ் இதுவரை 3,502 ஸ்கேன் மையங்கள் பதிவு செய்யப்பட்டு கருவின் பாலினத்தை அறிவதைத் தடுக்க கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை சட்ட மீறல்களில் ஈடுபட்ட 72 ஸ்கேன் மையங்கள் அடையாளம் கண்டறிப்பட்டு இந்த மையங்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 53 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 19 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

3.4. மாவட்ட மன நலத் திட்டம்:

3.4.1. மன நலம் பேணுவது நாம் வாழும் சமூகத்தில் முக்கியமான அம்சமாகும். மாவட்ட மன நலத் திட்டம், குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளில் சிறப்பான மன நலச் சேவைகள் அளிக்கும் பொருட்டு திருச்சி, இராமநாதபுரம், மதுரை, தேனி, கன்னியாகுமரி, ஈரோடு, தருமபுரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், நாம் வாழும் சமூகத்தில் மன நோயாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உரிய மன நல சிகிச்சைகளை வழங்குவதே ஆகும்.

2008 ஏப்ரல் 23]

3.4.2. இத்திட்டத்தின்கீழ், நடமாடும் மாவட்ட மன நலக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் இடம் பெற்றுள்ள மன நல மருத்துவர் மற்றும் மருத்துவம்சாராப் பணியாளர்கள், மாவட்டங்களில் பல்வேறு இடங்களுக்கும் சென்று மன நல நோயாளிகளை இனம் கண்டு அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகள் அளித்து வருகின்றனர். மேலும் நோயின் தன்மைக்கேற்ப மன நல நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அருகில் உள்ள அரசு தலைமையிட மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றனர். இத்திட்டத்தின்கீழ் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு மன நல நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பது குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

3.4.3. மேலும் மன நோய் குறித்தும் அதற்குண்டான நிவாரணங்கள் இத்திட்டத்தின்கீழ் அளிப்பது குறித்தும் மேற்சொன்ன மாவட்டங்களில் தீவிரப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மதுரை, இராமநாதபுரம், தேனி, கன்னியாகுமரி, ஈரோடு, தருமபுரி, மற்றும் நாகப்பட்டினம் அரசு தலைமையிட மருத்துவமனைகளில் 10 படுக்கைகள் கொண்ட தனிப் பிரிவு ஒன்று மன நல நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காகச் செயல்பட்டு வருகிறது.

3.4.4. இத்திட்டம், மேலும் காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், சென்னை, விருதுநகர், திருவாரூர், பெரம்பலூர் மற்றும் நாமக்கல் ஆகிய 8 மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

3.4.5. இத்திட்டத்தின் கண்காணிப்பு அலுவலராக, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரும், செயல்படுத்தும் அலுவலர்களாக இயக்குநர், மன நலக் காப்பகம் மற்றும் மருத்துவக் கல்லூரி முதல்வர்களும் செயல்பட்டு வருகின்றனர். இத்திட்டம் மேற்கண்ட மாவட்டங்களில், நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

3.5. காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்:

3.5.1. இந்தியாவில் ஓர் ஆண்டுக்கு சுமார் 18 இலட்சம் பேர் காசநோய்க் கிருமியால் பாதிக்கப்படுகிறார்கள். தமிழ்நாட்டில், ஆண்டுக்கு சுமார் 1.1 இலட்சம் பேர் காசநோய்க் கிருமியால் பாதிக்கப்படுகிறார்கள். அதில் சுமார் 48,000 பேர் சளியில் காசநோய்க் கிருமியுள்ளவர்கள். தமிழகத்தில் 8 காசநோய்

[2008 ஏப்ரல் 23

மருத்துவமனைகள் உள்ளன. அதில் 2 மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறை இயக்குநர் கட்டுப்பாட்டிலும், 4 மருத்துவக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டிலும், 2 தனியார் துறையிலும் உள்ளன. காசநோயால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் உள்ள காசநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க மட்டும், 3,091 படுக்கைகள் தமிழகத்தில் உள்ளன. மற்ற நோயாளிகள் தங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள சிகிச்சை மையங்கள் 'டாட்ஸ்' (DOTS) மூலம் சிகிச்சை பெற்று வருகின்றனர். இத்திருத்தியமைக்கப்பட்ட காசநோய்த் திட்டத்தை ஒருங்கிணைந்து செயல்படுத்த மாநில அளவில் கூடுதல் இயக்குநர் நிலையில் மாநில காசநோய் அலுவலர் உள்ளார். மாவட்ட அளவில், மருத்துவப் பணிகள் துணை இயக்குநர், இத்திட்டத்தின் மேலாளராகச் செயல்பட்டு வருகின்றார். மாவட்ட ஆட்சித் தலைவர்களின்கீழ் இயங்கும் மாவட்ட காசநோய் சங்கங்களின் நிருவாகச் செலவு முழுவதையும், மருந்துகளுக்கான செலவினைத்தையும் உலக வங்கி உதவியுடன் மைய அரசு 100 சதவிகிதம் வழங்கி வருகிறது. மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட காசநோய் மையங்கள் மற்றும் அரசு காசநோய் மருத்துவமனைகளுக்கான செலவுகளை மாநில அரசு ஏற்று நடத்துகிறது.

3.5.2. திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய்த் தடுப்புத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் 142 காசநோய்ப் பிரிவுகளின் மூலமாகவும் (5 இலட்சம் மக்கள்தொகைக்கு ஒன்று வீதம்), 782 நுண்ணோக்கி மையங்கள் மூலமாகவும் (1 இலட்சம் மக்கள் தொகைக்கு ஒன்று வீதம்), 11,000 டாட்ஸ் சிகிச்சை மையங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகள், தனியார் மருத்துவர்கள், இரயில்வே மருத்துவமனைகள், துறைமுக மருத்துவமனைகள், இராணுவ மருத்துவமனைகள் யாவும் இணைந்து செயல்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 4 இலட்சம் நபர்களுக்குச் சளிப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. சுமார் 64,051 நோயாளிகளுக்கு காசநோய் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களில் 24,923 பேருக்கு சளிப் பரிசோதனையின்மூலம் காசநோய் கண்டறியபட்டது. அவர்களில் 83 விழுக்காடு நோயாளிகள் பூரணமாகக் குணப்படுத்தப்பட்டுள்ளனர். மைய அரசால் இத்திட்டத்திற்குக் கொடுக்கப்பட்ட இலக்குகளை எய்தி நமது மாநிலம் சாதனை புரிந்துள்ளது.

2008 ஏப்ரல் 23]

3.5.3. தமிழ்நாட்டில் திருத்தியமைக்கப்பட்ட காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாதனைகள் விவரம்:

ஆண்டு	சளிப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட நுரையீரல் காசநோயாளிகள்			புதிதாகப் பரிசோதிக்கப் பட்ட காசநோயாளிகளில் சளியில் கிருமியுள்ளவர்கள்			சளி பரிசோதனை மூலம் கண்டு பிடிக்கப்பட்ட புதிய காச நோயாளிகள் குணமடைந்த விகிதம்	
	இலக்கு	சாதனை	விழுக்காடு	இலக்கு	சாதனை	விழுக்காடு	இலக்கு	சாதனை
2000–01	308880	384506	124%	30890	24533	79%	85%	37%
2001–02	310550	380747	123%	31055	23589	76%	85%	81%
2002–03	310550	376037	121%	31055	24346	78%	85%	84%
2003–04	310550	596367	192%	31055	36104	116%	85%	88%
2004–05	486024	632533	130%	48602	39562	81%	85%	89%
2005–06	486024	650123	134%	48602	36066	74%	85%	86%
2006–07	489457	603073	123%	48946	32991	67%	85%	82%
2007–08*	489457	404064	83%	48946	24923	51%	85%	83%

*31–12–2007 வரை

3.6. தமிழ்நாடு மாநில நோயாளர் நிதி உதவி அமைப்பு:

தமிழக அரசின் ரூ.15.00 கோடி தொடக்க சுழற்சி நிதியினைக் கொண்டு தமிழ்நாடு நோயாளர் நிதி உதவி அமைப்பு நிறுவப்பட்டது. மேற்படி அமைப்புக்கு நிதி உதவி 2 : 1 என்ற விகிதாச்சாரத்தில் முறையே மாநில மற்றும் மைய அரசால் அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி அமைப்பை அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற்குழு நிருவகித்து வருகிறது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் உறுப்பினர்-செயலராகப் பணியாற்றுகிறார்.

உயிர் காக்கும் அறுவை சிகிச்சைகளான இதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, தலை அறுவை சிகிச்சை, இடுப்பு மாற்று அறுவை சிகிச்சை, தண்டுவட அறுவை சிகிச்சை ஆகிய அறுவை சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் மூலமாக அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை நோயாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதித் திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்குவதுபோல், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக நிதி உதவி வழங்கப்படுகிறது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இதய நோய் அறுவை சிகிச்சை காலதாமதமின்றி மேற்கொள்ளப்பட, தனியார் மருத்துவமனைகள் மூலம் செயற்படுத்தும் கூட்டு முயற்சியாக, இளம் சிறார்கள் இருதய அறுவை சிகிச்சைத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு அறுவை சிகிச்சைக்கும் அரசின் உதவியாக ரூபாய் 70,000 வரை தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை, 17 புகழ்பெற்ற தனியார் மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டு, 200 குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைக்கான அரசு உதவி வழங்கப்பட்டுள்ளது.

3.7. மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம் 1994 செயலாக்கம்:

தமிழகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மருத்துவமனைகளில் மட்டுமே மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. தமிழகத்தில், மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம், 1994-ன்கீழ் சேவை அளிக்க விண்ணப்பிக்கும் மருத்துவமனைகள் அருகில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி சிறப்பு மருத்துவக் குழுவால் ஆய்வு செய்யப்படுகின்றன. இக்குழு மருத்துவமனைகளை ஆய்வு செய்து ஆய்வறிக்கையை அளிக்கும். மாநில செயலாக்க அலுவலராகிய மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் இத்தகைய ஆய்வறிக்கையின் அடிப்படையில் மருத்துவமனைகளுக்கு மாற்று அறுவை சிகிச்சை சேவை தொடங்க அனுமதி வழங்குகிறார். உறவினர் அல்லாதவர்கள் சிறுநீரக தானம் அளிப்பதை ஒவ்வொரு நோயாளி மற்றும் தானம் அளிப்பவரைச் சரிபார்த்து அனுமதி வழங்க தமிழகத்தில் சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் மண்டலவாரியாக அனுமதி வழங்கும் குழுக்களை தமிழக அரசு அமைத்துள்ளது. அதன்படி, அந்தந்த மண்டலங்களில் உள்ள மருத்துவமனைகள், உறவினர் அல்லாதவர்களுக்கு இடையே நடைபெறும் சிறுநீரக மாற்று அறுவை

சிகிச்சைக்கான விண்ணப்பங்களை அந்தந்த அங்கீகாரக் குழுக்களிடம் அளித்து தானம் பெறுபவர் மற்றும் சிறுநீரக தானம் செய்பவர் ஆகிய இருவரையும் அக்குழுக்கள் முன் நிறுத்தி, அவர்களைப் பரிசீலனை செய்து அங்கீகாரக் குழு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய அனுமதி வழங்குகிறது. தமிழ்நாட்டில் தற்பொழுது 54 மருத்துவமனைகள் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய பதிவுரிமை பெற்றுள்ளன.

3.8. ஒருங்கிணைந்த அவசர மகப்பேறு சிகிச்சை மற்றும் சிசு கவனிப்பு மையங்களை வலுப்படுத்துதல்:

பேறு காலத்தில் தாய்மார்களின் இறப்பு விகிதம், குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்கவும், தாய்சேய் ஆரோக்கிய நிலையைப் பராமரிக்க வேண்டியும், 83 அரசு மருத்துவமனைகள் தெரிவு செய்யப்பட்டு, அம்மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் அவசர மகப்பேறு மருத்துவம் மற்றும் பச்சிளங் குழந்தைக்கான சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இம்மருத்துவமனைகளில், அவசரகால மகப்பேறு, அவசரகால பச்சிளங் குழந்தை சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்த சேமிப்பு வங்கி, அறுவை அரங்கம் மற்றும் நோயாளர் அவசர ஊர்தி போன்ற வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. 40 கிலோ மீட்டர் பயண தூரத்திலோ அல்லது ஒரு மணி நேரத்திற்குள்ளாகவோ முதன்மை சிகிச்சை மையத்தினைக் கருவுற்ற தாய்மார்கள் சென்றடையும் நோக்கில், மொத்தமுள்ள 162 முதன்மை சிகிச்சை மையங்களில், 83 சிகிச்சை மையங்கள் கண்டறியப்பட்டு, இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

3.9. விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு வலுப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல்:

தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சை அளிப்பதற்காக ஒவ்வொரு 50 கி.மீ. இடைவெளியில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை உருவாக்க தமிழக அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இதுவரை தேசிய நெடுஞ்சாலைகளில் அமையப்பெற்றுள்ள 10 அரசு மருத்துவமனைகளில் உள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் மானியத் தொகையாக மொத்தம் ரூ. 14.48 கோடி மைய அரசால் வழங்கப்பட்டுள்ளது. விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை

[2008 ஏப்ரல் 23

மேம்படுத்தவும் மற்றும் வலுப்படுத்தவும் மைய அரசால் வழங்கப்பட்டுள்ள நிதியுதவி விவரம்:—

வ. எண்	மருத்துவமனையின் பெயர் மற்றும் மாவட்டம்	தொகை (ரூபாய் கோடியில்)
1	அரசு தலைமை மருத்துவமனை, பெரம்பலூர்	1.05
2	அரசு தலைமை மருத்துவமனை, விழுப்புரம்	1.43
3	அரசு மருத்துவமனை ஓமலூர், சேலம் மாவட்டம்	1.50
4	அரசு தலைமை மருத்துவமனை பத்மநாபபுரம், கன்னியாகுமரி மாவட்டம்	1.50
5	அரசு தலைமை மருத்துவமனை, நாமக்கல்	1.50
6	அரசு தலைமை மருத்துவமனை வாலாஜா, வேலூர் மாவட்டம்	1.50
7	அரசு தலைமை மருத்துவமனை, தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்	1.50
8	அரசு தலைமை மருத்துவமனை, கடலூர்	1.50
9	அரசு மருத்துவமனை மேலூர், மதுரை மாவட்டம்	1.50
10	அரசு மருத்துவமனை தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம்	1.50
மொத்தம்		14.48

மைய அரசின் நிதி உதவியில் கிருஷ்ணகிரி மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.3.00 கோடி செலவில் அவசர விபத்து சிகிச்சை மையம் நடப்பாண்டில் அமைக்கப்படும்.

3.10. சி.டி. ஸ்கேன் அமைத்தல்:

கிராமப்புற ஏழை எளிய மக்களும் சி.டி. ஸ்கேன் வசதி பெறும் வகையில் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனை, திண்டுக்கல் மாவட்டம், பழனி அரசு மருத்துவமனை, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை, சேலம் மாவட்டம், ஆத்தூர் அரசு மருத்துவமனை, காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் அரசு மருத்துவமனை மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மருத்துவமனை ஆகிய ஆறு அரசு மருத்துவமனைகளில் சி.டி. ஸ்கேன் வசதி வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

2008 ஏப்ரல் 23]

3.11. எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அமைத்தல்:

ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் விரைவில் வழங்கப்படவுள்ளது.

3.12. பல் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்துதல்:

ரூபாய் 2.45 கோடி செலவில், 39 புதிய பல் சிகிச்சைப் பிரிவுகளுக்குப் புதிய பணியிடங்களை [ஒவ்வொரு மருத்துவமனைக்கும் ஒரு மருத்துவர் (பல்), செவிலியர், பல் நலவியலர், மருத்துவமனைப் பணியாளர்] ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. உபகரணங்கள் ரூ.78 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் பல் மருத்துவர்கள் விரைவில் நியமனம் செய்யபட உள்ளனர்.

3.13. 2008-2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:

(அ) ரூ. 42.00 இலட்சம் செலவில், கிருஷ்ணகிரி மற்றும் பத்மநாபபுரம் அரசு தலைமையிட மருத்துவமனைகளுக்கு 75 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்னாக்கிகள் வழங்கிக் கட்டடம் கட்டுதல்.

(ஆ) ரூ.5000/- மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மாவட்ட இணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அலுவலகத்திற்குத் தொலைபேசி வசதி ஏற்படுத்துதல்.

(இ) இயக்குநர், 6 கூடுதல் இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர்களுக்கு ரூ. 2.10 இலட்சம் மதிப்பீட்டில் செல்லிடத் தொலைபேசி வழங்குதல்.

[2008 ஏப்ரல் 23

அத்தியாயம்-4

தமிழ்நாடு மாநில கண் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம்

4.1. பார்வை இழப்பு என்பது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள பெரும் பிரச்சினையாகும். ஜூலை திங்கள் 1972 ஆம் ஆண்டிலேயே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், இலவசக் கண் சிகிச்சை முகாம் திட்டத்தைச் செயல்படுத்தி, மாநிலம் முழுவதும் முகாம்கள் நடத்தி, கண் புரை நோயினால் பார்வை இழந்தோருக்கு மருத்துவ வசதியும், கண் புரை அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டு, இலவசக் கண்ணாடியும் வழங்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட தேசிய கண்ணொளி இழப்புத் தடுப்புத் திட்டம், உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட கண் புரை நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டு 30-6-2002 வரை செயல்படுத்தப்பட்டது. அதன்பின் இத்திட்டம், 100 விழுக்காடு மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.2. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் மாவட்ட அளவில் திட்டமிடுதல், செயலாக்கம், வரன்முறைப்படுத்துதல் போன்றவற்றிற்காக தமிழ்நாடு மாநில பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம், தனி நிறுவனமாக 1-4-1996 முதல் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மாநில கண் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம், 1-4-2007 முதல், மாநில ஊரக சுகாதாரத் திட்ட இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு மாநில கண் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கத் திட்ட இயக்குநர் செயலாளராக இருப்பார். மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும், கண் பார்வை இழப்பினைக் கட்டுப்படுத்தும் வகையில், மாவட்ட ஆட்சியாளர் தலைமையின்கீழ் கண் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. பார்வை இழப்பைத் தடுக்க முடிகிற கண் புரை அறுவை சிகிச்சைக்கு முக்கியத்துவம் தரப்பட்டு அதற்கு சகல வசதிகளும் நிறைந்த கண் சிகிச்சைப் பிரிவு மற்றும் இருட்டறைகள் கட்டிக் கொடுத்தல் போன்றவை கடந்த 30-6-2002 வரை செயலாக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன. பார்வை இழப்பு, குறிப்பாக கண் புரையினால் வரும் பார்வை இழப்புத் தடுப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது.

2008 ஏப்ரல் 23]

4.3. மைய அரசின் நிதி உதவியினைக் கொண்டு, 2007-2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளின் விவரம் பின்வருமாறு:—

திட்ட விவரம்	நிர்ணயிக்கப் பட்ட இலக்கீடு	2007–2008 சாதனை (31-12-2007 வரை)	சாதனை விழுக்காடு
கண் புரை அறுவை சிகிச்சை	5,00,000	3,86,410	77%
விழி உள்ளாடி பொருத்தல்	3,50,000	3,76,652	108%
பெண் பயனாளிகள்	2,75,000	1,85,776	68%
இரு கண் பார்வையற்றவர்களுக்கான அறுவை சிகிச்சை	2,50,000	50,546	20%
தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினர் மற்றும் வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள பயனாளிகள்	2,50,000	1,86,073	74%
பள்ளிச் சிறார் கண் பரிசோதனை— கண் பரிசோதனை செய்யப்பட்ட பள்ளிச் சிறார்கள்	8,00,000	14,94,671	186%
கண் குறைபாடு கண்டறியப்பட்ட சிறார்கள்	56,000	49,739	89%
இலவசக் கண்ணாடி பெற்ற ஏழைச் சிறார்கள்	16,800	15,421	92%
கண் தானம் பெறுதல்— சேகரித்த கண்கள்	7,500	5,714	76%

4.4. 2008-2009 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன:—

(i) கண் புரை அறுவை சிகிச்சையில் 70 சதவிகிதத்திற்கு மேல் விழி உள்ளாடி (IOL) பொருத்துதல்

[2008 ஏப்ரல் 23

(2) பள்ளிச் சிறார்களுக்கு கண் பரிசோதனை செய்து குறைகளைக் களைதல் மற்றும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசக் கண்ணாடி வழங்குதல்.

(3) கருவிழி மாற்று அறுவை சிகிச்சைக்காக கண் தானம்மூலம் கண்களைச் சேகரித்தல்.

(4) நவீன முறையில் கண் புரை அறுவை சிகிச்சை செய்யவும் மற்றும் இதர சிறப்பு வழிமுறைகளைப் பின்பற்றவும் கண் மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(5) கண் பாதுகாப்புச் சேவையினை மேம்படுத்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு, மருத்துவமனைகளில் பல்வேறு வகைகளில் உதவிகளை வழங்க வழிவகுத்தல்.

(6) கண் சேமிப்பு வங்கிகளை மேம்படுத்துதல், கண் தானம் பெறும் நிலையங்களை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், சென்னையில் பன்னாட்டு அரிமா சங்க உதவியுடன், அனைத்து வசதிகள் அடங்கிய கண் சேமிப்பு வங்கி, மண்டல கண் மருத்துவமனை, சென்னை, அரசு கண் மருத்துவமனையில் இயங்கி வருகிறது.

4.5. அரசு மருத்துவமனைகளில் கண் புரை அறுவை சிகிச்சையை உயர்த்துவதற்கு; கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

1. அரசு மருத்துவமனைகளில், பணிபுரியும் கண் மருத்துவர்கள் பிரதி மாதம் 100 பேர்களுக்கு மேல் கண் புரை அறுவை சிகிச்சை செய்திருப்பின், 100-க்கும் மேல் உள்ள எண்ணிக்கைக்கு ஒருவருக்கு ரூ.100/- வீதம் ஊக்கத் தொகை வழங்க மாவட்ட கண் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. அரசு மருத்துவமனைகளில், தனியார் மருத்துவரின் துணையுடன் கண் புரை அறுவை சிகிச்சை செய்யலாம் எனவும், அவ்வாறு அறுவை சிகிச்சை செய்யும் கண் மருத்துவருக்கு, ஒரு சிகிச்சைக்கு ரூ.150/- வீதம் வழங்க, மாவட்ட கண் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. கண் புரை அறுவை சிகிச்சைப் பிரிவில் பயிற்சி பெற்ற தனியார் செவிலியர்கள் உதவியுடன், அரசு மருத்துவமனைகளில் கண் புரை அறுவை சிகிச்சை செய்யலாம் எனவும், அவ்வாறு

2008 ஏப்ரல் 23]

பணிபுரியும் செவிலியருக்கு அறுவை சிகிச்சை ஒன்றுக்கு ரூ.50/- வீதம் மாவட்ட கண் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4. கண் புரை அறுவை சிகிச்சைக்காக மைய அரசு வழங்கும் மானியத்திலிருந்து இச்செலவினை மேற்கொள்ள, மாவட்ட கண் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

5. இந்த தேசியத் திட்டத்தினை, சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர், தனக்கு இருக்கும் பல்வேறு பணிகளையொட்டி சரிவர கவனிக்க முடியவில்லை என்பதால் மாவட்டத்திலுள்ள முதுநிலை கண் மருத்துவர் இத்திட்டத்தின் மாவட்டத் திட்ட மேலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

4.6. மைய அரசின் நிதி உதவியைக் கொண்டு, மாநில அரசு கண் பார்வையற்றவர்களின் எண்ணிக்கையினை 0.8 விழுக்காடு என்ற அளவில் ஏற்கெனவே குறைத்துவிட்டது.

[2008 ஏப்ரல் 23

அத்தியாயம்–5

பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து

5.1. பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இம்மாநிலம் முழுவதும் 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 8,706 துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றின்மூலம் ஆரம்ப சுகாதாரப் பணிகளை அளித்து வருகிறது.

5.2. ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு:

5.2.1. தமிழகத்தில் மொத்தம் 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8,706 துணை சுகாதார நிலையங்கள் ஆகியவை நோய்த் தடுப்பு, உடல்நல மேம்பாடு மற்றும் நோய் களைதல் ஆகிய பணிகளை மக்களுக்கு அளிக்கின்றன. பெரும்பாலான வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்நோயாளிகளின் சேவைகள், அவசர சிகிச்சை வசதிகள் மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சை போன்ற வசதிகள் உள்ளன. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் மார்ச் 2008 வரை 683.50 இலட்சம் புறநோயாளிகளுக்கும், 6.47 இலட்சம் உள்நோயாளிகளுக்கும் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை அளிக்கப்பட்டது. மாதம் ஒன்றுக்கு 9 பிரசவங்கள் பார்க்கப்படுகின்றன. சராசரியாக நாளொன்றுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 133 புற நோயாளிகளுக்கும் (மார்ச் 2008) மாதமொன்றுக்கு 38 உள் நோயாளிகளுக்கும் (மார்ச் 2008) சிகிச்சை அளிக்கப்படுகிறது.

5.2.2. வாரத்தில் அனைத்து நாட்களிலும் செயல்படும் வகையில் 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர பிரசவ சேவைக்கான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இதற்கென 3,000 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். புதியதாக நியமிக்கப்பட்ட இந்த செவிலியர்களால் இதுவரை 1,53,968 பிரசவங்கள் செய்யப்பட்டுள்ளன. இது கடந்த 2006-07 ஆம் ஆண்டைக் காட்டிலும் 86.50 விழுக்காடு அதிகமானதாகும்.

2008 ஏப்ரல் 23]

5.2.3. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மற்றும் துணை சுகாதார நிலையங்களிலும் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.17.28 கோடி வழங்கப்பட்டுள்ளது. 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் இணையதள வசதிகளுடன் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் மேலும் 1,036 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ. 5.73 கோடி செலவில் கணினிகள் வழங்கப்பட்டுவிட்டன. நாட்டிற்கே முன்னோடியாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கணினிகள் வழங்குவதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

5.3. ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்:

தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துக் கொடுப்பதே இவ்வரசின் கொள்கையாகும். 2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 2001-2006-ல், 106 ஆரம்ப சுகாதார நிலையங்களும் மேம்படுத்தப்பட்டன. 2007-08-ல், 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.43.49 கோடி செலவில் 30 படுக்கை வசதிகளுடன் இந்திய பொதுச் சுகாதார தரத்திற்கேற்ப (IPHS) தரம் உயர்த்தி மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த மேம்படுத்தப்பட்ட 205 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நவீனக் கருவிகளான அல்ட்ராசோனோகிராம், இ.சி.ஜி., ஊடுகதிர் இயந்திர சாதனப் பிரிவு, பகுப்பாய்வு செய்ய ஆய்வகம் மற்றும் நோயாளர் அவசர ஊர்தி வழங்கப்பட்டுள்ளன. படிப்படியாக 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களும், 30 படுக்கை வசதிகள் கொண்ட நிலையங்களாக மேம்படுத்தப்படும்.

5.4. ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுதல்:

தற்பொழுது 1,375 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 8 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 38 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அரசுக் கட்டடம் கட்ட வேண்டியுள்ளது. 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நபார்டு வங்கிமூலம் கட்டடங்கள் கட்டும் நடவடிக்கைகளுக்காக நிதி உதவி கோரப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 23

5.5. துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டுதல்:

மொத்தமுள்ள 8,706 துணை சுகாதார நிலையங்களில், 6,510 துணை சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 2,196 துணை சுகாதார நிலையங்களில், 234 துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட நபார்டு வங்கியிடம் கடன் கோரப்பட்டுள்ளது.

5.6. தடுப்பூசித் திட்டம்:

தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னி, தட்டம்மை, இளம்பிள்ளைவாதம் மற்றும் காசநோய் ஆகிய ஆறு நோய்களைத் தடுப்பதற்காகத் தடுப்பூசித் திட்டம் 1978 ஆம் ஆண்டில் தமிழக அரசால் தொடங்கிவைக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 12.5 இலட்சம் கருவுற்ற தாய்மார்கள் மற்றும் 11.5 இலட்சம் குழந்தைகள் தடுப்பூசி மருந்துகள்மூலம் மேற்கண்ட நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுகின்றனர். மேலும், சிறப்பான முறையில் தடுப்பூசித் திட்டம் செயல்படுத்தப்படுவதால், தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களின் பாதிப்பு வெகுவாகக் குறைந்துள்ளது.

- தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், பிறந்த குழந்தைகளுக்கான இரணஜன்னி மற்றும் இளம்பிள்ளைவாதம் ஆகிய நோய்களின் தாக்கம் இல்லை.
- தட்டம்மை நோயினால் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 2,000 குழந்தைகள் பாதிக்கும் நிலை இருந்து வருகிறது.

ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட இடத்தில் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி ஒவ்வொரு புதன் கிழமையும் ஊரகப் பகுதிகளில் 8,706 கிராம சுகாதாரச் செவிலியர்கள் திட்டமிட்ட கிராமங்களுக்குச் சென்று தடுப்பூசி வழங்கி வருகிறார்கள். நகர்ப் பகுதிகளில் 1500-க்கு மேற்பட்ட நலப் பணியாளர்கள் வாரம்தோறும் தடுப்பூசிப் பணிகளில் ஈடுபடுகிறார்கள். காலந்தவறாது, தரமான தடுப்பூசி வழங்குவது இதன்மூலம் உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாடு தடுப்பூசி சேவையில் 100% சாதனையை எட்டியுள்ளது.

2008 ஏப்ரல் 23]

எளிதில் செல்லமுடியாத இடங்களில் வசிக்கும் குழந்தைகளுக்கும், குடிசைப் பகுதியில் வாழும் குழந்தைகளுக்கும் தடுப்பூசி வழங்க சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது.

5.7. போலியோ சிறப்பு முகாம்:

போலியோ நோயை அறவே ஒழிக்க தமிழ்நாட்டில் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் 1995-96 முதல் 2006-07 வரை 14 சுற்றுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்கள்மூலம் ஒவ்வொரு சுற்றிலும் 5 வயதிற்குட்பட்ட சுமார் 65 இலட்சம் முதல் 73 இலட்சம் குழந்தைகளுக்குக் கூடுதல் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. 2007-08 ஆம் ஆண்டில், இரண்டு சுற்றுகள் அதாவது 6-1-2008 மற்றும் 10-2-2008 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட முகாமில் 72 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். கடந்த 2004 பிப்ரவரி முதல் தமிழ்நாட்டில் எந்தக் குழந்தையும் போலியோ நோயினால் பாதிக்கப்படவில்லை.

5.8. மஞ்சள் காமாலை தடுப்புத் திட்டம்:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மஞ்சள் காமாலை நோய்த் தடுப்பு மருந்து அளிக்கும் திட்டம் 6-1-2008 அன்று துவங்கப்பட்டு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான ஹெப்படைட்டிஸ்-பி மருந்தும், ஒரு முறை உபயோகித்தவுடன் தானே செயலிழக்கக்கூடிய ஊசிக் குழல்களும் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்மூலம் ஆண்டொன்றுக்கு 11.5 இலட்சம் குழந்தைகள் பயனடைவார்கள். இத்திட்டத்தின்கீழ் மூன்று தவணைகளில் மருந்து வழங்குவதன்மூலம் மஞ்சள் காமாலை ஹெப்படைட்டிஸ்-பி வைரசால் ஏற்படக்கூடிய கல்லீரல் சுருக்குநோய் மற்றும் கல்லீரல் புற்றுநோயிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்படுகின்றனர்.

5.9. தாய்சேய் நலப் பணிகள்:

5.9.1. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அதனைச் சார்ந்த துணை சுகாதார நிலையங்கள் மூலமாக தாய்சேய் நலப் பணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையமும்,

மலைப் பகுதிகளில் 3,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையமும் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. கருவுற்ற தாய்மார்களைப் பதிவு செய்தல், கருவுற்ற தாய்மார்களைப் பரிசோதித்தல், இரணஜன்னி நோய் ஏற்படாமல் தடுக்க தடுப்பூசி போடுதல், பேறுகாலப் பராமரிப்பு மற்றும் பேறுகாலப் பின் பராமரிப்பு அளித்தல் போன்ற பணிகள் வழங்கப்படுகின்றன.

5.9.2. ஒவ்வொரு துணை சுகாதார நிலையமும் கிராம சுகாதாரச் செவிலியரால் செயல்படுத்தப்படுகிறது. ஆண்டொன்றிற்கு ரூபாய் 2,000/- மதிப்புள்ள மருந்துகள் ஒவ்வொரு துணை சுகாதார நிலையத்திற்கும் அளிக்கப்படுகின்றன. எதிர்பாராச் செலவினங்கள் மேற்கொள்ள ஆண்டிற்கு தலா ரூ. 2,000/- வீதம் துணை சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படுகிறது. வாடகைக் கட்டடத்தில் இயங்கும் துணை சுகாதார நிலையங்களுக்கு, வாடகைக்காக தலா ரூ. 3,000/- ஆண்டொன்றிற்கு வழங்கப்படுகிறது. நிலையங்களில் குழந்தைப் பிறப்பு அதிகரிப்பதற்காக, பிரசவம் பார்க்கும் கிராம சுகாதாரச் செவிலியருக்கு தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு பிரசவத்திற்கும் ரூ. 50/- ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படுகிறது.

5.9.3. ஊரக மற்றும் நகரங்களுக்கு மருந்துப் பெட்டி A மற்றும் B வழங்கப்பட்டுள்ளன. இரும்புச் சத்து மாத்திரைகள் (சிறியது மற்றும் பெரியது), உப்பு நீர்க் கரைசல் பொட்டலங்கள், வைட்டமின் 'ஏ' திரவம் மற்றும் தாய்சேய் நலப் பணிகளுக்குத் தேவையான மருந்துகள் இந்தப் பெட்டிகள்மூலம் வழங்கப்படுகின்றன. மருத்துவமனையில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கையை உயர்த்திட, பிரசவ மேஜைகள் மற்றும் குழந்தைகள் எடை பார்க்கும் கருவிகள் துணை சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கருவுற்ற தாய்மார்களுக்கும், இரத்த சோகை உள்ள தாய்மார்களுக்கும் இரும்புச் சத்து மாத்திரைகள் (பெரியது) வழங்கப்படுகின்றன. வளரிளம் பெண்களிடையே காணப்படும் இரத்த சோகை நோயைக் கட்டுப்படுத்திட ஒவ்வொரு வியாழக்கிழமையும் சுமார் 53 இலட்சம் வளரிளம் பெண்களுக்கு இரும்புச் சத்து மாத்திரை (பெரியது) வழங்கப்படுகிறது.

5.10. கருவுற்ற பெண்களுக்கான சிறப்புத் திட்டம்:

5.10.1. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் 15-9-2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள கருவுற்ற பெண்களின்

ஊட்டச் சத்து உணவுக்காகவும், பேறு காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும், குறைந்த எடையுள்ள குழந்தைப் பிறப்பினைத் தவிர்க்கவும், கருவுற்ற பெண்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 6,000/- வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. 2006-07 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.100 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டது. இலங்கைவாழ் கருவுற்ற பெண் அகதிகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 2006-07 ஆம் ஆண்டில் 2,41,095 கருவுற்ற பெண்கள் பயனடைந்தனர். 2007-08 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 31-3-2008 வரை 4,59,037 கருவுற்ற பெண்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் விதிமுறைகளின்படி இப்பயன்களைப் பெற கருவுற்ற பெண்கள் குடும்ப வருமானச் சான்றிதழ் பெற வேண்டியுள்ளது. கருவுற்றிருக்கும் காலத்தில், இதற்காக அவர்கள் சிரமப்பட வேண்டியுள்ளதைக் கருத்தில் கொண்டு, வருமானச் சான்றிதழ் பெறவேண்டிய தேவையைத் தளர்த்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு பேறுகாலப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் கிராம சுகாதாரச் செவிலியர்களின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, இவர்களுக்கு நடப்பு நிதியாண்டிலிருந்து, இத்திட்டத்தின்கீழ் எவ்வித வருமானச் சான்றிதழும் இன்றி, நிதியுதவி வழங்கப்படும்.

5.10.2. 2007-08 ஆம் ஆண்டில் மைய அரசு, தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் 8,706 துணை சுகாதார நிலையங்களுக்கும் தலா ரூ.10,000/- வீதம் ரூ.8,70,60,000/-ஐ எதிர்பாராச் செலவினம் மேற்கொள்ள விடுவித்துள்ளது.

5.11. பள்ளிக் குழந்தைகள் நலத் திட்டம்:

5.11.1. இத்திட்டத்தின்கீழ், 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு நோய்கள் மற்றும் உடல் நலம் குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

5.11.2. இருதயம், கண் மற்றும் பல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் இம்முகாமில் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வியாழக்கிழமையும் பள்ளி சுகாதார நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் மேல் சிகிச்சை நாளாக கடைப்பிடிக்கப்பட்டு சிறப்பு மருத்துவ கவனிப்பு தேவைப்படும் மாணவர்கள், மேல் மருத்துவம் மற்றும் தொடர் சிகிச்சைக்காக உயர் மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

[2008 ஏப்ரல் 23

5.11.3. இத்திட்டத்தினைச் செவ்வனே செயல்படுத்திடவும், ஒருங்கிணைக்கவும் ஒவ்வொரு பள்ளியிலும் இரு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுவாக மாணவர்களிடையே காணப்படும் நோய்களைக் கண்டறிந்து அதனை மருத்துவரிடம் எடுத்துச்சொல்லத் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

5.11.4. 2007-2008 ஆம் ஆண்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 40,308 பள்ளிகளில், மார்ச் 2008 (தற்காலிகம்) திங்கள் வரை பள்ளிகளில் முகாம் நடத்தப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

பார்வை	பார்வையிடப்பட்ட	
	பள்ளிகள்	மாணவர்கள்
1	35,262	67,15,854
2	8,686	15,72,641
3	1,685	3,57,388

இந்த மாணவர்களில் 43,96,835 மாணவர்களுக்கு நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. 32,885 மாணவர்கள் மேல் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

5.12. தொற்று நோய்க் கட்டுப்பாடு:

5.12.1. தொற்றுநோய்கள் மற்றும் நீர், காற்றுமூலம் பரவக்கூடிய நோய்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதே, பொதுச் சுகாதாரத் துறையின் குறிப்பிடத்தக்க பணியாகும். அனைத்து மாவட்ட அளவிலான அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சி அலுவலர்களை உரிய தடுப்பு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்துவதுடன், திடக்கழிவுகளை எவ்வாறு முறையாக அழித்தல், சுகாதாரம் மற்றும் துப்புரவு, குடிநீர் நிலையங்களைக் கிருமிநாசினிகள்மூலம் எவ்வாறு சுத்தம் செய்தல் போன்றவை அறிவுறுத்தப்படுகின்றன. 2007 ஆம் ஆண்டில் 61,890 நீர் நிலையங்கள் கிருமிநாசினிகள்மூலம் சுத்தம் செய்யப்பட்டுள்ளன. 2008 ஆம் ஆண்டில் (31-3-2008 வரை) 14,271 நீர் நிலையங்கள் கிருமிநாசினிகள்மூலம் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

5.12.2. வாந்தி பேதியினால் உண்டாகும் உடல் நீர் வறட்சியை ஈடு செய்ய, வாய் வழியாகத் தரப்படும் உப்பு நீர்க் கரைசல் பொட்டலங்களை உபயோகிக்கும் முறை மற்றும் உப்பு நீர்க் கரைசல்

2008 ஏப்ரல் 23]

தயாரிக்கும் முறை பற்றிய செயல் விளக்கம் மக்களுக்கு பொதுச் சுகாதார களப்பணியாளர்களால் போதிக்கப்பட்டு வருகிறது. கடந்த 6 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட தீவிர வயிற்றுப்போக்கு மற்றும் காலரா நிகழ்வுகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

ஆண்டு	வயிற்றுப்போக்கு			காலரா		
	நிகழ்வுகள்	இறப்பு	இறப்பு விகிதம்	நிகழ்வுகள்	இறப்பு	இறப்பு விகிதம்
2003	59471	66	0.11	390	1	0.26
2004	77400	119	0.15	1505	2	0.13
2005	70618	65	0.09	777	1	0.13
2006	52555	22	0.04	152	1	0.66
2007	49920	26	0.05	725	0	0.00
2008 (மார்ச் வரை)	11283	22	0.19	242	0	0.00

5.13. தொழிற்சாலை மற்றும் நலவியல் :

5.13.1. குடிநீரில் கலக்கும் மாசு மற்றும் தூய்மைக் கேட்டினைத் தடுப்பதற்காக, பல்வேறு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரங்களிலிருந்து சேகரிக்கப்படும் நீர் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு, சென்னை மற்றும் கோயம்புத்தூரில் நீர்ப் பகுப்பாய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இப்பகுப்பாய்வுக் கூடங்கள் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளைப் பரிசோதனை செய்யவும், தொழிற்சாலை மற்றும் சுற்றுப்புறத் தூய்மைக்கேட்டை கட்டுப்படுத்தத் தேவையான கள ஆய்வுகள் மேற்கொள்ளவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு உதவி புரிந்து வருகின்றன.

5.13.2. தொழிற்சாலையைச் சுற்றியுள்ள காற்றின் தரத்தை மதிப்பீடு செய்யவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிற்சாலைப் பகுதிகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் ஆகியவற்றை வகைப்படுத்தி, காற்று மாசு மற்றும் ஒலித் தொந்தரவுகளைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில் 23,408 நீர் மாதிரிகள் இந்த ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்ட

[2008 ஏப்ரல் 23

குடிநீர் பொதுமக்களுக்குக் கிடைக்கும்படி வகைசெய்யப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டில் (மார்ச் 2008 வரை) 2,670 நீர் மாதிரிகள் இந்த ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு கிடைக்கும்படி வகை செய்யப்பட்டுள்ளது.

5.14. உணவுக் கலப்படத் தடுப்பு :

5.14.1. மனித இனம் உயிர்வாழ அத்தியாவசியத் தேவையானது உணவாகும். இதன் தேவை அதிகமாக உள்ளதால், அதிக இலாபத்தைப் பெறும் நோக்கத்துடன் தரம் குறைந்த, விலை மலிவான பொருட்களுடன் கலப்படம் செய்யப்படுகிறது. ஏமாற்று வியாபாரிகளிடம் இருந்து மக்களைக் காப்பாற்றவும், மக்களுக்கு நல்ல தரமான உணவு கிடைக்கும் நோக்கத்துடனும் உணவு கலப்படத் தடைச் சட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உணவு கலப்படத்தைத் தடுக்கவும், தரமான உணவுப் பொருட்கள் கிடைக்கவும் அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும், மைய அரசால் கொண்டுவரப்பட்ட உணவுக் கலப்படத் தடைச் சட்டம், 1954 மற்றும் அதன் விதிகள், 1955-ன் கீழ் எடுத்து வருகிறது.

5.14.2. தமிழகத்தில் 481 உள்ளாட்சிகளில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தை செவ்வனே செயல்படுத்தும் நோக்கத்துடன், அனைத்து உள்ளாட்சிகளிலும் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5.14.3. தமிழ்நாட்டிற்கு தற்போது 854 உணவு ஆய்வாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், 192 உணவு ஆய்வாளர்களே உள்ளனர். உணவு ஆய்வாளர்கள் பணியிடங்களை நிரப்ப தகுதியுடைய துப்புரவு ஆய்வாளர் / சுகாதார ஆய்வாளர்களுக்கு உணவு ஆய்வாளர் பயிற்சி கொடுக்க உத்தரவிடப்பட்டு, இதுவரை 307 நபர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

5.14.4. தமிழ்நாட்டில் உணவு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் உணவு மாதிரிகள், சென்னை மாநகராட்சி உணவு பகுப்பாய்வுக் கூடம் மற்றும் கிண்டி, கோயமபுத்தூர், மதுரை, தஞ்சாவூர், பாளையங்கோட்டை மற்றும் சேலத்தில் உள்ள உணவுப் பகுப்பாய்வுக் கூடங்களில் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன. உலகமயமாக்கல் காரணமாக வெளிநாட்டு உணவுப் பொருட்கள் இந்தியச் சந்தைகளில்

2008 ஏப்ரல் 23]

அதிகமாக இறக்குமதி ஆகின்றன. எனவே, அதற்கேற்ப உணவுப் பகுப்பாய்வுக் கூடங்களின் தரத்தினை உயர்த்தும் நோக்கத்துடன் துறைமுகங்களுக்கு அருகே உள்ள கிண்டி, தஞ்சாவூர், பாளையங்கோட்டை உணவுப் பகுப்பாய்வுக் கூடங்கள், உலக வங்கி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 833.56 இலட்சம் நிதி வழங்கப்பட்டு கிண்டியில் புதிய கட்டடமும், கிண்டி, தஞ்சாவூர், பாளையங்கோட்டை ஆய்வுக் கூடங்களுக்கு நவீன உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

5.14.5. 2007-08 ஆம் ஆண்டில், பிப்ரவரி, 2008 வரை, 4,636 உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்ததில் 863 உணவு மாதிரிகள் கலப்படம் எனக் கண்டறியப்பட்டுள்ளன. உணவு மாதிரிகளில் 18.61 சதவிகிதம் கலப்பட உணவு எனக் கண்டறியப்பட்டுள்ளது.

5.15. பிறப்பு–இறப்பு புள்ளி விவரங்கள்:

5.15.1. பிறப்பு-இறப்பு பதிவு மாநிலம் முழுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 1969 ஆம் ஆண்டுக்கான பிறப்பு-இறப்பு பதிவுச் சட்டப் பிரிவு 18-ன்படியும், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு திருத்தியமைக்கப்பட்ட விதிகள், 2000-ன்படியும் நிகழ்வு நடந்த இடத்தில் பிறப்பு / இறப்பு பதிவு செய்யப்படவேண்டும்.

2006 ஆம் ஆண்டின் முக்கிய விகிதங்கள் (மாதிரிப் பதிவுத் திட்டத்தின்படி)

பிறப்பு விகிதம் 16.2/1,000 மக்கள்தொகைக்கு

இறப்பு விகிதம் 7.5/1,000 மக்கள்தொகைக்கு

சிசு மரண விகிதம் 31/1,000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு

தாயின் இறப்பு விகிதம் 90/1,00,000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு

5.15.2. இறப்பின் காரணம் குறித்து மருத்துவச் சான்றளித்தல் பற்றி 10 வருவாய் மாவட்டங்கள் மற்றும் 13 சுகாதாரப் பிரிவு மாவட்டங்களில் உள்ள 750 மருத்துவர்கள் / குறியீட்டாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில் பிறப்பு-இறப்பு பதிவு குறித்து 15 மாவட்டங்களில் உள்ள 1,000 காவல் துறை அதிகாரிகளுக்கு அவர்களது பயிற்சி மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.

[2008 ஏப்ரல் 23

5.16. மலேரியா:

5.16.1. தமிழ்நாட்டின் நகர்ப் பகுதிகள், கடற்கரையோர மற்றும் ஆற்றோரப் பகுதிகளில் மலேரியா நோய் மிகுதியாகப் பரவுகிறது. தமிழ்நாட்டில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டோரில் 71.8 சதவிகிதத்தினர் நகர்ப்புறத்தினைச் சார்ந்தவர்கள். குறிப்பாக சென்னை மாநகரத்தினைச் சார்ந்தவர்கள்.

5.16.2. மலேரியா நோய் நிகழ்வுகளைக் கண்டறிந்து, தக்க தடுப்பு நடவடிக்கை ஒவ்வொரு வீட்டையும் சென்றடையும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறான தீவிர மலேரியா தடுப்பு நடவடிக்கைளினால் மலேரியா நோயின் பாதிப்பு கணிசமாகக் குறைந்துள்ளது. 2006-ல் 28,219 ஆக இருந்த மலேரியா நிகழ்வுகள் 2007-ல் 22,389 ஆகக் குறைந்துள்ளது. 2008-ல் (மார்ச் வரை) 2,653 மலேரியா நிகழ்வுகள் உள்ளன.

5.17. யானைக்கால் நோய் :

5.17.1. தமிழ்நாட்டில் 1957 ஆம் ஆண்டு முதல் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. யானைக்கால் நோய்த் தடுப்பு நடவடிக்கை 43 நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நகர்ப்புறப் பகுதிகளில் 25 கட்டுப்பாட்டுப் பிரிவுகளும், 44 இரவு நேர மருத்துவ மையங்களும் இயங்கி வருகின்றன. 5 மாவட்டங்களில், வட்ட அளவில் 42 யானைக்கால் மற்றும் மலேரியா மருத்துவ மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், இந்நோய் அதிகமாக உள்ள பகுதிகளைக் கண்டறிய ஒரு ஆய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. D.E.C. மாத்திரைகள் மைய அரசால் வழங்கப்படுகின்றன. செயல்படுத்துகின்ற மொத்தச் செலவும் மாநில அரசால் ஏற்கப்படுகிறது. யானைக்கால் நோய் நிகழ்வுகள் அதிகமாகக் காணப்படும் மாவட்டங்களில் D.E.C. மற்றும் ஆல்பெண்டசோல் மாத்திரைகள் வழங்கும் ஒட்டுமொத்த சிகிச்சைத் திட்டம் 1997-1998 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

5.17.2. யானைக்கால் நோயுள்ள பகுதிகளை அதிகமாகக்கொண்ட 14 மாவட்டங்களான காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், திருச்சி, பெரம்பலூர், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், கன்னியாகுமரி, நாகப்பட்டினம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் ஒட்டுமொத்த D.E.C. சிகிச்சைத் 2007 ஆம்

2008 ஏப்ரல் 23]

ஆண்டில் திட்டம் நடத்தப்பட்டது. இதுதவிர, திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், கிருஷ்ணகிரி, விருதுநகர், மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள சில கிராமங்களிலும் சென்னை மாநகராட்சியில் உள்ள 64 வார்டுகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலமாக 2.60 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர். 27-12-07, 28-12-07 மற்றும் 29-12-07 ஆகிய தேதிகளில் D.E.C. மாத்திரை வழங்கும் ஒட்டுமொத்த சிகிச்சைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, மொத்த மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 91.5 சதவிகிதத்தினருக்கு இந்த மாத்திரைகள் வழங்கப்பட்டன.

5.18. மூளைக் காய்ச்சல்:

5.18.1. கடந்த சில ஆண்டுகளாக மூளைக் காய்ச்சல் நோய் முக்கியப் பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக உருவாகியுள்ளது. பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மற்றும் மதுரை சுகாதார மாவட்டங்களில் இந்நோய் நிகழ்வுகள் ஏற்படுகின்றன. கடலூர், விழுப்புரம் மற்றும் பெரம்பலூரில் உள்ள மூளைக் காய்ச்சல் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவும், சென்னையிலுள்ள கண்காணிப்புப் பிரிவும் இந்நோயைப் பரப்பும் பூச்சித் தடுப்பு, பூச்சியியல் ஆய்வுகளை மேற்கொள்கின்றன. பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள சில தெரிவு செய்யப்பட்ட கிராமப் பகுதிகளில் மூளைக் காய்ச்சல் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டம் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

5.18.2. விழுப்புரம், கடலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 1 முதல் 15 வயதிற்குட்பட்ட 18,19,000 குழந்தைகளுக்கு 2007 ஆம் ஆண்டு ஜூலையில் தடுப்பூசி போடப்பட்டது. 2008 ஆம் ஆண்டு இத்தடுப்பூசித் திட்டம் திருச்சி, மதுரை, திருவாரூர், தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட உள்ளது. கொசு ஒழிப்புப் பணி ஜப்பானிய மூளைக் காய்ச்சல் உள்ள மாவட்டங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

5.18.3. சந்தேகத்திற்குரிய மூளைக் காய்ச்சல் நிகழ்வுகளில் கிராமப் பகுதிகளில் புகை மருந்து அடிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மூளைக் காய்ச்சல் இரத்த மாதிரிகள், 12 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் ஓசூரில் உள்ள நோய் பரப்பிகள் மற்றும் விலங்கின பரிவர்த்தன நோய்க் கட்டுப்பாட்டு நிறுவனத்தில் உள்ள நோய்க்

[2008 ஏப்ரல் 23

கண்காணிப்பு மையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு நோய் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த பரிசோதிக்கப்படுகின்றன. நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைச் செயல்படுத்த கொசு தங்கியுள்ள முட்டைகளைக் கண்டறிந்து இந்நோய்க் கிருமியை அப்புறப்படுத்தும் நோக்குடன் கொசுக்கள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன. 2007 ஆம் ஆண்டில் 43 நிகழ்வுகள் பதியப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்மூலம் 24,47,137 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். 2008 ஆம் ஆண்டில் (31-3-2008 வரை) 10 நிகழ்வுகள் பதியப்பட்டுள்ளன.

5.19. நோய் பரப்பிகள் மற்றும் விலங்கின நோய் பரிவர்த்தனை கட்டுப்பாட்டு நிறுவனம், ஒசூர்:

தீவிர பிளேக் நோய் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒசூரில் நோய் பரப்பிகள் கட்டுப்பாட்டு மையம் நிறுவப்பட்டு தலைமையகமாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு பல்வேறு விதமான பயிற்சிகள், பயிலரங்குகள், கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இந்நிறுவனத்தில் ஓராண்டு பொதுச் சுகாதார பூச்சியியல் முதுநிலைப் பட்டயப் படிப்பும் மற்றும் ஆய்வக உதவியாளர்கள், களப் பணியாளர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மூளைக்காய்ச்சல், டெங்கு, லெப்டோஸ்பைரோசிஸ் மற்றும் பூச்சிகளால் தொற்றும் நோய்கள் குறித்த ஆய்வகப் பரிசோதனை இந்நிறுவனத்தில் நடைபெற்று வருகிறது.

5.20. லெப்டோஸ்பைரோசிஸ் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் :

லெப்டோஸ்பைரோசிஸ் நோய் தற்சமயம் தமிழகத்தில் பரவிவரும் ஒரு புதுநோய் என்பதால், நோய் கண்டறியும் முறை மற்றும் தடுப்பு நடவடிக்கை எடுக்கவேண்டிய உடனடி சூழ்நிலை ஏற்பட்டுள்ளது இதன் காரணமாக உடன் நோய் கண்டறியும் கருவிகள் லெப்டோஸ்பைரோசிஸ் பரவியுள்ள மாவட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் உதகமண்டலம், தூத்துக்குடி தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் இந்நோய் பரவியுள்ளது. 7 லெப்டோ சிகிச்சை மையங்கள், ஏற்படுத்தப்பட்டு உடனடி நோய் கண்டறியும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டில் 1,025 நபர்களை இந்நோய் பாதித்துள்ளது. 2008 ஆம் ஆண்டில் (மார்ச் 2008 வரை) 168 நபர்களை இந்நோய் பாதித்துள்ளது.

2008 ஏப்ரல் 23]

5.21. டெங்கு நோய் கட்டுப்பாட்டுத் திட்டம்:

நாகர்கோவில், வேலூர், தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள வட்ட / மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 12 டெங்கு சிகிச்சை நிலையங்கள் துவங்குவதற்கான அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. விரைவாகப் பரிசோதனை செய்வதற்கான கருவிகள் நோய் பரவக்கூடிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மழைக்காலங்களில் டெங்கு நோய் பரவாமல் தடுக்க அனைத்து சுகாதார மாவட்டங்களுக்கும் தகுந்த வழிகாட்டு நெறிமுறைகள் அனுப்பப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 2007 ஆம் ஆண்டில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட 707 பேர்களில் 2 பேர்கள் இறந்துள்ளனர். தமிழ்நாட்டில் 2008 ஆம் ஆண்டில் (மார்ச் வரை) டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 89 ஆகும். 12 மருத்துவக் கல்லூரிகளிலும் மற்றும் ஒசூரில் அமைந்துள்ள நோய் பரப்பிகள் மற்றும் விலங்கின பரிவர்த்தன நோய்க் கட்டுப்பாட்டு நிறுவனத்திலும் டெங்கு, மூளைக் காய்ச்சல், சிக்குன்குன்யா ஆகியவற்றை பரிசோதித்து கண்டறியும் வசதிகளுடன்கூடிய கண்காணிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

5.22. சிக்குன்குன்யா:

1964 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சிக்குன்குன்யா காய்ச்சல் முதன் முதலாகக் கண்டறியப்பட்டது. அந்நேரத்தில் மூன்று இலட்சம் பேருக்கு மேல் இந்நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். 2006-ல், தமிழகத்தின் 29 மாவட்டங்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டு 64,802 பேர் பதிவு செய்யப்பட்டிருந்தனர். பிற துறைகளின் ஒத்துழைப்புடன் தீவிர நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுத்ததன்மூலம் இந்நோய் மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது. பின்வரும் செயல்பாடுகளினால் பெரியளவில் இந்நோய்த் தாக்கம் தடுக்கப்பட்டது:-

நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக 3,850 பணியாளர்களும், (ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 10 பேர் வீதம்) 742 சுகாதாரப் பணியாளர்களும் உரிய நேரத்தில் பணியமர்த்தப்பட்டனர். தமிழக எல்லையோர மாநிலங்களின் சுகாதார அலுவலர்களின் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு தகவலும் அனுபவமும் பரிமாறிக்கொள்ளப்பட்டன. எல்லையோர மாவட்டங்களில்

எல்லையோர சுகாதார சோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. அண்டை மாநிலங்களின் எல்லைகள் அனைத்திலும் மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன. வெளியிலிருந்து காய்ச்சலுடன் வந்த அனைவருக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. சிக்குன்குன்யா நோயால் பாதிக்கப்பட்டோர் மேற்கொண்டு பயணம் தொடர வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். சிக்குன்குன்யா காய்ச்சல் கிருமி உள்ளதா என்பதை இரயில் வண்டி உட்பட அனைத்து வாகனங்களில் வந்தோரிடம் பரிசோதனை செய்யப்பட்டது. தகவல், கல்வி, தகவல் தொடர்பு செயல்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டன. 2007 ஜூன் 23 மற்றும் 24 தேதிகளில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த "கொசுக்களுக்கு எதிரான போர்" கடைப்பிடிக்கப்பட்டது. தேசிய கிராம சுகாதாரத் திட்டத்தின்கீழ், கிராம சுகாதார மற்றும் துப்புரவுக் குழுக்கள்மூலம் பகுதிநேரப் பணியாளர்கள் காய்ச்சல் கிருமியினைக் குறைக்கும் நடவடிக்கைக்காக பணியமர்த்தப்பட்டனர். 2006-07 மற்றும் 2007-08 ஆம் ஆண்டுகளில் சிக்குன்குன்யா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு அரசு ரூ. 12 கோடி ஒதுக்கீடு செய்தது. நோய் கண்டறியும் வசதிகளுடன் 13 கண்காணிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 2007 ஆம் ஆண்டில் 45 பேர்களை மட்டும் இந்நோய் தாக்கியுள்ளது. 2008 ஆம் ஆண்டில் (31-3-2008 வரை) 3 பேர்களை மட்டும் இந்நோய் தாக்கியுள்ளது.

5.23. ஒருங்கிணைந்த தீவிர நோய்க் கண்காணிப்புத் திட்டம்:

5.23.1. நோய்க் கண்காணிப்பு என்பது, நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கும் நோக்கத்திற்காக பல்வேறு முன்னுரிமை நோய்கள் ஏற்படுதல் மற்றும் பரவுதல் குறித்த தகவலைத் திட்ட முறையில் சேகரிப்பதாகும். மைய அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கங்களாவன:

- தொற்றும் தன்மையுள்ள மற்றும் தொற்றும் தன்மை இல்லாத நோய்களுக்காக மாநிலம் முழுவதிலும் பரவலாக்கப்பட்ட கண்காணிப்பு ஏற்பாட்டு முறை ஒன்றை ஏற்படுத்துதல்.
- நோயைக் கட்டுப்படுத்தும் திட்டங்களின் தற்போதுள்ள கண்காணிப்பு நடவடிக்கைகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் பலகாலமாக நோயின் போக்குகளைக் கண்டுபிடிக்க இயலும் பொருட்டும், நோய்க் கட்டுப்பாட்டு உத்திகள் குறித்து மதிப்பீட்டாய்வு செய்வதற்கும் தொடர்புடைய தகவல்களை, சுகாதார நிருவாகம், சமுதாய மற்றும் ஏனைய பொறுப்பாளர்களுடன் பகிர்ந்துகொள்ள உதவுதல்.

5.23.2. இத்திட்டம், பின்வரும் ஏற்பாட்டு முறைகள்மூலம், மாநில அளவில், மாவட்ட அளவில் மற்றும் புறநகர் அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

- புறநகர் அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் தற்போதுள்ள ஆய்வுக்கூட வசதிகளை வலுப்படுத்துதல் (எல்.1, எல்.2 மற்றும் எல்.3)
- உடனடியாக நடவடிக்கை எடுக்க தகவல்களை விரைந்து அனுப்புவதற்காக மாநிலம் தழுவிய கட்டமைப்பு வாயிலாக செயற்கைக்கோள் இணைப்பு முனையம் மற்றும் நவீன தகவல் தொடர்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- சுகாதார மற்றும் ஆய்வுக்கூடப் பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதன் வாயிலாக, அவர்களுடைய மேலாண்மை மற்றும் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துதல்.

5.23.3. ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டத்தைச் சேர்ந்த மாநில கண்காணிப்புப் பிரிவு, சென்னையில் உள்ள பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தில் செயல்பட்டு வருகிறது. மாவட்டக் கண்காணிப்புப் பிரிவுகள், 29 வருவாய் மாவட்டங்களிலும், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்திலும் செயல்பட்டு வருகின்றன.

5.23.4. பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை கூடுதல் இயக்குநர், ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரி ஆவார். 29 வருவாய் மாவட்டங்களைச் சேர்ந்த சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர்கள், மாவட்டக் கண்காணிப்பு அதிகாரிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். 29 மாவட்டக் கண்காணிப்புப் பிரிவுகளிலும் தகவல் மேலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 20 மாவட்டங்களில் தரவு (தகவல்) பதிவு செய்பவர்களும், 19 மாவட்டங்களில் நிருவாக உதவியாளர்களும், 19 மாவட்டங்களில் கணக்கர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள மாவட்டங்களில் இந்தப் பணியாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5.23.5. இந்திய அரசின் மைய கண்காணிப்புப் பிரிவு, மாநிலத்திற்கும் அனைத்து மாவட்டக் கண்காணிப்புப் பிரிவுகளுக்கும் தரவு (தகவல்) சேமிப்பு மற்றும் தரவு (தகவல்) அனுப்புவதற்காக, அகண்ட அலைவரிசை இணைப்பு வசதியுடன் வழங்கனை (தலைமைக் கணினியை) (Server) வழங்கியுள்ளது.

5.23.6. தொலைக்காட்சி வழியாகக் கலந்தாய்வு வசதியுடன் கூடிய செயற்கைக்கோள் இணைப்பு முனையம் நிறுவப்பட்டு, 28 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. 15 அரசு மருத்துவக் கல்லூரிகளும், இந்த செயற்கைக்கோள் இணைப்பு வசதியில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின்கீழ் 2,780 மருத்துவ அதிகாரிகளுக்கும், 18,212 சுகாதாரப் பணியாளர்களுக்கும், 116 ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும், 385 ஆய்வுக்கூட உதவியாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது.

5.23.7. 24 மாவட்டக் கண்காணிப்புப் பிரிவுகளிலும், 23 மாவட்டத் தலைமையிட மருத்துவமனை ஆய்வுக் கூடங்களிலும் கட்டடப் பணிகள் முடிவடைந்துள்ளன.

5.23.8. இந்திய அரசின், தேசிய தொற்று நோய்கள் நிறுவனம், தொற்று நோய் ஆய்வுக்கூட கட்டமைப்பின்கீழ், ஈரோடு, தூத்துக்குடி, திருச்சி, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட அளவிலான ஆய்வுக் கூடங்களைத் தெரிவு செய்துள்ளது.

5.23.9. ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ், லெப்டோஸ்பைரோசிஸ் (Leptospirosis) மாநிலத்தில் ஒரு சிறப்புத் தன்மை வாய்ந்த நோயாகும். நோயறிதல், பயிற்சியளித்தல் மற்றும் லெப்டோஸ்பைரோசிஸ் பற்றி ஆராய்ச்சி செய்தல் ஆகியவற்றிற்காக, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்ககத்தில், லெப்டோஸ்பைரோசிஸ் சிறப்பு ஆய்வுக் கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5.23.10. தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தயார் நிலையில் இருப்பதற்கும், திடீரென ஏதேனும் நோய் ஏற்படுமாயின் உடனடியாகச் சிகிச்சை அளிப்பதற்காகவும் மாநில அளவிலான விரைந்து நடவடிக்கை எடுக்கும் குழு ஒன்றும், மாவட்ட அளவிலான விரைந்து நடவடிக்கை எடுக்கும் 29 குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

5.24. தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்:

தமிழகத்தில் 1954-55 ஆம் ஆண்டில் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் தொடங்கப்பட்டது. இதனுடைய முக்கியக் குறிக்கோள், தொழுநோயாளிகளைக் கண்டுபிடித்து தொடர்ந்து சிகிச்சை அளித்தல் ஆகும். 1983-ல் பல்முனை மருத்துவ சிகிச்சை தொடங்கப்பட்டது. இத்திட்டம் படிப்படியாக 1991-ல் தமிழ்நாடு முழுவதும் சென்றடைந்தது. 1983 ஆம் ஆண்டில் தொழுநோய் நிகழ்வுகள் 10,000 மக்கள்தொகைக்கு 118 என்ற விகிதத்தில் இருந்தது. மார்ச் 2007-ல் 10,000 மக்கள் தொகைக்கு 0.61 என்ற விகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

5.25. வருமுன் காப்போம் திட்டம் :

வருமுன் காப்போம் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு, நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்தும் வகையில், மருத்துவ வல்லுநர் குழுக்களைக் கொண்டு, மாநிலமெங்கும் 9,000 மருத்துவ முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டு, 31-3-2008 வரை 5,894 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு அதன்மூலம் 61,23,417 நபர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் மக்களிடையே பெரிய அளவில் வரவேற்பைக் பெற்றுள்ளது. கிராமப்புற மக்களுக்கும் நகர்ப்புற மக்களுக்கும் வருமுன் காப்போம் திட்டம்மூலம் உடல் பரிசோதனை செய்து தக்க சிகிச்சை மற்றும் சுகாதார நலக் கல்வி வழங்கப்படுகிறது. இம்முகாம்கள் 5,000 மக்கள்தொகை கொண்ட, அதாவது ஒரு துணை சுகர்தார நிலையப் பகுதியில், ஒவ்வொரு வாரமும் நடத்தப்பட்டு வருகின்றன. இதுதவிர நகர்ப் பகுதிகளிலும் இம்முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சிறப்பு மருத்துவர்கள்மூலம் தொற்று மற்றும் தொற்றா நோய் குறித்து பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும், சிறு நோய்களுக்கான சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், வாரத்திற்கு மூன்று முகாம்கள் நடத்தப்படுகின்றன. அனைத்துப் பரிசோதனைகளும், குறிப்பாக இரத்தம், சிறுநீர் போன்றவற்றிற்கு செமி ஆட்டோ அனலைசர் போன்ற அதிநவீன பரிசோதனைக் கருவிகள் பயன்படுத்தி செய்யப்படுகின்றன. அனைத்து கருவுற்ற பெண்களுக்கும் அல்ட்ராசோனோகிராம்மூலம் சிறப்புப் பரிசோதனை செய்யப்படுகிறது. முகாம் நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஆகும். பரிந்துரை மற்றும் தொடர் சிகிச்சைகள் குறிப்பிட்ட நிலையங்களில் நடத்தப்படுகின்றன. நோயின் விவர அறிக்கைகள் கணினிமூலம் பதிவு செய்யப்பட்டு, பல்வேறு சுகாதாரத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

[2008 ஏப்ரல் 23

5.26. தேசிய ஊரக நலத் திட்டம்:

கிராமங்களில் மருத்துவ வசதியளிக்கும் வகையில் 100 நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 100 குழுக்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. அனைத்து 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நோயாளிகள் நலச் சங்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.14.21 கோடி வழங்கப்பட்டுள்ளது. 12,618 கிராம ஊராட்சிகளில் கிராம நலவாழ்வு, நீர் மற்றும் துப்புரவுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் நலவாழ்வுப் பணிக்காக ஆண்டுதோறும் ரூ.10,000/- வீதம் ரூபாய் 12.62 கோடி வழங்கப்பட்டுள்ளது. 561 பேரூராட்சிகளில் 2,540 கிராம நலவாழ்வு, நீர் மற்றும் துப்புரவுக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் நலவாழ்வுப் பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.10,000/- வீதம் ரூ. 2.54 கோடி வழங்கப்பட்டுள்ளது.

5.27. பயிற்சி மற்றும் தொடர் கல்வித் திட்டம்:

பொதுச் சுகாதாரப் பயிற்சி நிறுவனம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலப் பயிற்சி மையங்கள், மனிதவள மேம்பாட்டு நிறுவனங்கள், மண்டலப் பொதுச் சுகாதாரப் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில், தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தவும், சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறையில் புதிதாக நிகழும் அறிவியல் செய்திகளை அறிந்து கொள்ளவும், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கான பணியிடைப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

5.28. பயிற்சி நிலையங்கள்:

சென்னை, பூந்தமல்லியில் அமைந்துள்ள பொதுச் சுகாதார நிறுவனம், சென்னை எழும்பூர், மதுரை மற்றும் காந்திகிராம் ஆகிய மூன்று இடங்களில் அமைந்துள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலப் பயிற்சி மையங்கள் மற்றும் விழுப்புரம் மற்றும் சேலம் ஆகிய இரண்டு இடங்களில் அமைந்துள்ள சுகாதார மனிதவள மேம்பாட்டு நிறுவனங்கள், ஆக மொத்தம் 6 மண்டலப் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. ஓசூரில் அமைந்துள்ள நோய் பரப்பிகள் கட்டுப்பாட்டு நிறுவனம் சிறப்புப் பயிற்சி மற்றும் மனித இன விலங்கின நோய் பரிவர்த்தனை கட்டுப்பாட்டு ஆராய்ச்சி மையமாகவும் திகழ்கிறது. பொதுச் சுகாதாரத் துறையில் பணிபுரியும் சுகாதார ஆய்வாளர்களுக்கு (ஆண்) பணியிடைப் பயிற்சி,

2008 ஏப்ரல் 23]

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் அமைந்துள்ள மண்டல பொதுச் சுகாதாரப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வருகிறது. 2008-09 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது:

1. **பேறுசார் மற்றும் குழந்தை நலப் பயிற்சி:**

(a) பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் இந்திய மருத்துவ முறைப் பயிற்சி.

(b) ஆரம்ப சுகாதார நிலைய பெண் மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கு உறிஞ்சு குழல்மூலம் பாதுகாப்பான கருக்கலைப்புக்கான பயிற்சி.

(c) அடிப்படை அவசர மகப்பேறு மற்றும் இளம் சிசு பராமரிப்புப் பயிற்சி.

(d) அடிப்படை அவசர மகப்பேறு மற்றும் இளம் சிசு பராமரிப்பு அளிக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் செவிலியர் மற்றும் துணைச் செவிலியர்களுக்குப் பயிற்சி.

(e) கிராம சுகாதாரச் செவிலியர்களுக்கு வாகனப் பயிற்சி மற்றும் சொல்லாற்றல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி.

(f) 8 பயிற்சி நிலையப் பணியாளர்களுக்கு வாகனப் பயிற்சி மற்றும் சொல்லாற்றல், திறன் மேம்பாட்டுப் பயிற்சி.

(g) ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு பெண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை.

(h) பெண் மருத்துவர்களுக்கு கரு வளர்ச்சி அறியும் புற ஒலி அலைக் கருவிப் பயிற்சி.

(i) இளம் சிசு மற்றும் குழந்தைப் பருவ நோய்களுக்கான ஒருங்கிணைந்த பராமரிப்பு பற்றி விளக்கும் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி.

(j) கிராம சுகாதாரச் செவிலியர், துணைச் செவிலியர், சமுதாய நலச் செவிலியர் மற்றும் பகுதி நலச் செவிலியர்களுக்கு இளம் சிசு மற்றும் குழந்தைப் பருவ நோய்களுக்கான ஒருங்கிணைந்த பராமரிப்பு பற்றிப் பயிற்சி.

[2008 ஏப்ரல் 23

(k) எம்.பி.பி.எஸ். மருத்துவர்களுக்கு அவசர மகப்பேறு சேவைக்கு உயிர் காக்கும் மயக்க மருந்துத் திறன் பயிற்சி.

(l) கருப்பைவாய் மற்றும் மார்பகப் புற்றுநோய் கண்டறிவது குறித்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் பெண் மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியர்களுக்கு விளக்கும் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி.

(m) சமுதாய சுகாதாரச் செவிலியர்/பகுதி சுகாதாரச் செவிலியர்/ குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் / ஊட்டச் சத்து மேற்பார்வையாளர்களுக்கு இளம் சிசு மற்றும் குழந்தைப் பருவ நோய்களுக்கான ஒருங்கிணைந்த பராமரிப்புப் பயிற்சி, மேற்பார்வையாளர் பயிற்சி.

(n) துணை செவிலியர்/கிராம சுகாதாரச் செவிலியர்/அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு இளம் சிசு மற்றும் குழந்தைப் பருவ நோய்களுக்கான ஒருங்கிணைந்த பராமரிப்புப் பயிற்சி.

(o) அடிப்படை அவசர மகப்பேறு மற்றும் இளம் சிசு பராமரிப்பு நிலையம் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் தவிர, மற்ற இடங்களில் உள்ள செவிலியர், துணை செவிலியர், சமுதாய நல செவிலியர் / பகுதி சுகாதார செவிலியர் / கிராம சுகாதார செவிலியர் ஆகியோருக்கு திறமை வாய்ந்த பிரசவ உடனாள் பயிற்சி.

(p) அடிப்படை அவசர மகப்பேறு மற்றும் இளம் சிசு பராமரிப்பு நிலையம் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய பெண் மருத்துவ அலுவலர்களுக்கு Colposcopic பயிற்சி.

(q) ஒருங்கிணைந்த பேறு கால அவசர சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தை தீவிர சிகிச்சை மையங்களில் உள்ள மயக்க மருந்துப் பணியாளர்களுக்கு அவசர மகப்பேறு சேவைக்கு உயிர் காக்கும் மயக்க மருந்துத் திறன் பயிற்சி.

(r) அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி நிருவாகப் பயிற்சி எடுக்காத மருத்துவர், செவிலியர், ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு, இரத்த வங்கிப் பயிற்சி.

2008 ஏப்ரல் 23]

(s) வளரிளம் பருவ நலப் பணிப் பயிற்சி-7 பயிற்சி நிலையங்களின் முதல்வர்கள், மருத்துவ அலுவலர்கள், தாய்சேய் நல அலுவலர்கள், தெரிவு செய்யப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள், சமுதாய சுகாதார செவிலியர்கள், பகுதி சுகாதார செவிலியர் மற்றும் வட்டார விரிவாக்கக் கல்வியாளர்களுக்கு வளரிளம் பருவ நலப் பணிப் பயிற்சி அளிக்க உள்ள பயிற்றுநர்களுக்கு பயிற்சி.

(t) ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களுக்கு வளரிளம் பருவ நலப் பணிப் பயிற்சி.

(u) செவிலியர், துணை செவிலியர், சமுதாய சுகாதார செவிலியர், பகுதி சுகாதார செவிலியர், கிராம சுகாதார செவிலியர், சுகாதார ஆய்வாளர், வட்டார விரிவாக்கக் கல்வியாளர் மற்றும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வளரிளம் பருவ நலப் பணிகளின் பயிற்சி.

(v) மாநில அளவில் 8 பயிற்சி நிலைய முதல்வர்கள், மருத்துவ அலுவலர்கள் மற்றும் தாய்சேய் நல அலுவலர்களுக்குப் பயிற்றுவிக்கும் பயிற்றுநர்களுக்குப் பயிற்சி, மாவட்ட அளவில் தாய்சேய் நல அலுவலர்கள், தெரிவு செய்யப்பட்ட வட்டார மருத்துவ அலுவலர்கள், சமுதாய சுகாதார செவிலியர், பகுதி சுகாதார செவிலியர், பயிற்சி பெற்ற செவிலியர்களுக்கு (தரம் 1 மற்றும் தரம் 2), பயிற்சி தரும் பயிற்றுநர்களுக்குப் பயிற்சி, வட்டார அளவில் தெரிவு செய்யப்பட்ட கிராம சுகாதார செவிலியர், அங்கன்வாடிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க உள்ள பயிற்றுநர்களுக்குப் பயிற்சி, கிராம மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சமுதாய நல உதவியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க உள்ள பயிற்றுநர்களுக்குப் பயிற்சி.

2. கிராம சுகாதார செவிலியர்களுக்கு எச்.ஐ.வி/ எய்ட்ஸ் பயிற்சி

3. சுகாதாரப் பணியாளர்கள் அனைவருக்கும் கணினித் திறன் பயிற்சி

4. சுகாதார ஆய்வாளர் நிலை I-பி-க்கு பயிற்சி

5. அனைத்து சுகாதார களப் பணியாளர்களுக்கும் தேவைக்கேற்ப பணியின்போது பயிற்சி.

[2008 ஏப்ரல் 23

5.29. 2008–09 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

(1) ரூ.18.00 இலட்சம் செலவில் சிவகங்கை மாவட்டம், மொன்னிகார் மாங்குடியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டுதல்.

(2) ரூ.29.25 இலட்சம் செலவில் பாளையங்கோட்டை மற்றும் தஞ்சாவூரிலுள்ள உணவுப் பகுப்பு ஆய்வகங்களில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 228380 சென்னை-600 008

2008 ஏப்ரல் 23]

அத்தியாயம் – 6

குடும்ப நலத் திட்டம்

6.1. தமிழ்நாட்டில் தாய்சேய் நலத்தை மேம்படுத்துவதன் மூலம் மக்கள்தொகைப் பெருக்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டு குடும்ப நலத் திட்டம் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினர்களின் முனைப்பான ஒத்துழைப்புடன் மக்கள் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு, "சமுதாயத் தேவைகளின் மதிப்பீட்டு முறையில்" முன்னோடி மாநிலமாகச் செயல்பட்டு இந்தியாவின் மற்ற மாநிலங்கள் அத்திட்டத்தைக் கடைப்பிடிக்க வழிகோலியது. நல்ல திடமான சமூக மற்றும் அரசியல் குறிக்கோள்களும் மற்றும் சிறந்த நிருவாகமும் தமிழ்நாட்டின் குடும்ப நல சாதனைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

6.2. மக்கள்தொகையியல் அளவீடுகள்:

2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள்தொகை 6.24 கோடியாகும். தமிழ்நாட்டின் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 11.72 விழுக்காடாக அமைந்து, கேரள மாநிலத்திற்கு அடுத்து தமிழ்நாடு இந்திய நாட்டில் இரண்டாவது இடத்தில் உள்ளது. தமிழ்நாடு, இந்தியாவில் ஆறாவது பெரிய மக்கள்தொகை கொண்ட மாநிலமாகும். தமிழக மக்கள் தொகை எண்ணிக்கை நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 6 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டின் மக்கள்தொகை 2008 ஆம் ஆண்டு 6.7 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டின் மைய அரசின் மாதிரிப் பதிவு முறைப்படி தமிழக மக்கள்தொகை அமைப்பு கீழ்க்கண்டவாறு அமைகிறது:

வ. எண்	அளவீடுகள்	தற்போதைய நிலை
1	பிறப்பு விகிதம்	16.2/1,000 மக்கள் தொகைக்கு
2	இறப்பு விகிதம்	7.5/1,000 மக்கள் தொகைக்கு
3	சிசு மரண விகிதம் குழந்தைகளுக்கு	31/1,000 உயிருடன் பிறந்த

[2008 ஏப்ரல் 23

வ. எண்	அளவீடுகள்	தற்போதைய நிலை
4	மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம்*	90/1,00,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
5	இயற்கையான வளர்ச்சி விகிதம்	0.87 சதவிகிதம்

*தமிழ்நாட்டில் இறந்த மகப்பேறு தாய்மார்களின் எண்ணிக்கையை வைத்துக் கணக்கிடப்பட்டது.

6.3. இலக்குகள் :

2012 ஆம் ஆண்டிற்குள் (பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம்) அடைய நிர்ணயிக்கப்பட்ட மக்கள்தொகை அமைப்பின் இலக்குகள் பின்வருமாறு:—

1.	சிசு மரண விகிதம்	20/1,000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு
2.	பிறப்பு விகிதம்	15/1,000 மக்கள் தொகைக்கு
3.	தாய்மார்கள் இறப்பு விகிதம்	45/1,00,000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு
4.	மொத்த கருவுறு விகிதம்	1.4
5.	தம்பதியர் காப்பு விகிதம்	65 சதவிகிதம்
6.	உயர் பிறப்பு வரிசை குறைப்பு	10 சதவிகிதம்

6.4. குடும்ப நல மையங்கள்:

தமிழ்நாட்டில் தாய்சேய் மற்றும் குடும்ப நலத் திட்டம் கீழ்க்கண்ட பணி மையங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

2008 ஏப்ரல் 23]

வரிசை எண்	மையங்களின் பெயர்	எண்ணிக்கை
1	பேறுகால பின் கவனிப்பு மையங்கள்	110
2	நகர்ப்புற குடும்ப நல மையங்கள்	108
3	நகர நல்வாழ்வு மையங்கள்	193
4	கிராமப்புற குடும்ப நல மையங்கள்	382
5	அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்கள்	1706
6	தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்	27

6.5. குடும்ப நலத் திட்ட செயல்திறன் :

6.5.1. 2007-08 ஆம் ஆண்டு (2008 ஜனவரி மாதம் முடிய) குடும்ப நலத் திட்டம்மூலம் அடைந்த செயல்திறன் (தற்காலிகம்) விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்	திட்டம்	எதிர்பார்க்கப் படும் ஆண்டு சாதனை (2007-08)	செய்த சாதனை விவரம்	விழுக்காடு
1	அறுவை சிகிச்சை	4,00,000	3,52,856	88.2
2	கருத்தடை வளையம்	4,50,000	3,53,149	78.5
3	வாய்வழி மாத்திரை உட்கொள்வோர்	1,75,000	1,29,515	74.0
4	ஆணுறை உபயோகிப்போர்	3,75,000	1,51,234	40.3
5	கருக்கலைப்பு	1,50,000	61,435	41.0

[2008 ஏப்ரல் 23

6.5.2. மாநிலத்தில் உள்ள பல்வேறு வகையான மருத்துவ நிலையங்களில் 2007-08 ஆம் ஆண்டு நடைபெற்ற அறுவை சிகிச்சைகளின் விவரம் பின்வருமாறு:—

வ. எண்	நிலையம்	சாதனை விழுக்காடு
1.	அரசு மருத்துவமனைகள்	57.3
2.	தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்	6.5
3.	அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள்	29.3
4.	உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகள்	4.2
5.	அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகள்	2.7

6.6. குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முக்கிய அம்சங்களாகக் கருதப்படும் பகுதிகள் :

(அ) தமிழ்நாட்டில் நடக்கும் 11.12 இலட்சம் பிறப்புகளில் 14.8 விழுக்காடு (2006) (1.65 இலட்சம் பிறப்புகள்) மிகைவரிசைப் பிறப்புகளாகும். 2012 ஆம் ஆண்டில் அடையவேண்டிய குறிக்கோள்களுக்கு இந்த மிகைவரிசைப் பிறப்புகள் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கப்படவேண்டும்.

(ஆ) குடும்ப நலக் கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டத்தில் ஆண்களின் பங்களிப்பு 0.4 விழுக்காடாக உள்ளது. இதனை உயர்த்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். குடும்ப நலத் திட்டத்தில் ஆண்களின் பங்களிப்பினை உயர்த்துவதற்கு, மாவட்டந்தோறும் நவீன ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை முகாம்கள் நடைபெறுகின்றன. இதனால் ஆண் கருத்தடை அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை கடந்த காலங்களைவிட உயர்ந்துள்ளது. இனிவரும் காலங்களில் மொத்த குடும்ப நலக் கருத்தடை அறுவை சிகிச்சைகளில் ஆண் கருத்தடை அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையை 10 விழுக்காடாக உயர்த்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டந்தோறும் நவீன ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை முறை பற்றிய விழிப்புணர்வு குடும்ப நல களப்பணியாளர்கள் மூலமாக ஏற்படுத்தப்படும்.

2008 ஏப்ரல் 23]

(இ) சிசு மரண விகிதம் ஆயிரம் உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு 37 (2006) என்ற எண்ணிக்கையில் உள்ளது. அதில் 75 சதவிகித சிசுக்கள் ஒரு மாதத்திற்குள் இறந்து விடுகின்றன. இவ்வாறு ஒரு மாதத்திற்குள் குழந்தைகள் இறப்பதைக் கட்டுப்படுத்தினால் சிசு மரணத்தை, ஆயிரம் பிறப்புகளுக்கு 20 என்ற எண்ணிக்கையில், கட்டுப்படுத்தமுடியும்.

(ஈ) தேசிய குடும்ப நல ஆய்வு-III-ன்படி, (2005-06) தமிழ்நாட்டில், 53.3 சதவிகிதத் தாய்மார்களும், 72.5 சதவிகிதக் குழந்தைகளும் இரத்த சோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மகப்பேறு தாய்மார்களின் இறப்பிற்கும், பிறந்த குழந்தை ஒரு மாதத்திற்குள் இறக்கும் நிகழ்விற்கும் முக்கியக் காரணமாக இரத்த சோகை நோய் இருக்கிறது.

(உ) இரண்டாவது தேசிய குடும்ப நல ஆய்வின்படி (1998-99) 13 சதவிகிதம் தகுதிவாய்ந்த தம்பதியர்களுக்கு, விரும்பிய குடும்ப நல முறைகளை அளிக்கமுடியாத நிலை இருந்தது. இது மூன்றாவது தேசிய குடும்ப நல ஆய்வின்படி (2005-06) தற்போது 8.9 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. இவற்றில் இரண்டு குழந்தைகளுக்கு இடையே இருக்கவேண்டிய இடைவெளி என்பதன்கீழ் குடும்ப நல முறை அளிக்க முடியாத பங்கு 4.1 சதவிகிதமாகவும், நிரந்தர குடும்ப நல முறை அளிக்க முடியாத பங்கு 4.8 சதவிகிதமாகவும் உள்ளது.

6.7. குடும்ப நலத் திட்ட இலக்குகளை அடைவதற்கான அணுகுமுறைகள் :

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கான அணுகுமுறைகள் பின்வருமாறு:

(1) கிராமவாரியாக மிகைப்பிறப்பு வரிசையிலுள்ள தாய்மார்களைக் கண்டறிந்து அவர்களைக் குடும்ப நல முறைகளை ஏற்றுக்கொள்ளச் செய்தல்.

(2) தற்போது 254 ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்ப நல அறுவை சிகிச்சை அரங்குகள் செயல்படுகின்றன. படிப்படியாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குடும்ப நல அறுவை சிகிச்சை அரங்குகள் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2008 ஏப்ரல் 23

(3) தற்சமயம் 1,706 அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் குடும்ப நலச் செயல்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் அதிக அளவில் தனியார் மருத்துவமனைகளை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(4) தகுதிவாய்ந்த தம்பதியர்களுக்கு குடும்ப நல சேவைகளை வழங்குவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், மகளிர் மன்றம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அரசு சாராத அமைப்புகளை ஈடுபடுத்துதல்.

(5) லேப்ராஸ்கோப்பிக் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்வதில், பயிற்சிபெறாத அனைத்து மகப்பேறு மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும். மற்றும் அனைத்து மருத்துவர்களுக்கும் குடும்ப நல பெண் அறுவை சிகிச்சை மற்றும் தழும்பில்லாத ஆண் அறுவை சிகிச்சை செய்வதில் பயிற்சி அளிக்கப்படும்.

(6) அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் அனைத்து மருத்துவர்களுக்கும் எம்.வி.ஏ. முறையில் கருக்கலைப்பு செய்வதற்கு பயிற்சி அளிக்கப்படும்.

(7) கருத்தடை வளையம் பொருத்துதலில் பயிற்சிபெறாத அனைத்து கிராம சுகாதாரச் செவிலியர்களுக்கும் மற்றும் துணை செவிலியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

6.8. குடும்ப நல அறுவை சிகிச்சை ஏற்றுக் கொள்பவர்களுக்கு குடும்ப நலக் காப்பீட்டுத் திட்டம்:-

இந்திய அரசு, ஐசிஐசிஐ. லொம்பார்டு காப்பீட்டு நிறுவனத்துடன், 1-1-2008 முதல் புதுப்பித்துக் கொண்ட காப்பீட்டுத் திட்டத்தின்படி குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்களுக்கு பின்வருமாறு காப்பீட்டு நிதி உதவி அளிக்கப்படுகிறது:—

குடும்ப நல கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பின் மருத்துவமனையிலோ அல்லது மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் இறக்க நேரிட்டால்	ரூ.2,00,000/-

2008 ஏப்ரல் 23]

மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு 8-லிருந்து 30 நாட்களுக்குள் இறக்க நேரிட்டால்	ரூ. 50,000/-
குடும்ப நல அறுவை சிகிச்சைக்குப் பின் மீண்டும் கருவுற்றால்	ரூ. 30,000/-
குடும்ப நல அறுவை சிகிச்சையால் ஏற்படும் சிக்கல்கள் (மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு 60 நாட்களுக்குள்)	மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான செலவு ரூ. 25,000/-க்கு மிகாமல்
மருத்துவர்களுக்கான ஈட்டுறுதிக் காப்பீடு (ஒரு ஆண்டிற்கு நான்கு முறைக்கு மிகாமல்)	ஒரு முறைக்கு ரூ. 2,00,000/- வரை

6.9. குடும்ப நலக் கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்த்தப்பட்ட திட்டம்.

குடும்ப நலக் கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டு நிதியுதவி மைய அரசால் திருத்தப்பட்டு, உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பின்வருமாறு செயல்படுத்தப்படும்:

ஆண் ஏற்பாளர் (அரசு மருத்துவ நிலையங்களில் மட்டும்)	ரூ. 1,100/-
வறுமைக் கோட்டின்கீழ் உள்ள பெண் ஏற்பாளர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினரில் பெண் ஏற்பாளர்கள் (அரசு மருத்துவ நிலையங்களில் மட்டும்)	ரூ. 600/-
வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள பெண் ஏற்பாளர்கள் (அரசு மருத்துவ நிலையங்களில் மட்டும்)	ரூ. 250/-

6.10. மாநில மக்கள்தொகை ஆணையம்:

குடும்ப நலம் மற்றும் தாய்சேய் நலத் திட்டப் 'பணிகளை மேற்பார்வை மற்றும் ஆய்வு செய்து தக்க அறிவுரை வழங்கவும், திட்டமிடப்பட்டுள்ள இலக்குகளை அடையவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் மாநில மக்கள்தொகை ஆணையம் அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

6.11. 2008–2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:

(1) 12 மாவட்டக் குடும்ப நல அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக ரூ.5.00 இலட்சம் செலவில் நிழற்பட நகல் பெருக்கி இயந்திரங்கள் வழங்குதல்.

(2) 20 மாவட்டக் குடும்ப நல அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக ரூ.1.50 இலட்சம் செலவில் நிகரி இயந்திரங்கள் வழங்குதல்.

(3) ஐந்து மாவட்டக் குடும்ப நல அலுவலகங்களில் ரூ. 0.20 இலட்சத்தில் தொலைபேசி வசதி ஏற்படுத்துதல்.

அத்தியாயம் – 7

மருந்துக் கட்டுப்பாடு நிருவாகம்

7.1. மருந்துகள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி, விநியோகம், விற்பனை ஆகியவற்றை ஒழுங்குபடுத்த கீழ்க்காணும் சட்ட விதிமுறைகளைச் செயல்படுத்தும் தலையாயப் பணியினை மருந்துக் கட்டுப்பாடு நிருவாகம் மேற்கொண்டு வருகிறது:—

(அ) 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் மற்றும் 1945 ஆம் ஆண்டு விதிகள்.

(ஆ) 1995 ஆம் ஆண்டு மருந்துகள் விலைக்கட்டுப்பாட்டு ஆணை.

(இ) 1954 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம்.

மேலும், இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள், 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தின்படி நடக்க அதிகாரம் பெற்றவர்கள். ஆங்கில முறை, ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஹோமியோபதி மருந்துகள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கவும், விற்பனை செய்யவும் தேவையான உரிமங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளை மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் மேற்கொள்கிறார். மைய உரிமம் வழங்கும் குழுமத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு உரிமம் வழங்கும் பணியினையும் இவர் ஆற்றுகிறார்.

7.2 நடமாடும் புலனாய்வுக் குழு மற்றும் சட்டம், புலனாய்வுப் பிரிவுகளின் பணிகள்:

போலி மருந்து மற்றும் தரமற்ற மருந்துகள் குறித்து தென்மாவட்டங்களிலிருந்து வரும் புகார்களை ஆய்வுசெய்து நடவடிக்கைகள் எடுக்க, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு நடமாடும் புலனாய்வுக் குழுவும், சென்னையிலிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க இயக்குநர் அலுவலகத்தில் ஒரு சட்டம் மற்றும் புலனாய்வுக் குழுவும் செயல்படுகின்றன. இதுதவிர, சென்னையிலுள்ள சட்டம் மற்றும் புலனாய்வுப் பிரிவு, சட்டம் தொடர்பான பணிகளையும், சிறப்பு ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

7.3. மருந்து ஆய்வுக் கூடம்:

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ், முழுத் திறன் கொண்ட, ஒரு மருந்து ஆய்வுக் கூடம் இயங்கி வருகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், உற்பத்தி நிறுவனங்கள், மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் ஆகிய இடங்களிலிருந்து (ஊசிமூலம் செலுத்தும் மருந்து தயாரிப்பு நீங்கலாக) மருந்து ஆய்வாளர்களால் சோதனைக்காக எடுக்கப்பட்ட மருந்துப் பொருட்கள், இந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன. கிண்டியிலுள்ள நோய்த் தடுப்பு கிங் மருந்து நிலையத்தில் ஊசிமூலம் செலுத்தும் மருந்துகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

7.4. 2007–2008–ஆம் ஆண்டின் சாதனைகள்:

7.4.1. மருந்துகள் தகவல் மற்றும் மருந்தியல் விழிப்புணர்வு மையம்:

மருந்து ஒரு சாதாரண மனிதனின் தினசரி வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் ஒரு முக்கியப் பொருளாக விளங்குகிறது. ஆனால், மற்ற உபயோகப்படுத்தப்படும் பொருட்கள்போல் அல்லாமல், மருந்துகள் குறித்து சரியான தகவல்கள் மற்றும் அதன் உபயோகம் பற்றி மக்களுக்குத் தெரிவதில்லை. மக்கள் அவர்கள் பயன்படுத்தும் மற்ற பொருட்களின் உபயோகம் மற்றும் தேவையினைப் பொறுத்து, அவற்றை வாங்கிப் பயன்படுத்துகின்றனர். ஆனால் மருந்துகளுக்கு, அப்படி ஒரு நிலைமையில்லை. மருத்துவர்கள் என்ன எழுதிக் கொடுக்கிறார்களோ, அவற்றை வாங்க வேண்டியுள்ளது. மருத்துவர்கள் மருந்துகளை நோயாளிகளுக்கு எழுதிக் கொடுக்கத்தான் நேரம் இருக்கிறது. மருந்துகளைப்பற்றிய முழு விவரங்களை அவர்களால் தெரிவிக்க இயலாத நிலையில் உள்ளார்கள். மருந்தாளுநர்கள், மருந்துகளை விநியோகம் செய்யமட்டுமே முடிகிறது. அது குறித்து மற்ற விவரங்கள் தெரிவிக்க தேவையான கால அவகாசம் இல்லை. மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையில், அதிகாரிகள் மிகக் குறைவான அளவில் உள்ளதால், அவர்கள் துறை சார்ந்த வேலைகளிலே ஈடுபட்டுள்ளார்கள். எனவே, இந்த நிலைமையை மாற்றி பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் மருந்துகள் குறித்து தகவல் அறிய, மருந்துகள் தகவல் மற்றும் மருந்தியல் விழிப்புணர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மருந்துகளின் தன்மை, அதைப் பயன்படுத்தும் முறை மற்றும் அளவு, ஒவ்வாமை போன்ற விவரங்கள் தெரிவிக்கப்படும். இந்த மையம் தினமும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அனைத்து அரசு வேலை நாட்களிலும்

செயல்படும். பொதுமக்களின் தேவைக்கேற்ப, இதன் பணி நேரம் பின்னர் நீட்டிப்பு செய்யப்படும். இந்த மையத்தினை மருத்துவர்கள் மற்றும் இதர தொழில் ரீதியான பயனாளிகள் அனைவரும் பயன்படுத்தி, அவரவர்களுக்குத் தேவையான விவரங்களை அரைமணி நேரத்திற்குள் பெறலாம். சில விவரங்கள் அதற்குரிய ஆதாரங்களைப்பெற்ற பின் மறுநாள் தொலைபேசி மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ தெரிவிக்கப்படும். இந்த மையத்திற்குத் தேவையான கணினி வசதிகளும், வலைதள வசதிகளும் மற்றும் அதனைச் சார்ந்த அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. இந்த மையம் ஒரு முதுநிலை மருந்தாக்கியல் நிபுணர், ஒரு இளநிலை மருந்தாக்கியல் நிபுணர், ஒரு மருந்தாளுநருடன் செயல்படும். இந்த மையம் தமிழ்நாடு மருந்துக் கட்டுப்பாடு இயக்ககம் மற்றும் தமிழ்நாடு மருந்தாக்கியல் குழு கூட்டாக இணைந்து நடத்தும் மையமாகும். இந்த மையத்தின் மின்னஞ்சல் முகவரி

tndruginfo@yahoo. com
tndruginfo@gmail. com
தொலைபேசி எண் 044-2433 8421

இந்த மையமானது பொதுமக்கள், மருத்துவமனைகள், மற்றவர்களிடமிருந்து மருந்துகள் ஏற்படுத்திய தேவையற்ற பக்கவிளைவுகள் மற்றும் நச்சுத் தன்மை பற்றிய தகவல்களைப் பெற்று, எதிர்காலத்தில், தகுந்த நிவாரணங்கள் மேற்கொள்ள ஆவன செய்யும்.

7.4.2. மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகத்தில் புலனாய்வுப் பிரிவிற்கும், மதுரையில் உள்ள நடமாடும் குழு அலுவலகத்திற்கும் மற்றும் இதர மண்டல அலுவலகங்களுக்கும் ரூ. 2.25 இலட்சம் செலவில் கையடக்க புகைப்படக் கருவி வாங்கி வழங்கப்பட்டது.

7.4.3. மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகத்தில் உள்ள கருத்தரங்குக் கூடத்தில் பயன்படுத்துவதற்கென ரூ. 1.35 இலட்சம் செலவில் மடிக் கணினி மற்றும் எல்.சி.டி. புரொஜெக்டர் வாங்கப்பட்டது.

7.4.4. மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம், 1954-ன்கீழ் உள்ள விதிமுறைகளுக்கு முரணாக ஜூ-பில் மாத்திரைகள் மற்றும்

லெவனேர்ஜெஸ்ட்ரால் மாத்திரைகள் பி.பீ. 1.5 மி.கி. தயாரிக்கப்பட்ட விவரம் பெறப்பட்டு அவ்வாறு தயார் செய்த சிப்லா லிமிடெட், கோவா என்ற உற்பத்தியாளரின் கிடங்கில் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு ரூ.1,98,750/- மதிப்புள்ள மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம், 1940-ல் பிரிவு 18-ன் கீழும், அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளின்கீழும் மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம், 1954-ன்கீழும் விதிமுறைகளை மீறியதற்காக சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.4.5. இந்துஸ்தான் லேடக்ஸ் இந்தியா லிமிடெட், கர்நாடகா என்ற மருந்து தயாரிப்பு நிறுவனம், கருத்தடை மாத்திரைகள் தயாரித்து மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம், 1954-ன்கீழுள்ள விதிமுறைகளை மீறியதாக செய்தியறிந்து இத்துறையின் மருந்தாய்வாளர்களால் கூட்டாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம், 1954-ன்கீழ் உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

7.4.6. தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள்மீது எடுக்கப்பட்ட மற்ற சட்ட நடவடிக்கைகள்:

1-4-2007 முதல் 31-3-2008 வரையிலான காலங்களில் மொத்தம் 242 வழக்குகள் தொடர ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவற்றில் கீழ்க்கண்ட முக்கிய விதிகள் மீறல் குறித்து வழக்குத் தொடர ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டது:—

(அ) மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம், 1954-ன்கீழ் இரண்டு (2) வழக்குகள் தொடர ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

(ஆ) தரமற்ற மருந்துகள், போலி மருந்துகள் மற்றும் கலப்பட மருந்துகள் தயாரித்ததற்காக பல்வேறு மருந்து தயாரிப்பு நிறுவனங்களின்மீது, ஐம்பத்து நான்கு (54) வழக்குகள் தொடர ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டது.

(இ) பிற விதி மீறல்களுக்காக நூற்று எண்பத்து நான்கு (184) வழக்குகள் தொடர மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம், 1940-ன்கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

(ஈ) மருந்துகள் விலைக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் இரண்டு (2) வழக்குகள் தொடர ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

7.5. 2008–2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:

(1) மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகத்திற்கு ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் மின் தூக்கி அமைத்துக் கொடுத்தல்.

(2) மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகம், இணைய தள வசதிகள் பெறும் பொருட்டு தனியாக ஒரு தொலைபேசி இணைப்பும் தற்போதுள்ள EPABX பலகைக்குப் பதிலாக புதிய EPABX பலகை ரூ.0.80 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்துக் கொடுத்தல்.

(3) நிருவாக அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் பார்வை குறிப்பு நூல்கள் வாங்குதல்.

(4) மருந்து ஆய்வுக் கூடத்தில் உள்ள பழைய தளவாடங்கள்/ கருவிகளுக்குப் பதிலாக புதிய தளவாடங்கள்/கருவிகள் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குதல்.

(5) மருந்து ஆய்வுக் கூடப் பயன்பாட்டிற்கு ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் கணினிகள் வாங்குதல்.

(6) மருந்து ஆய்வுக் கூடப் பயன்பாட்டிற்காக ரூ. 0.25 இலட்சம் மதிப்பீட்டில் எல்.பி.ஜி. சிலிண்டர்கள் வாங்குதல்.

[2008 ஏப்ரல் 23

அத்தியாயம்-8

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

8.1. இந்திய மருத்துவ முறைகளின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் முழு வசதி வாய்ப்புகளை உருவாக்கி அவற்றின் ஆற்றல் வளத்தையும் செயல்திறனையும் முழுமையாகப் பயன்படுத்தி அவற்றின் பண்டையப் பெருமையை நிலைநாட்டுவதில் தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி முறைகள் ஒரு பல்நோக்கு அணுகுமுறையுடன் முக்கிய நீரோட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு வளர்ச்சிக்கான நோக்கங்களை அடையவும் இம்மருத்துவ முறைகளின் பரந்துபட்ட ஆதாரங்களை இலாபகரமான முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் எளிமையாகக் கிடைக்கவும், எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்வகையிலும், குறைந்த செலவில் தரமான சிகிச்சையை அளித்து சுகாதார பாதுகாப்பின் பயன்களை மேம்படுத்தும் நோக்கிலும் உரிய வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன. சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா, இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி சிகிச்சை முறைகள் அலோபதி மருத்துவ சிகிச்சைக்குத் துணையாக அல்லது நல்ல மாற்று வழியாக உருவாக்கி பெருவாரியான மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதும், சுகாதாரப் பணியில் மக்கள் அவரவர் விரும்பும் மருத்துவ முறைகளில் சிகிச்சையைப் பெற்றிட வேண்டிய வாய்ப்புகளை உருவாக்கித் தருவதும், மாநில அரசின் இறுதிக் குறிக்கோளாகும்.

8.2. இந்திய மருத்துவ முறையும் நவீன மருத்துவ முறையும் ஒன்றுக்கொன்று பரிமாற்றம் செய்து கொள்ளமுடியும். தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஒரு இந்திய மருத்துவ முறை மருத்துவரை படிப்படியாக நியமித்திட எல்லா முயற்சிகளையும் எடுத்துவருகிறது. 2008-09 ஆம் ஆண்டில்கூட, 10 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவப் பிரிவு தொடங்கப்பட உள்ளது.

இதையும் சேர்த்து 2008-09 ஆம் ஆண்டில் 479 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவப் பிரிவு செயல்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

2008 ஏப்ரல் 23]

8.3. கல்வி:

8.3.1. இந்திய மருத்துவம்-ஓமியோபதி முறைகளின் முறையான வளர்ச்சிக்காக, மத்திய கழகங்கள், குறைந்தபட்ச கல்வித்தரத்தை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு முறைப்படுத்தல் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன. இந்திய மருத்துவ முறையில் கல்வி மற்றும் பயிற்சி வசதிகள் இருவகையில் அமைந்துள்ளன. ஒன்று அரசு தாமாகவே முன்வந்து இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவது. இன்னொன்று தேவையான தர அளவுகளைக் கொண்டுள்ள தனியார் கல்லூரிகளைச் செயல்பட அனுமதிப்பது. இந்திய மருத்துவ முறை பட்டப் படிப்பில், அரசுக் கல்லூரிகளில் 246 மாணவர்களும், தனியார் கல்லூரிகளில் 860 மாணவர்களும் ஆண்டொன்றிற்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பட்ட மேற்படிப்புக் கல்வியானது சித்த மருத்துவத்தில் மட்டும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மட்டுமே நடத்தப்படுகிறது. இதில் ஆண்டுக்கு 80 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்திய மருத்துவ முறைக் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

கல்வி நிறுவனங்கள்	இத்தா	ஆயுர்வேதா	யுனானி	ஓமியோபதி	யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	மொத்தம்
பட்டப் படிப்பு:						
அரசுக் கல்லூரி	150	-	26	50	20	246
தனியார் கல்லூரி	150	160	-	400	150	860
பட்ட மேற்படிப்பு:						
அரசுக் கல்லூரி	80	-	-	-	-	80
தனியார் கல்லூரி -	-	-	-	-	-	-

8.3.2. மேலும் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை 2008-09 கல்வி ஆண்டு முதல் செயல்பட உள்ளது. சென்னை மற்றும் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, மதுரை, திருமங்கலம் அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, சென்னை,

அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி மற்றும் சென்னை, அரசினர் யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி ஆகியவை மைய அரசின் நிதி உதவியுடன் மைய அரசால் வடிவமைக்கப்பட்ட, மாநிலத்தில் இயங்கும், கல்லூரிகளை மாதிரிக் கல்லூரிகளாக தரம் உயர்த்தும் திட்டத்தின்கீழ் மாதிரிக் கல்லூரிகளாக தரம் உயர்த்தப்பட்டும் மேம்படுத்தப்பட்டும் வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் இக்கல்லூரிகளின் மேம்பாட்டிற்கென அதிகபட்சத் தொகையான ரூ.500 இலட்சம் வரை, ஒவ்வொரு கல்லூரிக்கும் மைய அரசு நிதியுதவி பெற தீவிர முயற்சிகளில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

8.4. மருத்துவ ஆராய்ச்சி:

இந்திய மருத்துவ முறைகள் பல நூற்றாண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வருகின்றன. மேலும் அவற்றுள் சில சிகிச்சை முறைகள், பயிற்சி முறைகள் மற்றும் மருந்துகள் ஆகியன தற்போதைய காலத்திலும் அதே முறைமையில் சற்றும் மாறாமல் பின்பற்றக்கூடியதாய் அமைந்துள்ளன. இத்துறையில் உயர் ஆராய்ச்சி வசதிகள் போதுமான அளவுக்கு இல்லாமையால் இத்துறை, ஆராய்ச்சி நோக்கில் வளர்ந்த பிற நிறுவனங்களுடன் கூட்டாகச் செயல்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வகையில் இந்திய மருத்துவத் துறையும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் இணைந்து செயல்படக் கூட்டு ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

8.5. தரப்படுத்துதல்:

பல்வேறு மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மூலிகை மருந்துகளின் தரம் குறையாமல் பாதுகாப்பது இந்திய மருத்துவத்திற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது. இந்திய மருத்துவ முறை மருந்துகள் எல்லோராலும் குறைந்த செலவினத்தில் வாங்கும் பொருட்டும், பாதுகாப்பானதாகவும், தரமானதாகவும் அமையும் வகையில் மைய அரசின் நிதி உதவியுடன் மாநில மருந்து செய் நிலையங்கள் ரூ.130.00 இலட்சம் செலவினத்தில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. டாம்ப்காலுடன் இணைந்துள்ள மருந்துசெய் நிலையமும் நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. அதேபோல சென்னையிலுள்ள மாநில மருந்துகள் ஆய்வுக் கூடத்திற்குத் தேவையான கருவிகள் வாங்கப்பட்டு இந்திய முறை மருந்துகளைத் தர நிர்ணயம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்திய மருத்துவ முறை மருந்துகளின் தரப்பாடு உறுதியளிக்கப்படுகிறது.

8.6. மருத்துவ சிகிச்சை:

தற்சமயம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைகளின்கீழ், உள்நோயாளிகளுக்காக 989 படுக்கை வசதிகள் கொண்ட 889 மருத்துவ நிலையங்கள் மாநிலத்தில் மருத்துவ சேவை புரிந்து வருகின்றன. இதை மேலும் மேம்படுத்திப் பரவலாக்கும் வகையில் ரூ.555.00 இலட்சம் செலவில் 17 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவப் பிரிவுகளும் (Speciality Clinics) ரூ.1510.00 இலட்சம் செலவில் 151 வட்ட மருத்துவ மனைகளில் சிறப்பு மருத்துவப் பிரிவுகளும் (Speciality Clinics) மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதர மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு மருத்துவப் பிரிவுகள் தொடங்குவதற்குத் தேவையான நிதி உதவி வேண்டி மைய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

8.7. மாநில இந்திய மருத்துவம் உரிமம் வழங்கும் அதிகாரி:

இந்திய மருத்துவ முறையிலான மருந்துகள் தயாரிப்பதற்கு உரிமம் வழங்கும் பணிகள், மாநில மருந்துகள் கட்டுப்பாட்டுத் துறையிடமிருந்து பிரிக்கப்பட்டு, இதற்கென இத்துறையின் கட்டுப்பாட்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ள மாநில உரிமம் வழங்கும் அதிகாரி (இந்திய மருத்துவம்) வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இத்துறையின் கட்டுப்பாட்டில் மாநில உரிமம் வழங்கும் அதிகாரி (இந்திய மருத்துவம்) அலுவலகம் 29-11-2007 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம், 1940-ன்படி இத்துறையின் மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் அனைவரும் மருந்துகள் தர ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்திய மருத்துவ மருந்துகள் தயாரிக்க உரிமம் வழங்குதல், மாதிரி மருந்துகள் சோதனை செய்தல், மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளுதல், சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படுபவர்களின்மீது நீதி மன்றங்களில் வழக்குதொடர்தல் போன்ற பணிகள் உடனடியாக இனி வருங்காலங்களில் இப்பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

8.8. தேசிய சித்த மருத்துவ நிறுவனம்:

தேசிய சித்த மருத்துவ நிறுவன உருவாக்கத்தில் தமிழ்நாடு அரசு ஒரு முக்கியப் பங்கை வகித்துள்ளது. மாநில மற்றும் மத்திய அரசின்

கூட்டு முயற்சியாக தேசிய சித்த மருத்துவ நிறுவனம் சென்னை தாம்பரத்தில் நிறுவப்பட்டுள்ளது. சித்த மருத்துவத்தில் முதுநிலை பட்டக் கல்வியை வழங்குவதோடு, நோயாளிகளுக்கு சித்த மருத்துவ சிகிச்சை அளிப்பதையும் இந்த நிறுவனம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் சித்த மருத்துவத்தின் அறிவியல் மற்றும் கலைசார்ந்த உண்மைகளை வெளிப்படுத்தவும் சித்த மருத்துவத்தைப் பரப்புவதற்கும் உறுதிபூண்டுள்ளது.

8.9. தமிழ்நாடு மருத்துவ மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் (டாம்ப்கால்):

டாம்ப்கால் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50.00 இலட்சமாகும். இதன் தற்போதைய செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.20.75 இலட்சமாகும். டாம்ப்கால் நிறுவனம் 2006-2007-ல் ரூ.177.81 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் சாதனை அளவாக (தணிக்கை செய்யப்படாதது) ரூ.1191.90 இலட்சம் அளவிற்கு வாணிபம் நடைபெற்றுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் தனது ஆதாயப் பங்கை அரசிற்கு அளித்து வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் தனது 100 விழுக்காடு ஆதாயப் பங்கான ரூ. 20.75 இலட்சத்தை அரசிற்கு அளித்துள்ளது.

8.10. 2008–2009 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

1. ரூ.59.85 இலட்சம் செலவில் 10 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவ முறைப் பிரிவுகளை ஏற்படுத்துதல்.
2. மாநில இந்திய மருத்துவம் உரிமம் வழங்கல் அதிகாரி அலுவலகம், ரூ.24.01 இலட்சம் செலவில் தோற்றுவித்தல்.

அத்தியாயம்–9

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

9.1. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் 2005 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள இரண்டாம் நிலை மருத்துவமனைகளின் மருத்துவ சேவையை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்காக ரூபாய் 597.15 கோடி முதலில் ஒதுக்கப்பட்டது. ஆனால் 2005-ல் சுனாமி நிவாரண நிதிக்காக இத்திட்ட ஒதுக்கீட்டிலிருந்து நிதி எடுக்கப்பட்டதால், இத்திட்டத்திற்கான முதலீடு ரூபாய் 482.49 கோடியாக மாற்றப்பட்டது. இருந்தாலும் இத்திட்டத்திற்கான ஆரம்பகால நிதி ஒதுக்கீட்டை மூன்றாம் கட்டத்தில் வழங்குவதாக உலக வங்கி உறுதி அளித்துள்ளது. இத்திட்டம் கீழ்க்கண்டவாறு மூன்று கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதல் கட்டம்	—	ஜனவரி 2005 முதல் ஜூன் 2006 வரை
இரண்டாம் கட்டம்	—	ஜூலை 2006 முதல் டிசம்பர் 2007 வரை
மூன்றாம் கட்டம்	—	ஜனவரி 2008 முதல் மார்ச் 2010 வரை

இத்திட்டத்தின் முதல்கட்டத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளில் புதிய கட்டடங்கள் கட்டுதல் மற்றும் விரிவுபடுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது எஞ்சியுள்ள மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கு கட்டடப் பணிகள் மேற்கொள்ளுதல், மருத்துவக் கருவிகள் வழங்குதல் மற்றும் கூடுதல் பணியாளர்களை நியமித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பின்வரும் நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

[2008 ஏப்ரல் 23

9.2. கருவுற்ற தாய்மார்கள் மற்றும் சிசுக்களின் மரண விகிதத்தைக் குறைத்தல் :

இம்மாநிலத்திலுள்ள 51 மருத்துவமனைகளில் CEMONC எனப்படும் 24 மணி நேரமும் செயல்படும் அவசர கால தாய்சேய் மருத்துவ சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் ஏழைப் பெண்களுக்கு அதிக அளவில் குழந்தைப் பேறு மற்றும் சிசேரியன் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் 32 மருத்துவமனைகளில் இந்த வசதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் கருவுற்ற தாய்மார்கள் குழந்தைப் பேறுக்காக ஒரு மணி நேரத்துக்கு குறைவாக பயணம் மேற்கொண்டு, போதிய அளவு பணியாளர்கள், சிறப்பு மருத்துவர்கள், மருத்துவக் கருவிகள் மற்றும் இதர வசதிகள் உள்ள இத்தகைய மருத்துவமனைகளைச் சென்றடைந்து குழந்தைப் பேறு மற்றும் சிசேரியன் மருத்துவ சிகிச்சைகளை இந்த மருத்துவமனைகளில் பெற்றுக்கொள்ளலாம். இந்த மருத்துவமனைகளில் பணியாற்றுவதற்காக கூடுதலாக 400 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 400 செவிலியர்கள் அரசால் நியமனம் செய்யப்பட்டு தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

9.3. மருத்துவமனைகளில் கட்டடங்கள் கட்டுதல்:

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 227 மருத்துவமனைகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூபாய் 228 கோடி வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலான கட்டடங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கட்டடப் பணிகளை மார்ச் 2009-க்குள் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

9.4. மருத்துவக் கருவிகள் வழங்குதல்:

இத்திட்டத்தின் முதல்கட்டத்தில் 38 மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 232 மருத்துவமனைகளுக்குத் தேவையான கருவிகள் இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன. இதனால் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருத்துவ சேவைகளின் தரம் உயர்ந்துள்ளது.

2008 ஏப்ரல் 23]

9.5. அவசர ஆம்புலன்ஸ் ஊர்தி சேவை:

அவசர கால மருத்துவ சிகிச்சை தேவைப்படுவோர், குறைந்த செலவில் மருத்துவமனைகளைச் சென்றடைவதற்கு உதவுவதற்காக 15 மாவட்டங்களில் 187 வட்டாரங்களில் அவசர ஆம்புலன்ஸ் ஊர்திகள் செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 198 வட்டாரங்களிலும் இந்த சேவையை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஆம்புலன்ஸ் ஊர்திகள் வாங்கி அனைத்துப் பகுதிகளுக்கும் ஜூன் 2008 முதல் இந்த சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் தருணங்களில், பொதுமக்கள் உடனடியாக மருத்துவமனைகளுக்குச் செல்லும் வகையில், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளில் உள்ளோரும் ஒரே தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு அவசரகால மருத்துவ ஊர்தி சேவையை இலவசமாகப் பெறுவதற்கான ஒரு புதிய திட்டத்தை நடப்பு நிதியாண்டில் இந்த அரசு தொடங்கும். கணினிமயமாக்கப்பட்ட மத்தியக் கட்டுப்பாட்டு அறை மற்றும் இடம் அறியும் கருவிகள் (GPS) பொருத்தப்பட்ட மருத்துவ ஊர்திகளோடு இந்தச் சேவை தொடங்கப்படும். இதனோடு காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையினரின் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, அவசரகாலங்களில் மக்களுக்கு உடனடியாக இச்சேவை கிடைக்குமாறு செய்யப்படும். இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பெரும் விபத்துகளில், அதிக எண்ணிக்கையிலானோர் ஒரே நேரத்தில் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கத் தேவையான வசதிகள் கொண்ட சிறப்பு மையம் ஒன்று, மைய அரசின் நிதி உதவியுடன் சென்னையில் அமைக்கப்படும்.

9.6. பழங்குடி மக்களின் சுகாதார மேம்பாடு:

பழங்குடி மக்களுக்கு மருத்துவ சேவை வழங்குவதற்காக 12 இடங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு அரசுசாரா நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்குத் தேவையான நிதி உதவி மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வக தொழில்நுட்பனர்கள் மற்றும் ஊர்தி ஓட்டுநர்கள் ஆகியோரின் ஊதியமும் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகிறது. சிக்கில் செல் அனீமியா என்ற நோயால் பாதிக்கப்பட்டுள்ள பழங்குடியினருக்கு இலவச மருத்துவ சேவை வழங்குவதற்காக நீலகிரி மாவட்டத்திலுள்ள இரண்டு தனியார் மருத்துவமனைகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த சிகிச்சைகளுக்கான செலவு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும். பழங்குடியினருக்கு உள்நோயாளியாக இலவச மருத்துவ சிகிச்சை வழங்க நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தலா ஒரு மருத்துவமனையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான செலவை இத்திட்டம் ஏற்கும். பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள 25 அரசு மருத்துவமனைகள் மற்றும் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சைக்கு வரும் பழங்குடியினருக்குத் தேவையான ஆலோசனை வழங்குவதற்கு ஆலோசகர்கள் இத்திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டுள்ளனர்.

9.7. நோயாளிகளுக்கான ஆலோசனை மையங்கள்:

மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக முதற்கட்டத்தில் 116 மருத்துவமனைகளில் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளுக்கு வரும் ஏழை மற்றும் கல்வி அறிவு இல்லாத நோயாளிகளுக்கும் மற்றும் குழந்தைப் பேறுக்காக வரும் நோயாளிகளுக்கும் 24 மணி நேரமும் ஆலோசனை வழங்கும் வகையில் ஒவ்வொரு மருத்துவமனையிலும் மூன்று ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த மையங்கள், இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

9.8. மருத்துவக் கழிவுகளை அகற்றுதல் மற்றும் அழித்தல்:

இத்திட்டத்தின் முதற்கட்டத்தில், மருத்துவமனைக் கழிவுகளை சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்தி அவற்றை அழிப்பதற்கான முன்னோடித் திட்டம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை 270 அரசு மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்த இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு மருத்துவக் கல்லூரிகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் பெரிய ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்சப்பட்டு வருகிறது.

9.9. மனிதவள மேம்பாடு:

இத்திட்டத்தின்கீழ் உள்ள 270 அரசு மருத்துவமனைகளின் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக இம்மருத்துவமனைகளில் பணிபுரிவோருக்குப் பயிற்சி அளிக்கும் பெரிய திட்டம் ஒன்று

செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில்நுட்பத் திறமையையும் மற்றும் நிருவாகத் திறமையையும் வளர்க்கும் வகையில், இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

9.10. மருத்துவமனைகளின் தரத்தை மேம்படுத்துதல்:

அரசு மருத்துவமனைகளில் அளிக்கப்படும் சிகிச்சைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மருத்துவமனைகளின் செயல்பாடு குறித்த மாதாந்திர அறிக்கைகள் பெறப்பட்டு, அவை ஆய்வு செய்யப்பட்டு மருத்துவமனைகளின் பணிகளின் அடிப்படையில் அவை தரப்படுத்தப்படுகின்றன. மருத்துவமனைகளின் செயல்பாட்டினை மேம்படுத்த நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து மருத்துவமனைகளுக்கும் தர நிர்ணயம் செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து மருத்துவமனைகளிலும் ஒரே மாதிரியான சிகிச்சை வழங்குவதற்கு ஏதுவாக சிகிச்சை முறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக தர நிர்ணயக் குறியீடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

9.11. கருப்பைவாய்ப் புற்றுநோய் கட்டுப்படுத்துதல்:

கருப்பைவாய்ப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதற்கான சிகிச்சை வழங்கும் முன்னோடித் திட்டம் தேனி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 30-60 வயதிற்குட்பட்ட அனைத்து மகளிருக்கும் இந்தச் சோதனை செய்யப்படுகிறது. இந்த முன்னோடித் திட்டத்தின் முடிவுகளைப் பொறுத்து, இத்திட்டம் இம்மாநிலம் முழுவதற்தும் விரிவுபடுத்தப்படும்.

9.12. இதய நோய் மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்த் தடுப்புக்கான முன்னோடித் திட்டம்:

இதய நோய் மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்த் தடுப்பதற்கான முன்னோடித் திட்டம் சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் இரண்டாண்டு காலத்திற்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முன்னோடித் திட்டத்தின்கீழ் 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் மற்றும் இதய நோய்க்கான ஆய்வுகள் செய்யப்படுகின்றன. இந்த நோய்களைத்

[2008 ஏப்ரல் 23

தடுப்பதற்கான வாழ்வு முறை மாற்றங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இந்த நோய்களினால் முன்பே பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த முன்னோடித் திட்டத்தின் முடிவுகளைப் பொறுத்து, இத்திட்டம் இம்மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்படும்.

9.13. மருத்துவமனை செயல்பாடுகளின் தகவல் சேகரிப்பு:

மாநில அளவு, மாவட்ட அளவு மற்றும் மருத்துவமனை அளவில் மருத்துவமனை நிருவாகம் குறித்த முடிவுகளை எடுப்பதற்கு உதவும் வகையில் இத்திட்டத்தின்கீழ் வரும் அனைத்து மருத்துவமனைகளின் செயல்பாடுகளைக் கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளையும் மற்றும் புறநோயாளிப் பிரிவின் செயல்பாடுகளையும் கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டத்தில் 5 மாவட்டங்களிலுள்ள 38 மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஏனைய மருத்துவமனைகளுக்குப் பின்னர் விரிவுபடுத்தப்படும்.

9.14. சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்:

நவீன வாழ்க்கை முறைகளால் ஏற்படும் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய் போன்ற நோய்களைத் தடுப்பதற்கு உதவும் வகையில் சுகாதார மேம்பாட்டு விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சரிவிகித உணவு உட்கொள்ளுதல், குறைந்த அளவு கொழுப்பு மற்றும் உப்பு உணவுகளை உட்கொள்ளுதல், உடற்பயிற்சியின் முக்கியத்துவம், உடல் எடையைக் குறைத்தல், புகைப்பிடித்தலை நிறுத்துதல் போன்றவை பற்றி ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்தித்தாள்கள்மூலம் இத்தகைய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சுகாதார விழிப்புணர்வு குறித்த சுவரொட்டிகள், ஸ்டிக்கர்கள் மற்றும் நோட்டீஸ் ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. சுகாதாரக் குழு, நடைப் பயிற்சிக் குழு, மிதிவண்டி ஓட்டுநர் குழு போன்ற அமைப்புகள் ஏற்படுத்துவதற்கு ஆதரவு அளிக்கப்பட்டு வருகின்றது. பள்ளி அளவிலும் மற்றும் பணியிட அளவிலும் இத்தகைய சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2008 ஏப்ரல் 23]

அத்தியாயம்–10

மாநில நலவாழ்வு சங்கம்

10.1. தேசிய ஊரக நலவாழ்வுத் திட்டம், சுகாதாரத் துறையில் உள்ள கட்டமைப்புக் குறைபாடுகளை சரி செய்வதற்காகவும், பெறப்படுகின்ற நிதிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தி பொது சுகாதாரத் துறையை மக்களுக்கு மேலும் சிறந்த சேவை புரிவதற்கு ஏற்றபடி மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. மக்களின் நலத்தை மேம்படுத்துதல், குறிப்பாக கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு அளிக்கப்படுகின்ற சேவையை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். மக்களுக்குத் தேவைப்படுகின்ற அனைத்து மருத்துவ சேவைகளையும், தரமானதாகவும், அனைவருக்கும் கிடைக்கும்வண்ணம் நடவடிக்கை எடுப்பதே இத்திட்டத்தின் தொலைநோக்குப் பார்வையாகும். இத்திட்டம் 2005 முதல் 2012 வரை செயல்படுத்தப்படும். மைய அரசு இத்திட்டத்திற்கு நிதி உதவி அளித்து வருகிறது.

10.2. நோக்கங்கள்:

- சிசு மரணம் மற்றும் பேறுகால மரணத்தைக் குறைத்தல்
- அனைவருக்கும் பொதுச் சுகாதாரச் சேவைகள் கிடைக்க வழி செய்தல் — மகளிர் நலம், குழந்தை நலம், குடிநீர், துப்புரவு, சுகாதாரம், ஊட்டச் சத்து மற்றும் நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம்
- தொற்றுநோய் மற்றும் தொற்று அல்லாத நோய்களைக் கட்டுப்படுத்துதல்
- மக்கள்தொகையை நிலைப்படுத்துதல் — பாலினம் மற்றும் மக்கள்தொகையியல் காரணிகள்
- ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதாரச் சேவையை அனைவரும் பெறும்வண்ணம் நடவடிக்கை எடுத்தல்
- சித்த மருத்துவம் மற்றும் இந்திய வழி மருத்துவ முறைகளுக்குப் புத்துயிர் அளித்தல்
- ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல்

[2008 ஏப்ரல் 23

10.3. மாநில நலவாழ்வு இயக்கம்:

10.3.1. மேற்கண்ட நோக்கங்களைச் சிறந்த முறையில் செயல் படுத்துவதற்காக மாநில நலவாழ்வு சங்கம் அமைக்கப்பட்டது. பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மாநில நலவாழ்வுச் சங்கம், தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டது. (எண் 47/2006). தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தைத் தவிர்த்து, பிற சங்கங்களான காசநோய், தொழுநோய், பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம் போன்றவற்றையும், ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டத்தையும் தன்னகத்தே கொண்டு மாநில நலவாழ்வுச் சங்கம் அமைக்கப்பட்டது. இதன்மூலம், செயல்படுத்தப்படும் அனைத்து தேசிய நலவாழ்வுத் திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரே அமைப்பின்கீழ் செயல்பட வழிவகுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அனைத்து வகையான ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்ய வழிசெய்யப்பட்டுள்ளது. இதற்காக மாநில நலவாழ்வுச் சங்கத்தில் கீழ்க்கண்ட துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன:—

- பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திற்கான துணைக் குழு
- தாய்சேய் நலம் மற்றும் குடும்ப நலத்திற்கான துணைக் குழு
- நோய்பரப்பிகளால் பரவும் நோய்களைத் தடுப்பதற்கான துணைக் குழு
- காசநோய்த் தடுப்புத் திட்டத்திற்கான துணைக் குழு
- ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டத்திற்கான துணைக் குழு
- தேசிய பார்வை இழப்புத் தடுப்புத் திட்டத்திற்கான துணைக் குழு
- இந்திய மருத்துவமுறைகள் மற்றும் ஹோமியோபதிக்கான துணைக் குழு
- தொழுநோய் ஒழிப்புக்கான துணைக் குழு

2008 ஏப்ரல் 23]

10.3.2. மாநில நலவாழ்வுத் திட்டத்தினை மாவட்ட அளவில் செயல்படுத்துவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட நலவாழ்வுத் திட்ட அமைப்பும், மாவட்ட நலவாழ்வுச் சங்கமும் அமைக்கப்பட்டுள்ளன.

10.3.3. கிராமப்புற மக்களுக்கு மருத்துவ சேவை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் மூலமாகவே கிடைக்கப்பெறுகிறது. ஆதலால், இத்திட்டத்தின் மூலமாக ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையங்களின் உள்கட்டமைப்புகளை இந்திய பொது சுகாதாரத் தரத்திற்கு இணையாக உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

10.4. தேசிய ஊரக நலவாழ்வு இயக்கத்தில் கூடுதல் வசதிகள்:

10.4.1. மருத்துவப் பயனாளிகள் நலச் சங்கம் (ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டம்/ வட்டம்சாரா மருத்துவமனைகள்):

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளைச் சிறந்த முறையில் மேம்படுத்துவதற்காக மருத்துவப் பயனாளிகள் நலச் சங்கம் அனைத்து 1,421 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 235 வட்டம் / வட்டம் சாரா மருத்துவமனைகளிலும், 29 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து சங்கங்களும் பதிவு செய்யப்பட்டு, பயனுள்ளதாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இச்சங்கம், மருத்துவமனையில் பணிபுரியும் அலுவலர்கள் / பணியாளர்களுடன் இணைந்து, மக்களுக்கு சிறந்த சேவை அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, திட்டத்தின் குறிக்கோள்களையும் அடைய வழிவகை செய்யும். ஆண்டுதோறும் மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைச் சங்கங்களுக்கு ரூபாய் 5 இலட்சம் வீதமும், பிற அரசு மருத்துவமனை சங்கங்களுக்கும், அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலைய சங்கங்களுக்கும் ரூ.1 இலட்சம் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

10.4.2. மருத்துவக் கல்லூரிகளில் பயனாளிகள் நலச் சங்கங்கள் நிறுவுதல்:

ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டம் / வட்டம்சாரா மருத்துவமனைகள் இவற்றில் செயல்படும் பயனாளிகள் நலச் சங்கம் பயனுள்ள

[2008 ஏப்ரல் 23

கோட்பாடுகளுடன் செயல்படுகிறது. தேவைப்படும் சிறு சிறு பழுதுபார்ப்புக்களை உடனுக்குடன் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி உதவிகள் கிடைக்கின்றன. பயனாளிகள் நலச் சங்கம் நலவாழ்வு சேவையளிப்பவர்களுக்கும், மக்களுக்கும் நெருங்கிய தொடர்பை உருவாக்குகிறது. பயனாளிகள் நலச் சங்கத்தின் மேலாண்மையினால் நலவாழ்வு நிலையங்கள் அதிக அளவு மேம்படுத்தப்பட்டுள்ளன. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் அதிக அளவு நோயாளிகள் வருகின்றனர் என்றும் அங்கும் பயனாளிகள் நலச் சங்கம் அமைக்க கருதப்பட்டுள்ளது. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிறைய கிராமப்புற நோயாளிகள் பயன் பெறுவதால், நாளுக்கு நாள் ஏற்படும் செயல்பாட்டுப் பராமரிப்புச் செலவுக்கு நிதி உதவி தேவைப்படுகிறது. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சங்கம் அமைத்து ஆண்டுதோறும் ரூ.10,00,000/- செலவினத்திற்கு வகை செய்யும் கருத்துரு இந்த ஆண்டின் செயல்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

10.4.3. அடிப்படை அவசர பேறுகால சிகிச்சை மற்றும் இளஞ்சிசு கவனிப்புப் பணிகள் வழங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஆண்டுப் பராமரிப்பு மானியம் அளித்தல்:

உட்கட்டமைப்பு வசதிகளின்மூலம் தரமான பணிகள் வழங்குவதை உறுதிசெய்யும் வகையில், அடிப்படை அவசர பேறுகால சிகிச்சை மற்றும் இளஞ்சிசு கவனிப்புப் பணிகள் வழங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுப் பராமரிப்பு செலவினத்திற்கு ரூ.1 இலட்சம் வழங்கப்படுகிறது. மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் நீர் வசதி, கழிப்பறை வசதி, பராமரிப்பு மற்றும் இதர செயல்பாடுகள்மூலம் சிறந்த சேவையை அளிப்பதற்காக ஆண்டுப் பராமரிப்பு மானியமாக ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

10.4.4. துணை சுகாதார நிலையங்களுக்கு ஆண்டுப் பராமரிப்பு மானியம் அளித்தல்:

அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கும் துணை சுகாதார நிலையங்களுக்கு ஆண்டுப் பராமரிப்பு மானியம் ரூ.10,000/- வழங்கப்பட்டுள்ளது. இந்த செலவினத்தை துணை சுகாதார அளவிலான குழு கண்காணிப்பு செய்யும்.

2008 ஏப்ரல் 23]

10.4.5. துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இவற்றுக்கு அவசர செலவினத்திற்கு நிபந்தனையற்ற நிதி வழங்குதல்:

1. ஒவ்வொரு துணை சுகாதார நிலையத்திற்கும், நிபந்தனையற்ற நிதியாக ரூ.10,000/- வழங்கப்பட்டுள்ளது.
2. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், நிபந்தனையற்ற நிதியாக ரூ.25,000/- வழங்கப்பட்டுள்ளது.

தேவைகளின் அடிப்படையில் உள்ளூர் நலவாழ்வுத் திட்டங்களுக்காக இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

10.4.6. கிராம நலவாழ்வு நீர் மற்றும் துப்புரவுக் குழு:

கிராம மக்களின் நலவாழ்வுத் தேவைகளைக் கண்டறிவதற்கும், நலவாழ்வுத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், கிராமம் அடிப்படை அலகாக அமைகிறது. தமிழ்நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மகளிர் குழு, நலவாழ்வு சார்ந்த இதர கிராம அளவிலான அலுவலர்கள் இவர்களின் போதுமான பிரதிநிதித்துவம் உள்ளவாறு 12,618 கிராம நலவாழ்வு, நீர் மற்றும் துப்புரவுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று, 561 பேரூராட்சிகளில் 3,000 மக்கள் தொகைக்கு ஒரு குழு வீதம் 2,540 கிராம நலவாழ்வு, நீர் மற்றும் துப்புரவுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. முறையாக அமைக்கப்பட்டு செயல்பட்டுவரும் இவைபோன்ற குழுக்களுக்கு நிபந்தனையற்ற நிதி ரூ.10,000/- ஆண்டுதோறும் மானியத் தொகையாக கிராமத்தின் நலவாழ்வு மற்றும் துப்புரவுப் பணிக்காக வழங்கப்படுகிறது.

10.4.7. 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் நச்சு முறிவு மேலாண்மை முதலுதவி மையங்கள் ஏற்படுத்துதல்:

பாம்புக்கடி, தேள் கொட்டுதல் மற்றும் மருந்துகளின் நஞ்சினால் பாதிக்கப்படுபவர்கள் கிராமங்களில் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். உடனடியாக முதலுதவி அளிப்பதனாலும், நஞ்சு முறிவு மருந்துகள் கொடுப்பதனாலும் மற்றும் சிகிச்சை அளிப்பதனாலும் பல உயிர்களைக் காப்பாற்றமுடியும். பின் விளைவுகளைத் தடுக்கமுடியும். ஆகையால் 385 அடிப்படை மகப்பேறு மற்றும் இளஞ்சிசு அவசர சிகிச்சை மையங்களில் நச்சுக் கடிக்கு சிகிச்சை அளிக்க வசதிகள் ஏற்படுத்த

திட்டமிடப்பட்டுள்ளது. மருத்துவர்களுக்கும், மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கும் தேவையான திறன் பயிற்சி அளிப்பதுடன் அனைவரும் பின்பற்றவேண்டிய, முறையான சிகிச்சை முறை குறித்தும் பயிற்சியளிக்கப்படும். தேவையான நஞ்சு முறிவு மருந்துகளும், சிகிச்சைக்கான மருந்துகளும் வழங்கப்படும்.

10.4.8. நடமாடும் மருத்துவக் குழுக்கள் உருவாக்குதல்:

தேசிய ஊரக நலவாழ்வுத் திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கு சுகாதார கவனிப்பு சமமாகவும், எளிதில் பெறக் கூடியதாகவும் இருப்பது அடிப்படைத் தேவையாகும். குறிப்பாக, மலைப் பகுதிகள் மற்றும் கடினமான நிலப் பகுதிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சேவைகள் எதிர்பார்க்கின்ற அளவிற்குக் கிடைப்பதில்லை. மூலை முடுக்குப் பகுதிகளில் நலவாழ்வுப் பணிகளை ஏற்பாடு செய்வது கடினமாக உள்ளது. இந்த இடைவெளியைப் போக்கும் விதத்தில் நடமாடும் மருத்துவக் குழுக்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நடமாடும் மருத்துவக் குழுக்கள் மக்களைக் கவருவதற்காகவும், தேவைகளை ஏற்படுத்துவதற்காகவும் பிற பகுதியில் உள்ளவர்களையும் ஊக்குவிப்பதாக உள்ளன. இந்தக் குழுவில் ஒரு மருத்துவர் மற்றும் செவிலியர் உள்ளார்கள். இக்குழுவினால் பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு நடமாடும் மருத்துவக் குழு அமைக்க கருத்துரு உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள 46 நடமாடும் மருத்துவக் குழுக்களுடன் தேசிய ஊரக நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் 2006-07-ல், 100 நடமாடும் மருத்துவக் குழுக்கள் அனுமதிக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. 2007-08-ல் மேலும் 100 நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையத்தின் பயனாளிகள் நலச் சங்க நிருவாகக் கட்டுப்பாட்டில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு ஓட்டுநர், ஒரு துப்புரவுப் பணியாளர் அடங்கிய, சேவை மனப்பான்மை கொண்ட, குழுவாக நடமாடும் மருத்துவக் குழு இயங்குகிறது. 2008-09 ஆம் நிதியாண்டில் மீதமுள்ள 139 ஊராட்சி ஒன்றியங்களில் நடமாடும் மருத்துவக் குழு அமைப்பதற்கு கருத்துரு உருவாக்கப்பட்டுள்ளது.

10.4.9. பிறவியிலேயே ஏற்படும் இருதயக் குறைகள் மற்றும் முடக்குவாத (ரூமாடிக்) இருதயக் கோளாறுகளைத் தடுத்தல் மற்றும் சிகிச்சையளித்தல்:

இந்தியாவில் முடக்குவாத இருதயக் கோளாறு குறிப்பிட்ட எண்ணிக்கையில் குழந்தைகளைப் பாதித்துள்ளது. மேலும், தொடர்ந்து பெரிய அளவில் பொதுச் சுகாதாரப் பிரச்சினையாகவும் உள்ளது. முடக்குவாத இருதயக் கோளாறுகளால் பாதிக்கப்பட்ட பெண் பிள்ளைகள் முடக்குவாத காய்ச்சலால் பாதிக்கப்படுகிறார்கள். மேலும், இவர்கள் கர்ப்ப காலங்களிலும், பிரசவ நேரத்திலும் சிக்கலுக்குள்ளாகிறார்கள். ஆரம்ப சுகாதார நிலைய அமைப்பிலேயே முடக்குவாதக் காய்ச்சலை எளிதில் குணமாக்கமுடியும் என்பது உண்மையாகும். உலக சுகாதார நிறுவனத்தின் அம்சத்தின்படி முடக்குவாதக் காய்ச்சலை எளிதில் குணப்படுத்தலாம். அதனால், முடக்குவாதக் காய்ச்சலைத் தடுப்பதற்கும், நோய் அறுதியிடுதல் மற்றும் மேலாண்மைக்காகவும் முடக்குவாதக் காய்ச்சலை மையப்படுத்தி தகவல், கல்வி, தகவல் தொடர்புப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. தரமான முறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இருதய கவனிப்பு தனியார் நிறுவனங்கள் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று பிறவியிலேயே ஏற்படும் இருதயக் குறைகள் வி.எஸ்.டி., பி.டி.ஏ. போன்றவற்றையும் எளிதில் குணப்படுத்தமுடியும். பள்ளி வயதுப் பிள்ளைகளைப் பரிசோதனை செய்து இருதயக் குறைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து இருதயக் குறைகளை அறுவை சிகிச்சையின்மூலம் சரி செய்வதற்காக இதுபோன்ற குழந்தைகளுக்கு 2007-08-ல், ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியை 2008-09 செயல் திட்டத்தில் ரூ.5 கோடியாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

10.4.10. பிறவிக் குறைபாடுகளைக் கண்டறியும் திட்டம்:

தேசிய ஊரக நலவாழ்வுத் திட்டம் மற்றும் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்-2 ஆரம்ப நலவாழ்வுப் பராமரிப்பு அளவின் தரத்தை முன்னேற்றுவதை மையமாகக் கொண்டு செயல்படுகின்றன. பிறக்கும் குழந்தைகளிடையே ஏற்படும் பிறவி ஊனத்தைத் தடுப்பது முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு ஏற்படும் பிறவிக் குறைபாட்டை கர்ப்ப காலத்திலேயே கண்டறிந்து தகுந்த தடுப்பு நடவடிக்கை எடுக்கமுடியும். 700 பிறந்த குழந்தைகளில் ஒரு குழந்தை பிறவிக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிவதற்காக

[2008 ஏப்ரல் 23

கர்ப்பிணிகளைப் பரிசோதனை செய்வதற்கும், விழிப்புணர்வு கருத்துகளை வழங்குவதற்கும் அரசு நலவாழ்வு நிலையங்களில் பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். தமிழ்நாட்டில் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறியும் டவுன்ஸ் சின்ட்றோம் நிறுவனத்துடன் இணைந்து பிறவிக் குறைபாடுகளை ஆரம்ப நிலையில் கண்டறியும் திட்டத்திற்கு 2008-2009 ஆம் ஆண்டில் முழு ஆதரவு அளிக்க கருதப்பட்டுள்ளது.

10.5.பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் (Reproductive & Child Health Project) :

10.5.1. சிசு மற்றும் தாய்மார்களின் மரணங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் மற்றும் கருத்தரிப்பு விகிதத்தைக் குறைத்தல் தேசிய ஊரக நலவாழ்வுத் திட்டத்தின் உந்துகையாகும். கிராமங்களில் பல்வேறு நலச் சேவைகளைத் தரமாகச் செய்வதன்மூலம் மேற்கண்ட உந்துகையை அடைய முடியும். தரமான பிரசவ சேவை அளித்தல், மருத்துவ நிலையங்களில் பிரசவங்கள் நடைபெறுதலை ஊக்குவித்தல், பாதுகாப்பான கருக்கலைப்பு, இனப்பெருக்கப் பாதை தொற்றுநோய்க்கான சிகிச்சை, குடும்ப நலச் சேவைகள், வளரிளம் பருவத்தினரின் நலத் தேவைகள் போன்ற தரமான பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டச் சேவைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் 2005 - 2010 ஆண்டு வரை ரூ.426 கோடி செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

10.5.2. 1000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர பிரசவ சேவைத் திட்டம்:

பிரசவம் பார்க்கும் திறன் பெற்றவர்களால் பிரசவங்கள் நிகழ்த்தப்படும் நாடுகளில் தாய் மரண விகிதம் குறைவாக உள்ளது. வளர்ந்து வரும் நாடுகளுக்கு இணையாக தமிழ்நாட்டிலும் பிரசவத்தின்போது தாய்மார்கள் இறப்பதைக் குறைக்கவேண்டும் என்ற உறுதியைத் தமிழ்நாடு மேற்கொண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24X7 மணி நேர பிரசவ சேவைத் திட்டத்தை மேம்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் 1000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்று செவிலியர்கள் கொண்ட 24X7 மணி நேர பிரசவ சேவைத் திட்டம் செயல்படுத்தியதன் பலனாக, ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை வியப்பூட்டும் அளவில் உயர்ந்துள்ளது. இதை நிலை நாட்டும்

2008 ஏப்ரல் 23]

அளவில் இதே நிலை தொடரவும், மேலும் 421 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24X7 மணி நேர சேவைத் திட்டம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

10.5.3. கர்ப்பகால சர்க்கரை நோய்ப் பரிசோதனை மற்றும் சிகிச்சைத் திட்டம்:

நவீன வாழ்க்கை முறையினாலும், உணவுப் பழக்கவழக்கத்தில் மாற்றங்கள் ஏற்பட்டதனாலும், பண்பாடு மாற்றங்களினாலும், உயர் இரத்த அழுத்த நோய், நீரிழிவு நோய் போன்ற தொற்று இல்லாத நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பேறுகால நீரிழிவு நோயினால் ஏற்படும் பின் விளைவுகளாக, கருக்கலைதல், சிசு இறந்து பிறத்தல், பெரிய சிசு, பிறப்பில் குறைபாடுகள், மூச்சுத் திணறல் மற்றும் இளஞ்சிசு இறப்பு சில சமயங்களில் தாய் மரணமும் ஏற்படும். ஆரம்ப சுகாதார நிலையங்களில் கொடுக்கப்பட்டுள்ள செமி ஆட்டோ அனலைசர் மூலமாக கர்ப்பகால நீரிழிவு நோயைப் பேறுகாலத் துவக்கத்திலேயே கண்டுபிடிக்க முடியும். ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே அவர்களுக்குப் போதிய சிகிச்சை அளிக்கப்பட்டுப் பாதுகாப்பான பிரசவத்தை உறுதிசெய்ய முடியும். பேறுகால நீரிழிவு நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நலத் திட்டம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். தேவையான மருந்துப் பொருட்கள் விநியோகிக்கப்படும். மேலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். 2008 - 2009-லும் தொடர்ந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

10.6. நடமாடும் மருத்துவக் குழுக்கள்மூலம் தொலைதூர மருத்துவ சேவை அளித்தல்:

10.6.1. பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் செயல்படும் தொலைதூர மருத்துவ சேவை பெரிதும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. தொலைதூர மருத்துவ சேவை மக்கள் வாழும் இடத்திற்கே சென்று மருத்துவ சேவையளிக்கின்றது. ஒவ்வொரு பகுதிக்கும் குறிப்பிட்ட தினத்தன்று மருத்துவக் குழு அவர்கள் வசிக்கும் இடத்துக்கே சென்று அனைத்துப் பேறுசார் மற்றும் குழந்தை நலப் பணிகளையும் செய்கின்றது. மேலும், இவற்றின்மூலம் வயதானவர்கள், உடல் ஊனமுற்றோர், இளஞ்சிசுக்கள் மற்றும் இளஞ்சிசுக்களின் தாய்மார்களும் பயன் அடைவார்கள்.

[2008 ஏப்ரல் 23

10.6.2. மருத்துவருடன் செல்லும் நடமாடும் மருத்துவக் குழு கீழ்க்கண்ட சேவைகளை அளிக்கிறது:—

- சிறு, சிறு நோய்களுக்குச் சிகிச்சையளித்தல்
- கர்ப்பிணிகள் கவனிப்பு
- பிரசவித்த தாய்மார்களின் கவனிப்பு, இளஞ்சிசு கவனிப்பு குடும்ப நல சேவைகள்
- இனப்பெருக்கப் பாதை நோய்கள் / பால்வினை நோய்களுக்குச் சிகிச்சையளித்தல்
- உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயைக் கண்டுபிடித்தல் மற்றும் சிகிச்சையளித்தல்
- காசநோய் மற்றும் தொழுநோயைக் கண்டுபிடித்தல்
- ஆய்வக சேவைகள்
- ஊட்டச் சத்து ஆலோசனைகள்
- நலக் கல்வி
- நீர், துப்புரவு, சுத்தம் இவற்றிலுள்ள குறைகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்தலில் சமுதாயத்தின் செயல்பாடுகளைச் சுட்டிக்காட்டுதல்

ஏற்கெனவே இயங்கும் 46 நடமாடும் மருத்துவக் குழுக்களுடன் சேவை மனப்பான்மை கொண்ட மருத்துவ அலுவலர், செவிலியர், ஓட்டுநர், துப்புரவுப் பணியாளர் அடங்கிய 200 மருத்துவக் குழுக்கள் தேசிய ஊரக நலவாழ்வு இயக்கத்தின்கீழ் செயல்படுகின்றன. மேலும், 139 நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைத்து மேற்கண்ட தொலைதூர மருத்துவ சேவையை 385 வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்துவதற்குக் கருதப்பட்டுள்ளது. 2008-2009-ல் 139 நடமாடும் மருத்துவக் குழுக்கள் நிறுவுவதற்குத் தேவையான நிதி கோரப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்படும். பொதுவாக இக்குழு ஒரு மாதத்தில் திட்டமிட்டு அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று சேவை செய்யும் பெரிய வட்டாரமாக இருந்தால் ஆறு அல்லது எட்டு வாரங்களில் அனைத்துக் கிராமங்களிலும் மருத்துவச் சேவையை முடிக்கும்.

2008 ஏப்ரல் 23]

10.6.3. அவசர பேறுகால சேவைகளுக்காகத் தனியார் மயக்கவியல் மற்றும் பெண்கள் நல சிறப்பு மருத்துவர்களின் சேவைகளைப் பயன்படுத்துதல்:

மயக்கவியல் மற்றும் பெண்கள் நல சிறப்பு மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் பிரசவ நேரத்தில் தாய்மார்களை மேல்மருத்துவத்துக்குப் பரிந்துரைக்க வேண்டிய நிலை உள்ளது. 30 சதவிகித தாய் மரணங்கள் சிறப்பு மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் ஒரு மருத்துவமனையிலிருந்து இன்னொரு மருத்துவமனைக்குச் செல்லும்போது நிகழ்கின்றன. அவசர பேறுகால சேவைகளுக்காக மயக்கவியல் மற்றும் பெண்கள் நல சிறப்பு மருத்துவர்களின் சேவையைப் பயன்படுத்திய காரணத்தினால் 2007-ல் 38 சதவிகிதம் தாய் மரணங்கள் குறைந்துள்ளன. மேலும், சிசேரியன் அறுவை சிகிச்சை அரசு மருத்துவமனைகளில் உயர்ந்துள்ளது. ஆகவே, இத்திட்டத்தை இந்த ஆண்டிலும் தொடரக் கருதப்பட்டுள்ளது.

10.6.4. அடிப்படை அவசர பேறுகால சிகிச்சை மற்றும் இளஞ்சிசு கவனிப்புக்கான 24 மணி நேர அடிப்படை சேவைகள் வழங்கும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குடும்ப நல மருத்துவச் சேவைப் பிரிவுகள்:

அடிப்படை அவசர பேறுகால சிகிச்சை மற்றும் இளஞ்சிசு கவனிப்புக்கான 24 மணி நேர அடிப்படைச் சேவைகள் வழங்கும் அனைத்து 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்ப நல மருத்துவ சேவைப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. இங்கு ஆய்வகப் பரிசோதனைச் சேவைகளின்மூலம் பிறப்புறுப்புத் தொற்றுகள் மற்றும் பால்வினை நோய்கள் கண்டறியப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகிறது. எச்.ஐ.வியைப் பற்றிய தன்னார்வ ஆலோசனையும், பரிசோதனையும் செய்யப்படும். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் அதாவது திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் பிறப்புறுப்புத் தொற்றுக்களுக்கும், பால்வினை நோய்க்கும் சிகிச்சையளிக்கப்படும்.

10.6.5. சமுதாய இரத்த தான முகாம்கள்:

செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அரசு இரத்த வங்கிகள் இவற்றின் உதவியுடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையாக இரத்த தான முகாம்களை நடத்துகின்றன. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்

மற்றும் அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான இரத்தம், இரத்த தான முகாம்களில் சேகரிக்கப்படுகிறது. இடவாரி தன்னார்வ இரத்த கொடையாளிகளின் பட்டியல் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் தயாரிக்கப்பட்டு, அவசரகால சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட இரத்த தான முகாம்கள் தன்னார்வ இரத்த தானத்தை ஊக்குவிக்கின்றன.

10.6.6. எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவர்களுக்கு பேறுகால அவசர சிகிச்சைக்கான மயக்கவியல் சிறப்புப் பயிற்சி அளித்தல்:

தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மயக்கவியல் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் அதிக அளவில் இருப்பதற்காக எம்பிபிஎஸ். படித்த மருத்துவர்களுக்கு பேறுகால அவசர சிகிச்சைக்கான மயக்கவியல் சிறப்புப் பயிற்சித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள், அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர்கள் இவர்களுக்கு 24 வார பயிற்சி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி தற்போது செயலாக்கத்தில் உள்ளது. இன்றுவரை 64 மருத்துவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும், 2008-09 ஆம் ஆண்டில் 100 மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

10.6.7. சிசு மரணம் அதிகமுள்ள மாவட்டங்களில் இளஞ்சிசுக்களின் இறப்பைக் குறைப்பதற்காக விரிவுபடுத்தப்பட்ட திட்டம்:

சிசு மரண விகிதம் வளர்ச்சியின் அலகீடாக உள்ளது. சுகாதார விழிப்புணர்வுகளும் சமுதாயமும் இணைந்து சிசு மரண விகிதத்தைக் குறைப்பதற்கு பல்வேறு சமுதாயச் சூழ்நிலைகளை உருவாக்கி வருகிறது. விரிவுபடுத்தப்பட்ட சேய் நலம், ஒருங்கிணைந்த சிசு மற்றும் குழந்தைகளுக்கான நோய்க் கவனிப்பு போன்ற பணிகளால் சிசு மரணம் பெருவாரியாகக் குறைந்த போதிலும், கடந்த சில ஆண்டுகளாக ஒரே நிலையில் சிசு மரண விகிதம் உள்ளது. பிரசவ காலத்திற்குப் பின் இறக்கும் சிசுக்களின் மரண விகிதம் பெருவாரியாகக் குறைந்த போதிலும், இளஞ்சிசுக்களின் மரண விகிதம் அதிகமாவதால் சிசு மரண விகிதம் குறையாமல் ஒரே நிலையில் உள்ளது. இந்த இடைவெளியைப் போக்குவதற்காகவும், சிசு மரண விகிதம் அதிகமுள்ள தருமபுரி, விருதுநகர், திருச்சி, தஞ்சாவூர், பெரம்பலூர் மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக விரிவுபடுத்தப்பட்ட இளஞ்சிசுக்கள் மற்றும் சிசுக்களின் இறப்பைத்

தடுப்பதற்கு விரிவுபடுத்தப்பட்ட திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 5 மாவட்டங்களில் செயல்படும் வீதத்தைப் பொறுத்து மற்ற மாவட்டங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும்.

10.6.8. சிசுக்களுக்கான அவசர சிகிச்சையளிப்பதற்கு தனியார் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவரின் சேவையைப் பயன்படுத்துதல்:

குழந்தைகள் சிறப்பு மருத்துவர் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பிற மருத்துவமனைகளில் பிரசவ காலத்தில் அவசர சிகிச்சை தேவைப்படும் சிசுக்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகவும் அறுவை சிகிச்சையின்போதும், இளஞ்சிசுக்களுக்கான பிற நோய்களுக்கான அவசர சிகிச்சையின்போதும் மதிப்பூதிய அடிப்படையில் குழந்தைகள் சிறப்பு மருத்துவரைப் பயன்படுத்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் மருத்துவ அலுவலர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

10.6.9. ஸ்கேன் மையத் தணிக்கை மூலமாக பெண் கரு அழிப்பதைத் தடுத்தல்:

பெண் கருவை கருக்கலைப்பு செய்வதைத் தடுப்பதற்காக தமிழகம் முழுவதும் ஸ்கேன் மையங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஸ்கேன் மையங்கள் ஆய்வு செய்யப்பட்டு சந்தேகப்படும் மையங்கள் கண்காணிக்கப்பட்டு தவறு செய்யும் மையங்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு முறையாகத் தணிக்கை மேற்கொள்வதன்மூலம் பெண் கருக்கலைப்பு நடைபெறுவது மெதுவாகக் குறையும். 2008-09 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

10.6.10. நிலையங்களில் நடக்கும் வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள பெண்களுடைய பிரசவங்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்:

மைய அரசின் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாகும். பயிற்சி பெற்றவர்கள்மூலம் பிரசவம் பார்க்கச்செய்து வறுமைக்கோட்டிற்குக்கீழுள்ள தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதத்தைப் பெருமளவில் குறைப்பது இதன் முக்கிய நோக்கமாகும். மேலும், இத்திட்டம் நகர்ப்புறத்தில் உள்ளவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வருமான உச்சவரம்பு நீக்கப்பட்டுள்ளது.

10.6.11. மனிதவள மேம்பாடு மற்றும் பயிற்சி:

- 2008-09 ஆம் ஆண்டில் பல்வேறு திறன் பயிற்சி அளிக்கும் திட்டங்களைத் தொடரக் கருதப்பட்டுள்ளது.
- உறிஞ்சு குழல்மூலம் பாதுகாப்பான கருக்கலைப்புப் பயிற்சி
- பெண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சைப் பயிற்சி
- மகப்பேறு அல்ட்ரா சோனாகிராம் பயிற்சி
- அவசரகால மகப்பேறு சிகிச்சைக்கான மயக்கவியல் பயிற்சி
- அவசரகால மகப்பேறு சிகிச்சைப் பயிற்சி
- வி.ஐ.ஏ. முறை கையாண்டு கருப்பைவாய்ப் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் மார்பகப் புற்றுநோய் கண்டறியும் பயிற்சி
- கால்பாஸ்கோபிக் பயிற்சி
- இரத்த வங்கிப் பயிற்சி
- இளஞ்சிசு மற்றும் குழந்தைப் பருவ நோய்களுக்கான ஒருங்கிணைந்த பராமரிப்புப் பயிற்சி
- வளரும் இளம்பருவத்தினர் நலவாழ்வு சேவை
- பிரசவம் பார்ப்பதற்கான திறன் பெறும் பயிற்சி

திட்டமிடப்பட்ட புதிய பயிற்சிகள்:

- வீட்டளவில் சிசுக்களைப் பராமரித்தல்
- தேவையின் அடிப்படையில் சிசுக்களைப் பராமரித்தல்
- ஊரக இளஞ்சிசு மற்றும் குழந்தைப் பருவ நோய்களுக்கான ஒருங்கிணைந்த பராமரிப்புப் பயிற்சி
- செவிலியர்களுக்கு இன்றைய நிலைவரை கருத்தடை சாதனங்களில் பயிற்சி
- ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவ அலுவலர்களுக்கு ஐ.எம்.இ.பி. பயிற்சி

அத்தியாயம்—11

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம்

11.1. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் – ஓர் அறிமுகம்

11.1.1. மாநிலத்தில் தொடர்ச்சியாக எச்.ஐ.வி. பரவுதலைக் குறைப்பதில் தமிழ்நாடு தனித்தன்மை வகிக்கிறது. இது நம் மாநிலத்தில் இணைந்து பணியாற்றும் அனைவரது ஒருங்கிணைந்த முயற்சியால் ஏற்பட்டதாகும். இத்துறையில் சிறப்பாக இத்திட்டத்தை செயல்படுத்த ஓர் உறுதியான அரசியல் ஆதரவு மற்றும் நிருவாகத்தினரின் ஈடுபாடும் காரணமாகும். இக்கொள்ளை நோயைத் திறம்படக் கட்டுப்படுத்துவதை உறுதி செய்வதில் அரசுக்கு ஆதரவாகப் பொதுமக்கள், அரசுசாரா அமைப்புகள் மற்றும் பல்வேறு கூட்டாண்மையினர் உள்ளனர். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் எச்.ஐ.வி. பராமரிப்புச் சேவைகளின் ஒருங்கிணைந்த மாதிரி சேவைகள், எல்லா நிலைகளிலும் பின்பற்றப்படுகின்றன. 2006-07 ஆம் ஆண்டில், தடுப்பு நடவடிக்கைகளான, எச்.ஐ.வி. ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை, கூட்டு மருத்துவச் சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்டவர்கள் மற்றும் இதர ஆதரவு சேவைகள் பெருமளவில் செய்யப்பட்டன. நம் மாநிலத்தில் பெரிய அளவில் விழிப்புணர்வைப் பரப்புவதிலும், சேவைகள் எளிதில் கிடைப்பதை அதிகரித்தலிலும், சாதனை கண்டாலும் எச்.ஐ.வி.-யை எதிர்கொள்வதில் நாம் இன்னும் வெற்றிபெறவில்லை.

11.1.2. பல சவால்கள் நம்முன் உள்ளன. திட்டத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை தரப்பட்டுள்ளது. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் 3-ன்கீழ் அதிக ஆபத்துக்குள்ளாகும் குழுவினரை முழுமையாகச் சென்றடையும் செயல்திட்டம் நிறைவேற்றுதல் மற்றும் இலக்கு சார்ந்த குறுக்கீட்டுத் திட்டங்களை சமூகம் சார்ந்த நிறுவனங்கள், தமது சொந்தத் திட்டமாக செயல்படுத்துதல் என்ற இலக்கை நோக்கித் தமிழ்நாடு செல்லும். அதைப்போன்று தடுப்பு நடவடிக்கைகளை, தற்போதுள்ள அரசுத் துறைகளின்மூலம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வலியுறுத்தும். தனியார் துறைகளை எச்.ஐ.வி. பரிசோதனை மற்றும் ஆற்றுப்படுத்துதல், தாய்சேய் மேவா திட்டம், பால்வினை நோய்த் தடுப்பு ஆகிய திட்டங்களில் ஈடுபடுத்துவது பெருமளவில் செயல்படுத்தப்படும். இம்மாநிலம், தாய்சேய் மேவா திட்டத்தில் பல

மைல்கல்களை சாதித்துள்ளது. ஆனாலும், குழந்தைகளுக்குப் புதிய தொற்று ஏற்படுதலைத் தடுப்பதை உறுதி செய்ய, எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான கருவுற்ற தாய்மார் ஒவ்வொருவரையும் இத்திட்டம் சென்றடைவதற்கு புதிய யுக்திகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது.

11.1.3. எச்.ஐ.வி.-யுடன் வாழ்பவர்கள் குறிப்பாக விதவைகள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் பிரச்சினைகள் மிகவும் உணர்வுபூர்வமாகக் கையாளப்பட வேண்டும். தமிழ்நாட்டில் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், கொள்கை முடிவெடுப்பதிலும், எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்பவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். தொற்றுக்குள்ளான, பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் விதவைகளுக்கு சமூகப் பாதுகாப்பு அளிப்பது முதலிடம் தரப்படும். எங்கெல்லாம் நீதி மறுக்கப்படுகிறதோ அங்கெல்லாம் எளிதில் சட்ட சேவைகள் கிடைப்பதற்கு முதல்படியாக, சமீபத்தில் சட்ட உதவி மையங்கள் நாமக்கல் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் துவங்கப்பட்டன. சேவை அளிப்பவர்கள், காவல் துறையினர் மற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி மற்றும் உணர்வூட்டல், ஒதுக்குதல் மற்றும் புறக்கணித்தலைக் குறைப்பதற்கு உதவி புரிந்துள்ளது. ஆனாலும் நாம், நம்முடைய முயற்சியைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்.

11.1.4. எய்ட்ஸ் நோயினால் பெற்றோரை இழந்த குழந்தைகள் எவ்வித ஆதரவுமின்றி அல்லலுறும் நிலையைப் போக்கிட, அவர்களுக்காக அரசுசார்ந்த அறக்கட்டளை ஒன்றை நிறுவ இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த நோயினால் தந்தை அல்லது தாய் அல்லது பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு பராமரிப்பு, படிப்பு மற்றும் மருத்துவ உதவித் தொகையாக இவ்வறக்கட்டளைமூலம், இக்குழந்தைகளை வளர்க்கும் தொண்டு நிறுவனங்கள் அல்லது இக்குழந்தைகளின் உறவினர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கப்படும். இந்த அறக்கட்டளைக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் ஐந்து கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.2. தமிழ்நாட்டில் எச்.ஐ.வி. தொற்றின் நிலை:

11.2.1. தமிழ்நாட்டில் முதலில் 1986 ஆம் ஆண்டு எச்.ஐ.வி. தொற்று கண்டறியப்பட்டது. 15 ஆண்டுகளுக்குப் பின்னர், நாட்டில் எச்.ஐ.வி. தொற்றின் நிலை மிக உயர்ந்திருந்தது; கருவுற்றத் தாய்மார்களிடம் எச்.ஐ.வி. தொற்றின் அளவு 1.13 சதவிகிதமாக

அதிகரித்திருந்தது (முழுமையான எச்.ஐ.வி. தொற்றினைக் காட்டும் நம்பகமான அளவுகோல்). இதனால் தமிழ்நாடு இந்தியாவின் தொற்று அதிகமாகவுள்ள மாநிலங்களில் ஒன்றாகியது. தமிழ்நாடு எச்.ஐ.வி. / எய்ட்ஸ் கொள்ளை நோய்க்கு எதிராக, உறுதியான நடவடிக்கை எடுத்த முதல் மாநிலமாகத் திகழ்வதற்கு இதுவே காரணமாகவும் அமைந்தது.

11.2.2. இக்கொள்ளை நோய்க்கு எதிராகச் செயல்படும் மாநிலத்தினுடைய முன்னணி முகவரான தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், அதிக எண்ணிக்கையிலான கூட்டாண்மையாளர்கள் — அரசுசாரா அமைப்புகள், சமூகம்சார்ந்த அமைப்புகள், தேசிய மற்றும் சர்வதேச முகவர்கள் ஆகியோருடன் திட்டமிடுதலிலும், பல்முனை அணுகுமுறை மூலம் பல்வேறு முனைப்புகளைச் செயல்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது. எச்.ஐ.வி./ எய்ட்ஸ் ஒரு சமூகம் மற்றும் மருத்துவப் பிரச்சினையாக உள்ளதை அடிப்படையாகக் கொண்டு இது செயலாக்கப்படுகிறது. இந்நோய் மக்களின் வாழ்க்கை முறை, சுயமரியாதை, சமூக அந்தஸ்து ஆகியவற்றைப் பாதிக்கின்றது. இது குடும்பத்தைப் பிரித்து, பாதிக்கப் பட்டவர்களை சமுதாயத்திலிருந்து தனிமைப்படுத்துகிறது. பயம் மற்றும் வெட்கப்படும் உணர்வுகளால் இரகசியத்தை இது அதிகரிக்கிறது. இதனால், நோயாளிகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும், மேலும் தொற்றைப் பரவாமல் தடுக்கவும் செய்வது அதிக அளவில் கடினமாக உள்ளது. உலகளவில் இப்பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன.

11.2.3. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் அணுகுமுறை, சேவையின் தரத்தை அதிகரித்து எச்.ஐ.வி / எய்ட்ஸ் பற்றி சரியாகப் புரிந்துகொள்வதை ஊக்குவித்து, இதன்மூலம் மனோபாவத்தில், நடத்தையில் மாற்றத்தைக் கொண்டு வருவதாகும். எளிதாக பாதிக்கப்படக்கூடிய தன்மையுடையவர்கள், சுய அதிகாரம் பெற்று தங்கள் குழுக்கள் மத்தியில் அறிவைப் பரப்பவும், அதன்மூலம் ஒட்டு மொத்த சமூகத்தில் மாற்றத்தை உருவாக்கவும் இந்த அணுகுமுறை வழி வகுத்துள்ளது. இலக்குசார்ந்த குழுக்களைத் தேர்ந்தெடுப்பதில் இந்நிறுவனம் தற்போதுள்ள கூட்டமைப்புகளை உடனடி வாய்ப்புகளாகப் பயன்படுத்திக் கொள்கிறது. இதற்கு சிறந்த உதாரணம், தமிழ்நாட்டில் சக்தி வாய்ந்த பெண்கள் சுய உதவிக் குழுக்கள்மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள கிராமப்புற பெண்கள் மத்தியில் பாலியல், உடல்நலம் மற்றும் எச்ஐவி. விழிப்புணர்வு பயிற்சி வழங்கிய திட்டத்தின் முதல் கட்ட அமலாக்கமாகும். இத்தகைய அடித்தள அளவிலான

[2008 ஏப்ரல் 23

முயற்சிகள் பஞ்சாயத்து அமைப்புகள் போன்ற உள்ளூர் அரசு நிறுவனங்களையும் பயன்படுத்திக்கொள்கின்றன. ஏனைய திட்டங்கள் அதிக ஆபத்துக்குள்ளாகும் குழுவினரான எச்ஐவி.-யுடன் வாழ்பவர்கள் மற்றும் எளிதாக ஆட்படும் இளைஞர்கள் போன்றவர்களைச் சென்றடைகிறது.

11.2.4. 2006 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் மேலும் தொடர் பராமரிப்பை ஏற்படுத்துவதிலும், செயல்படுத்துவதிலும் தொடர்ந்து கவனம் செலுத்திவருகிறது. அனைத்து ஆற்றுப்படுத்துதல், பரிசோதனை மற்றும் பராமரிப்புச் சேவைகளை ஒருங்கிணைப்பதன்மூலம், பாதிக்கப்பட்ட மற்றும் தொற்றுக்குள்ளான மக்களுக்குத் தரமான சேவைகளை அளிக்கமுடிகிறது. பராமரிப்பு எளிதில் கிடைக்கச் செய்தல் மற்றும் இரகசியத் தன்மையை உறுதிப்படுத்துதல் போன்ற சிறந்த நலனை நாடும் நடத்தையை ஊக்கப்படுத்த அவசியமாகின்றன.

11.2.5. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் திட்டங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

1. தொற்றைத் தடுக்கும் திட்டங்கள்
2. சிகிச்சை சேவைகள்
3. பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள்
4. நோய்க் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பயிற்சி நடவடிக்கைகள்

11.3. அதிக ஆபத்துக்குள்ளாகும் குழுவினருக்கான இலக்கு:

இத்தகைய திட்டங்கள், குறிப்பிட்ட குழுவினரிடையே, எச்.ஐ.வி. தொற்றைப் பரப்ப மற்றும் பெற அதிக வாய்ப்புள்ளவர்களின், ஆபத்தை உண்டாக்கும் நடத்தைகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டது. இத்தகைய குழுக்களை, அடிப்படைக் குழுக்களான பெண் பாலியல் தொழிலாளர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள், ஊசிமூலம் போதை மருந்து பயன்படுத்துபவர்கள் மற்றும் அடிப்படைக் குழுக்கள் அல்லாத ஓட்டுநர்கள், புலம்பெயரும் தொழிலாளர்கள் மற்றும் கைதிகள் என வகைப்படுத்தலாம்.

2008 ஏப்ரல் 23]

11.4. செயல்திட்டம் மற்றும் செயலாக்கம்:

இத்திட்டங்கள் அரசு சாரா அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு கீழ்க்கண்டவற்றைச் செயல்படுத்த நிதி மற்றும் தொழில்நுட்பங்களை அளிக்கின்றது:—

- நடத்தை மாற்றத் தொடர்புகள்
- பால்வினை நோய்ப் பிரிவு மற்றும் ஒருங்கிணைந்த பரிசோதனை மற்றும் ஆற்றுப்படுத்துதல் மைய பரிந்துரை சேவைகள்
- சமூக சந்தை மூலமாக ஆணுறை பயன்பாடு
- தக்கவைத்துக் கொள்வதற்காக ஒத்த நிலையினர் கல்வி மற்றும் ஆதரவு கோரும் திட்டங்கள்

11.5. ஆணுறை பயன்பாடு:

பொது மக்கள் மற்றும் அதிக ஆபத்துக்குள்ளானவர்கள் ஆகியவர்களிடம் எச்.ஐ.வி. தொற்றுப் பரவாமல் தடுக்க அதிக பயனுள்ள வழி ஆணுறையாகும். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின்மூலம் பெரிய அளவில் அனைத்து குழுவினரின் மூலமாக அவற்றிற்கான சிறந்த வழிகளைப் பின்பற்றி ஆணுறை வழங்கும் திட்டம் உள்ளது. இது போன்ற பல்வேறு வழிமுறைகளாவன:

- நலப் பராமரிப்பு நிறுவனங்கள், பால்வினை நோய்ப் பிரிவுகள், வெளியிட முகாம்கள் மற்றும் அரசுசாரா அமைப்புகள்மூலம் மக்களுக்கு இலவச ஆணுறை விநியோகித்தல்.
- ஆணுறை தயாரிப்பாளர்கள், சமூக விற்பனை நிறுவனங்கள் மற்றும் அரசுசாரா அமைப்புகள் ஆகியவர்களை ஈடுபடுத்தி அவர்கள்மூலம் மானிய விலையில் ஆணுறைகளைச் சமுதாய விற்பனை செய்தல்.
- ஆணுறைப் பயன்பாட்டை மக்களிடையே கொண்டு செல்லவும், பாதுகாப்பான உடலுறவு பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான நடத்தை மாற்றத் தொடர்புகள்

[2008 ஏப்ரல் 23

- இந்துஸ்தான் லேடக்ஸ் குடும்ப நல மேம்பாட்டு அறக்கட்டளை மற்றும் அவர்களுடைய ஒத்த நிலைக் கல்வியாளர்கள் மூலம் பாலியல் தொழிலாளர்களுக்கு பெண்ணுறை வழங்குவதை மேம்படுத்துவதன்மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்; பெண்ணுறை விநியோகத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஈடுபடச் செய்து அதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை கட்டுப்படுத்தவும், தேவையில்லா கர்ப்பம் மற்றும் தொற்றைத் தடுப்பதற்கான தடுப்புத் திட்டங்களை சந்திக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்துஸ்தான் லேடக்ஸ் மூலமாக கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 மாநகராட்சிகளில் 25 ஆணுறை விற்பனை இயந்திரங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

11.6. கிராமப்புற மகளிர் எச்.ஐ.வி. / எய்ட்ஸை எதிர்கொள்வதற்கான சுய அதிகாரம்:

இந்திய மகளிருக்கு முடிவெடுப்பதில் அதிக முக்கியத்துவம் இல்லாததாலும், பாலியல் மற்றும் பாலுணர்வு சம்பந்தமாக நிகழ்வுகளைப் பற்றி விவாதிப்பதில் குறைந்த அளவே வாய்ப்பு உள்ளதாலும், எச்.ஐ.வி. தொற்றைப் பெற அதிக அளவு வாய்ப்புள்ளது. UNAIDS மதிப்பீட்டின்படி 50 சதவிகித புதிய தொற்றுகள் பெண்களிடம் ஏற்படுகிறது. இத்தருவாயில் பெண்களுக்கு பாலியல் உடல்நலம், குறித்துத் தெரிவிப்பதும், முடிவெடுப்பதற்கும் அவர்களின் துணையுடன் ஆணுறைப் பயன்பாடு பற்றிப் பேசுவதற்கும் சுய அதிகாரமளிப்பதும் அவசியமாகிறது. தமிழ்நாட்டிலுள்ள கடலூர், தருமபுரி, மதுரை, நாமக்கல், நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்டங்களில் பாலியல் உடல்நலம் மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்வு திட்ட முதல் கட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் 51,484 மகளிர் சுய உதவிக் குழுக்களிலுள்ள 8,23,744 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

11.7. இத்திட்டத்தின் நோக்கங்கள்:

- பெண்களை எளிதாக ஆட்கொள்ளக்கூடிய எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பற்றிய விஷயங்களைக் குறைப்பது.

2008 ஏப்ரல் 23]

- பாலுணர்வு மற்றும் இனப்பெருக்க நல உரிமை பற்றிய முடிவு எடுப்பதில் பெண்களுக்கான சுய அதிகாரம்
- பால்வினை நோய்த் தொற்று மற்றும் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொற்றின் அறிவை மேம்படுத்துதல்
- பரிசோதனை மற்றும் சிகிச்சை சேவைகள் அளித்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- பெண்களிடையே, எச்.ஐ.வி.-யுடன் வாழ்பவர்களிடம் காட்டும் மனப்பான்மையை மாற்றுதல்

11.8. திட்டச் செயலாக்கம்:

பாலுணர்வு நலம் மற்றும் பெண்களின் சுய அதிகாரத்திற்கான சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது (படவிளக்கக் கையேடு). இது பிரசித்தி பெற்ற தொலைக்காட்சித் தொடர் போன்ற கதைகளாக அமைந்துள்ளது. பயிற்சியானது நான்கு கட்டமாக நடத்தப்பட்டது. மாநில அளவில் முதன்மைப் பயிற்சியாளர்கள், மாவட்ட அளவில் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவில் சுய உதவிக் குழு ஊக்குநர்கள் மற்றும் கிராம அளவில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயிற்சியின் தரத்தை உறுதி செய்வதற்காக கண்டிப்பான, நெருக்கமான கண்காணிப்பு செய்யப்பட்டது. இப்பயிற்சிக்கான செலவினம், ஒரு பெண்ணுக்கு ரூ.50/-க்கும் குறைவானதாகும்.

11.9. தமிழ்நாட்டில் காவல் துறையினரின் ஆதரவு கோரும் திட்டங்கள்:

11.9.1. எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பு செயல் திட்டத்தில் அதனுடன் இணைந்து பணியாற்றுபவர்களுக்கான உணர்வூட்டல் ஒரு முக்கியமான கூறாகும். அதிக ஆபத்துக்குள்ளாகும் குழுவினர் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாள்வதில் காவல் துறை ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. பாலியல் தொழிலாளர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள், ஊசிமூலம் போதை மருந்து பயன்படுத்துவோர் மற்றும் அரவாணிகளிடத்தில் காவல் துறையினருடைய அணுகுமுறையில் திட்ட மேலாளர்கள் மிகத் தீவிரமான சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஆகையால் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து காவல் துறையினருக்கும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றி உணர்வூட்டத் திட்டமிட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 23

11.9.2. இதற்காக, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், ஒரு நாள் தொகுப்பை தயாரித்துள்ளது. இந்தத் தொகுப்பானது, மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான முதன்மைப் பயிற்சியாளர்கள், காவல் துறையினருக்கு எச்.ஐ.வி. / எய்ட்ஸ் மற்றும் தொடர்புடைய பொருள்கள் பற்றி உணர்வூட்டப் பயன்படும். மாநில அளவிலான முதன்மைப் பயிற்சியாளர்கள், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் துறை உதவி ஆணையாளர் போன்ற முதுநிலை காவல் துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பர். மாவட்ட அளவில், முதன்மைப் பயிற்சியாளர்கள், ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் வகையிலானவர்களுக்குப் பயிற்சி அளிப்பர். மேற்கண்ட பயிற்சி பெற்ற அலுவலர்கள் மீதமுள்ள காவல் துறையினருக்குப் பயிற்சி அளிப்பர்.

11.9.3. இத்திட்டத்தை ஐக்கிய நாடு வளர்ச்சித் திட்டம் மற்றும் கான்ஸ்டெல்லா ப்யூச்சர்ஸ் குரூப், இவற்றின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் செயல்படுத்தி வருகிறது.

11.10. எச்.ஐ.வி. / எய்ட்ஸிலிருந்து விடுதலை பெற இளைஞர்களுக்கு உதவுதல்:

இளைஞர்களுக்கு உணர்வூட்ட, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் அணுகுமுறை மூன்று பல்வேறு குழுவினருக்கு 3 தனித்தனி திட்டங்களைத் தொடங்கும் முயற்சி கொண்டது. பள்ளிக் குழந்தைகளுக்கான, பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கான செஞ்சுருள் சங்கம் மற்றும் பள்ளி செல்லா இளைஞர்களுக்காக மாநில வாய்ப்பு வள மையத்துடன் (State Resources Centre) இணைந்த சிறப்புத் திட்டம் என இது செயல்படுகிறது.

11.11. பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம்:

பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டமானது ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தொடர்பான அடிப்படைத் தகவல்களை அளிப்பதுடன் வளர்கின்ற பருவத்தில் தற்காத்துக்கொள்வதற்கான வாழ்க்கைத்திறன் கல்வியையும் அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1997-ல், 357 பள்ளிகளில் ரூ.8.32 இலட்சத்தோடு துவங்கப்பட்ட இத்திட்டமானது, இன்று அனைத்துப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் கல்வியாண்டில், இத்திட்டமானது 9,423 பள்ளிகளில் 5 கோடி ரூபாய் அளவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள், ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளில் படிக்கும் 9-வது மற்றும் 11-வது வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு இத்திட்டத்தின்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2008 ஏப்ரல் 23]

11.12. செஞ்சுருள் சங்கம்:

11.12.1. இளைஞர்களிடையே எச்.ஐ.வி. தடுப்பு மற்றும் ஆபத்து பற்றிய நோக்கை முன் நிறுத்தி, கல்லூரிகளில் தன்னார்வத் திட்டமாக செஞ்சுருள் சங்கம் இயங்கி வருகிறது. செஞ்சுருள் சங்கங்கள் இளைஞர்களிடையே சென்றடையும் ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக உருவெடுத்து வருகின்றன. இத்திட்டம், உயர்கல்வித் துறையின் ஆதரவு மற்றும் நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம், அட்லெண்டா, U.S.A.-வின் தொழில்நுட்ப உதவியுடன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் முன்னின்று எச்.ஐ.வி./எய்ட்ஸுக்கு எதிரான நிகழ்வுகளில் பல்துறை ஒருங்கிணைப்பின் அவசியத்தை தெரியப்படுத்துவதன் மூலமாகச் செயல்படுகிறது. செஞ்சுருள் சங்கங்கள் 17 முதல் 25 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் தகவல் மற்றும் திறன்களைத் தருவதோடு அல்லாமல், முன்மாதிரி ஓத்தநிலைக் கல்வியாளர்களாக அவர்களை மாற்றவும் ஊக்குவித்து வருகிறது.

11.12.2. நோக்கங்கள்:

- நடத்தை மாற்றத் தொடர்பு மூலமாக இளைஞர்களிடையே எச்.ஐ.வி. தொற்றைக் குறைப்பதற்கு தங்களுக்குள்ள ஆபத்து குறித்த உணர்வை அதிகரித்தல்.
- இளைஞர்களை ஓத்தநிலைக் கல்வியாளர்களாகவும், மாற்றத்தை ஏற்படுத்தும் முகவராகவும் உருவாக்குதல்.

11.12.3. செயல் உத்திகள்:

- செஞ்சுருள் சங்கம் பல்வேறு செயல் உத்திகளைக் கையாள்கிறது.
- விழிப்புணர்வு முகாம்கள்
- தொற்றுக்குள்ளானவர்களுடன் உரையாடுதல்
- தலைமை மற்றும் ஓத்தநிலைக் கல்விப் பயிற்சிகள்

[2008 ஏப்ரல் 23

11.12.4. செயல்படும் இடங்கள் :

மருத்துவம் மற்றும் அதைச் சார்ந்த நிறுவனங்கள் தவிர பல்கலைக்கழகங்கள், கலை மற்றும் அறிவியல், பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது, செஞ்சுருள் சங்கங்கள் 874 கல்லூரிகளில் துவக்கப்பட்டு சுமார் 50 ஆயிரத்திற்கும் மேலான மாணவர்களையும் மாநிலம் முழுவதுமுள்ள கிட்டத்தட்ட 7 இலட்சம் தன்னார்வமுடைய மாணவர்களையும் சென்றடைந்துள்ளது. 300 முன்மாதிரிக் கல்வியாளர்கள், 300 கல்லூரிகளில், செஞ்சுருள் சங்கப் பொறுப்பிலிருக்கும் 865 அமைப்பாளர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளார்கள். அது மட்டுமல்லாமல், சுமார் 25,000 இரத்தக் கொடையாளர்கள் பங்கேற்ற 525 இரத்ததான முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. செஞ்சுருள் சங்கம் பின்வருவனவற்றின் மூலம் இளைஞர்களுக்கான ஒரு சிறந்த சமூக ஆதரவு இடமாகச் செயல்படுகிறது:

- மாணவர்கள், குறிப்பாக எச்.ஐ.வி. தொற்றுள்ள நிலை மற்றும் அதிக ஆபத்துள்ள நடத்தையுடன் உள்ள இளைஞர்கள் ஆற்றுப்படுத்துதல் சேவையை பயன்படுத்துதல்
- எச்.ஐ.வி./பால்வினை நோய்/பால்வினைத் தொற்றுக்காக இளைஞர்கள் தன்னார்வ பரிசோதனை செய்து கொள்ளுதல்.
- தன்னார்வ இரத்ததானத்தை அதிகரித்தல்

இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுவதால் பல்கலைக்கழக அளவில் இதனைப் பாடத் திட்டத்தில் ஒரு பகுதியாக சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 11 கல்லூரிகளில் செஞ்சுருள் சங்க நடவடிக்கைகள், பாடத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொற்றுடன் வாழ்பவர்களுக்கு பராமரிப்பு மற்றும் ஆதரவு அளிப்பதற்காக கல்லூரிகள் அருகே உள்ள கிராமங்களைத் தத்தெடுத்துக் கொண்டுள்ளன.

11.13. சிறந்த தடுப்பிற்கான விழிப்புணர்வை அதிகரித்தல் :

விழிப்புணர்வை அதிகப்படுத்துவதன்மூலம் நடத்தையில் மாற்றம் ஏற்படுகிறது என்ற உலகளாவிய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியைப் பின்பற்றி, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் பணிபுரிகிறது. இந்த நோக்கத்தை அடைவதற்கு பயனுள்ள தொடர்பு

2008 ஏப்ரல் 23]

மிக அவசியமானதாகும். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்க தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு திட்டங்கள், விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தனி நபர் நடத்தையில் தாக்கத்தை உருவாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள பல்வேறு சமுதாயத்தினரின் கலாச்சார மாற்றம், மொழிவாரி மற்றும் சமூகப் பின்னணி போன்றவற்றைக் கருத்தில் கொண்டு தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

11.14. நோக்கங்கள் :

- அதிக ஆபத்து வகை உள்ளவர்கள் உட்பட பல்வேறு மக்களிடையே பிறப்புறுப்பு வழித் தொற்று / பால்வினை நோய்த் தொற்று / எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- எச்.ஐ.வி. பற்றிய தவறான எண்ணங்களைக் களைதல், எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பற்றிய சரியான தகவல்களை அளித்தல்.
- ஆதரவான சுற்றுப்புறம் மற்றும் தரமான நலச் சேவைகளை உருவாக்குதல்
- புதிய தொற்றைத் தடுப்பதற்கான நடத்தை மாற்றத்தைத் தூண்டுதல்
- எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களுக்குப் பராமரிப்பு மற்றும் ஆதரவு அளிப்பதில் சமுதாயத்தின் ஈடுபாட்டை அதிகரித்தல்.

11.15. விழிப்புணர்விலிருந்து செயல்பாடுகள் :

11.15.1. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் விழிப்புணர்வைப் பரப்புவதற்காக வடிவமைக்கப்பட்ட தொடர்பு உத்திகள் சிறப்பாகப் பொதுமக்களிடையே சென்றடைவதில் சங்கம் பெரிய வெற்றியைக் கண்டுள்ளது. இதன் காரணமாக இலக்கை அடைந்துள்ளது. மேலும், தற்சமயம் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் அதனுடைய தொடர்பு உத்தியின் கவனத்தை திறமையான நடத்தை மாற்றத்திற்கு மாற்றியுள்ளது.

11.15.2. இக்கண்ணோட்டத்தின் மாற்றம், தகவல், கல்வி, தகவல் தொடர்பு நடவடிக்கைகள், தனி நபர் தொடர்பை உறுதி செய்துள்ளது. இந்த நடத்தை மாற்றத் தொடர்பு நடைமுறைகள், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கச் சேவைகளின் எதிர்பார்ப்பை

அதிகரித்துள்ளது. தற்போது, அதிக மக்களுக்கு எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நல பராமரிப்பு சேவைகள் எளிதில் கிடைக்கின்றன. நமது சமுதாயத்தில் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பற்றிய தவறான எண்ணங்களைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றி அடையப்பட்டுள்ளது.

11.15.3. தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு திட்டங்கள் எச்.ஐ.வி. / எய்ட்ஸுடன் தொடர்புடைய புறக்கணித்தல் மற்றும் தனிமைப்படுத்துதலைக் குறைப்பதற்கு உதவியுள்ளன. மேலும், எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களின் மனித உரிமையைப் பாதுகாத்துள்ளன. சமீபத்திய தேசிய குடும்ப நல சுகாதார கணக்கெடுப்பு III-ன் புள்ளி விவரங்கள்மூலம் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நிலை மக்களிடையே 90 சதவிகிதத்திற்கும் அதிகமானோரிடம் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

11.16. குறிப்பிட்ட தேவைகளுக்கு பொருத்தமாக வடிவமைக்கப்பட்ட தொடர்பு செயல்பாடுகள் :

11.16.1. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், அதனுடைய தகவல், கல்வி, தகவல் தொடர்பு முகாம்களை செயல்படுத்த சமூக தொடர்பில் அங்கீகாரம் பெற்ற, தேர்ந்தெடுக்கப்பட்ட விளம்பர முகவர்களின்மூலம் வடிவமைத்து செயல்படுத்துகிறது. ஒவ்வொரு தகவல், கல்வி, தகவல் தொடர்பு சாதனமும் குறிப்பிட்ட இலக்கு, குழுவினர் ஏற்றுக்கொள்ளும்படியும், அவர்களுடைய குறிப்பிட்ட தேவையை நிறைவு செய்யும்வண்ணமும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. தகவல், கல்வி, தகவல் தொடர்பு முகாம்கள் சமுதாய மற்றும் தனிப்பட்டவர்களுடைய விழிப்புணர்வை நிறைவேற்றும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. சமுதாயத் தலைவர்கள், தனி நபர் நடத்தை மாற்றத்தை உண்டு பண்ணித் தூண்டும்முகமாக சமூகத்தை திரட்டும் உத்தி, வடிவமைக்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டிற்கான செயல் திட்ட நடவடிக்கைகளை நிறைவு செய்யும் வகையில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் எளிய மொழியில் விளக்கப் படங்களுடன் இரத்ததான தினம், உலக எய்ட்ஸ் தினம், செஞ்சுருள் சங்க திட்டங்கள் மற்றும் ஏனைய முகாம்களுக்குத் தேவையான பல்வேறு தகவல், கல்வி, தகவல் தொடர்புப் பொருட்களை வெளியிட்டுள்ளது.

11.16.2. அச்சிடப்பட்ட பொருட்கள், பயிற்சி மற்றும் கல்விக்கான நடைமுறை நூல், படவிளக்கக் கையேடு, சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், பேனர்கள், ஸ்டிக்கர்கள், தொங்கட்டான்கள், செய்திகளுடன் கூடிய சட்டைகள், தலை வளையங்கள் மற்றும் தொப்பிகள்; மின்னணு சாதனங்கள்-பாடல்கள், கதைகள் மற்றும் வானொலிமூலம் ஒளிபரப்பிய செய்திகள், தொலைக்காட்சி, சினிமா ஸ்லைடுகள், ஒளி-ஒலி நாடாக்கள், சுவர் விளம்பரம், நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள், வட்டாரம் மற்றும் மாநில அளவிலான போட்டிகள், ஆற்றல் மேம்பாட்டுத் திறன் மற்றும் ஒத்த கல்வி படிப்புகள் ஆகியன தகவல், கல்வி, தகவல் தொடர்பு சாதனங்களில் அடங்கும்.

11.17. நடமாடும் தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு ஊர்திகள் :

பல்வேறு இலக்கு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மலைவாழ் மற்றும் குக்கிராமங்களில் வாழும் மக்களிடம் சென்றடைவதை உறுதிப்படுத்தவும் நடமாடும் தகவல், கல்வி, தகவல் தொடர்பு ஊர்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வூர்தியில் ஒளி-ஒலி வசதிகள், தகவல், கல்வி மற்றும் தொடர்பு அட்டைகள், சுவரொட்டி, துண்டுப் பிரசுரம் மற்றும் ஆணுறை விற்பனை இயந்திரம் ஆகியவை உள்ளன. இதன்மூலம் மக்களைக் கவரவும், அவர்களுக்கு இந்தப் புதுமையான பொருட்கள்மூலம் தகவல்களை அளிக்கவும் முடியும். இந்தத் தகவல், கல்வி, தகவல் தொடர்பு ஊர்திகள் திட்டம், முன்மாதிரித் திட்டமாக இயக்கப்படுகிறது. ஓராண்டிற்கு மதுரை மாவட்டத்தில் ஒன்றும், சென்னை மாவட்டத்தில் ஒன்றும் இயக்கப்படும். சிறப்பான செயல்பாட்டிற்காக, இந்த நடவடிக்கைகளைச் செயல்படுத்த, மாவட்ட செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச் சங்கம் இந்த ஊர்திகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இயக்குகிறது.

11.18. நடமாடும் ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை ஊர்திகள் :

தமிழ்நாட்டில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், 760 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களை நடத்திவருகிறது. மலைவாழ் மக்கள் மற்றும் நெடுந்தொலைவிலுள்ள மக்களுக்குப் பரிசோதனை மற்றும் ஆற்றுப்படுத்துதல் வசதியை அளிப்பதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் 10 நடமாடும் ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை ஊர்திகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நடமாடும் ஒருங்கிணைந்த

[2008 ஏப்ரல் 23

ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் கீழ்க்கண்ட 10 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன:

1. நீலகிரி
2. சேலம்
3. திண்டுக்கல்
4. தருமபுரி
5. காஞ்சிபுரம்
6. கிருஷ்ணகிரி
7. நாமக்கல்
8. திருவண்ணாமலை
9. கோயம்புத்தூர்
10. சென்னை

11.19. நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மைய ஊர்திகளில் கீழ்க்கண்ட வசதிகள் உள்ளன:

இவ்வூர்தியில் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் டி.வி.டி. சென்ட்ரிப்யூஜ், ஊசி அழிப்பான், குளிர்சாதனப் பெட்டி, வண்ணக் குப்பைத் தொட்டிகள், மின் ஆக்கிகள் ஆகியவை உள்ளன. ஒவ்வொரு நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மைய ஊர்தியிலும் ஆலோசனை மற்றும் பரிசோதனை சேவைகளைச் சிறந்த முறையில் அளிப்பதற்காக ஒரு ஆற்றுநர், ஒரு ஆய்வக நுட்புனர் ஆகியோர் உள்ளனர். இந்த ஊர்திகள் அந்தந்த மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினால் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இயக்கப்படுகின்றன. பரிந்துரை மற்றும் தொடர் கவனிப்புச் சேவைகளைச் செஞ்சிலுவைச் சங்கங்கள், மாவட்டத் திட்ட மேலாளர்களுடன் இணைந்து செயல்படுத்துகின்றன.

11.20. தமிழ்நாட்டில் எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்பவர்களுக்கான சட்ட உதவி மையம்:

11.20.1. அதிக தொற்றுள்ள மாநிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாட்டிற்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் ஒரு மிகப் பெரிய சவாலாக உள்ளது. சமீபகாலமாகத் தொற்றின் நிலை குறைந்தாலும் எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழும் மக்களின் முழுமையான எண்ணிக்கை

2008 ஏப்ரல் 23]

தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வருகிறது. தமிழ்நாட்டில், சேவைகளைப் பெறும் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான மகளிரின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே இருக்கின்றது. அரசினுடைய பல்வேறு விழிப்புணர்வு திட்டங்களால் மகளிரின் சுய அதிகாரம் உயர்ந்துள்ளதாலும், எச்.ஐ.வி./எய்ட்ஸ் துறையில் பணியாற்றும் ஏனைய முகவர்களின் முயற்சியினாலும், அதிக மகளிர் அவர்களுடைய உரிமையைத் தேடி வருகின்றனர். மேலும், அவர்கள் தனிமைப்படுத்துவதற்கும் புறக்கணிப்பதற்கும் (உதாரணமாக பல எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான மகளிருக்கு சொத்துரிமை மற்றும் அவர்களுடைய குழந்தையின் பாதுகாப்பும் மறுக்கப்படுகிறது) எதிராகப் போராடுகின்றனர்.

11.20.2. தற்போது இந்த மகளிரின் சட்டம் சார்ந்த மனக்குறைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடு எதுவுமில்லை. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சரியான வழியாக தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், மாநில சட்ட சேவை ஆணைக் குழு மற்றும் ஐக்கிய நாடு வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றுடன் பங்குதாரராகச் சேர்ந்து முன்மாதிரி அடிப்படையில் நாமக்கல் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இரண்டு சட்ட உதவி மையங்களை ஆரம்பித்துள்ளது. இதன்மூலம் வாரத்திற்கு இரண்டு முறை எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களுக்காக ஒரு வழக்கறிஞரின் சேவை வழங்கப்பட்டுள்ளது. இம்மையத்தின் செயல்பாடு ஊக்கமளிப்பதாக உள்ளது. இச்சேவை எல்லா மாவட்டங்களிலும் படிப்படியாக அதிக தொற்றுக்குள்ளான மக்களுக்கு கிடைக்கும் வழியில் இதுபோன்ற மையங்களைத் துவக்க வேண்டியது அவசியமாகிறது. இது விரைவில், மேலும் 3 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

11.21. ஆற்றுப்படுத்துதல், சிகிச்சை மற்றும் பராமரிப்பு:

11.21.1. ஒருங்கிணைந்த சேவைகளை உயர்த்துவதில், தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. ஒரே இடத்தில் சேவைகளைப் பெறும் ஒற்றைச் சாளர முறையின்கீழ் எச்.ஐ.வி./எய்ட்ஸ் ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை, எச்.ஐ.வி./காசநோய் இணைத் தொற்று தடுப்புச் சேவைகள், இரத்தப் பாதுகாப்பு, பால்வினை நோய், எச்.ஐ.வி.-க்கு கூட்டு மருந்து சிகிச்சை போன்ற அனைத்துச் சேவைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைக்கப்பட்ட சேவைகள், பெறுவோருக்கு வசதியாக உள்ளன.

[2008 ஏப்ரல் 23

11.21.2. ஒருங்கிணைப்பு ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் ஒற்றைச் சாளர முறையின்கீழ் சேவைகளை வழங்குதல்:

11.21.2.1. ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களில் ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை சேவைகள், பாதுகாப்பான இரத்தம் கிடைப்பது மற்றும் சேமிப்பை உறுதி செய்தல், பால்வினை நோய்த் தொற்று மற்றும் பிறப்புறுப்புப் பாதை தொற்றுக்கான எச்.ஐ.வி. கூட்டு மருத்துவச் சிகிச்சை ஆகியவை கிடைக்கின்றன. நாட்டிலுள்ள கருவுற்ற தாய்மார்களுக்குத் தாய்சேய் மேவா திட்டம் விரிவாகக் கிடைப்பதற்காக, இத்திட்டத்தை அதன் தொடர்பான சேவைகளுடன் இணைத்து தற்போதுள்ள மருத்துவ வசதிகளுடன் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து தொடர்புடைய சேவைகளையும் முழுமையாக ஒருங்கிணைப்பதால், ஒற்றைச் சாளர முறையின்கீழ் வசதிகளைப் பெறுதல் அதிகரித்துள்ளது.

11.21.2.2. நம் மாநிலத்தில் 2006 ஆம் ஆண்டில் 276 ஆக இருந்த ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் 760 ஆக உயர்த்தப்பட்டுள்ளன. கிராமப்புற சமுதாயத்தினர் பயன்பெறும் வகையில், வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனைச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது பரவலாக்கம் மற்றும் சேவைப் பயன்பாட்டை அதிகரித்துள்ளது.

11.21.3. தாயையும், சேயையும் காப்பாற்றுதல்–பெற்றோரிடமிருந்து குழந்தைக்குத் தொற்று பரவுதலைத் தடுத்தல்:

• தாயிடமிருந்து குழந்தைக்குத் தொற்று பரவுதல், எச்.ஐ.வி. தொற்று பரவுதலின் பெரிய வழியாகும். ஒட்டுமொத்த நோயின் தொற்று நிலையைக் கண்டறிவதில் கருவுற்ற தாய்மார்களிடையே காணப்படும் தொற்று நிலையின் வீதம் நம்பத்தகுந்த ஓர் அளவுகோலாகக் கருதப்படுதலே இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவுக்கான உலகளாவிய நிதியம் சுற்று-II-ன்கீழ், தமிழ்நாட்டில் பெற்றோர்-சேய் மேவா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கமானது, குழந்தை பெறும் வயதுள்ள பெண்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரை ஆரம்ப கட்டத் தடுப்பு, குடும்ப நலம், தன்னார்வ ஆலோசனை மற்றும் இரகசியப் பரிசோதனை, எச்.ஐ.வி.-க்கான கூட்டு மருத்துவ சிகிச்சை, தாய்ப் பாலுக்கான ஆலோசனை போன்ற வசதிகளை ஒட்டு

2008 ஏப்ரல் 23]

மொத்தமாக அளித்து அவர்களுக்குத் தடுப்பு மற்றும் பராமரிப்புத் திட்டத்தை அளித்தலாகும். இத்திட்டத்தை, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் அரசுசாரா அமைப்புகள் மற்றும் சமூகம்சார்ந்த நிறுவனங்களின் கூட்டாண்மையுடன் செயல்படுத்தி வருகிறது.

11.21.4. எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவுக்கான உலகளாவிய நிதியத்தின் உதவியுடனான திட்டத்தின் (சுற்று–II) குறிப்பிடத்தக்க கூறுகளாவன:

- மாநிலத்திலுள்ள அனைத்து எச்.ஐ.வி.-யுடன் வாழும் பெண்களை வரிசைப்படுத்துதல்
- கருவுற்ற தாய்மார்களை ஆலோசனை மற்றும் பரிசோதனைக்கு ஊக்குவித்தல்
- தொற்றுக்குள்ளான கருவுற்ற தாய்மார்களை அடையாளம் காணுதல்
- அனைத்துத் தொற்றுக்குள்ளான தாய்மார்களுக்கும் பிரசவத்திற்கு முன்பும் மற்றும் அவர்களுடைய குழந்தைகள் பிறந்த பின்பும் நெவிரப்பின் மருந்து வழங்குதல்
- எச்.ஐ.வி.-க்கான கூட்டு மருந்து மற்றும் நெவிரப்பின் கொடுப்பதற்கான ஆலோசனை, தாய்ப்பால் கொடுத்தல், தாய் சேய் ஊட்டச் சத்து போன்றவை
- எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்பவர்களைப் பராமரித்தல்

11.21.5. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், திட்டத்தை செயல்படுத்தக் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:–

- ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களின் எண்ணிக்கை மாநிலம் முழுவதும் சென்றடையும்வண்ணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு வட்டாரத்திலும் வெளியிடப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டத் திட்ட மேலாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- தாய்சேய் மேவா திட்டத்தில் பணியாற்ற 38 அரசுசாரா அமைப்புகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- தொற்றுக்குள்ளான தாய்மார்களின் பராமரிப்புக்காக எச்.ஐ.வி.-க்கான கூட்டு மருத்துவ சிகிச்சை அளித்தல் மற்றும் நெவிரப்பின் வழங்குதலை அதிகரித்தல் போன்றவற்றில் தனியார் சேவை அளிப்பவர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றல்.

11.21.6. நெருக்கடியான நிலைகளில் சேவை அளிப்பவர்களை நியமித்தல்:

அதிக எண்ணிக்கையில் சேவைகளை அளிக்கும்பொழுது பல்வேறு நிலைகளில் ஆற்றுப்படுத்துதல், பரிசோதனை மற்றும் சிகிச்சையளிக்கும் நிலைகளில் தொடர் கவனிப்பளிப்பது ஒரு நெருக்கடியான நிலையாகும். 405 வெளியிடப் பணியாளர்கள் (385 வட்டாரத்திற்கு 1 வீதம் மற்றும் சென்னை மாநகரத்தில் 20) நியமிக்கப்பட்டு அவர்கள்மூலம் தொடர் கவனிப்பு அளிப்பது சாத்தியமானது. இவர்களில் பாதிக்கும் மேலான வெளியிடப் பணியாளர்கள் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழும் பெண்களாவர். இப்பணி அவர்களுக்கு வருவாய் அளிப்பதுடன், தன்னம்பிக்கையையும், நோயாளிகளிடம் நம்பகத்தன்மையையும் அதிகரித்துள்ளது. தாய்சேய் மேவா திட்ட செயலாக்கத்தை மாவட்ட அளவில், பயனுள்ள வகையில் கண்காணிப்பதை உறுதிசெய்ய 30 மாவட்டத் திட்ட மேலாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படி செயல்படுகின்றனர்.

11.21.7. நெவிரப்பினுடன் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்:

கருவுற்ற தாய்மார்களுக்கு பிரசவத்திற்கு முன்பும், சேய்க்கு பின்பும் பிரசவத்திற்கு நெவிரப்பின் மருந்து அளித்தல் தாய்சேய் மேவா திட்டத்தின் மையக் கூறாகும். இத்திட்டத்தின்கீழ் தேவையான அளவு மருந்துகள் வழங்குவது உறுதிசெய்யப்பட்டுள்ளது. மாநிலத்தில் ஒட்டுமொத்த செயலாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

11.22. இரத்தப் பாதுகாப்பு:

இரத்தப் பரிமாற்ற சேவையானது நோயாளிகளின் தேவைக்கேற்ப பாதுகாப்பான இரத்தம் மற்றும் இரத்தம் தொடர்புடைய பொருட்களை அளிப்பதாகும். இது நோயாளிகளின் நலத்தைப் பாதுகாப்பதற்கு இன்றியமையாததாகும். திடகாத்திரமான, பணம் வாங்காமல் (தன்னார்வத்துடன்) தொடர்ந்து இரத்தம் அளிப்பவர்,

பாதுகாப்பான இரத்தம் அளிப்பவர் என்று கருதப்படுகிறது. தற்போதைய நோக்கம், தன்னார்வ இரத்தமளிப்பவர்களை திரும்பத் திரும்ப அளிப்பவர்களாக மாற்றுவதன்மூலம் இரத்தப் பாதுகாப்பை நிலை நிறுத்தலாகும். நம் மாநிலத்தில் இரத்த வங்கிகள், இரத்த சேமிப்பு நிலையங்கள் ஆகியவற்றிற்கிடையிலான பிணைப்பு சிறந்த முறையில் உள்ளதால் இரத்தம் மற்றும் இரத்தம் தொடர்புடைய பொருட்களை வழங்குதலும், விநியோகித்தலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த இணைப்பு பல்வேறு வகையான இரத்த வங்கிகளைக் கொண்டது.

வ. எண்	வகை	மொத்த எண்ணிக்கை
1.	உரிமம் பெற்ற அரசு இரத்த வங்கிகள்	83
2.	உரிமம் பெற்ற தனியார் இரத்த வங்கிகள்	149
3.	மைய அரசு சார்பின் கீழுள்ள இரத்த வங்கிகள்	9
4.	தொழிலாளர் மாநில காப்பீட்டு திட்டத்தின்கீழ் இயங்கும் இரத்த வங்கிகள்	2
5.	அரசு பகுப்பாய்வு மையங்கள்	7
6.	தனியார் பகுப்பாய்வு மையங்கள்	43
7.	மைய அரசு பகுப்பாய்வு மையம்	1
8.	டாக்டர்.எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக பகுப்பாய்வு மையம்	1
9.	இரத்ததான முகாம்கள் நடத்துவதற்கு என அனுமதிக்கப்பட்ட தனியார் இரத்த வங்கிகள்	55
10.	மாநிலத்தில் செயல்படும் CEMONC மையங்கள்	83
11.	அரசு இரத்த சேமிப்பு மையங்கள்	51
12.	தனியார் இரத்த சேமிப்பு மையங்கள்	50

[2008 ஏப்ரல் 23

11.22.2. குறிப்பிடத்தக்க முடிவுகள் :

- தன்னார்வ இரத்த தானம் 2002 ஆம் ஆண்டில் 57.3 சதவிகிதத்திலிருந்து 2007 ஆம் ஆண்டில் 82 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.
- இரத்தக் கொடையாளர்களிடம் காணப்பட்ட தொற்று 2002 ஆம் ஆண்டில் 0.30 சதவிகிதத்திலிருந்து 2007 ஆம் ஆண்டில் 0.1 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.
- இரத்த தொடர்புடைய பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது.

பேறுகால அவசர நிலைகளில் பயன்படுத்துவதற்கான புதிய உறைநிலை பிளாஸ்மாவைச் சேமிக்கும் மைனஸ் 20 டிகிரி சென்டிகிரேட் ஆழ்நிலை குளிர்விப்பான்களை வழங்க, தற்போது செயல்படும் 65 மகப்பேறு மையங்களில் 38 அரசு இரத்த வங்கிகளை, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் கண்டறிந்துள்ளது.

- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம், 5 அரசு மருத்துவக் கல்லூரி இரத்த வங்கிகளுக்கு கணினி மற்றும் பிரிண்டர் போன்றவற்றைக் கணினிமூலம் இணைப்பதற்காக வழங்கியுள்ளது. மேலும் 12 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் இவ்வசதிகளை அளிப்பதற்காக கண்டறியப்பட்டுள்ளன.
- இரத்த வங்கிகளின் ஆதார நூல் மற்றும் தன்னார்வ இரத்த தான நாட்காட்டி அச்சிடப்பட்டுள்ளது.
- இரத்த வங்கிகளை நிருவகிக்கவும், தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவம்சார்ந்த பணியாளர்களுக்கு காலமுறைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- மாணவர்கள், குறிப்பாக நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் செஞ்சுருள் சங்கம் மூலமாக, இரத்த வங்கி நடவடிக்கைகள் மற்றும் இரத்த தான முகாம்களில் சிறப்பாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2008 ஏப்ரல் 23]

11.23. பால்வினை நோய் சிகிச்சை சேவைகள்:

எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோய்த் தொற்று பரவுவதற்கு உடலுறவு முக்கியமான வழியாகும். எச்.ஐ.வி. தொற்று பெறுவதற்கு எளிதில் ஆட்படும் மக்கள் இதர பால்வினை நோய் மற்றும் இனப்பெருக்க வழித் தொற்று நோய்களுக்கும் எளிதில் ஆட்படுகின்றனர். எச்.ஐ.வி. தொற்று நிலையின் வீதம் பால்வினை நோயால் அவதிப்படுபவர்களிடையே மிகவும் அதிகமாக உள்ளது. பால்வினைத் தொற்று உள்ளவர்களிடையே எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பரவுதல் 2 முதல் 9 மடங்கு அதிகமாக உள்ளது. இதனைத் தவிர்க்க நோய் வெளிப்பாட்டு மேலாண்மைக்காக பால்வினை நோய்ப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. பால்வினை நோய்த் தொற்று மற்றும் இனப்பெருக்க வழித் தொற்று உடையவர்களின் சுமையைக் குறைப்பதே நம் நாட்டில் எச்.ஐ.வி. / எய்ட்ஸ்க்கு எதிராகப் போராடும் ஒரு முக்கிய உத்தியாகும். பால்வினை நோய்க்கான சிகிச்சைக்குத் தேவை, அதனுடன் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் ஆற்றுப்படுத்துதல் மற்றும் தன்னார்வ பரிசோதனையை மேம்படுத்துதல் மற்றும் ஆபத்து விளைவிக்கும் நடத்தையை குறைத்தல் ஆகும். 2007-2008 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தில் பால்வினை நோய்ப் பிரிவுகளின் சேவையை உறுதிப்படுத்துவது சேர்க்கப்பட்டுள்ளது. சேவையை வழங்குவதற்காக கீழ்க்கண்ட பால்வினை நோய்ப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன:—

- மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறை இயக்ககத்தின்கீழ் 81 பால்வினை நோய்ப் பிரிவுகள், அரசு தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம்சாரா அளவில் உள்ள மருத்துவமனைகளில் உள்ளன.
- மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலுள்ள பால்வினை நோய் துறைகளில் 14 பால்வினை நோய்ப் பிரிவுகள் உள்ளன.
- பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்ககத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் 5 பால்வினை நோய்ப் பிரிவுகள் உள்ளன.

இந்தப் பால்வினை நோய்ப் பிரிவுகளை ஏற்படுத்தியதன்மூலம் பால்வினை நோய் சேவைகள் தொடர்பான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

[2008 ஏப்ரல் 23

தரமான சேவைகளுக்காக, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் கீழ்கண்டவற்றை வழங்குகிறது:—

1. அனைத்து பால்வினை நோய்ப் பிரிவுகளுக்கும் மருந்துகள் (சந்தர்ப்பவாத நோய்களுக்கு உட்பட)
2. தேவையான இணைப்புடன் கணினி மற்றும் துணைப் பொருட்கள்
3. கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள்
4. மருத்துவம் சார்ந்த கழிவுகளைக் கையாளும் வசதிகள்
5. பால்வினை நோய்கள் மற்றும் அதற்கான சிகிச்சை முறைகள் பற்றிய தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு பொருட்கள், அனைத்து பால்வினை நோய்ப் பிரிவுகள், தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள், தாய்சேய் மேவா திட்டம், திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம் மற்றும் இரத்த வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
6. பால்வினை நோய்ப் பிரிவு பொறுப்பிலுள்ள மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு பால்வினை நோயை நிருவகிக்கவும், நோயாளிகளின் நோய் வெளிப்பாட்டை நிருவகிக்கவும் இன்றைய நிலைக்கேற்ப அறிவை மேம்படுத்தப் பயிற்சி.
7. அவசர கால செலவினங்களுக்காக எதிர்பாராச் செலவினம்.

11.24. கூட்டு மருத்துவச் சிகிச்சை :

எச்.ஐ.வி. / எய்ட்ஸுடன் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் அவர்களது வாழ்நாளை நீட்டிக்கவும் கூட்டு மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. சிறப்பான கூட்டு மருத்துவச் சிகிச்சையின்மூலம் எச்.ஐ.வி. வைரஸ் பெருகுவது தடை செய்யப்படுவதுடன் நோய் கண்டறிய முடியாத அளவிற்கு குறைகிறது. சந்தர்ப்பவாத நோய்கள் அடிக்கடி உண்டாவது குறைக்கப்படுவதன்மூலம் எச்.ஐ.வி.-யை நிருவகிக்கும் செலவு குறிப்பிடத்தக்க அளவு குறைகிறது.

2008 ஏப்ரல் 23]

11.25. இலவச சிகிச்சைக்கான தொடக்க முயற்சி :

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாள் இந்திய அரசு, இலவச கூட்டு மருத்துவச் சிகிச்சையை 6 அதிகத் தொற்று நிலை உள்ள மாநிலங்களிலுள்ள 8 அரசு மருத்துவமனைகளில் புதிய முயற்சியாகத் துவக்கியது. இலவச கூட்டு மருத்துவச் சிகிச்சையைச் செயல்படுத்த, துவக்கப்பட்ட மையங்களில் ஒன்று, சென்னை அருகிலுள்ள, தாம்பரம் சானடோரியத்தில் உள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையாகும். துவக்கிய நான்கு ஆண்டிற்குள் மையங்களின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது. அவற்றில் 12 மையங்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், 13 மையங்கள் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் அமைந்துள்ளன. இம்மையங்கள் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களில் கூட்டு மருத்துவச் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு அதனை இலவசமாக அளித்து வருகின்றன. பதிவு செய்யப்பட்ட எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்கள் மற்றும் அதிகரிக்கப்பட்ட கூட்டு மருத்துவச் சிகிச்சை மையங்களின் எண்ணிக்கை இவற்றின் இடையே நேரிடையான தொடர்பு உள்ளது என்று வெளிப்படையாகத் தெரிகிறது. மாநிலத்தில் 3.5 இலட்சம், எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்கள் உள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டதில், தற்போது 26 மையங்கள் மூலமாக 68,450 நபர்கள் பதிவு செய்துள்ளனர். இதில் 28,468 நோயாளிகளுக்கு இலவச கூட்டு மருத்துவச் சிகிச்சை துவங்கப்பட்டுள்ளது.

11.26. நோக்கங்கள் :

கூட்டு மருத்துவச் சிகிச்சையின் முக்கிய நோக்கம் எச்.ஐ.வி. / எய்ட்ஸுடன் வாழும் தகுதிவாய்ந்த நபர்களுக்கு முழுமையான சேவைகளை அளிப்பதாகும். கூட்டு மருத்துவச் சிகிச்சை மையத்தின் குறிப்பிட்ட நோக்கங்களாவன :

- ஆய்வக சேவைகள்மூலம் எச்.ஐ.வி. / எய்ட்ஸுடன் வாழும் கூட்டு மருத்துவச் சிகிச்சை தேவைப்படுபவர்களில் தகுதி வாய்ந்த நபர்களைக் கண்டறிதல்.
- தொடர்ந்து எச்.ஐ.வி.-யுடன் வாழும், தகுதிவாய்ந்த நபர்களுக்கு இலவச கூட்டு மருத்துவச் சிகிச்சைக்கான மருந்துகளை வழங்குதல்.
- மருந்தை தொடர்ந்து பயன்படுத்துவதை உறுதிசெய்ய, சிகிச்சைக்கு முன்பும், சிகிச்சையின் போதும் ஆற்றுப்படுத்துதல் சேவையை அளித்தல்

[2008 ஏப்ரல் 23

- நோயாளிகளுக்கும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் ஊட்டச் சத்து தேவையையும், தொற்று பரவுதலை தடுக்கும் வழிகளையும், மற்றும் சுகாதாரத்தையும் போதித்தல்.
- தேவைப்படும் நோயாளிகளுக்கு சிறப்பான சேவைகள் அல்லது சேர்ந்து சிகிச்சை பெற மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தல்.
- ஆலுறை, தடுப்புக் கல்வி உட்பட ஒட்டுமொத்த முழுமையான சேவையை வழங்குதல்.

11.27. பராமரிப்பு மற்றும் ஆதரவு :

எச்.ஐ.வி.-யுடன் வாழும் மக்களுக்கு சமூகம் மற்றும் குடும்பத்தினரின் ஆதரவு மற்றும் சக எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்கள் ஆதரவு இரண்டும் தேவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் எச்.ஐ.வி./எய்ட்ஸுடன் வாழ்பவர்களுக்காக சமுதாய நல மையங்கள் மற்றும் நலவாழ்வு மையங்கள்மூலம் பராமரிப்பு மற்றும் ஆதரவு வழங்க அரசுசாரா அமைப்புகள் மற்றும் எச்.ஐ.வி. உள்ளோர் கூட்டமைப்புகளுக்கு ஆதரவு அளிக்கிறது.

11.28. சமுதாய நல மையங்கள் :

அரசுசாரா அமைப்புகளால் நடத்தப்படும் சமுதாய நல மையங்கள், எச்.ஐ.வி. / எய்ட்ஸினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளித்து வருகின்றன. இம்மையங்கள் 2002-2003 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டன. பின்னர் 2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இவை துவக்கத்தில் 17 மையங்களாக இருந்தன. 2005-2006 ஆம் ஆண்டில் இம்மையங்களின் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்தது. 2007-2008 ஆம் ஆண்டில் 27 சமுதாய நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. (23 பெரியவர்களுக்காகவும், 4 குழந்தைகளுக்காகவும்).

ஒவ்வொரு சமுதாய நல மையத்திலும் ஒரு பகுதிநேர மருத்துவர், இரண்டு அல்லது மூன்று செவிலியர், ஒரு ஆற்றுநர், இரண்டு அல்லது மூன்று வெளியிடப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர் மற்றும் ஒரு சமையல்காரர் உள்ளனர். எச்.ஐ.வி. உடன் வாழும் நோயாளிகளுக்கு மருத்துவர்களின் முடிவுப்படி 15 நாட்கள்

2008 ஏப்ரல் 23]

அல்லது அதிகபட்சமாக ஒரு மாதத்திற்கு, சந்தர்ப்பவாத தொற்றுக்காக சிகிச்சை அளிக்கப்படுகிறது. எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களுக்கு அவர்கள் தங்கும் காலத்தில் மருத்துவம் மற்றும் செவிலிப் பணி பராமரிப்பு, ஊட்டச் சத்து மற்றும் ஊட்டச் சத்து ஆலோசனை, குடும்ப ஆலோசனை, யோகா பயிற்சி மற்றும் மனரீதியான பயிற்சி சேவைகள் வழங்கப்படுகின்றன. எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களின் உடல்நிலை சீரடைந்தவுடன் அவர்களின் சமுதாயம் மற்றும் குடும்பத்தினருடன் வாழ வீட்டிற்கு அனுப்பப்படுகின்றனர். மற்றவர்களுக்கு அதிக மருத்துவப் பராமரிப்பு தேவைப்படுவதால், அவர்கள் மருத்துவ நிலையங்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

11.29. நலவாழ்வு மையங்கள் :

நலவாழ்வு மையங்கள், அவற்றின் பெயருக்கு ஏற்றாற்போல் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களின் தேவைக்காக, அவர்கள் பல்வேறு சேவைகளை பெற்றுக்கொள்வதற்காகத் திறக்கப்பட்டுள்ளன. இவ்விடத்தில், அவர்கள் தங்களது குடும்பத்தினருடன் இருப்பது போன்ற உணர்வு பெறுவதோடு, பயிற்சி பெற்ற ஆலோசகர் உள்ள நிலையில் மேலும் அவர்கள் மற்றவர்களின் ஆதரவையும், வலிமையையும் பெறலாம். எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களுக்கு ஒத்த முன்மாதிரி ஆற்றுப்படுத்துதல், குடும்ப அடிப்படையிலான ஆற்றுப்படுத்துதல், நேருக்கு நேர் மற்றும் குழு ஆற்றுப்படுத்துதல், ஊட்டச் சத்து ஆலோசனை போன்றவற்றின் மூலமாக மனரீதியிலான சமுதாய ஆதரவினை, நலவாழ்வு மையங்கள் அளிக்கின்றன. நலவாழ்வு மையங்கள் ஆதரவு கோரும் நிகழ்ச்சிகள் நடத்துவதோடு நோயாளிகளைச் சிகிச்சைக்காக, எச்.ஐ.வி. கூட்டு மருத்துவச் சிகிச்சை மையங்களுக்கு பரிந்துரைக்கின்றன. நலவாழ்வு மையங்கள், எச்.ஐ.வி. உள்ளோர் கூட்டமைப்பால் நடத்தப்படுகின்றன. மேலும், இதில் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்கள் பணியாற்றுகின்றனர்.

11.30. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் ஆதரவுகள் :

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் தற்போது 6 நலவாழ்வு மையங்களை ஆதரித்து வருகிறது. இம்மையங்களைப் பின்வரும் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்பவர்களின் கூட்டமைப்பு நடத்தி வருகிறது:

- தமிழ்நாடு எச்.ஐ.வி. உள்ளோர் கூட்டமைப்பு, விழுப்புரம் மாவட்டம் (TNP+)

[2008 ஏப்ரல் 23

- தமிழ்நாடு அரவாணிகள் சங்கம், காஞ்சிபுரம் மாவட்டம் (THAA)
- எச்.ஐ.வி. உள்ளோர் நலச் சங்கம், நாமக்கல்
- கடலூர் மாவட்ட எச்ஐவி. உள்ளோர் சங்கம் (C.D.S.+) கடலூர்
- தென்னிந்திய எச்.ஐ.வி. உள்ளோர் கூட்டமைப்பு, சென்னை
- எச்.ஐ.வி. / எய்ட்ஸுடன் வாழ்பவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் அறக்கட்டளை, தேனி.

11.31. நோய்க் கண்காணிப்பு, திட்ட மதிப்பீடு மற்றும் பயிற்சி செயல்பாடுகள்:

எச்.ஐ.வி. தொற்றைத் திறம்படக் கட்டுப்படுத்த, நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை மற்றும் நோய் கண்டறிதல், நோய் பரவவலை தொடர்ந்து, மிகத் துல்லியமாக கண்காணித்தல், சேவை பகுப்பாய்வின் தரத்தை சரிபார்த்தல் அவசியமாகிறது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் பயனுள்ள சேவைகளை வழங்குவதற்காக, நோய்க் கண்காணிப்புத் திட்டம் செயல்படும் இடங்களில் தொடர் திட்ட மதிப்பீட்டிற்காக வெளிப்புற தர உறுதித் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. தொடர் பராமரிப்பை ஒவ்வொரு நிலையிலும் உறுதிசெய்வதற்காக முறையான பயிற்சிக்கு சம நிலையான முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

11.32. நோய்க் கண்காணிப்பு:

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பின் மூலமாக, மைய அரசின் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, எச்.ஐ.வி. நோய்க் கண்காணிப்புத் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டமானது, இரத்த பரிசோதனையின்மூலம் இடம், குழு, காலம் ஆகியவற்றின் பொருட்டு, எச்.ஐ.வி. தொற்றின் போக்கைக் கண்காணிக்கிறது. இந்தக் கணக்கெடுப்பு, சமூகம்சார்ந்த அமைப்புகளாலும் அல்லது மருத்துவமனை சார்ந்த அமைப்புகளாலும் நடத்தப்படுகிறது. அதில் மருத்துவமனை சார்ந்த அமைப்புகள் உகந்ததாகும். இப்பரிசோதனையானது ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத, தெரியாத வகையில் நடத்தப்படுகிறது. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு, பரிசோதனைக்கான இடங்களின் எண்ணிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்குகிறது. 2006 ஆம் ஆண்டு நிலவரப்படி, தமிழ்நாடு, 97 ஒப்புதல் பெற்ற நோய்க் கண்காணிப்பு இடங்களைக் கொண்டுள்ளது.

2008 ஏப்ரல் 23]

11.33. 2007 ஆம் ஆண்டு முதல் நோய்க் கண்காணிப்பு நடைபெறும் இடங்களின் எண்ணிக்கை :

வரிசை எண்	வகை	இடங்களின் எண்ணிக்கை
1.	கர்ப்பிணிகள் கவனிப்புப் பிரிவு மற்றும் முதன்மை பரிந்துரை மருத்துவமனை	59
2.	தனியார் மருத்துவமனைகளிலுள்ள கர்ப்பிணிகள் கவனிப்புப் பிரிவு	05
3.	கர்ப்பிணிகள் கவனிப்புப் பிரிவு 15-24 வயது	05
4.	பால்வினை நோய்ப் பிரிவுகள்	11
5.	ஊசிமூலம் போதை மருந்தைச் செலுத்திக்கொள்பவர்கள்	02
6.	ஓரினச் சேர்க்கையாளர்கள்	02
7.	பெண் பாலியல் தொழிலாளர்கள்	11
8.	காசநோய்ப் பிரிவு	02

11.34. நோக்கங்கள் :

- பூகோள ரீதியாக எச்.ஐ.வி. தொற்று பரவுதலை முடிவு செய்தல்
- எச்.ஐ.வி. தொற்றின் போக்கைக் கண்காணித்தல்
- நம் நாட்டில் எதிர்கால எச்.ஐ.வி. / எய்ட்ஸ்-ஐ அளவிடத் தேவையான தகவல்களை வழங்குதல்; தேசிய அரசியல் மற்றும் சமூகத் தலைவர்களைத் திரட்டவும், திட்டத்திற்காக வெளியிலிருந்து ஆதரவைப் பெறவும், இந்தப் புள்ளிவிவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- சுகாதாரம் மற்றும் மருத்துவப் பராமரிப்புச் சேவைகளைப் பொருத்தமாகத் திட்டமிட, பயனுள்ள புள்ளிவிவரங்களை வழங்குதல்
- மதிப்பீடு செய்தல்

11.35. 2006 ஆம் ஆண்டில் பல்வேறு குழுவினரிடையே காணப்பட்ட எச்.ஐ.வி.யின் பரவல் நிலை:

வரிசை எண்	இடம் / குழு	எச்.ஐ.வி. பரவல் நிலையில் மத்திமம் (%)
1.	கருவுற்ற தாய்மார்கள்	0.38
2.	பால்வினை நோயாளிகள்	8.0
3.	பெண் பாலியல் தொழிலாளர்கள்	3.6
4.	ஊசிமூலம் போதை மருந்து பயன்படுத்துவோர்	24.2
5.	ஓரினச் சேர்க்கையாளர்கள்	5.6

நோய்க் கண்காணிப்பின் முடிவு, தொற்று நிலையின் வீதம், ஊசிமூலம் போதை மருந்தை செலுத்திக் கொள்பவர்களின் குழுக்களிடையே மிகவும் அதிகமாக உள்ளதைக் காட்டுகிறது, அதேசமயம், ஏனைய பிரிவினரிடையே கீழ்நோக்கிச் செல்லும் போக்கைக் காட்டுகிறது. மேலும், நோய்க் கண்காணிப்பில் எந்தெந்த இடங்களில் அதிக கவனத்தைச் செலுத்தவேண்டிய தேவை உள்ளது என்பதைக் குறிப்பாக சுட்டிக்காட்ட இது உதவுகிறது.

11.36. எச்.ஐ.வி. பரவல் நிலை குறைதல்:

நம் மாநிலத்தில் அரசினுடைய நிலையான முயற்சி, திறமையான திட்டச் செயலாக்கம் மற்றும் சிறந்த மேலாண்மை வழக்கங்களினால் ஓரே சீராக எச்.ஐ.வி. பரவல் நிலை குறைந்துகொண்டே வருகிறது. எச்.ஐ.வி.-யின் நிலை 2001 ஆம் ஆண்டில் 1.13 ஆக இருந்தது, 2006 ஆம் ஆண்டில் 0.38 ஆக குறைந்துள்ளது,

அத்தியாயம் – 12

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

12.1. அமைப்பு :

"தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்" 1994 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முதலாம் நாள் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956-ன்படி பதிவுபெற்று, தனது செயலாக்கச் சிறப்பினால் உயர் வளர்ச்சி கண்டு வருகிறது. தனது 13 ஆண்டுகால அயராத சேவையின்மூலம் இது ஒரு ஐ.எஸ்.ஓ 9001:2000 சான்று பெற்ற நிறுவனமாக வளர்ந்து வந்துள்ளது. இக்கழகம் அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகளைக் கொள்முதல் செய்து வினியோகம் செய்யும் பணி மட்டுமின்றி, கால்நடை மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளையும் கொள்முதல் செய்து வழங்கிவருகிறது. மேலும், விலை உயர்ந்த மருத்துவக் கருவிகளையும் பல்வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கிவருகிறது. தவிர, கட்டண சிகிச்சை பிரிவு நடத்துதல் மற்றும் மருத்துவமனைகளில் மருத்துவக் கருவிகளைப் பராமரிக்கும் பணிகள் ஆகியவற்றையும் மேற்கொண்டு வருகிறது.

12.2. செயல்பாடுகள் :

12.2.1. மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்கள் கொள்முதல் :

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் தரமான மருந்துப் பொருட்கள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களை கொள்முதல் செய்து அவற்றைத் தங்குதடையின்றிக் கிடைக்கும் வகையில் மாநிலத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் வினியோகம் செய்து வருகிறது.

12.2.2. கால்நடைகளுக்கான மருந்துப் பொருட்கள் கொள்முதல், சேமிப்பு மற்றும் வினியோகித்தல் :

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் தரமான மருந்து, இரசாயனப் பொருட்கள் மற்றும் திரவ நைட்ரஜன் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து கால்நடைத் துறையின்கீழ் இயங்கிவரும் அரசு மருத்துவமனைகளுக்கும் இக்கழகத்தின் மருந்துக் கிடங்கிலிருந்து வினியோகித்து வருகிறது. ஒவ்வொரு மருத்துவ நிலையத்திற்கும் அதன் துறையால் நிதி ஒதுக்கப்பட்டு வரவு-செலவுப் புத்தகம்மூலம் அதனுடன் இணைக்கப்பட்ட மருந்துக் கிடங்கிலிருந்து மருந்துகள், அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும் தையல் பொருட்களை வழங்கிவருகிறது.

12.2.3. சிடி. ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ. மையங்கள் :

12.2.3.1. இக்கழகம் 40 சி.டி. ஸ்கேன்களை 37 அரசு மருத்துவமனைகளில் நிறுவி, பராமரித்து வருகிறது. மேலும் இக்கழகம் 2 எம். ஆர். ஐ. கருவிகளை, ஒன்றை அரசு பொது மருத்துவமனை, சென்னையிலும், மற்றொன்றை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலும் நிறுவி அதன்மூலம் பொதுமக்களுக்கு குறைந்த கட்டணத்தில் ஸ்கேன் வசதியைச் செய்துவருகிறது. மேலும், தமிழக அரசு 6 புதிய எம்.ஆர்.ஐ. கருவிகளை ரூ.28.74 கோடி மதிப்பில் கொள்முதல் செய்து திருநெல்வேலி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு தலா ஒரு கருவியை வாங்கியுள்ளது. எம்.ஆர்.ஐ. மையங்கள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன. மற்றொரு மையம் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விரைவில் துவங்கப்படவுள்ளது. அதேபோல், ஈரோடு அரசு மருத்துவமனையிலும் ஒரு எம்.ஆர்.ஐ. மையம் விரைவில் நிறுவப்பட உள்ளது.

12.2.3.2. மேலும், 64 கூறு சி.டி. ஸ்கேன் ஒன்று சென்னை அரசு பொது மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது. மற்றொன்று மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் விரைவில் நிறுவப்படவுள்ளது. பழனி, திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம்) மற்றும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைகளுக்கு சி.டி. ஸ்கேன் மருத்துவக் கருவி வாங்கி வழங்கும் பணி நடந்து வருகிறது. விரைவில் இக்கருவிகள் நிறுவப்படும்.

12.2.3.3. இந்நிறுவனம் ரூ.3 கோடி செலவில் 2 சிறுநீரகக் கல் உடைக்கும் கருவிகளை, ஒன்றை சென்னை அரசு பொது மருத்துவமனையிலும், மற்றொன்றை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலும் நிறுவி, பராமரித்து வருகிறது.

12.2.4. கல்லீரல், கணையம், பித்தநீர்ப் பை, குடல்சார்ந்த இரத்தக் கசிவுப் பிரிவு, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை :

ஐ.எஸ்.ஓ. 9001 தரச் சான்றிதழ் பெற்ற கல்லீரல், கணையம், பித்தநீர்ப் பை, குடல்சார்ந்த இரத்தக் கசிவுப் பிரிவு மையம் சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் இரைப்பை, குடல் சார்ந்த அறுவை சிகிச்சைத் துறையின்கீழ் ஒரு தனிப்பட்ட பிரிவாக

செயல்பட்டு வருகிறது. மேலும், இதன் உட்கட்டமைப்புக்குத் தேவையான அனைத்தும், இதன் வருவாய்மூலம் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் அளிக்கப்படுகிறது.

12.2.5. கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையம், அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை :

சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் புதிதாகத் துவங்கப்பட்டுள்ள கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் வழங்கப்படுகின்றன.

12.2.6. சென்னை எழும்பூர், மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் நிலையம் மற்றும் அரசினர் மகளிர்—சிறார் நல மருத்துவமனையில், சிறப்பு மகப்பேறு கட்டணப் பிரிவைப் பராமரித்தல் :

மகப்பேறு கட்டணப் பிரிவை சென்னை, எழும்பூர் மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் நிலையம் மற்றும் அரசினர் மகளிர்-சிறார் நல மருத்துவமனையில், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 19-2-2003 முதல் நிறுவி சிறந்த முறையில் பராமரித்து வருகிறது.

12.2.7. சென்னை அரசு கஸ்தூர்பா காந்தி மகளிர் மற்றும் சிறார் நல மருத்துவமனையில், சிறப்பு கட்டணப் பிரிவை பராமரித்தல் :

அரசு வழிகாட்டலின்பேரில், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கஸ்தூர்பா காந்தி மகளிர் மற்றும் சிறார் நல மருத்துவமனையில் சிறப்பு வகுப்பு மகப்பேறு கட்டணப் பிரிவை நிறுவியுள்ளது. அப்பிரிவு 3-5-2004 முதல் சிறப்பாக இயங்கி வருகிறது.

12.2.8. சென்னை அரசு பொது மருத்துவமனையில் கட்டண முறை பராமரிப்பு :

இக்கழகம், சென்னை அரசு பொது மருத்துவமனையில் 206 படுக்கை வசதிகளுடன்கூடிய கட்டணப் பிரிவை ஏற்படுத்திப் பராமரித்து வருகிறது. கட்டணம் செலுத்தமுடியும் நோயாளிகளிடமிருந்து குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

12.2.9. முழு உடற்பரிசோதனைத் திட்டம் :

சென்னை அரசு பொது மருத்துவமனையில் முழு உடற் பரிசோதனைத் திட்டம், அதன் நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயல்பாடுகள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்கீழ்

1-4-2001 முதல் கொண்டுவரப்பட்டு, சென்னை, அரசு பொது மருத்துவமனையில் இத்திட்டம் இக்கழகத்தால் மிகவும் சீரிய முறையில் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

12.2.10. மண்டல நோய் கண்டறியும் மையங்கள் :

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், விழுப்புரம், விருதுநகர், திருவண்ணாமலை, திருப்பூர், இராமநாதபுரம், நாமக்கல் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள ஏழு அரசு தலைமையிட மருத்துவமனைகளில் மண்டல நோய் கண்டறியும் மையங்களைப் பராமரித்து வருகிறது.

12.2.11. பல்வேறு அரசு மருத்துவமனை / மருத்துவ நிறுவனங்களில் உள்ள மருத்துவக் கருவிகளைப் பராமரித்தல் :

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உள்ள மருத்துவக் கருவிகளைப் பராமரிக்கும் பொறுப்பினையும் ஏற்று, நோய் கண்டறியும் பணிகளில் எந்த இடையூறும் இன்றி நடைபெறும் வகையில் அவற்றைப் பராமரித்து வருகிறது.

12.2.12. மருந்துக் கிடங்குகள் கட்டுமானப் பணி :

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் ஏற்கெனவே 25 மாவட்டங்களில் மாவட்ட மருந்து சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியுள்ளது. பெரம்பலூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் மேலும் இரண்டு கிடங்குகள் விரைவில் கட்டப்படும்

12.2.13. மருத்துவக் கருவிகள் கொள்முதல் மற்றும் வினியோகம் :

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான விலை உயர்ந்த, நவீன மருத்துவக் கருவிகளை அரசின் ஆணைக்கேற்ப, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கொள்முதல் செய்து வினியோகித்து வருகிறது. மேலும், உலக வங்கியின் உதவி பெறும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்திற்கும் தேவையான உபகரணங்களை தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது.

12.2.14. ஆலோசனைப் பணிகள் :

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மருந்தாளுமை மற்றும் மருந்துக் கிடங்குகள் நாட்டிலேயே முன்மாதிரியாகத் திகழ்கின்றன.

பல மாநிலங்கள் இக்கழகத்தின் செயல்பாட்டைப் பின்பற்றி வருகின்றன. இக்கழகம் ஆந்திரப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் அரசின் மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு ஆலோசனை வழங்கி செயல்படுத்தியும் உள்ளது.

12.3. மருந்துகள் கொள்முதல் :

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மாநிலத்திலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு 276 மருந்துகள், 230 புதிய வகை சிறப்பின மருந்துகள் மற்றும் 174 அறுவை தையல் கருவிகள் ஆகியவற்றைச் சிறந்த நிறுவனங்களிடமிருந்து திறந்தவெளி ஒப்பந்தம்மூலம் கொள்முதல் செய்கிறது. இதுபோலவே, இக்கழகம் 158 மருந்துகள், இரசாயனப் பொருட்கள் மற்றும் திரவ நைட்ரஜன் ஆகியவற்றை கால்நடைத் துறைக்காக கொள்முதல் செய்கிறது. மேலும் இக்கழகம், மருத்துவக் கிடங்குகளின் தேவைக்கேற்பவும் மருந்துகளின் தேவைப் பட்டியலுக்கேற்பவும் கொள்முதல் ஆணைகளை வழங்கி கணினிமூலம் வினியோகத்தைக் கண்காணித்து வருகிறது.

12.4. தரக் கட்டுப்பாடு :

இக்கழகத்தால் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் மருந்துப் பொருட்கள் தரக் கட்டுப்பாட்டுத் துறையில் பல்வேறு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்து வழங்கப்படுகிறது. தயாரிப்பாளர்களிடம் கொள்முதல் செய்யும் மருந்திலிருந்து மாதிரி எடுத்து அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனைக் கூடங்களுக்கு அனுப்பி பகுப்பாய்வு செய்து தரப் பரிசோதனையில் வெற்றி பெற்ற பிறகே அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகிறது.

12.5. வினியோகம் :

ஒவ்வொரு அரசு மருத்துவ நிலையத்திற்கும் அதன் துறையால் நிதி ஒதுக்கப்பட்டு வரவு-செலவுப் புத்தகம்மூலம் அதனுடன் இணைக்கப்பட்ட மருந்துக் கிடங்கிலிருந்து மருந்துகள், அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும் தையல் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு மருத்துவமனைகளுக்குத் தடையில்லாமல் மருந்துகள் கிடைப்பதற்காக, இக்கழகம் ஒவ்வொரு மருந்துக் கிடங்கிலும் 3 மாதக் கையிருப்பை எப்போதும் சேமித்து வைப்பதை நடைமுறைப்படுத்தி வருகிறது.

12.6. இணைய தளம் :

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கான இணைய தளத்தை (www.tnhealth.org) செயல்படுத்தி வருகிறது. தினமும் மாலை 4.00 மணி முதல் 6.00 மணிவரை உடனுக்குடன் பொது மக்களின் நோய் குறைபாடுகளைக் களைய ஒவ்வொரு துறையிலும் சிறந்த மருத்துவர்களைக் கொண்டு இணைய தளத்தின்மூலம் ஆலோசனை வழங்கி வருகிறது.

12.7. இதர நடவடிக்கைகள் :

12.7.1. தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ், மற்ற மாநில அரசுகள் விரும்பினால் அம்மாநிலங்களுக்கு மருந்துகளைக் கொள்முதல் செய்து தரவும், ஆலோசனைகளை வழங்கவும் தமிழக அரசு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இதுபோல், எய்ட்ஸ் ஆய்வுக் கலப் பெட்டிகள் கொள்முதல் செய்து இந்திய அரசின், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திற்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இதுகாறும், அசாம், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோராம் மாநிலங்கள், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலமாக தேசிய ஊரக நலத் திட்டத்திற்கு தேவையான மருந்துகளைக் கொள்முதல் செய்ய ஒப்புக்கொண்டுள்ளன.

12.7.2. உலக வங்கியின் உதவிபெறும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்திற்கும், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் தேவையான உபகரணங்களைக் கொள்முதல் செய்து வருகிறது. எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனத்திற்குத் தேவையான சோதனைக் குப்பிகள், இரத்த வங்கிக் கருவிகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்து வினியோகிக்கும் பணியையும் இக்கழகம் செய்து வருகிறது.

12.7.3. மேலும், இக்கழகம் தமிழ்நாடு மின்வாரிய மருந்தகங்கள், நகராட்சி மற்றும் மாநகராட்சி மருந்தகங்களுக்கும், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள், சிறைத் துறை மற்றும் காவல் துறை மருத்துவமனைகளுக்கும், அரசு இளம் குற்றவாளிகள் இல்லங்கள், அரசு மறுவாழ்வு மையங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கால்நடை நிலையங்கள், போக்குவரத்துக் கழக மருந்தகங்கள் ஆகியவற்றிற்கும் சேவை செய்து வருகிறது.

அத்தியாயம்–13

தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை

13.1. தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை 1981 ஆம் ஆண்டிலிருந்து தனி இயக்ககமாகச் செயல்பட்டு வருகிறது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள பழுதாகும் ஊர்திகளின் எண்ணிக்கையை குறைவாக வைத்திருப்பதே இத்துறையின் நோக்கமாகும். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து இயக்ககங்களைச் சேர்ந்த மொத்தம் 2,646 ஊர்திகள் இத்துறையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

13.2. செயல்பாடுகள் :

13.2.1. தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறையின்கீழ் 7 மண்டலப் பணிமனைகள் உள்ளன. இவை சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இவை தவிர 9 மாவட்டத் தலைமையிடப் பணிமனைகளும் மற்றும் 27 நடமாடும் பணிமனைகளும் இத்துறையில் இயங்குகின்றன. சென்னையில் ஒரு மறுசீர் பிரிவு மற்றும் மைய பழுதுநீக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

13.2.2. இத்துறை, 1981 ஆம் ஆண்டில் மொத்த வாகனங்களில், நல்ல முறையில் இயங்கி வந்த வாகனங்களின் விழுக்காடு 72.6 ஆக இருந்ததை 2008 ஆம் ஆண்டில் 96 விழுக்காடாக படிப்படியாக உயர்த்தியுள்ளது. மேலும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின்கீழ் இயங்கும் பல்வேறு இயக்ககங்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்ற புதிய ஊர்திகள் வேகமாக வாங்கி வழங்கப்படுவதையும் இத்துறை உறுதி செய்கிறது.

13.2.3. தமிழக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் மற்றும் மைய அரசின் தொழிற் பழகுநர் பயிற்சி குழுமத்தின் இயக்குநர், தரமணி ஆகியோரால் அனுப்பப்படும் தொழிற்பயிற்சி சான்றிதழ் பெற்றவர்கள், பொறியியல் பட்டம் பெற்றவர்கள் மற்றும் பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் ஆகியோர்களுக்கு, தொழில் பழகுநர் பயிற்சி

இத்துறையினால் அளிக்கப்படுகிறது. இத்துறையில், ஆண்டுதோறும் பொறியியல் பட்டம் பெற்ற 17 நபர்களுக்கும், பொறியியல் பட்டயம் பெற்ற 29 நபர்களுக்கும் மற்றும் தொழிற்பயிற்சி சான்றிதழ் பெற்ற 45 நபர்களுக்கும் தொழிற்பழகுநர் பயிற்சி அளிக்கத் திறன் உள்ளது.

13.2.4. ரூ.3.30 இலட்சம் செலவில் 2 கணினி மற்றும் உபகரணங்கள் மற்றும் அறைகலன், ஒரு இரு கம்ப உயர்த்தி, ஒரு நகலெடுக்கும் இயந்திரம் ஆகியவை 2007-08 ஆம் ஆண்டில் வாங்கி வழங்கப்பட்டன.

13.3. 2008–09 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் :

1. இரண்டு கணினிகள் மற்றும் உபகரணங்கள் ரூ. 0.80 இலட்சத்தில் இத்துறைக்கு வாங்குதல்.
2. தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறையைச் சார்ந்த 7 மண்டலப் பணிமனை அலுவலகங்களுக்கும் 7 நகலெடுக்கும் இயந்திரங்கள் ரூ.4.20 இலட்சத்தில் வாங்குதல்.

226380
சென்னை-600 008